# அழகிய தமிழ் மகளே!

வாணி



## உள்ளே...

1. அழகிய தமிழ் மகளே! 5

2. மாசிலா உண்மைக் காதலே! 123



# அழகிய தமிழ் மகளே!

## 1

"ஏய் மது! எவ்வளவு நேரம்தான் கண்ணாடி பார்த்திட்டிருப்பே? வா சீக்கிரம்!" - தோழி ராகினி அவசரப்படுத்தினாலும்கூட... தன் அழகை ரசித்துக் கொண்டு நின்றிருந்த மதுராவிற்கு, அதைவிட்டு வெளியே வரத் தோன்றவில்லை.

மதுரா... சென்னையின் உயர்தரக் கல்லூரியில் எம்.பி.ஏ. இரண்டாம் ஆண்டு மாணவி.

பெற்றோர் சென்னையிலேயே இருந்தாலும், கல்லூரியின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு விடுதியில்தான் தங்கிப் படிக்க வேண்டும் என்பதால், விடுதியில் தங்கியிருக்கிறாள். அறைத் தோழி ராகினி!

இருவரும் வெளியில் வந்து, இரண்டு தெருக்கள் தள்ளியிருந்த சூப்பர் மார்க்கெட் நோக்கி நடக்க ஆரம்பித்தனர்.

அன்று... வகுப்புகள் சீக்கிரமே முடிந்து விட்டதால் இந்தப் புறப்பாடு.

"என்ன மது... என்னவோ மாதிரி இருக்கே! என்னதான் நீ அலங்காரம் பண்ணிண்டாலும் அதை மீறி ஒரு வாட்டம் தெரியுதே...!"

"எல்லாம் தெரிந்து வைத்துக்கொண்டே கேட்டாய் என்றால்... ஓங்கி ஒரு குத்து விட்டிடுவேன்..."

ஒரு நிமிடம் யோசித்த ராகினி, புன்னகை முகத்துடன்,

"ஓ...! உன் அக்கா சந்தனாவை மாப்பிள்ளை வீட்டார் பார்க்க வருகிறார்களா? அதற்குத்தான் இந்த டல்லா...?"

"ஆமா! என்னைப் பிடிவாதமாக, நீ வரக்கூடாது என்று அம்மா தடா போட்டு விட்டார்களே...!"

"அவங்க சொன்ன காரணம்தான் ஏற்றுக்கொள்ளக் கூடியதுதானே! அவங்க சொல்றதுலேயும் நியாயம் இருக்கத்தானே செய்கிறது."

நின்று, ராகினியை முறைத்தாள் மதுரா.

"நீ என்ன... அம்மாவிற்குச் சப்போர்ட்டா! வேண்டாம்... அப்படியே பிடிச்சுத் தள்ளி விட்டுடுவேன்."

"வேணாண்டி, உன் வம்புக்கே வரலை. நீ செய் தாலும் செய்வே!"

மௌனமாக இருவரும் நடந்து கொண்டிருக்க...



"மது..."

"உம்..."

"எப்படியும் உன் அம்மா பேச்சை மீறி நீ போய் இன்று நிக்கப் போறதில்லே... அப்புறம், இப்போ இந்த மாலைப் பொழுதைச் சந்தோஷமாகக் கழியேன். உன் அம்மாவின் பயம், ஒரு வேளை உண்மையாயிட்டா... அப்புறம் உன்னால... உன் அக்கா மேலே உயிரையே வைச்சிருக்கிற உன்னால... அதைத் தாங்கிக்க முடியுமா?"

இதற்குள் அங்காடி வந்துவிட, அவர்கள் உள்ளே நுழைந்தனர். அங்கிருந்த ஏஸி அவர்களை உள்வாங்கிக் கொள்ள... அந்த இதத்தை உள் உணர்ந்தவாறே, கூடைகளை எடுத்துக் கொண்டு தங்களுக்குத் தேவையான சாமான்களால் கூடையை நிரப்ப ஆரம்பித்தனர்.

ராகினியின் வார்த்தைகள் உள்ளுக்குள் அலை மோதின.

ஒரு வேளை உன் அம்மாவின் பயம் உண்மையாகி விட்டால்...!

உண்மைதானே! இதற்கு முன் இரண்டு முறை சந்தனாவைப் பெண் பார்க்க வீட்டிற்கு வந்தவர்கள், அவளை விடக் கூடுதல் அழகுடன், துடுக்குத்தனத்துடன் வளைய வந்த மதுராவைப் பெண் கேட்க...

அப்பா நவநீதத்திற்கு வந்ததே கோபம்...

தரகரிடம், "நான் என் பெண்களை விலைக்கு விற்கவில்லை என்று கூறுய்யா. இதற்குப் பதில் அதைத் தா என்று கேட்க... இதென்ன வியாபாரமா?"

அம்மாதான் சமாதானப்படுத்துவாள்.

"அவர்களைக் குறை சொல்லி என்ன செய்ய? இதனால் தான் அந்தக் காலத்தில் பெண் பார்க்கும் வைபவம் நடக்கும்போது, மற்றப் பெண்களை எல்லாம் சினிமாவிற்கோ டிராமாவிற்கோ போ... என்று துரத்தி விடுவார்கள்.

மது தான் சந்தனாவை விட ஓவராக டிரஸ் செய்து கொண்டு குறுக்கும் நெடுக்கும் போய்க் கொண்டிருந்தாள். அவர்களும் என்ன... இருவருக்கும் ஒரு வயதுதானே வித்தியாசம் என்று கேட்டுப் பார்க்கலாமே என்று கேட்டிருப்பார்கள்..."

'இந்த முறை சந்தனாவைப் பார்க்க வீட்டிற்கு வராமல், கோயிலுக்கு அழைத்துக் கொண்டு வாருங்கள்... அங்கே பார்த்துப் பேசி முடிவு செய்து கொள்ளலாம்...' என்று பையனின் அம்மா கூறிவிட்டதாகத் தரகர் கூறினார்.

சந்தனா மட்டுமென்ன... பெயருக்கேற்ற சந்தன நிறம்... மூக்கும் முழியுமாய் அம்மா போலவே நல்ல லட்சணம்!

ஆனால், மங்கிப் போன குத்து விளக்குப் போல... பராமரிக்கப்படாத சிற்பம் போல... ஒரு பவுடர் பூச்சுக்கூட இன்றிச் சாதாரணமாக இருப்பாள்.

காதில் சாதா ஸ்டட், கழுத்தில் மெல்லிய செயின், அமுக்கினால் நொறுங்கி விடுகிற தினுசில் மெல்லிய வளையல்கள்...

சந்தனாவைப் பார்ப்பவர்கள், அவளை ஒரு பன்னாட்டு நிறுவனத்தில் மாதம் ஐம்பதாயிரம் ஊதியம் வாங்கும் அதிகாரியாக நம்புவது கடினமே!



## 2

ஆனால் மதுராவோ அதற்கு நேர் எதிர். எப்போதும் பளிச் நிறத்தில் உடை... காதுக்கு வளையல் சைஸில் மாட்டிக் கொள்வாள்.

கைகளுக்கோ... சதுரம், முக்கோணம் என்று விதவிதமான வடிவங்களில், உடைக்குத் தோதான நிறத்தில் மாட்டிக் கொள்வாள்.

முன்னாடி... சிறிது முடியை வெட்டி விட்டுக் கொள்வாள்.

"பின் என்னம்மா... உன் பெரிய பெண் மாதிரி புடவையைச் சுற்றிக் கொண்டு அலையச் சொல்வாயோ... கடவுள் கொடுத்த அழகுக்கு மேலும் அழகு சேர்க்கிற மாதிரி அலங்காரம் செய்துக்கணும்..."

"நீ என்னவோ செய்து கொள். அதுக்கு ஏன்டி அவளை இழுக்கறே...!"

நினைவுகள் மோதினாலும், கைகள் அனிச்சையாய் அடுத்த ஒரு மாதத்திற்குத் தேவையான பொருட்களை எடுத்துக் கூடைக்குள் போட்டுக் கொண்டிருந்தன.

இரவு... ஆவலுடன் சந்தனாவின் கைபேசி எண்ணை அழுத்தினாள்.

"ஏய்...! என்ன பகல் கனவா? என் அத்தான் எப்படி யிருக்கிறார்?"

இவள் சீண்டலைக் கண்டு கொள்ளாமல்...

"உம்... ஓ.கே.தான். எனக்கு அவர் அம்மாவையும் ரொம்பப் பிடிச்சிருக்குடி. நல்லா... அன்பாப் பேசறாங்க!"

"ஓ.கே... ஓ.கே. அம்மாவையும்னா... அப்ப புள்ளை அல்ரெடி ஓ.கே.யா?"

"இவ ஒருத்தி... வார்த்தைக்கு வார்த்தை அர்த்தம் செய்துண்டு... அவங்க எல்லாம் சம்மதம்னு சொல்லிட்டாங்க மது. ஆனா எனக்குத்தான்..."

"ஏன்...? உனக்கென்னடி?"

"எல்லாம் நல்லாக் கூடிவந்தாலும்... அவங்க வசதி என்ன... நம்மை ஒப்பிடும்போது அவங்க ரொம்பப் பெரிய இடம். நிறைய எதிர்பார்த்தாங்கன்னா... அப்பாவால... ஊம்... என்னதான் சொல்லு, கடன் வாங்கியெல்லாம் அவங்க கேட்டதைச் செய்ய நான் ஒத்துக்க மாட்டேன்."

"நீ ஒருத்தி...! நீயாகவே ஏன் எதை எதையோ கற்பனை பண்ணிக்கறே! அதான் மாதா மாதம் உன் சம்பளம் ஐம்பதாயிரமும் அவங்க வீட்டுக்குப் போகப் போகுதில்லே... அப்புறம் ஏன் டிமாண்ட் செய்யப் போறாங்க?"

அதற்குள் அம்மா, சந்தனாவிடம் கைபேசியைப் பிடுங்கிக் கொண்டு பேச ஆரம்பிக்க, அம்மாவிடமும் தன் சந்தோஷத்தைப் பகிர்ந்து கொண்டாள், மதுரா.

"நாளைக்கு வரேயில்லே...!"

"பின்னே...! ஏதோ நீ ரொம்பச் சொன்னேன்னுதான் இன்னிக்கு வராம இருந்தேன். அது வந்தும்மா... வாரா வாரம் பத்தியச் சாப்பாடு உன் கையால சாப்பிட்டாத்தான் மீதி நாட்கள்ல, இங்கே விதவிதமா, வாய்க்கு ருசியாச் சாப்பிடறது நல்லா ஜீரணமாகிறது. என்ன சொல்றே...?"



"வா... சொல்றேன் வா! நாளைக்கு அம்மா என்ன செய்து வைத்திருக்கேன்னு டப்பா டப்பாவாத் திறந்து பார்ப்பே இல்லே... அப்போ மேலே போடறேன்!"

"என் செல்ல அம்மா... அப்படியெல்லாம் செய்ய மாட்டே!"

மது, ஆசையாக அம்மாவிடம் பேசிவிட்டுக், கைபேசியை அணைத்தாள்.

மறுநாள் - ஓடிப்போய்... வீட்டிற்குப் போனதும், சந்தனாவைக் கட்டிக்கொண்டு கை கொடுத்தாள், மதுரா.

"என்னடி கல்யாணப் பொண்ணு! முதல்லே போட்டோவைக் காமி... மார்க் போடலாம்!"

"நீ மட்டும் என்னவாம், கல்யாணப் பொண்ணில்லாம... சேம் டு யூ மது..."

சந்தனாவை விட்டுக் கைகளை விடுவித்துக் கொண்டாள், மது.

"அம்மா! என்ன இது...? மாப்பிள்ளையைப் பார்த்த மாத்திரத்திலேயே மரை கழன்று விட்டதா?"

"அவளை விடுடி! நான் எதற்கோ பயந்து கொண்டு உன்னை நேற்று வர வேண்டாம் என்று சொன்னேன். ஆனா... கடவுள் பாரு! நான் பயப்பட்டது போலல்லாமல், உன்னைப் பார்க்காமலேயே கொத்திக் கொண்டு போய் விடுவார்கள் போலிருக்கிறது அவர்கள் பேசறது...!" - அம்மா.

"ஊம்...! இது எதுவும் சரியில்லை. இது 'ஹரி அண்டு கிரி'யில் அக்கௌண்டன்ட்டாக இருக்கும் நவநீதன் வீடு தானே...! நீங்க, கஜா என்று செல்லமாக அவரால் அழைக்கப்படும் அவர் சகதர்மபத்தினி கெஜலக்ஷ்மி தானே...! நான் ஒன்றும் வீடு மாறி வந்துவிடவில்லையே! எல்லாம் சரியாகத்தான் இருக்கிறது. ஆனால், ஆளாளுக்கு உளறு கிறீர்களே...!"

சந்தனா அம்மாவைப் பார்த்துக் கண்ணடித்தாள்.

"ரொம்பக் குழம்ப விடாதேம்மா மதுவை! அவர்கள் போன் செய்த விபரம் சொல்!"

"ஆமாண்டி மது! அவர்களுக்குச் சந்தனாவை மிகவும் பிடித்துப் போய்விட்டது. சாமி சன்னதியிலேயே சந்தனா விற்குப் பூ வைத்து விட்டதென்ன...! திருநீறு பூசி விட்ட தென்ன...! தன் மகள் போல் பிரியமுடன் அந்த அம்மா நடந்து கொண்டார்கள்."

"பிறகு..."

"பையனும் நன்றாக சினிமா ஹீரோ மாதிரிதான் இருக்கான். இதை விட முக்கியம்... நம்மை விட எவ்வளவோ அந்தஸ்தில் உயர்ந்திருந்தாலும், ஒரு பைசா வரதட்சிணை கேட்கவில்லை. உங்க பொண்ணுக்கு உங்க விருப்பம் போல் செய்யுங்க... என்று கூறிவிட்டார்கள்!" என்ற அம்மா,

"வாயாடிண்டே இருக்காதே! போய் முகம், கை கால் கழுவிக் கொண்டு வந்து ஏதாவது சாப்பிடு...!"

"அப்புறம் அம்மா... நான் பயந்தது, பயந்த மாதிரி நடக்கல... அப்படின்னு ஏதோ டயலாக் விட்டியே...!"



"நானா அப்படிச் சொன்னேன்? ஒருவேளை, கொஞ்சம் முன்னாடி மறை கழண்டு இருக்கும்போது கூறியிருப்பேனோ என்னவோ... உனக்கெதுக்கம்மா அது?"

"டீ சந்தனா... நீயாவது சொல்லுடி!"

"அதுவா...! மிதுனிற்கு ஒரு தம்பி இருக்கிறார் இல்லையா...? அவருக்கு உன்னை அவங்கம்மா பெண் கேட்டார்கள் மது...!"

"என்னைப் பார்க்கக்கூடச் செய்யாமல் எப்படி...?"

"அவங்க அம்மாதான் உன்னைப் பார்க்கவில்லையே தவிர, மிதுவின் தம்பி தருண் உன்னை ஏற்கெனவே பார்த்திருக்கிறாராம். உன்னை மிகவும் பிடித்துப் போய் வீட்டில் சொல்ல...

அதற்கப்புறம்தான், சந்தனாவிற்குத் திருமணம் செய்யாமல் உன்னை எப்படிப் பெண் கேட்பது என்று யோசித்து..." - அம்மாவை முடிக்க விடாமல் குறுக்கிட்டாள், மதுரா.

"யோசித்து... அண்ணன்காரனுக்குச் சந்தனாவைக் கேட்டார்களாக்கும். என்னம்மா நீ... காதுல பூ சுத்தற கதையால்ல இருக்கு...!"

"நீ என்ன கிண்டல் செய்தாலும், நடந்தது அதுதான். தரகரிடமும்... முதலில் பெரிய பெண்ணைப் பார்ப்போம்; பின் இதுபற்றிப் பேசிக்கொள்ளலாம் என்று கூறிவிட்டார்கள் என்பதால், அவரும் இதுவரை இதுபற்றி மூச்சு விட வில்லை."

## 3

**கோ**பமாகக் கேட்டாள் மது -

“உடனே தலையாட்டி விட்டீர்களாக்கும்...!”

“என்னடா... அப்படியா செய்வோம்? இன்று மது வருகிறாள்... அவளைக் கேட்க வேண்டும்... என்று அப்பா கூறிவிட்டார்.”

அம்மா சமாதானப்படுத்தினாலும், மதுவின் கோபம் குறையவில்லை. சந்தனா... மிதுனும், தருணும் இருக்கும் போட்டோவைக் காட்டினாள்.

சிறு வயது முதலே... மதுரா, தனக்கு இஷ்டமில்லையென்றால், இஷ்டமில்லைதான். பின், அதைப் பற்றிப் பேசக்கூட விடமாட்டாள்.

இந்த வருடத்தோடு எம்.பி.ஏ. முடியப் போகிறது. இவர்கள் கல்லூரியில் வளாக நேர்முகத் தேர்வு உண்டென்பதால், பெரிய பெரிய கம்பெனிகள் அப்படியே - படிப்பு முடியும் முன்பே அள்ளிக் கொண்டு போக, வேலை உத்தரவை முன்னாலேயே வழங்கிவிடும்.

‘அப்படி ஒரு பெரிய கம்பெனியில் சேர்ந்து... கை நிறையச் சம்பாதித்து... அப்பா, சந்தனா திருமணத்திற்கு வாங்கும் கடனை அடைத்து... பின் தனக்கென நகைகளை ஓரளவு சேர்த்துக் கொண்டு...’ என்று கனவுகளை விரித்துக் கொண்டிருப்பவள்.

இப்போது போய்... திருமணம், அது இது என்று... இதென்ன புதிய குழப்பம்?



அம்மா கொடுத்த காபி, கைகளில் ஆறிக் கொண்டிருந்தது.

மதுராவிற்கு, இப்படித் தன்னைச் சுற்றி நடக்கும் எதிலுமே சம்மதம் இல்லையென்றாலும், அப்படித் தன்னை - தன்னை அறியாமலேயே விரும்பி, தன்னைத்தான் கட்ட வேண்டும் என்று தவம் இருக்கும் அந்தப் புண்ணியவான் யாராகத்தான் இருக்கும் என்று ஆவல் ஏற்பட்டது.

சற்று முன் சந்தனா கொடுத்த போட்டோவைத் தலையைப் பிடித்தவாறே தூக்கி, டீப்பாயில்... கிட்டத்தட்ட வீசியவள்... இப்போது அதை எடுத்துப் பார்க்கப் போனாள்.

முகம்... இவன், இவன்... எங்கோ பார்த்த மாதிரி இருந்தது. ஆனால், எங்கே என்றுதான் நினைவிற்கு வர மறுத்தது.

போகட்டும்... இப்போது அதுவா முக்கியம். எனக்குத் திருமணம் இப்போது வேண்டாம் என்றால் வேண்டாம்தான்.

இவன் பேரழகனாகவே இருந்து விட்டுப் போகட்டும். என் வரையில் வில்லன்தான்!

நல்ல வேளையாக உடனே பல்லிளித்துக் கொண்டு அப்பாவும் அம்மாவும் சம்மதம் கூறிவிடவில்லையே!

சந்தனாவை இப்போதுதானே பிடித்திருக்கிறது என்று கூறியிருக்கிறார்கள். உறுதி செய்வதற்குள்... இந்தப் பையன் பேரென்ன... வருணாம் வருண்... இல்லையில்லை தருண்... இவள் கையில் மாட்டாமலா போய்விடுவான்?

நேரே முகத்திலடித்தாற் போல் கூறிவிட வேண்டியது தான்.

இப்படி ஒரு முடிவிற்கு வந்தவுடன்தான் மதுராவின் முகமும், மனமும் ஒரு தெளிவிற்கு வந்தது. தனக்குப் பிடித்த பாடலை முணுமுணுத்தபடி, டப்பா டப்பாவாகத் திறந்து பார்த்து... சாப்பிடக் கைக்குக் கிடைத்தவற்றையெல்லாம் அள்ளி ஒரு தட்டில் போட்டுக்கொண்டு, தொலைக்காட்சி முன் அமர்ந்தாள் மதுரா.

# 4

இரண்டு நாட்கள் போனதே தெரியாமல் போய்விட, அன்று கல்லூரி திரும்பியிருந்தாள். உடனே உற்சாகமான நிலை தொற்றிக் கொண்டது.

வேண்டுமென்றே தோழி ராகினியைச் சீண்டினாள்.

"டீ...! நான் இன்று காலை சாப்பிடக்கூட இல்லை!"

"ம்..."

"மதியம் ஒரு பிடி பிடிக்கலாம் என்று தயாராகத்தான் வந்திருக்கிறேன்."

"ம்...!"

"என்ன... 'ம்...' நான் என்ன கதையா சொல்லிக் கொண்டிருக்கிறேன். 'ஏன்?' என்று கேட்க மாட்டாயா?"

"ஏன்டி...?"

"ஏன்டி...யா...? என்ன மறந்து விட்டாயா? பாமினிக்கு பிரமோஷன் கிடைத்ததற்கு இன்று மதியம் ட்ரீட் தருவதாகக் கூறியிருந்தாயே...! என்ன மறந்துட்டயா? நான் உன்னை



மன்னித்தாலும் என் வயிறு உன்னை மன்னிக்காது, தெரியுமா?"

இவள் சொல்லிக் கொண்டே விளையாட்டாய்த் தோழியைச் சீண்ட... பதிலுக்குத் தானும் எடுத்து விடுவாள் என்று எதிர்பார்த்துத் தோழியின் முகத்தை நோக்கியவள், அதிர்ந்தாள்.

ராகினியின் கண்கள் கலங்கியிருந்தன.

அது கல்லூரி வளாகமென்பதால், இருவரும் உணவு விடுதிக்குச் சென்றனர்.

"என்னடி... நான் இன்று ஓவராகச் சீண்டிவிட்டேனோ? சும்மாடி... அடுத்த வருஷம் பாரேன், நீ எங்கேயோ... நான் எங்கேயோ... அதுவரைதானே...!"

"ப்ச்...! அது இல்லை மது! பாமினி பிரமோஷனை ஏற்றுக்கொண்டு வெளிநாடு போகலைன்னு டிசைட் பண்ணிட்டா...!"

பாமினி... ராகினியின் மூத்த சகோதரி. இருவருக்கும் இரண்டு வயசு வித்தியாசமே என்பதால், ராகினியின் தோழிகள் அனைவரிடமும், அவளைவிட நெருக்கமாகப் பழகக் கூடியவள் பாமினி.

அந்த வகையில் பாமினி மதுராவின் நெருக்கமான தோழியாகி விட்டிருந்தாள். பாமினி ஒரு பன்னாட்டு நிறுவனத்தில், கணிப்பொறித் துறையில் பணியில் இருக்கிறாள். திருமணமாகி ஆறு மாதங்கள்தானிருக்கும்!

பாமினிக்கு அலுவலகத்திலேயே பதவி உயர்வோடு, வெளிநாடு போகும் வாய்ப்பு வந்ததற்குத்தான் ட்ரீட் கேட்டு நண்பியைப் படுத்திக் கொண்டிருக்கிறாள் மதுரா.

"ஏன்...? அவள் ஒன்றும் நிரந்தரமாக வெளிநாட்டில் தங்கிவிடப் போவதில்லையே! ஒரு வருட ஒப்பந்தம்தானே...!"

"என்ன செய்ய...? மகேஷ் அதற்கு ஒப்புக் கொள்ளவில்லையே!"

மகேஷ் பாமினியின் கணவன். தனியார் வங்கி யொன்றில் வேலை.

"ஏன்டி ராகினி...! இதற்கெல்லாம் பர்மிஷன் கேட்டுக் கொண்டிருக்க வேண்டுமா? பதவி உயர்வு, இந்தச் சின்ன வயசிலேயே பாமினிக்கு வந்திருப்பது பெருமையான விஷயமில்லையா?"

வெள்ளந்தியாகக் கேட்டாள், மதுரா.

"என்ன உள்ற...? கல்யாணமான பின்னால், பாமினி மட்டும் தனியாக முடிவெடுக்க முடியுமா என்ன? மகேஷிற்கு இதில் இஷ்டம் இல்லையாம்!"

"ஏனாம்...?"

வக்கீல் மாதிரிக் குறுக்கு விசாரணை செய்து கொண் டிருந்தாள், மதுரா.

மனதிற்குள், தோழி அருமையான ஒரு வாய்ப்பை இழக்க வேண்டியிருக்கிறதே என்ற ஆதங்கம்!

"'பாமினியை விட்டு விட்டு என்னால் இருக்க முடியாது!' - என்று வெளிப்படையாகவே கூறுகிறார். என்ன செய்வதென்றே எங்கள் எவருக்கும் தெரியவில்லை. போவது பற்றி நாளைக்குள் பாமினி அலுவலகத்திற்குத் தெரியப்படுத்த வேண்டும்."

பெருமூச்செறிந்தாள், ராகினி.



மதுவிற்குச் சிரிப்பு வந்தது. ஆனால், இந்தச் சூழ்நிலையில் தோழி முன் சிரிப்பது நாகரிகமாகப் படவில்லை அவளுக்கு. எனவே, அடக்கிக் கொண்டாள்.

'எப்படி? பாமினியை விட்டுவிட்டு மகேஷால் இருக்க முடியவில்லையாமா? கணவனுக்கு மனைவியிடத்திலும், மனைவிக்குக் கணவனிடத்திலும் இருக்கும் அன்பும், ஈர்ப்பும் ஒன்றுதானே!

இந்த மகேஷ்... மகேஷ் என்றில்லை... பதவி உயர்வு, இட மாற்றம் என்று வரும்போதெல்லாம் எல்லா ஆண்களுமே, மனைவி தன்னை விட்டுவிட்டு இருப்பாளா என்று ஒரு கணமேனும் சிந்திப்பதுண்டா?'

சிந்தனைக்கு அப்பாற்பட்டு, சிந்திக்க அவசியமில்லாத கேள்வியாயிற்றே இது!

மனைவி என்ன... குழந்தைகள் கூட அந்தப் பிரிவைத் தன் தலைவிதியென, கேள்விக்கு இடமின்றி, ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதல்லவா நடைமுறை!

"சரி...! உன் அப்பா, அம்மா என்ன சொல்கிறார்கள்?"

"வேறென்ன...! மாப்பிள்ளை இவ்வளவு சொல்லும் போது, அவரை மீறி இந்தப் பதவி உயர்வு தேவையா? மீறிப் போக வேண்டுமென்றால், இந்த வேலையை விட்டுவிட்டுக் கணிப்பொறித் துறையிலேயே வேறு வேலை தேடிக்கொள் என்கிறார்கள்!"

"நான் இதை எதிர்பார்க்கவில்லை, ராகினி!"

"என்னடி செய்ய...? நம்ம தலைமுறை வேலை, பதவி உயர்வு, வெளிநாட்டு வாய்ப்பு என்று முக்கியத்துவம்

கொடுக்கிறோம். நம் அப்பா, அம்மா தலைமுறையோ... குடும்பம், குட்டி, கணவன், மனைவி என்று அந்தக் கூட்டை விட்டு வெளியே வரமாட்டேங்கறாங்க...!"

"என்ன இருந்தாலும், இது டூ மச் டி!"

தோழியை வற்புறுத்தித் தேனீரும் வடையும் சாப்பிட வைத்துவிட்டுத் தோழியோடு வகுப்பறை நோக்கி நடக்க ஆரம்பித்தாள், மதுரா.

ஒரு அரை மணி நேரம் முன்பு இருந்த சந்தோஷ நிலை காணாமற் போய்... மனதில் கனம் உட்கார்ந்து கொண்டது!

## 5

அன்று பாடங்களில் கவனம் போகவில்லை.

பாமினிகூட அதைச் சாதாரணமாக ஏற்றுக்கொண்டிருப்பாளோ என்னமோ... இவள் மனதை வேதனை அறுத்தது.

ஜீரணிக்க மறுத்தாலும், இது உண்மைதானே!

சுயமாக முடிவெடுக்கும் சுதந்திரமும் அல்லவா திருமண பந்தத்தில் அடகு வைக்கப்படுகிறது. மீறி பாமினி, எல்லாரையும் எதிர்த்துக்கொண்டு வெளிநாடு போகலாம். ஆனால், நீ போவது பிடிக்கவில்லை என்று தடுத்த மகேஷின் வெறுப்பு, இந்த ஒரு வருட காலத்தில் பன்மடங் காகக் கூடிப்போகுமே அன்றிக் குறையப் போவதில்லை.

வேலையில் நிறைய அனுபவங்களைப் பெற்று, வெளிநாட்டில் இருந்து திரும்பி வரும்போது, இங்கே



மகேஷின் மனைவி என்ற பதவி கேள்விக் குறியாகக்கூட இருக்கலாம்! பாவம், பாமினி!

இதுபோல் தன் வாழ்க்கையிலும் நடந்து விடுமோ?

என்னுடைய தனிப்பட்ட முன்னேற்றத்திற்கு உறுதுணை யாக இருக்கிறானோ இல்லையோ... இடையூறாக இல்லாமல் இருப்பவனைத் தேடி மணந்து கொள்ள வேண்டும்.

சட்டென இந்த எண்ணம் ஒரு விருப்பமாக இல்லாமல், ஏறக்குறைய வைராக்கியம் போலவே மாறிவிட்டிருந்தது, மதுராவிற்குள்!

ஒருபுறம் இந்த நினைப்பு ஓட... மறுபுறம் தன்னைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று பெற்றோர் மூலம் தூது விட்டிருந்த தருண் நினைவில் வந்து போனான்.

தனக்குப் பிடித்திருக்கிறது என்றால், முதலில் என்னிடமல்லவா கேட்டிருக்க வேண்டும். என் விருப்பத்தை விடுத்து, தன் பெற்றோரிடம் சொல்லி, அம்மா அப்பாவிடம் பெண் கேட்கச் சொல்லியிருக்கிறான்!

என் விருப்பத்தை இந்தளவு மதிப்பவனைத் திருமணம் செய்து கொண்டால், நாளை... நான் பாமினியை விட மோசமாக ஆகிவிடுவேன் போலிருக்கிறதே!

தருணின் மீது காரணமில்லாத கோபம் வந்தது. 'இடியட், லூசு' - பக்கத்திலிருந்த லாவண்யா திடுக்கிட்டாள்.

"மது...! என்ன இது? இப்போ, ஏன் என்னைத் திட்டினே...!"

அச்சச்சோ! தருணை மனதிற்குள் திட்டாமல், கொஞ்சம் உரக்கவே திட்டி விட்டேனோ! அசடு வழிந்தாள்.

"இல்லைடி...! நான் காலையில் வரும்போது ஒரு ரோக் கூட சண்டை போட்டேனா...! அந்த இர்ரிடேஷன் என்னை விட்டு இன்னமும் போகலை. அவனைத்தான்...!"

"பாத்து...! இன்று 'ரோக்'காத் தெரியறவன், நாளை 'ரோமியோ'வா ஆகிடப் போறான்!

"டீ...! உன்னை, உன்னை..." - மது பல்லைக் கடித்துக் கொண்டு தோழியை முறைக்க முறைக்கவே, பேராசிரியை இவர்களைப் பார்த்து முறைக்க... வேறு வழியில்லாமல். அதை அத்தோடு விட வேண்டியதாயிற்று!

'வெளியே வருவாய் இல்லே... அப்போது பார்த்துக் கொள்கிறேன்' என்றது தோழியை நோக்கிய மதுவின் பார்வை.

பதிலுக்கு, 'சும்மா அலட்டாதே! மோதலில் தான் காதல் உருவாகும் கண்ணா...' என்றது தோழியின் பார்வை.

## 6

அந்த வாரத்தில் ஒரு நாள்... மிதுனின் பெற்றோர், சந்தனா வீட்டிற்கு வந்து, சிற்றுண்டி உண்டுவிட்டுச் செல்ல, இருவர் வீட்டாரும் மனம் விட்டுப் பேச வாய்ப்பு உண்டாயிற்று.

அந்த மாத இறுதியில், நிச்சயத்திற்கு நாள் குறிக்கப் பட்டது.

தருண்... தன் அம்மாவை நச்சரித்த போதிலும், அம்மா பிடிகொடுக்கவில்லை.

"டேய் தருண்...! சந்தனா நாளை உன் அண்ணியாகப் போகிறவள். மதுரா மட்டும் என்ன, நம் வீட்டுப் பெண்



போலத்தான்! அவர்கள் மதுராவிற்கு மாப்பிள்ளை பார்த்துக் கொண்டிருந்தால், நாம் அவசரப்படலாம். அந்தப் பெண்தான் படித்துக் கொண்டிருக்கிறாளே... அது முதலில் முடியட்டும்டா!"

"என் செல்ல அம்மால்ல...! மதுரா படிப்பு மெதுவாக முடியட்டும். யார் வேண்டாமென்று சொன்னார்கள்? ஆனால், நம் மனதில் இருப்பதையும் கோடிட்டுக் காட்டினால் தானே, அவர்களுக்கும் கையில் வெண்ணெயை வைத்துக் கொண்டு... ச்சீய்... கையில் மாப்பிள்ளையை வைத்துக் கொண்டு வெளியில் ஏன் தேடவேண்டுமென்று..."

"ரொம்ப வழியறது... துடைச்சுக்கோடா! நான்தான் அன்றே சந்தனாவின் அம்மா, அப்பாகிட்டே சொல்லிட்டேனே... அவர்கள் வீட்டில் இதுபற்றிக் கலந்து பேசி இருக்க மாட்டார்களா... அல்லது மதுவிடம்தான் கூறியிருக்க மாட்டார்களா?"

"இதை ஒரு நிபந்தனை போல் வைத்து, சந்தனா - மிதுன் திருமணத்தை நடத்த நினைக்கிறோம் என்று அவர்கள் நினைத்து விடுவார்களேடா...!"

குறுக்கே புகுந்தார், அப்பா!

"அம்மா சொல்றதுதான் சரி... மிதுன் நிச்சயத்தின் போதும், கல்யாணத்தின் போதும் மதுராவிடம் பேசிப் பார். அந்தப் பெண்ணிடமோ, சம்பந்தி மனதிலோ அப்படி ஒரு எண்ணம் இருப்பது தெரிந்தால், அடுத்த முகூர்த்தத்திலேயே நாள் குறிக்கலாம்!"

வேறொன்றும் பேச முடியவில்லை தருணால்.

பாசிட்டிவ்வாகச் செய்தி வரவில்லையென்றாலும், நெகட்டிவ்வாக வரவில்லையே!

'மது...! உன்னை நான் நேரில் கேட்டால், மறுக்கவா போகிறாய்...?'

தன் ஒருதலைக் காதல் மீது அவ்வளவு நம்பிக்கை தருணிற்கு.

மதுராவைச் சந்தித்த அந்த நாள்... பசுமையாக மனதில் ஒட்டிக்கொண்ட அந்த நாள், நினைவிலாடியது.

மதுவின் பெயர்கூடத் தெரியாத தருணிற்கு, அப்போது பெயரா முக்கியம்! மது விட்டுச் சென்ற நினைவுகள் அல்லவா இவன் துடிப்புகளில் கலந்து விட்டிருந்தது.

அன்று வேலை முடிந்து, சிற்றுண்டி சாப்பிடத் தன் அலுவலகத்திற்கு அருகேயிருந்த, அந்தப் பகுதியில் ஓரளவு பிரபலமாயிருந்த 'கார்னர் கபே'யில் ஓர் ஓர இருக்கையில் அமர்ந்து, வெயிட்டரை எதிர்நோக்கிக் கொண்டிருந்தான் தருண்.

மின்னலும், புயலும் ஒன்றென வந்தாற்போல் அவள் உள்ளே நுழைந்தாள். கண்களை எல்லாப் புறங்களிலும் சுழல விட்டுவிட்டு... வேறெங்கும் இருக்கை இல்லை என்பதால், இவனுக்கு அருகேயிருந்த ஒற்றையிருக்கையில் அமர்ந்தாள் அந்த வேல் விழியாள்.

உடம்பில் ஒரு பதட்டம்! அவசரமாய் வீடு போய்ச் சேர வேண்டுமோ? அல்லது இது போன்ற உணவகங்களுக்குத் தனியே வந்ததில்லையோ... என்னவோ ஒன்று!

அவள் உடல் வெளிப்படுத்திய நறுமணம், இவன் சுவாசத்தை நிறுத்தி மூச்சடைக்க வைத்தது.



சர்வர் வர... தருண், தனக்கு ஆர்டர் செய்ய... அவளும் தனக்கு ஆர்டர் செய்தாள்.

இருவரும் மௌனமாகச் சாப்பிட, தருண் மனதில் ஓராயிரம் வண்ணத்துப் பூச்சிகள் ஒரு சேரப் பறந்தன.

பேசிப் பார்க்கலாமா? பேராவது கேட்கலாமா? சுற்றப்புறம் கருதியாவது 'பேட்டா'வைத் தூக்கிக் காட்டாமல், ஓரிரு வார்த்தைகள் பேசுவாளோ?

ஆனால் தவறாக எடுத்துக் கொண்டு விட்டால்...!

எந்த மனக் கிலேசமும் இல்லாமல், சாப்பிடுவது ஒன்றே குறியாக முடித்துவிட்டுக் கைகழுவச் சென்றாள் அந்த ஒயிலாள்!

அதற்குள் பணம் செலுத்துவதற்கான பில் வந்து விட...

அதைப் பார்த்துத் திடுக்கிட்டான் தருண்!

## 7

இவர்கள் இருவரையும் கணவன், மனைவி என்றெண்ணி ஒன்றாகப் பில் போட்டிருந்தான் வெயிட்டர்.

உடனே கோபப்பட்டு, சத்தம் போட்டு, இரண்டு தனித் தனி பில்கள் கொண்டு வரும்படி திட்ட... அன்று தான் ஏன் முன்வரவில்லை என்பது இன்று வரை தருணுக்குப் புரியவில்லை. ஒரு வேளை தான் உள்ளூர அதை ரசித்தானோ!

ஆனால், இவன் செய்திருக்க வேண்டியதைத்தான் செய்தாள், மதுரா.

"உங்க கணவர்தான் பில்லுக்குப் பணம் குடுத்துட்டாரே, மேடம்..." என்ற வெயிட்டருக்குச் செமையாக விழுந்தது திட்டு.

"ஏய்...! மிஸ்டர்! என்ன... எங்களைப் பார்த்தாக் கணவன் மனைவி மாதிரியா தெரிகிறது? அவர் தனியா, நான் தனியாத்தானே ஆர்டர் பண்ணினோம். நீயா எப்படிச் சேர்த்துப் பில் போடலாம்?"

அவன் பரிதாபமாகத் தருணைப் பார்த்துவிட்டு, அவளைப் பார்த்தான்.

"ஸாரி மேடம்! பில் சார்கிட்டே கொடுத்தேனே, அப்போக்கூட அவர் ஒன்றும் சொல்லவில்லையே... ஸாரி மேடம்...!"

உடனே கோபம் கொப்புளிக்கும் கண்களுடன் இவன்புறம் திரும்பினாள்.

"நீங்க யாரு மேன், எனக்கும் சேர்த்துப் பில் 'பே' பண்ண...! அதுக்கு வேற ஆள் பாருங்க. சார்... நான் சாப்பிட்டதற்கு உண்டான பணம் எவ்வளவு?"

சர்வர் பார்த்துக் கொண்டு வர நகர்ந்து போனதும், புலம்பலாய் - அதே சமயம் மெல்லமாய்...

"அவனுக்குத்தான் அறிவில்லை... இந்தாளுக்கு அறிவு எங்கே போச்சு? என்னோட காதலனா என்ன, இவன்?"

"அப்படியும் வைத்துக் கொள்ளலாம்... எனக்கு ஆட்சேபனையில்லை!"

அதே அளவு மெல்லமாய்... அவளுக்கு மட்டுமே கேட்குமாறு, குறும்பாகக் கண் சிமிட்டிக் கூறினான் தருண்.



'ஷிட்!' - காலை உதைத்தவாறே கோபத்துடன் நின்றாள் மதுரா!

பிடிவாதமாகப் பணத்தை அவன் முகத்தெதிரே வீசாத குறையாகக் கொடுத்துவிட்டுத்தான் சென்றாள்.

வெளியே அவள் போகப் போக... இவன் மனதின் உட்புறம் அவள் நினைவுகள் உள் நோக்கிச் செல்லத் தொடங்கியிருந்தன.

# 8

இன்னமும் இரண்டு நாட்களில் நிச்சயதார்த்தம்.

நவநீதன், மதுராவை நிச்சயத்திற்கே ஒரு வாரம் லீவு போடச் சொல்லிவிட்டார்.

எப்படியும் திருமணத்திற்குள் அவள் படிப்பே முடிந்து விடும்.

மனைவி சொல்வதில் நியாயம் இருப்பதை உணர்ந்திருந்தாலும், சந்தனாவை மிதுன் பார்க்க வரும்போது, மதுராவை வரக்கூடாது என்று தடுத்தது, நவநீதனுக்கே மனதிற்கு ஒரு மாதிரியாக இருந்தது.

சந்தனாவையும், மதுவையும் தன் இரு கண்களாக நினைப்பவர். இன்றோ, மனதிற்கு நிறைவாக இருந்தது.

மதுரா சம்மதம் தராவிட்டாலும்கூட, திருமணத்தை மறுப்பதற்குப் பெரிய காரணம் ஏதுமில்லை.

இந்த வருடத்தோடு படிப்பு முடிந்து விடும். பிடி கொடுக்காவிட்டாலும், மது... தருணை மணக்கச் சம்மதித்து விடுவாள் என்றே அவருக்குத் தோன்றியது.

கண்ணுக்குத் தெரியாத ஒரு குதூகலம் அந்தக் குடும்பத்தைச் சூழ்ந்தது.

இருவருக்கும் வயது வித்தியாசம் குறைவு என்பதால், தோழிகளைப் போல் மதுவும், சந்தனாவும் ஒருவரை யொருவர் சீண்டிக்கொண்டே நிச்சயதார்த்த வேலைகளைக் கவனித்தனர்.

மதுரா சந்தனாவைச் சீண்ட... அவள் பொன் முகம் குங்குமமாகச் சிவந்தது வெட்கத்தில்!

பதிலுக்குத் தருணை வம்புக்கிழுத்துச் சந்தனா சீண்ட... மதுவின் முகம் நொடிப்பொழுதில் கோபத்தில் சிவந்தது, பெற்றவளின் கண்களுக்குத் தப்பவில்லை.

பொதுவாகவே... கல்யாணப் பேச்சை எடுத்தாலே, இப்போது வேண்டாம் என்று மறுத்தவள்... மேலே படிக்க ஆசைப்பட்டுத்தான் அப்படிச் சொல்கிறாள் என்று சாதாரணமாக நினைத்தது தவறோ?

பிடி கொடுத்துப் பேசாதது மட்டுமல்ல - அந்த மாப்பிள்ளைப் பையனைப் பற்றிப் பேசும்போது, ஏன் முகம் சுருங்கி, மாறிப் போகிறாள்?

இந்தத் திருமணத்தில் இஷ்டமில்லையா... அல்லது வேறு யாரையாவது...

நினைக்கும்போதே, ஏதோ தன் குடும்பத்திற்குப் பெரும் தீங்கு வந்து சேர்ந்ததைப் போல் மனம் பதைத்தது, கெஜலக்ஷ்மிக்கு.

ஏதோ குடும்பத்தில்... யாரோ... பெண்ணோ பிள்ளையோ காதலிக்கிறார்கள் எனும்போது, சாதாரணத் தகவலாக ஏற்றுக் கொள்ளும் மனது, தன் பிள்ளைகள்



காதலிப்பதாகச் சொல்லிவிடுவார்களோ என்று எண்ணும் போதே என்னமாய்ப் பதைக்கிறது?

ச்சே...! அப்படியெல்லாம் இருந்தால், சொல்லி யிருப்பாளே மதுரா!

மதுவும், பெற்றோரிடம் அப்படியொன்றும் பயந்து மறைப்பவள் இல்லை! பளிச்சென்று சொல்லி வாதாடுபவள். அது போலவே...

நவநீத்தும்... மற்ற தந்தைகளைப் போல், பெண்களுக்குப் பேச்சுச் சுதந்திரமே கொடுக்காமல், அடக்கி ஒடுக்கி வளர்க்காமல், தனக்குச் சமமாக உட்கார்ந்து விவாதிக்கும் அளவு சுதந்திரத்துடனேதான் வளர்த்திருந்தார்.

ஒரு தற்காலிக யோசனையினால், மனதைச் சற்று ஆறுதல் படுத்தி வைத்தாள் கெஜலக்ஷ்மி.

பெண்களின் சந்தோஷத்தில் தானும் பங்கு கொண்டு வேலைகளைக் கவனிக்க ஆரம்பித்தாள்.

## 9

மாலை நிச்சயதாம்பூலம். மிதுனும், தருணும் நிறத்திலும் பர்சனாலிட்டியிலும் ஒருவருக்கொருவர் சளைக்காமல் போட்டி போட்டனர்.

'யார் மாப்பிள்ளை?' என்றே புதியவர்கள் கண்டு பிடிக்கச் சிரமப்படும் அளவிற்கு... அலங்காரத்தில் தருண், மிதுனோடு போட்டி போட்டான்.

கெஜலக்ஷ்மியின் செல்வங்கள் மட்டுமென்ன...? சந்தனா தலை நிறையப் பூ... கையில், உள்ளங்கையில்

வடை மாதிரி இட்டு, ஓரங்களில் புள்ளி வைத்து, அந்தக் கால ஸ்டைலில் அம்மா இட்டுவிட்ட மருதாணி, நல்ல அகலமான ஜரிகையில் வேலைப்பாடுகள் நிறைந்த பட்டுப்புடவை என்று மங்கலகரமாக ஜொலித்தாள்.

மதுவோ... முழங்கை வரை மாடர்ன் ஆர்ட்டாகச் சிவந்திருந்த மருதாணி, வெட்டி விட்டுக் கொண்ட கூந்தல், லேட்டஸ்ட் வரவான சுடிதார் என்று அமர்க்களப்படுத்தினாள்.

தருணின் கண்கள் அவ்வப்போது ஆசையாக மதுராவைத் தொட்டு மீண்டன.

அவனைப் பொறுத்தவரையில், இவனும் மதுராவும் அருகருகே ஒரே சமயத்தில் வந்து அமர்ந்ததால்... இருவரும் கணவன் மனைவியோ அல்லது காதலர்களோ என்று பேரர் நினைத்து விட்டான்.

இதில் யார் பேரிலும் தப்பில்லையே! அதனால்... மதுராவைச் சந்தித்த ஒரு தருணமாக மட்டுமே அந்தச் சூழ்நிலை, தருணின் நினைவுகளில் பதிந்து போயிருந்தது.

அதற்கு மேல் அவனுக்கு யோசிக்கத் தோன்ற வில்லை.

எனவே, தன்னைப் போலவே ஆவலாய் அவனை எதிர்கொள்வாள், பேசுவாள் என்று எதிர்பார்த்தவனுக்குப் பெரும் ஏமாற்றமே!

அதிலும்... அவளை மிகவும் பிடித்துப் போய்த் திருமணம் செய்து கொள்ளும் தன் எண்ணத்தையும் அவள் பெற்றோரிடம் கோடிட்டுக் காட்டிவிட்டதால், மதுவின் செய்கை தருணுக்கு வியப்பாக இருந்தது.



மேடையை அலங்கரித்த பூ அலங்காரங்களில் திருப்தியில்லாமல், அதைக் கொஞ்சம் மாற்றியமைத்துச் சரி செய்து கொண்டிருந்த மதுராவை நோக்கிப் போனான்.

ஏற்கெனவே அன்று பார்த்தது அவளுக்கு நினைவில்லையோ...!

எப்படியும் நான் மணக்க ஆசைப்பட்டுக் கேட்டதை யாவது வீட்டில் சொல்லியிருப்பார்களே...!

எண்ணங்கள் மனதில் அலை மோத, அவளையே பார்த்தவாறு சென்றான் தருண்.

"ஹலோ...!"

அவன் குரல் அவனுக்கே கேட்டிருக்குமா என்பது சந்தேகம்.

"ஹாய்... வினு! சொன்னால் கேள்; அதை எடுத்துண்டு ஓடாதே!"

ஏதோவொரு வாண்டுவின் பின்னால் அவள் ஓடி விட்டாள்.

சை...! என்னடா இது? நம் ப்யான்ஸியுடன் பேசுவதே இப்படிக் கஷ்டமாக இருக்கிறதே!

## 10

பார்க்காமல் செய்தாளோ அல்லது வேண்டுமென்றே செய்தாளோ... மதுரா, அன்றைய நிச்சயதார்த்த நிகழ்ச்சி முடியும் வரை தருணை அவள் பின்னே அலைய விட்டுக் கொண்டே இருந்தாள்.

தருணிற்கும் இது த்ரில்லிங்கான அனுபவமாக இருந்தது. அவளுக்கும் இது உள்ளூர எரிச்சலைத் தந்தாலும், அதையும் மீறி ஒரு அற்ப சந்தோஷத்தை அவளுள் விதைத்தது.

'பெரிய மன்மதன் என்று மனதில் நினைப்பு. அவன் மன்மதனென்றால் நான் ரதியாக்கும்...' - நினைப்பு நெஞ்சில் ஊற ஊறவே, கைகள் அனிச்சையாய்க் காதோர முடியைச் சரிசெய்து கொண்டன.

அன்றே ஒரு நாள் உணவகத்தில் அதிகப்பிரசங்கித் தனமாகத் தனது துணையைப் போன்ற ஒரு தோற்றத்தை ஏற்படுத்திக் கடுப்பேற்றினான்.

பின்பும் தன்னைத் திருமணம் செய்து கொள் கிறானாம். பெற்றோர் வழி தூது... நினைக்கையிலேயே நகைத்தாள் மதுரா.

இப்போதெல்லாம் பெண் பார்க்கும் வைபவம் நடக்கும் போதே, இரு வீட்டைச் சேர்ந்த பெரியவர்கள் முன்னிலை யிலேயே பையனும் பெண்ணும் தனியறைக்குப் போய்ப் பேசிவிட்டு ஒரு முடிவிற்கு வருகிறார்கள்.

பையனையோ, பெண்ணையோ... என்ன பேசி னீர்கள் என்று கேட்பது கூட நாகரிகக் குறைவாகிவிடும்.

அப்படிக் காலம் மாறிக் கொண்டிருக்க, இந்தப் பையன் தருண்... என் மனது தெரியாமலேயே - என் எதிர்கால லட்சியம் தெரியாமலேயே... அப்பா அம்மாவிடம் எப்படிப் பேசலாம்?

என் கற்பனையிலேயே மண்ணை அள்ளிப் போட்டு விடுவான் போலிருக்கிறதே!



அக்கா திருமணம் முடிந்து, அதற்குள் தன் படிப் பையும் முடித்துக் கொண்டு, தன் திருமணத்திற்குக் கொஞ்சம் தானே சேர்த்துக் கொண்டு, பின்தான் திருமணம் பற்றிய பேச்செடுக்க விடவேண்டும் என்றல்லவா கனாக் கண்டிருந்தாள்.

இப்படி நிச்சய விழாவே இவ்வளவு சிறப்பாக நடக்க, சந்தனாவின் சேமிப்பும் ஒரு காரணமல்லவா?

ஏனோ சிலரைக் கண்டவுடன் பிடிப்பதைப் போலவே, சிலரைக் காரணமேயில்லாமல் கண்டவுடன் பிடிக்காமலும் போவதுண்டு.

தருணைப் பிடிக்காததால், அவனது வசீகரத் தோற்றமோ, கம்பீரமான முகமோ, அடர்ந்த மீசையோ, மிடுக்கான உடல்வாகோ, அவளுள் எந்த ஒரு பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை.

அம்மா வலிய வந்து கூறினாள்... பட்டுச் சேலை பரபரக்கப் பக்கத்தில் வந்தவள்,

"மது...! மாப்பிள்ளையோட தம்பி உங்கிட்ட ஏதோ பேசணும்னு பிரியப்படறாராம். கொஞ்ச நேரம் பேசிட்டிரு மது!" என்றவள்... இரண்டு அடி எடுத்து வைத்துவிட்டுத் திரும்ப வந்து,

"இதோ பார்! எங்ககிட்டே பேசுவதைப் போல் உன் மேதாவித்தனத்தை எல்லாம் காட்டணும் என்று அச்சுப் பிச்சுன்னு பேசாதே! கேட்ட கேள்விக்கு மட்டும் நேராப் பதில் சொல்லு!"

மதுவின் முகம் சிவந்தது. 'பெண்ணைக் கட்டிக் கொள்கிறேன்!' என்று ஒரு வார்த்தை சொல்லி

விட்டதாலேயே... இப்படித் தலைக்கு மேல் தூக்கி வைத்துக் கொண்டு ஆடுவதா? ஆடிவிட்டுத்தான் போகட்டும்... அதற்குத் தன்னை மட்டம் தட்டுவானேன்!

வழக்கம் போல், துடுக்கெனப் பதில் சொல்ல எத்தனித்தவள், பின் வாயை மூடிக் கொண்டாள்.

பாவம் அம்மா! சந்தனா திருமணம் நிச்சயம் ஆனதும், பின் தன்னைப் பற்றிய கவலையைத் தொடங்கி விடுவாள். அதற்கு வேலை வைக்காமல், பழகிய குடும்பத்திலேயே... அவர்களாகவே முன்வந்தது அம்மாவைப் பொறுத்தவரை அவள் செல்வங்களின் அதிர்ஷ்டம். அவள் நிலையிலிருந்து பார்த்தால் அதில் குற்றமில்லை.

"சரிம்மா! அப்பா உன்னைத் தேடறார் பாரேன்!" என்று அம்மாவைத் திசை திருப்பி அனுப்பி விட்டாள்.

## 11

நிச்சயம் நல்லபடியாக முடிந்ததில், அனைவருக்கும் திருப்தி. சந்தனா அலுவலகம் செல்லத் துவங்க, மதுரா விடுதி திரும்பி விட்டாள்.

நல்ல வேளை, இந்த வேலைப் பளுவில், அம்மா மறுபடி தன் திருமணப் பேச்சை எடுக்காமல் விட்டாளே என்று ஒருபுறம் உள்ளூர நிம்மதி மதுவிற்கு.

இப்படி ஒரு நிம்மதி உள்ளூரப் பரவுகிறது என்றால், தனக்குத் தருண்பால் எந்த ஈடுபாடும் பிறக்கவில்லை என்பதுதானே நிஜம். அதே பெரிய வெற்றிதானே! அடுத்து வந்த முகூர்த்தத்திலேயே சந்தனா – மிதுன் திருமணம்



ஜாம்ஜாமென நடந்தது. மது திருமணம் பற்றி யாரும் பேசவில்லை.

இருந்தாலும், தருணைத் திருமணம் செய்வதைத் தடுக்க ஏதாவது அவசரமாகச் செய்தாக வேண்டுமே...! இதே நினைவில் வகுப்பறையில் பாடத்தைக் கவனியாது, எங்கோ கவனத்தைப் பதியவிட்டு... இரண்டொரு முறைகள், 'சாரி' என்றவாறே தலையைக் குனிய வேண்டி வந்தது.

மனம் தீவிரமாக யோசித்து... ஒரு வழியைக் கண்டுபிடித்தது. அவள் மனம் யோசித்ததைப் போலவே, அது கண்டுபிடித்த வழியும் பைத்தியக்காரத்தனமாகத்தான் இருந்தது.

ஆனால், என்ன? இந்த வழியில் போனால்... தருண், தானே ஓடிவிடுவான்!

பெரிய இறுமாப்புடன் தன் யோசனையை ராகினியிடம் கூறியபோது, அவள் நோகாமல் அடித்துக் கொண்டாள், அவள் தலையில்!

"எங்கிருந்துதான் எனக்கு இப்படி ஒரு பேக்கு நண்பி வந்து மாட்டினதோ...!"

"ஏய்...!"

"பின்ன என்னடி? கொசுவிற்குப் பயந்து வீட்டைக் கொளுத்தின கதையாய் இல்லே இருக்கு. அதற்கு நீ அந்தப் பையன் பேரென்ன சொன்ன, வருண்..."

"இல்லை தருண்... இப்போ பேராடி முக்கியம்?"

"அடப்பார்ரா... அப்படியென்றால், அப்படியே சொல்லி விட்டுப் போகட்டும் என்று விடவேண்டியதுதானே... பேரைத்

தப்பாகச் சொல்வதைக் கூடப் பொறுக்க முடியாமல், திருத்தி விட்டது நீ...!"

"சரி, விஷயத்துக்கு வா... நான் சொன்ன யோசனை சரிதானே!"

ராகினியும் சீரியஸானாள்.

"நீ வர வர நிறைய மாத நாவல்கள் படித்து, சினிமா பார்த்துக் கெட்டு விட்டாய். குணப்படுத்த முடியாத வியாதி என்றால் என்னவென்று சொல்வாய்? எய்ட்ஸ் என்றா...?"

"ச்சேச்சே...! நீ வேற... சின்னதா ஏதாவது ஹார்ட்டுல ப்ராப்ளம்... ப்ரெய்ன் ட்யூமர்... இப்படி ஏதாவது எடுத்து விட்டால்... ஓடிவிட மாட்டான் அவன்...?"

"ஓடி விடுவான்தான்! ஆனால், அதற்கு முன் உன் அப்பா, அம்மாவிடம்... 'என்ன! வியாதிக்காரப் பெண்ணை ட்ரீட்மெண்ட் கூடக் கொடுக்காமல் வைத்திருக்கிறீர்களே... முதலில் டாக்டரைப் போய்ப் பாருங்கள்,' என்று அட்வைஸ் செய்து விட்டுப் போவான். அங்கிள், ஆன்ட்டிக்கு விஷயம் சென்றால், பின்... நீ...!"

"ஐயையோ! வேணாம்டி... ஏதோ நம் அளவில் அவனை எப்படியாவது அப்புறப்படுத்தி விடலாம் என்று தான்..."

"இப்போ தெரியுதா...? நீ சொன்ன யோசனையின் அபத்தம்! அதோடு அவன்... யாரோ வருண் இல்லை... உன் அக்காவின் மைத்துனன்... அதை மனதில் வைத்துக் கொண்டு யோசி..."

சற்று நேரம் துப்பட்டா நுனியைத் திருகிக் கொண்டிருந்த மது... திடீரென முகம் பிரகாசிக்க,



"ஏய்... ராகினி! இப்படிச் செய்தா என்ன?"

"இப்படிச் செய்திட்டே இருந்தா, துப்பட்டா நூல் நூலாப் போய்... கையில் வெறும் நூல் மட்டும்தான் இருக்கும்..."

"அடிச்சேன்னா தெரியும்! எனக்கு ஒரு வழி தோணுது... அதன்படி செய்தா என்ன...?"

"என்னடி அறுக்கறே? என்னதான் அம்மையாருக்கு ஐடியா உதயமாச்சோ? சொல்லித் தொலையேன்!"

ராகினி கேட்க... மது ஏற்ற இறக்கத்துடன் சொல்லத் தொடங்கினாள்.

"கேட்க நல்லாத்தான் இருக்கு... ஓ.கே. ஆனால், நடைமுறையில் சரியா வருமா?"

"ஏன் வராது?" கொஞ்சம் போல் யோசனை வயப்பட்ட ராகினி,

"ஆமா... இதை அவன் உன் அப்பா, அம்மாவிடமே கூறிவிட்டால்... அப்புறம் நீ சொன்னது பொய்தான் என்று நீ சொன்னாலும்... அங்கிளும், ஆன்ட்டியும் அதை நம்பு வார்களா?"

"அதற்கும் ஐடியா இருக்குதுடி! 'என் அப்பா, அம்மாவிற்கு இப்போது தெரியாது... நானே நேரம் வரும்போது பக்குவமாகச் சொல்லிக் கொள்கிறேன். அதுவரை நீங்கள் எதுவும் கூற வேண்டாம்!' என்று அவனையே கொஞ்சம் ரிக்வெஸ்ட் செய்தால் போயிற்று...!"

"உன் அக்காவிடம் ஏதாவது உளறிவிட்டால்...!"

"அந்தக் கவலையே உனக்கு வேண்டாம். அக்கா என் கட்சிதான். அவனை எனக்கு ஆரம்பம் முதலே

பிடிக்கவில்லை என்பது சந்தனாவிற்குத் தெரியும். அதோடு, நான் இதுபற்றித் தருணிடம் பேசுமுன், இது சும்மா 'டுப்ஸ்'னு அக்காகிட்ட சொல்லிடுவேன்ல... ஏன்னா, என்னால அக்கா கிட்ட எதையும் மறைக்க முடியாது."

இருவரும் இன்னும் சிறிது நேரம் பேசி, விவாதித்துத் தங்கள் திட்டத்தில் உள்ள ஓட்டைகளை அடைத்தனர். அதையே செயல்படுத்துவதென்று தீர்மானமும் செய்தனர்.

ராகினிக்கு மட்டும் தோணாமலில்லை...

'ஏன் இப்படிப் பிடிவாதமாக இருக்கிறாள் மது! ஆள் பார்க்கவும் நன்றாக இருக்கிறான். நல்ல ஐ.டி. கம்பெனி வேலை. சொந்தமாகவும் ஆகிவிட்டான். இவளை விரும்பு கிறான். அழகாகக் கல்யாணம் செய்வதை விட்டுவிட்டு...'

மதுவைக் கேட்டால், கோபாவேசமாகி விடுவாள். அவளைப் பொறுத்தவரை, ஒன்று பிடிக்கவில்லையென்றால் பிடிக்கவில்லைதான். நோ காம்ப்ரமைஸ்.

இப்படி அட்வைஸ் செய்தால், இவள் நட்பை முறித்துக் கொண்டாலும் கொள்வாளே தவிர, தான் மாறமாட்டாள்.

தோழியின் குணம் அறிந்து, ராகினி பேசாதிருந்தாள்.

## 12

தருணுக்கு இருப்புக் கொள்ள வில்லை. தன் ஆசையைப் பெற்றோர் வழியாக அண்ணி வீட்டில் கூறியாயிற்று.

மதுராவின் படிப்பு இந்த மாதத்தோடு முடிந்துவிடும்.



பிறகு திருமணம் பற்றிப் பேசவேண்டும் என்ற பதில் வந்தது. அது வருவது போல் வரட்டும்.

நாமே மதுவிற்குப் போன் செய்து பார்த்தால் என்ன...? 'மது...!' - சொல்லிப் பார்த்தான். இனிப்பாக உணர்ந்தான்.

மெல்லத் தனக்குள் சிரித்தவாறே, மதுராவைத் தொலைபேசியில் அழைத்தான்.

தருணால் அவன் காதுகளையே நம்பமுடியவில்லை. என்ன சொன்னாள் மது!

"நானும் உங்களிடம் கொஞ்சம் மனம் விட்டுத் தனியாகப் பேச வேண்டும். நானே உங்களை அழைக்கலாம் என்றிருந்தேன்...!"

"சரி...! இந்த வாரம் இறுதியில் ஹாஸ்டலில் இருந்து வீட்டிற்கு வருகிறீர்கள் இல்லையா? அன்று வீட்டிற்கு வரவா...?"

"வேண்டாம், வேண்டாம்! வீட்டிற்கெல்லாம் வர வேண்டாம்! ஏன், இன்று மாலை ஹாஸ்டலுக்கு வாருங் களேன்...!"

ஐயோ! தருண் உனக்கு உடம்பெல்லாம் மச்சம்டா...! இன்னிக்கே வரச் சொல்லிட்டா. ஏய்... லூசாடா நீ? மதுவிற்குத் தெரிந்ததுகூட உனக்குத் தெரியவில்லை. ஆசையாகக் காதலிக்கும் பெண்ணுடன் பேசப் போகிறாய். வீட்டிற்கா வருகிறேன் என்பாய்? ஆன்ட்டி, அங்கிள் முன் என்ன பர்சனலாய்ப் பேச முடியும்? புத்திசாலி, மது! தனியாக விடுதிக்கு வா... என்று எவ்வளவு அழகாய்க் கோடு போட்டுக் காண்பித்து விட்டாள்!

தனக்குள்ளாகப் பைத்தியம் போல் பேசிக் கொண் டான், தருண்!

மதுபால் அவனை யறியாமல் கொண்ட மோகம் அவனை நிலை கொள்ளாமல் சந்தோஷிக்க வைத்தது.

மாலை எப்போதும் இருந்து வேலைகளை முடித்து விட்டுப் பின் சிறிது நேரம் அரட்டை அடித்துக் கொண் டிருந்துவிட்டு... லேட்டாக அலுவலகத்திலிருந்து புறப்படும் தருண், அன்று மாலை முன் அனுமதி சொல்லிவிட்டு, அதற்குள் அன்றைய வேலைகளை வேகவேகமாக முடிக்கத் தொடங்கினான்.

மனமெல்லாம் ஒரே பரபரப்பு. மனம் அவளிடம் பேசப் போகும் வார்த்தைகளை ஒத்திகை பார்த்துக் கொண்டது. பந்தாவாக ஹாஸ்டல் வாசலில் இறங்கும்போது மாலை மணி ஆறு.

"டீ உன் ஆளு...!" மதுராவிடம் அவள் தோழி கூறுவது, இவன் காதுகள் வரை எட்டியது. அவசரமாகக் காலரைத் தூக்கிவிட்டுக் கொள்ளும் எண்ணத்தை உடனே துறந்தான். பொறு மகனே! ஓவர் சீன் போடாதே!

ஆனால் தோழி கூறியதைக் கேட்டுப் பூரித்திருக்க வேண்டிய அவள் முகம் கடுகடுத்ததையும் அவன் காணத் தவறவில்லை.

"அருகிலேயே பூங்கா இருக்கிறது! அங்கே போவோமா?"

தனக்கு ஆட்சேபனை ஏதும் இல்லையென்பதைத் தோள்களைக் குலுக்கியவாறே தெரிவித்த தருண், அவளுக்கு இணையாக நடந்தான்.



அங்கே...! அவள் சொல்லச் சொல்ல... இவன் கேட்கக் கேட்க... இவன் இதயமே வெடித்து விடும் போலானது. கண்கள் வெறித்து அவளையே பார்க்க, இதயம் ஒரு நிமிடம் துடிக்கலாமா, வேண்டாமா என்று யோசித்தது.

'கிராதகி! ஆட்டிற்கு மஞ்சள் நீரில் குளிப்பாட்டி அலங்கரித்து, மாலை போட்டு, அது மகிழ்ந்திருக்கும் வேளையிலே கழுத்திலே ஒரே போடாய்ப் போடுவதைப் போல என் இதயத்தையே இரு கூறாய்ப் போடுவதற்கா... இவ்வளவு தூரம், இவ்வளவு பீடிகையுடன் அழைத்து வந்தாய்...?'

'ஏன்... இதைப் போனிலேயே சொல்லித் தொலைத் திருக்க வேண்டியதுதானே! ச்சே! நீ வேண்டாம்... உன்னை விட ஒரு ஏமாளி கிடைத்துவிட்டான் என்று கூறவா, இவ்வளவு நடிப்பு?'

'ச்சே! அதற்குள் என்ன மனக்கோட்டையெல்லாம் கட்டி விட்டேன்? ஏய் பெண்ணே! உன்னை மாதிரிப் பெண்களுக்கு மனதில் ஈரம் உடனேயே வற்றிவிடுவது போல, கண்களில் கண்ணீரும் நினைத்தவுடனே வந்துவிடுமே! நொடியில் அழுது பரிதாபத்தை ஈட்டிக் கொள்வதோடு, மனப் பாரத்தைக் கரைத்து விடுவீர்களே...!'

'என்னைப் போன்ற ஆண் வர்க்கத்தைப் பாரேன்! ஆண் பிள்ளை அழக்கூடாது என்று சொல்லிச் சொல்லிப் பழக்கி, கண்களில் உகுத்து நிற்கும் கண்ணீர்கூட வெளிவர மறுக்கிறது. இப்படி அறுக்கத்தான் என்னை இங்கே வரவழைத்தாயா?' என்றெல்லாம் ஓங்கிக் கதற வேண்டும் போலிருந்தது.

"என் நிலையைக் கூறிவிட்டேன்... நீங்கள் ஒன்றும் தப்பாக எண்ணவில்லையே...!"

கோபத்தையும் ஆத்திரத்தையும் மீறிச் சிரிப்பு வந்தது தருணிற்கு. ஆளையே இரு கூறாய் வகுந்துவிட்டு, 'ஸாரி...! ஏதோ தெரியாமல் நடந்து விட்டது!' என்று பிணத்திடம் கூறுவது போலிருந்தது அவளின் சமாதானப் பேச்சு!

ஆமாம்! அவளின் மறுப்பைக் கேட்டதுமே பாதிப் பிணமாகவல்லவா ஆகிவிட்டான்!

வார்த்தைகள் வெளிவராமல் தவிக்க, அவளின் தோளில் மெல்லத் தட்டிவிட்டு, அந்த இடத்தை விட்டு அகன்றான் தருண்.

வீட்டிற்கு நேரே வந்தால், அண்ணி முகத்தில் முழிக்க வேண்டுமே!

எப்படித் தவிர்ப்பது?

## 13

அவளுடைய ஹாஸ்டலுக்கு வந்து பைக்கை எடுத்துக் கொண்டு, நண்பனின் ரூமை நோக்கி விரட்டினான்.

ஒருவேளை ஹாஸ்டல் அறை ஜன்னலில் இருந்து இவளது தோழி பார்த்துக் கொண்டிருப்பாளோ? அதுதான் எல்லாம் தெரிந்து, 'உன் ஆள்...' என்று நக்கலாகக் கிண்டலடித்தாளோ!

ஆண் பிள்ளைகளுக்குச் சந்தோஷத்தைப் பகிர்ந்து கொள்ளத் தேவையோ இல்லையோ... துக்கத்தைப் பகிர்ந்து கொள்ள நண்பனின் துணை அவசியம் தேவைப்படுகிறது.



எப்போதாவது அதிகச் சந்தோஷத்திலோ, அதிகத் துக்கத்திலோ சிகரெட்டின் துணை நாடும் தருணுக்கு, இன்று சிகரெட் தேவைப்பட்டது.

"வாடா... பாருக்குப் போவோம்...!"

"அதெல்லாம் வேண்டாம்! தம்மடிக்கிறதோட நிறுத்து. அன்று நம்ம ஃபிரெண்ட்ஸ் ரொம்பக் கம்பெல் பண்ணினபோது, லேசா ஒரு சிப் குடித்ததற்கே வாந்தி எடுத்தவன் நீ... இன்னிக்குப் பாருக்குப்போலாமான்னா கேட்கறே?"

"என்னடா பண்ணச் சொல்றே? கேட்க வைச்சுட் டாளே...!"

"அவ கிடக்கிறா... விடு. இவளை விட்டா வேறே பொண்ணு..."

"அவ என்னைப் பிடிக்கலைன்னு நிறுத்தியிருந்தாக் கூடப் பரவாயில்லைடா... ஏன்டா... எனக்கு என்ன குறைச்சல், சொல்லு... அழகில்லையா, படிப்பில்லையா? வேறே ஒருத்தனைப் போய்...!"

அதற்கு மேல் அவனால் பேச முடியவில்லை. ஆனந்திற்குத் தருணைச் சமாதானப்படுத்தி, அவன் வீடு கிளம்பும்வரை போதும் போதுமென்றாகி விட்டது.

ஒருவாறு தருண் வீட்டினுள் நுழையும்போது, மணி ஒன்பது. கலைந்த கோலமாய் அவனைப் பார்த்த தாயுள்ளம் துடித்தது.

"என்னடா, இவ்வளவு லேட்? சரி வா... சாப்பிடு!"

"எனக்குச் சாப்பாடு வேணாம்... தூங்கப் போறேன், குட் நைட்..."

"ஏன்டா...? வெளியிலேயே சாப்பிட்டுட்டு வந்துட்டாயா?"

"வேண்டாம்னா விடேன்... சும்மா தொண தொணன்னு..."

அம்மாவிடம் எரிந்து விழுந்தான். அம்மா முகம் மாறியதைக்கூடக் காணும் மன நிலை இல்லாமல், தன்னறைக்கு வந்து படுக்கையில் விழுந்தான்.

"ஏதோ, அவன்தான் ஆபீஸில் இருந்து களைப்பாய் வந்திருக்கிறான் இல்லை... சாப்பாடு வேண்டாம்னா விடேன்! பார்ட்டி ஏதாவது இருந்திருக்கும். அங்கே சாப்பிட்டிருப்பான். அவன் இப்படி வெளியில் சாப்பிட்டுவிட்டு, வேண்டாம்னு சொல்றது, புதுசா என்ன?"

"இல்லீங்க... இன்னிக்கு அவன் முகமே சரியில்லை...!"

பேச்சுக் குரல்கள் கதவின் இடுக்கு வழியே இவன் காதுகளில் விழுந்தன.

சாத்தியிருந்த கதவு லேசாகத் தட்டப்பட்டு, கூடவே யாரோ உள்ளே நுழையும் அரவம் கேட்டதும்,

"ஏம்மா...! ஒரு தடவை சொன்னா கேட்க மாட்டாயா? எனக்குத்தான் எதுவும் வேண்டாம்னு..."

அவன் குரல் கொலுசொலி கேட்டுப் பாதியிலேயே நின்றது.

அம்மா கொலுசு போடமாட்டாளே...!

"அண்ணி! சாரி...! அம்மான்னு நெனைச்சு..."

"பரவாயில்லை தருண்...! இந்தப் பாலை மட்டுமாவது குடிங்க...!"



மறுக்காமல் வாங்கிக் கொண்டான். வீம்பிற்குச் சாப்பாடு வேண்டாம் என்று வாய் மறுத்தாலும், வயிறு பசிக்கத்தான் செய்திருந்தது.

அண்ணியிடம் சொல்லிவிடலாமா? மது... யாரிடமும் சொல்லாதே என்று கேட்டுக் கொண்டாளே...! அது சரி! எத்தனை நாளைக்கு அவளால் இதை மறைக்க முடியும்? மேலும் என்னை ரணப்படுத்திவிட்டு, 'யாரிடமும் சொல்லாதே' என்று என்ன அதிகாரம் வேண்டியிருக்கிறது?

"என்ன தருண்...! ஏதாவது என்னிடம் சொல்லணுமா?"

"ஆமாம் அண்ணி...!" கொட்டிவிட்டான், சந்தனாவிடம் தன் மனக் குமுறலை.

"ஓ...! இதுதான் விஷயமா? இதுக்குப் பின்னாடி இருக்கிற உண்மை தெரிந்ததென்றால், இவ்வளவு வருத்தப்பட மாட்டீங்க...!"

சொல்ல வேண்டாம் என்று நினைத்திருந்ததையெல்லாம், மைத்துனனின் முகம் வாடியிருப்பதைக் காணச் சகியாது, கொட்டிவிட்டாள் சந்தனா.

"அதனால... மனசைப் போட்டுக் குழப்பிக்காம, தூங்குங்க, குட் நைட்!" – விளக்கை அணைத்துவிட்டுக் கதவைச் சாத்திக்கொண்டு வெளியேறினாள், சந்தனா.

## 14

மதுவிற்கு இந்த ஒரு வாரம் நிம்மதியாகக் கழிந்ததைப் போலிருந்தது.

அடுத்த வாரம் வரை தேர்வுகள் இருந்தன.

அதன் பின், சுதந்திரப் பறவையாக, ஒரு மாத காலமாவது வாழ்க்கையை அனுபவிக்க வேண்டும்.

இப்போதுகூட, வளாகத் தேர்வில் என்.எஸ்.எஸ். கம்பெனியில் தேர்வாகி இருக்கிறாள். ஆனாலும், மதுவிற்குத் திருப்தியில்லை.

இன்னமும் பெரிய கம்பெனியில் பெரிய பதவியில் அமர வேண்டும். தனக்குத் திருமணமாவதற்குள், தன் அப்பாவிற்குப் பெரியதொரு தொகையை... அவர்கள் வருங்காலத்திற்கு எனச் சேர்த்துத் தரவேண்டும். வளாகத் தேர்விலேயே இன்னமும் பெரிய கம்பெனிகள் எல்லாம் வர வாய்ப்பிருக்கிறது.

இதற்கெல்லாம் முட்டுக்கட்டையாக வந்த தருணைத் துரத்தியாயிற்று. அவன் போனும் இல்லை... அம்மாவிடம் கல்யாணம் பற்றிய பேச்சும் இல்லை.

ஒருவேளை அங்கிள், ஆன்ட்டியிடம் எல்லாவற்றையும் சொல்லியிருப்பானோ? சொல்லியிருந்தால், அப்பாவிடம் இருந்து உடனே போன் வந்திருக்குமே! அதனால், சொல்லியிருக்க மாட்டான்.

அன்றைக்கு முகம் போனதைப் பார்க்க, மிகவும் பாவமாயிருந்தது. அதற்காக இவள் தன் மனதை மாற்றிக் கொண்டு காதலிக்க வேண்டுமா, என்ன?

அவள் செய்தது சரியே என்று மனம் சமாதானப் படுத்தியது.

மறுநாளோடு எம்.பி.ஏ. முடியப் போகிறது என்று நினைக்கும்போதே, முதல் நாளிலிருந்தே மனம் முழுக்கப் பட்டாம்பூச்சியின் உற்சாகம்.



மறுநாளோ, கேட்கவே வேண்டாம். பள்ளிச் சிறுமியின் உற்சாகத்தோடு, விடுதிக்குக்கூடத் திரும்பாமல், ஐந்து நட்சத்திர ஹோட்டலில் மதியச் சாப்பாடு, மால் ஒன்றில் ஷாப்பிங், ஈவினிங் காட்சி சினிமா என்று, வாழ்க்கையை அன்று ஒரு நாளே முழுவதுமாக அனுபவித்துவிட வேண்டும் என்பது போல் சுற்றித் திரிந்தனர் மதுவும், அவள் தோழிகளும்.

இப்போது வீட்டில் சந்தனாவும் இல்லை. வீட்டிற்குப் போனால் வெறிச்சோடி இருக்கும் என்று அவள் நினைக்காமல் இல்லை.

அடுத்த நாள், விடியற்காலையிலேயே விடுதியைக் காலி செய்து கொண்டு வீடு திரும்பினாள் மது. அன்று சந்தனாவும் பிறந்த வீட்டிற்கு வந்துவிட, வீடு கோலாகலமானது.

"இப்பத்தான்டி மது... வீடு வீடாயிருக்கு!"

"ஏன் சந்தனா! அப்ப நேற்று வரை இங்கே, இந்த வீட்டிற்குப் பதில் வேறு ஏதாவது இருந்ததோ? ஆனால், எனக்கு இங்கே இந்த வீட்டைச் சிறு வயது முதலே பார்த்தது போலவே இருக்கே!"

"அரட்டை...! நீ வாயை அடக்க எப்போதான் கத்துக்கப் போறியோ?"

"வாயை அடக்கிட்டு, நீ செய்த இவ்வளவு பதார்த்தத்தையும் எப்படிம்மா உள்ளே தள்ளறது?"

"என்னமோ, சொல்லு சந்து...! இப்படி இவள் கிண்டலும், கேலியும் இல்லாம, உன் நமட்டுச் சிரிப்பு இல்லாம, வீடு வெறிச்சோடி இருந்தது."

இப்படி ஜாலியாகப் பேசிக்கொண்டிருக்கும்போது, அப்பாவும் ஏதோ சொல்ல வர, இடைமறித்து ஒலித்தது தொலைபேசி.

செவி மடுத்த அப்பா...

"மது...! போன் உனக்குத்தான். பேசு..."

"ஹலோ..."

"ஹலோ, மது...! என்ன எம்.பி.ஏ. முடிந்ததா? இனிமே உன்னுடன் எப்ப வேண்டுமானாலும் ஃப்ரீயாப் பேசலாம். எப்ப வேண்டுமானாலும் டேட்டிங் கூப்பிடலாம் இல்லையா...?"

"ஹலோ... ஏய்... யார் நீ? உனக்கு என்ன வேண்டும்?"

"இரு... இரு. ஒவ்வொரு கேள்வியாக் கேளு... ஹனி..."

"ஏய்... யார் நீ?"

"நானா...? நான் உன் காதலன். இந்த உலகத்திலேயே காதலனின் குரலைக்கூடக் கண்டு பிடிக்காமல்... யாரென்று கேட்கும் முதல் காதலி நீயாகத் தானிருப்பாய் மது!"

"விளையாடாதே! நான் இப்பவே போலீஸில் சொல்லி..."

"போலீஸில் சொல்லி, என் காதலனைக் கண்டு பிடித்துத் தாருங்கள் என்று சொல்லப் போகிறாயா? அந்தச் சிரமம் உனக்கேன், ஹனி? அதுதான் இப்போ உன்கூடவே



காதருகில் பேசிக் கொண்டிருக்கிறேனே! நீயே யாரென்று கண்டுபிடி... அன்டில் தென்... குட் பை."

மறுமுனையில் தொலைபேசி வைத்துவிட்ட ஒலி கேட்ட பின்னும், கையில் தொலைபேசியை வைத்துக் கொண்டு பேயறைந்தவாறு நின்று கொண்டிருந்தவள், சந்தனா வந்து உலுக்கிவிடவும்தான் நிதானித்தாள்.

"யாரடி மது போனில்... இப்படிக் கத்தறே?"

"யாருமில்லை சந்து... ராங் நம்பர்!"

"ராங் நம்பர் கூடவா இவ்வளவு நேரம் பேசினே?"

பதில் பேசாமல் நகர்ந்தாள், மது.

இதென்ன புதுக் குழப்பம்!

## 15

**யா**ராக இருக்கும்? காலேஜ் ஃபிரெண்ட்ஸ்களில் யாராவது இருக்குமோ? அவர்கள் எல்லாம் எவ்வளவு ஜோவியலாகச் சிரித்துப் பேசினாலும், அதை மீறி வரம்பு தாண்டாதவர்கள். இவ்வளவு சீப்பாக யாரும்... ச்சேச்சே!

ஒரு வேளை தருணாக இருக்குமோ? அவன் குரல் போல் இல்லையே! தன் மனதை நாசூக்காக வெளிப்படுத்திய போதே நாகரிகமாக எல்லை தாண்டாமல் இருந்தவன்தான். இப்போது போய் ஹனி, ஹனி என்று ஆரம்பிப்பானா என்ன? இருக்காது! அதிலும் நான் இன்னொருவனைக் காதலிக்கிறேன் என்று சொன்னபிறகும்கூட... சான்ஸே இல்லை!

யாராக இருக்கக் கூடும் என்று, எல்லாவிதக் கோணத்தில் யோசித்தும் ஒன்றும் பிடிபடாமல் தலையைப் பிடித்துக் கொண்டாள் மது!

"என்ன மது... தலையை வலிக்கிறதா? சூடா 'டீ' கொண்டு வரட்டுமா?"

அம்மா மேற்கொண்டு பேச்சை வளர்த்துக் கொண்டு அங்கேயே நிற்பதைத் தடுக்கும் பொருட்டு, ஆமெனத் தலையசைத்தாள்.

ராகினியிடம் பேசினால் தேவலாம் என்று தோன்ற, கைபேசியை எடுத்தாள் மது.

அவளும், "யாரோ விளையாடி இருக்காங்க மது... இதை நீ பொருட்படுத்தாம, அடுத்த தடவை அவன் போன் செய்யும்போது, கண்டபடி திட்டு. அதிலேயே அவன் இன்னொரு முறை தொந்தரவு பண்ணக் கூடாது..."

மதுவிற்கும் அதுதான் சரியென்று பட்டது. பிரயோஜனமில்லாத விஷயத்திற்கு மூட் அப்செட்டாகி, ஏன் விடுமுறை மனநிலையைக் கெடுத்துக்கொள்ள வேண்டும்.

இணைய தளத்தைப் பிரித்துக் கொண்டு, மனதை அதில் கட்டாயப்படுத்திச் செலுத்தினாள்.

மனதில் சொல்லிக் கொண்டாள்...

'ஆனாலும் ராகினி...! அந்தக் குரல்தான் என்னை நிரம்பத் தொந்தரவு செய்கிறது!'

கெஜா மெல்லக் கணவனிடம் ஆரம்பித்தாள்.

"என்னங்க... எனக்கும் வரவர முடியாம அடிக்கடி போயிடுது. மதுவிற்கும் கல்யாணம் செய்திட்டா, ஒரு பெரிய கடமை முடிஞ்ச மாதிரி... அவ படிப்பும்தான் முடிந்திடுத்தே...!"



"அதுக்கென்னம்மா... செய்திட்டாப் போச்சு. நீயே உன் பெண்ணைக் கேளு...!"

"கேட்கத்தான் போறேன். அப்புறங்க... நம்ம சந்தனா வீட்டுல, சம்பந்தியம்மா... அப்புறம் அவங்க பையன் தருணுக்கு மதுவை முதல்ல கேட்டாங்க. அப்புறம் அதுபற்றி ஒரு போனும் காணோமே!"

"அதுவா...! சந்தனாவைக் கேட்டேன். தருண் ஒன்னும் பிடி கொடுத்துப் பேசலையாம். மொதல்ல அந்தப் பையன்தான் விரும்பி, போய்ப் பேசுங்கன்னு சொன்னதாச் சொன்னாங்க. எதுக்கும் நாம், நாமளே போய்க் கேட்க வேண்டாம்; அவங்க கேட்கும்போது யோசிப்போம்!"

## 16

அந்த மாலை வேளை...! கெஜா டி.வி.யில் சமையல் நேரத்தில் ஆழ்ந்திருந்த போது, வீட்டில் ஆட்டோ நிற்கும் சத்தம் கேட்டு எட்டிப் பார்த்தாள்.

"ஏய்... என்னடி மது? என்னடி சந்து...? ஏன் மதுவை இப்படி... ஆட்டோல... என்னடி ஆயிற்று இவளுக்கு?"

"அம்மா! மொதல்ல உள்ளே வா... சொல்றேன்...!"

ஆட்டோவை அனுப்பிவிட்டு, மதுவைக் கைத்தாங்கலாகக் கூட்டிக்கொண்டு சந்தனா உள்ளே வந்தாள்.

"என்னடி... வாக்கிங் தானே போனீங்க?"

"ஆமாம்மா...! என்னமோ சொல்ல நினைத்துத்தான் என்னிக்கும் இல்லாத அதிசயமாக, 'சந்தனா... வாக்கிங் போகலாம் வா!'ன்னு கூப்பிட்டா... ஆனா, பார்க்குல கொஞ்ச

நேரம் வெறிச்சுப் பார்த்திட்டிருந்தா... பின் கண் செருகி, மயக்கமாயிட்டா. தண்ணீர் தெளிச்சு, கொஞ்சம் மயக்கம் போனதும் நம்ம பரிமளா டாக்டர்கிட்டே கூட்டிட்டுப் போயிட்டேன்..."

"என்னடி... என்ன என்னவோ சொல்றே? ஒரு போனாவது செய்திருக்க வேண்டியதுதானே!"

"ஏம்மா... நீயும் இவளை மாதிரி மயக்கம் போட்டு விழவா? அதான் டாக்டர் ஒன்றுமில்லையின்னு சொல்லிட் டாங்கள்ள... எதையோ போட்டுக் குழப்பி, ரொம்ப யோசித்துக் கொண்டே இருந்ததால் இப்படி மயக்கம் வந்திருக்கு. எதையும் யோசிக்காம, சாப்பாடு இன்னும் ஹெல்த்தியாச் சாப்பிட்டு, நிறைய ரெஸ்ட் எடுக்கணுமாம்!"

"சரிம்மா! அவர் இன்னிக்கே வரச் சொன்னார். நான் கிளம்பறேன். மதுவைப் பார்த்துக்கோ... ரொம்பத் தொண தொணக்காதே!"

"சரிடி...! பார்த்துப் போ. அடுத்த வாரம் சேர்ந்தாற் போல் மூணு நாள் லீவு வருது. அப்போ வா!"

"சரிம்மா... பார்க்கிறேன்."

மனதின் சுபாவமே அதுதானே! வேண்டாததை யல்லவா, மறக்க நினைப்பதையல்லவா, திரும்பத் திரும்ப நினைவூட்டி ரணப்படுத்தும்.

ஏதோவொரு மாற்றம் தன் வாழ்வைப் புரட்டிப் போடப் போவதைப் போல் உணர்ந்தாள், மது.

அம்மாவும்... மதுவின் களைப்பான முகத்தைப் பார்த்துவிட்டு, ஏதும் சொல்லத் தோன்றாமல் வெளி யேறினாள்.



விடுதியிலிருந்து வந்த முதல் நாள் அவ்வளவு ஆட்டம் போட்டவள், பின் இந்த நான்கைந்து நாட்களாக ஏன் ஏதோ போல் இருக்கிறாள்?

பிள்ளைகளைப் பார்த்துப் பார்த்து வளர்க்கும் கெஜாவிற்கு முதன் முதலாகச் சந்தேகம் வந்தது. ஒரு வேளை மது யாரையேனும் காதலிக்கிறாளோ? அதனால் தான் தருண் பற்றிப் பிடி கொடுத்துப் பேச வில்லையோ?

அப்படியென்றாலும், அதை வெளிப்படையாகவே தங்களிடம் சொல்லுமளவிற்குச் சுதந்திரம் கொடுத்தல்லவா வளர்த்திருக்கிறோம்! சந்தனாவிடமாவது சொல்லியிருப்பாளே!

இன்று, இதுபற்றிக் கணவனிடம் பேச வேண்டும் என்று எண்ணிக் கொண்டவள், தொலைக்காட்சியைப் பார்க்கும் நாட்டமின்றி அதை அணைத்துவிட்டுக் கணவனின் வருகையை நோக்கிக் காத்திருந்தாள்.

மது மயக்கமானதைச் சொல்வதோடு, அவள் ஏதோ யோசனையிலேயே நாள் முழுவதும் வளைய வருவதையும் அவர் காதில் போட வேண்டும்.

பின் அவராயிற்று, மதுவாயிற்று!

## 17

சந்தனாவைத் தொடர்பு கொள்ள வேண்டும் என்று ஆவலாய்த் தொலைபேசி அருகே வந்த மதுரா...

அதுவாகவே ஒலிக்கத் துவங்கியதும் சட்டென எடுத்தாள்.

"ஹலோ...!"

"ஹாய்... மது...! என்ன உடனே போனை எடுக்கிறே? என் குரல் கேட்க அவ்வளவு ஆவலா?"

அவன்தான்... அந்த ரோக்-தான். உன் காதலன், அது இது என்று ரம்பம் போடப் போகிறான்.

டக்கெனப் போனை வைத்து விடலாமா என்று யோசித்தவள், உடனே அந்த யோசனையைக் கைவிட்டாள். என்ன பிரயோஜனம்...? பின் உடனேயே திரும்பப் போன் செய்வான்!

எப்படியாவது பேசிப் பேசி, யாரென்று கண்டுபிடிக்க வேண்டும். பின் அப்பாவிடம் சொல்லி...

"யாருடி போன்ல...?" - என்ற அம்மாவிடம், ரிசீவரைப் பொத்திக்கொண்டு, "காலேஜ் ஃபிரெண்ட்மா..." என்றாள்.

"ஹலோ..." - அவன் லைனில் வந்தான்.

"தட்ஸ் குட்! ஃபிரெண்ட் என்று ஆன்ட்டியிடம் சொன்னாயே... தட்ஸ் குட்! ஆனா, எப்பமா என்னை 'உன் காதலன்' என்று வீட்டில் அறிமுகப்படுத்தப் போறே? நாளைக்கு... அடுத்த வாரம்...!"

"செருப்புப் பிஞ்சிடும்!"

"பரவாயில்லை... நாம் நெக்ஸ்ட் டைம் ஷாப்பிங் போகும்போது வாங்கிக் கொள்ளலாம்!"

"யூ... யூ...! ஏன்டா என்னை இப்படி டார்ச்சர் பண்றே? நான் உனக்கு என்னடா செய்தேன்?"

"உனக்கு ஒரு காதலன் இருக்கான் இல்லை... அது நானாக இருந்துட்டுப் போறேன்...!"



"அப்படி யாரும் இல்லே...!"

"அடப்பாவி! அப்ப அந்தப் பையன்கிட்டே பொய்யா சொன்னே? விட்டா, மறுநாளே கல்யாணம்ங்கற ரேஞ்சிற்குச் சொன்னாயே, மது!"

"அது... அது உனக்கு எப்படி...?"

"எப்படித் தெரியும்னு கேட்கிறாயா? சொல்றேனே... சத்தியமாச் சொல்றேன் மது... அன்றைக்கு அக்கா பையன் நச்சரித்தானே என்று... பொழுது போக்க பார்க்குக்கு வந்தால், உன்னைப் போன்ற தேவதையின் திடீர் தரிசனம்..."

அவனே தொடர்ந்தான்.

"சரிதான்னு பொழுது போகாம... உன்னையே பார்த்திட்டிருந்தேனா... அப்பத்தான் நீயும் உன் தோழியும் பேசினது அட்சர சுத்தமா காதில் விழுந்தது. என்னம்மா, இது...? இது மாதிரி சதித் திட்டமெல்லாம் தீட்டறச்சே, மெதுவாப் பேச வேண்டாமா? இப்போ பாரு...!"

"உனக்கு என்ன வேண்டும்? பாரு... எனக்குத் தெரிஞ்ச போலீஸ் அங்கிள்கிட்டே...!"

"புகார் கொடுக்கப் போறியா? கொடு... அப்பத்தான் நானும் ஸீன்ல வருவேன். நம்ம காதலை உங்க வீட்ல ஓபன் பண்ண வசதியாயிருக்கும்...!"

"யூ... யூ..." - மெல்ல மனதிற்குள், 'முதல்ல பாடிகிட்டே சொல்லி காலர் ஐடி வாங்கிச் செட் பண்ணணும்' - என்று சொல்லிக் கொண்டாள்.

"இங்கே பாரு... நீ யாரா வேணா இருந்துட்டுப் போ... உன்னைக் காதலிக்கிறதாவது... நினைத்துக்கூடப் பார்க்க மாட்டேன்!"

"அடப் பார்றா... நினைச்சுக்கூடப் பார்க்காதவ தான், என் போன் நம்பரைத் தெரிந்து கொள்ள காலர் ஐடி பொருத்தணும்னு சொன்னதா? என் நம்பர்தானே டியர்... நைன் டபுள் போர் டபுள் போர் த்ரீபைவ் த்ரீ பைவ் நைன்... நீ என்னை எத்தனை தடவை நினைக்கக்கூடாதென்று நினைக்கிறாயோ, அவ்வளவு தடவை நினைப்பாய். என்ன... ஜோசியம் சொல்கிறானே என்று பார்க்கிறாயா? ஆம்! காதல் ஜோசியம்... ஆபீஸிற்கு டயமாச்சு, குட் பைடா செல்லம், டேக் கேர்...!"

## 18

"என்னடி, போனில் பேசுகிறாயா, இல்லையா... வெறுமனே ரிசீவரை வைத்துக் கொண்டு நிற்கிறாய்?"

சட்டென ரிசீவரை வைத்துவிட்டு நகர்ந்து விட்டாள் மது.

வேறு வேலைகளில் கவனம் செலுத்தி, மனம் தறிகெட்டு ஓடுவதை ஓரளவு கட்டுப்படுத்த முயன்று, வெற்றியும் பெற்றாள்.

அம்மாவிற்குத்தான் ஆனந்தம்! "இப்படி எனக்குக் கூடமாட உதவி செய்தால், பொழுது தானாகப் போய்விடப் போகிறது? அதை விட்டுவிட்டு, எதற்கு வயசுப் பெண் கன்னாபின்னாவென்று யோசிக்கணும்... தலைவலி வரணும்...?"



"வேண்டுமானால் உன் அக்கா வீட்டில் போய், இரண்டு நாட்கள் இருந்துவிட்டு வாயேன் மது! அவள் மாமியாரும், உன்னை அனுப்பித் தரச் சொல்லிப் பல தடவை கேட்டு விட்டார்கள்..."

நிமிர்ந்தாள் மது! இது கூட நல்ல யோசனையாக இருக்கிறதே!

அன்றைக்குத் தருணைப் பார்த்துப் பேசிவிட்டு, பின் அவன் முகம் பேயறைந்த மாதிரிப் போனது சங்கடமாகவே இருந்தது. அதற்காகவெல்லாம் அவனைக் காதலிக்க முடியாது என்றாலும், ஒரு 'சாரி'கூடச் சொல்லமுடியவில்லை!

தான் போட்ட போட்டில் எப்படியும் மாறி இருப்பான்; இல்லை யென்றாலும், சந்தனா இருக்கும் போது கவலை யில்லை என்று தோன்றியது.

எல்லாவற்றிற்கும் மேலாக, நம் காதலன் என்று சொல்லிக் கொண்டு போன் செய்து வழிபவன், ஏதோ நெருங்கிய வட்டத்திற்குள் தான் இருக்க வேண்டும்! தருணிடம் சும்மாவாவது சிரித்துப் பேசி, வெறுப்பேற்ற வேண்டும். என்ன செய்கிறான், பார்ப்போம்!

என்ன என்னவோ எண்ண அலைகள் மனதில் உதயமாக, சந்தனா வீட்டிற்குச் செல்ல முடிவெடுத்தாள். தனக்கு மிகவும் பிடித்தமான சந்தன நிறச் சுடிதாரை அணிந்து கொண்டாள்.

ஆனால், மது நினைத்தது தவறு என்று சந்தனா வீட்டிற்குப் போன பின்தான் தெரிந்தது.

அலுவல் வேலையாகக் காலையில் போன தருண், இரவு எப்போது வந்தான் என்றே இவளுக்குத்

தெரியவில்லை. இவர்கள் வரை இரவு டிபன் பண்ணிவிட்டு, தருணிற்கு ஹாட் பேக்கில் மூடி வைத்து விட்டாள், சந்தனா. இதுதான் வழக்கம் போலும். தருணிடம் முதல் நாள், சந்தனா கூப்பிட்டு மது வந்திருப்பதைச் சொன்னபின், 'ஹாய்...!' என்றதோடு சரி.

அநாவசியமாக, அவன் மனதை மிகவுமே புண்படுத்தி விட்டோமோ? சற்றுத் தலையை உதறிக் கொண்டாள் மது.

இப்போது இங்கே வந்தது, தருணைப் பற்றி ஆராய்ச்சி செய்யவா? தன்னைக் காதலிக்கிறேன் என்று போன் செய்து டார்ச்சர் கொடுப்பவனால் பைத்தியம் பிடிப்பது போலாகி விட, ஒரு மன மாறுதலுக்காகத்தான் இங்கே வந்திருக்கிறாள்.

இந்தத் தெளிவு கடைசி வரை வேண்டும். அத்தான் நன்றாகப் பேசினார். பேசினார் என்பதை விட, இவள் வாயாடித்தனத்திற்கு ஈடாகக் கம்பெனி கொடுத்தார் என்று தான் சொல்ல வேண்டும். விவாதம் சூடாகிச் சண்டையில் போய் முடிந்துவிடும் என்பது போன்ற தருவாயில், சந்தனாதான் தலையிட்டு, இருவர் வாக்குவாதத்தையும் ஒரு முடிவிற்குக் கொண்டு வர வேண்டி இருந்தது.

அத்தையோ, தன் வீட்டுப் பெண் போல், மதுவை மிக நன்றாகவே உபசரித்தார்கள். சந்தனாவை அத்தை நடத்திய விதம் கண்டு மிக மகிழ்ந்தாள் மது!

இந்தக் காலத்தில் இப்படியொரு மாமியாரா? சற்றே பொறாமை எண்ணம்கூட வந்தது மதுவிற்கு!

இந்த வீட்டின் இன்னொரு மருமகள், நிச்சயம் கொடுத்து வைத்தவள். சந்தனா மாதிரியான அருமையான



ஓரகத்தி, அத்தை, மாமா போல அருமையான மாமியார், மாமனார்!

தன் சிந்தனையின் போக்கைச் சற்றே தாமதமாக உணர்ந்த மது, திடுக்கிட்டாள்.

இந்த வீட்டின் இன்னொரு மருமகள் என்றால், தருணின் மனைவி அல்லவா? தான் வேண்டாம் என்று மறுத்த அந்த இடத்தைப் பற்றியா இவ்வளவு சிந்திக்கிறாள். ச்சேச்சே! அப்படிப்பட்ட யோசனையெல்லாம் தனக்கெதற்கு?

இவளுக்கு இன்னொரு விஷயம் ஆச்சரியமாக இருந்தது. தருண் சரி... அத்தையும் கூட... எப்படி? எப்படி... இவள் தருணைத் திருமணம் செய்து கொள்ள விரும்பாததைப் பற்றி... ஒரு வார்த்தைகூடக் கேட்க வில்லையே! ஒரு வேளை தான் அதற்குக் கூறிய காரணத்தைத் தருண் கூறியிருப்பானா? மாட்டானா? மாட்டான்! ஏனெனில், அப்படியென்றால்... சந்தனா காது வரை விஷயம் போய்ப் பிலுபிலுவெனப் பிடித்துக் கொண் டிருப்பாளே!

ஏதேதோ சிந்தனையுடன், சந்தனாவின் கணிப்பொறி முன் அமர்ந்து, மின்னஞ்சலைப் பார்த்துக் கொண்டிருந் தவளைக் கலைத்தது கைபேசியின் அழைப்பு.

கண்கள் கணிப்பொறியிலேயே இருக்க, கையை மட்டும் நீட்டிக் கைபேசியை எடுத்துத் தன்னிச்சையாக ஆன் செய்து, காதுக்குக் கொண்டு போனாள்.

"ஹாய்! ஹனி...!"

# 19

**தூ**க்கிவாரிப் போட நிமிர்ந்தவள், கணிப்பொறியின் ஸ்கிரீனைச் சுருக்கிவிட்டு, கைபேசியின் இணைப்பில்,

"ஹேய்... லக்...!"

"ஹனி... என்னமாய்க் கோபம் வருகிறது உனக்கு? நியாயமாய்ப் பார்த்தால் நான் தான் உன் மீது கோபப்பட வேண்டும். இப்படிச் சொல்லாமல் கொள்ளாமல் உன் அக்கா வீட்டில் போய் உட்கார்ந்து விட்டாயே! என்ன... நான் போன் செய்வேன் என்று பயமா? உன் செல் நம்பர் என்னிடம் இருக்கும் வரை, நீ போகும் இடமெல்லாம் நானும் தொடர்வேன், கண்ணே!"

"யூ... ராஸ்கல்! நான்தான் எத்தனையோ முறை சொல்லி விட்டேனே..."

"என்னவென்று...?"

"நான் உன்னை லவ் பண்ணலை... பண்ணலை... பண்ணலை..."

"இதப் பார்ரா மச்சி... இப்ப நான் லவ்வைப் பற்றி ஏதாவது பேசினேனா? கேட்டேனா? ஏதோ... பொண்ணு தான் நம்மைக் காதலிக்க மாட்டேன்னு சொல்லிடுச்சு... சரி... ஃபிரெண்ட்ஷிப்பாவது டெவலப் பண்ணிக்கலாமேன்னு போன் பண்ணினா? இதுவரை அதைப் பற்றியா நினைத்துக் கொண்டிருந்தாய்...?"

பற்களை நறநறவெனக் கடித்தாள் மது. கிண்டலடித்துக் காலை வாருகிறான்.



பெரிய புத்திசாலி மாதிரிப் பேசுவதாக நினைப்பு! மறுமுனையில் அவன் குரல் கொடுக்கக் கொடுக்க... லைனைக் கட் செய்தாள். பேசாமல் ஸ்விட்ச் ஆப் செய்து விடலாமா?

ஒரு வேளை அவன்..., அதுதான் பெரிய மன்மதக் குஞ்சென்று தன்னை எண்ணிக் கொண்டு தொந்தரவு செய்கிறானே... அவன் மறுபடி போன் செய்தால்...!

செய்தால் என்ன? தொடர்பு கொள்ள முடியாதென்று, சிறிது நேரமாவது தொந்தரவு செய்யாமல் இருப்பானே! வேண்டாம்... அப்படியே இருக்கட்டும். அடித்தால் எடுக்க வேண்டாம்.

அவள் அழகிய முகத்தில் விழுந்த முடிக் கற்றைகளை ஒதுக்கியவாறே, சற்று நிதானித்தாள்.

ஒரு வேளை, அவளையறியாமல், அவன் போன் செய்ய வேண்டுமென்று எதிர்பார்க்கிறாளோ? தோழி சீண்டுவதைப் போல... 'இது எப்போதிருந்து...?' – வழக்கம் போல் அவள் எண்ணத்திற்கு மறுப்பு ஒன்றை அவசர அவசரமாய் வெளியிட்டது மூளை.

அதெல்லாம் இல்லை. அவனுக்காகப் பயந்து போன் ஸ்விட்ச் ஆஃப் செய்யவெல்லாம் அவனென்ன புலியா? சிங்கமா?

அவனை மறந்து, செய்து கொண்டிருந்த வேலையில் ஒன்றிப் போனாள் மது.

அதற்கடுத்த நாட்களில், மது ரொம்பவே பிஸியாகி விட்டாள்.

வளாகத் தேர்வில் தேர்வாகியிருந்தபடியால், பிரபல கணிப்பொறி நிறுவனமான ப்ரெளட் இந்தியா அவளை அலாக்காகக் கொத்திக் கொண்டது. நேரடியாக அவளை எக்ஸிகியூட்டிவ் நாற்காலியில் உயர்த்தியது.

"மது... என்னடி! அப்பா கூப்பிட்டது காதுல விழலை! நீ முதல்ல தரையிலேயே இல்லைடி... அந்த அப்பாயின்ட் மென்ட் லெட்டர் வந்ததிலேயிருந்து..."

"ஏம்மா...! அப்படியே தரையில் இல்லாமல் வானத்தில் நடந்தாத்தான் என்ன தப்புங்கறேன்? அதுக்கான தகுதி யில்லையா எனக்கு? இந்த லெட்டரைப் பாரேன்... மாதம் எடுத்தவுடனே சுளையாக நாற்பதாயிரம் சம்பளம். மெடிக்கல் அலவன்ஸ் தனி. உன் பொண்ணு எங்கியோ போகப்போறா பாரேன்..."

"அடியே... நீ எங்கேயும் போக வேண்டாம். முன்னறையில் அப்பா உன்னைக் கூப்பிட்டு ரொம்ப நேரமாச்சு... என்னன்னு கேளு."

"உம்... சரி, சரி! உன் புருஷன் எதுக்குக் கூப்பிட்டாருன்னு... னு... அம்மா! அடிக்க வராதே! கிட்டே வராதே! எஸ்கேப்..."

கத்திக் கொண்டே ஓடியவள் நின்ற இடம் அப்பாவின் முன்னாடி.

"அப்பா...!"

"வாடா... மது! உன் அம்மாவின் ரொம்ப நாள் கனவு நிறைவேறப் போகிறது. அவளுக்கு, தான் பெற்ற இரண்டுமே பெண் குழந்தைகள் என்றவுடன், அவர்களை



நிரம்பப் படிக்க வைத்து, பெரிய பெரிய வேலைகளில் அமர்த்த வேண்டும் என்ற ஆசை."

சிறிது நிறுத்தியவர்,

"ஆசை என்பதை விட இலட்சியம் என்றுகூடச் சொல்லலாம். படிப்புக்கு இவ்வளவு செலவு செய்கிறோமே... ஃபீஸ் பற்றிக் கவலைப்படாமல் பெரிய பள்ளியில் சேர்த்து விட்டோமே... என்றெல்லாம் நான்கூடச் சற்றுக் கவலைப் பட்டதுண்டு...

"ஆனால், அப்போதெல்லாம் உன் அம்மா என்ன சொல்வாள் தெரியுமா? இப்போ நீங்க செய்யற செல வெல்லாம் தென்னங்கன்றுக்கு விடும் நீரைப் போலத்தான். ஓரளவு நீர் பாய்ச்சி நீங்கள் வளர்க்கும் தென்னை பின் தண்ணீர் நீங்கள் விடாவிட்டாலும் தானே தன்னைப் பார்த்துக் கொள்ளும். வஞ்சனையில்லாது அள்ளித் தரும்.

"எனக்கென்னவோ இக்காலத்துப் பெண்கள் விஷயத்தில், உன் அம்மா கூறியது சரி என்றே தோன்று கிறது."

பெருமூச்செறிந்தவர், "நான் பார்... உன்னை அழைத்து வைத்துக்கொண்டு என்னென்னவோ பேசிப் போர் அடிக்கிறேன். வளர்ந்த பெண் நீ. உனக்குத் தெரியாததா என்ன?

"புது வேலைக்குத் தயாராகிக் கொள். வேலையில் சேருமுன், சந்தனாவிடமும், உன் அத்தானிடமும் போன் செய்து பேசு... முக்கியமாக..."

"என்னப்பா...?" புருவம் சுருக்கினாள் மது.

"உன் வாயாடிப் பேச்செல்லாம் கல்லூரி வாழ்க்கையோடு சரி... நாளை, வேலைக்குச் சேருமிடத்தில் இப்படிக் கிண்டலும், கேலியுமாக அரட்டை அடித்தால், நாம் என்ன சொன்னாலும்... இப்பெண் லைட்டாக, சாதாரணமாக எடுத்துக் கொள்வாள் போலிருக்கிறதே என்ற மனோபாவம் மற்றவர்களுக்கு... குறிப்பாக ஆண்களுக்கு வந்து விடும். ஒரு பயத்துடனேயே, நம்மிடம் மற்றவர்கள் பேசும்படி, ஒரு இடைவெளி மெயின்டெய்ன் பண்ணணும்."

"சரிப்பா...!" என்றாள்.

"சரி... நீ உள்ளே போ. எனக்கு வேறு வேலை இருக்கிறது."

உள்ளே வராமல், வாசலில் போய் சிட் அவுட்டின் கம்பிகளைப் பிடித்தவாறே, சிந்தனையில் ஆழ்ந்தாள் மது.

எப்பவும் அப்பா இப்படித்தான்.

திடீரென மிக நன்றாகத் தோழமையுடன் பேசுவது போல், மகள்களிடம் பேசிக் கொண்டிருந்துவிட்டு... சட்டென வெட்டிவிட்டு, 'உள்ளே போ!' என்று கூற அப்பாவால் மட்டுமே முடியும்.

இவள் ஆழ்ந்து புரிந்து கொண்டவரை, இதற்கு மேல் மகள்களிடமும் பகிர்ந்து கொள்ள அவர் விரும்பாத ஒன்று... அவர் சிந்தனையை அழுத்தும்போது, இப்படி வெட்டிவிட்டு, மௌனமாகி விடுவது உண்டு.



## 20

அவர் சொல்லாது விட்டாலும், சொல்ல நினைத்தது மதுவிற்குப் புரியாமலில்லை.

அப்பாவின் பெரிய சொத்து, அவருடைய இரு மகள்கள்தாம். நல்ல பள்ளியில் நன்றாக, கேட்ட வரை படிக்க வைத்தவர். இவர்கள் திருமணத்திற்கு இதுவரை எதுவும் சேர்த்து வைக்கவில்லை.

சந்தனா வேலைக்குப் போய்... ஓரளவு நகைகளைத் தானே வாங்கிக் கொண்டாள். அவள் திருமணத்திற்கு வாங்கிய கடனே பாக்கியிருக்கிறது.

மானசீகமாகச் சொல்லிக் கொண்டாள் மது!

'அப்பா! இதெல்லாம் நீங்கள் சொல்லித்தான் எனக்குத் தெரிய வேண்டுமா என்ன? விளையாட்டுப் பெண்ணாயிற்றே... குடும்பப் பொறுப்பு பற்றி என்ன தெரிந்திருக்கப் போகிறாள் என்று நினைத்தீர்களா அப்பா...!'

'என் இலட்சியமே அதுதான் என்பது உங்களுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. என் சம்பளத்தில் கணிசமான மீதியைக் கொண்டு, சந்தனா கல்யாணக் கடனை அடைத்துவிட்டு, ஓரளவிற்கு என் திருமணத்திற்கு நானே சேர்த்துக் கொண்ட பின் அல்லவா திருமணத்தினைப் பற்றியே நினைப்பதாக இருக்கிறேன். அதுவரை காதல், கத்தரிக்காய் எனத் தடுமாறிப் போக மாட்டேனப்பா!'

ஒரு மகளாக, தன் தந்தையிடம் மனம் விட்டுச் சொல்ல முடியாததை, மனதிற்குள் சொல்லிக்கொண்டாள்.

திருமணம், காதல் என்றெல்லாம் சிந்தனையில் வந்ததுமே, தறிகெட்ட மனது...

அந்த செல்போன் லவ்வரைப் பற்றி நினைத்தது.

அவனைப் பற்றிய நினைவு வந்த மாத்திரத்திலேயே அதுவரை இருந்த மன இறுக்கம் அவளுள் தளர்ந்தது. பழகிய ஒரு சுகந்தம், அவளுள்ளும், அவளைச் சுற்றிலும் பரவியதைப் போலிருந்தது.

மனதைத் தானே கடிந்து கொண்டாள்.

'ஏன் இப்போது தேவையில்லாமல் அவனைப் பற்றி நினைக்கிறாய்?'

'ஏய் பெண்ணே! என் வேலையே அதுதானே! நீ மறக்க நினைப்பவற்றை நினைவூட்டுவது... மறக்கும் விஷயத்தில் எவ்வளவு ஸ்திரமாக இருக்கிறாய் என்று பார்த்தேன். ஹூம்! கவிழ்ந்து விடுவாய் போலிருக்கிறதே!'

"ஏய் மது...! என்ன பகலிலேயே தூக்கம்? அதுவும் அமர்ந்து கொண்டே...!"

அம்மாவின் ஆசைக் குரல் அவளை இவ்வுலகிற்குக் கொண்டு வந்தது.

அம்மா, சமையலறையில் அவளை வேலை வாங்க, அம்மாவிற்கு உதவி செய்வதில் சிறிது மனதைத் திசை திருப்பினாள்.

ஆனால், முழுவதுமாக மனதைத் திசை திருப்ப முடிந்ததா அவளால்...? விட்டானா அவள் கதாநாயகன்?



# 21

"ஹலோ..." - ஹாலில் அடித்துக் கொண்டிருந்த தொலைபேசியை வேக வேகமாக வந்து காதுக்குக் கொடுத்தாள் மது.

"என்ன மது...? ஓடியா வந்தே! என்ன அவசரம்? எப்படியும் உன்கிட்டே பேசணும் என்று டிசைட் பண்ணிட்டேன். நீ போனை எடுக்காவிட்டாலும், எடுக்கும்வரை திரும்பத் திரும்பச் செய்து கொண்டேயிருப்பேன்."

பெருமூச்செறிந்தாள் மது. அந்த செல்போன் ராஸ்கல்தான்! இவன் இப்படித் தொந்தரவு செய்வதைத் தடுக்க, நான் ஏன் எந்த முயற்சியும் செய்ய முடிவதில்லை; மனம் ஒத்துழைப்பதில்லை!

ச்சே! எப்படியும் தனியா ஏதாவது செய்து மாட்டிக் கொண்டு, இப்படி இவன் விளையாட்டாய்ப் போன் செய்வது வினையாகி விட்டால்... வேண்டாம்!

அப்பாவிடம் விஷயத்தைக் கொண்டு செல்லலாம் தான்...!

ஆனால், அவர் தன்னை நம்ப வேண்டுமே! உனக்கு யாரென்றே தெரியாமலா போன் செய்கிறான் என்று கேள்வியாய் அவளை அவர் ஒரு பார்வை பார்த்தாலே போதும்... அதைத் தாங்கும் திடம் தனக்கில்லை என்பதை அறிவாள்.

அடிக்கடி... தருணுக்குத் தன்னை மணம் செய்து கொடுக்கும் வகையில் எழும் திருமணப் பேச்சுக்களைத்

தவிர்க்கும் விதத்தில், தான் வேறு பிளான் வைத்திருக்க, இதை அப்பாவிடம் சொல்லி அவரைக் குழப்ப வேண்டாம்.

பின், தான் நினைத்தது நடக்காமல் போய்விடக் கூடும்.

டெலிபோனைக் கையில் வைத்துக்கொண்டு, இவன் சிந்தனையிலேயே மரம் போல் நின்று கொண்டிருக்க, மறுமுனையில் அவன் படபடத்துக் கொண்டிருந்தான்.

"மது... மது... லைனில் இருக்கிறாயா?"

"ஊம்... என்ன?"

"அப்பா...! என்ன முத்து உதிர்ந்து விட்டதா? வந்து பொறுக்கிக் கொள்ளட்டுமா?"

"ஏய்...!"

"இப்படித்தான்... இப்படித்தான்... செல்லமாகக் கூப்பிடணும். அதை விட்டுட்டு ராஸ்கல், பொறுக்கின்னு மனசுல திட்டக்கூடாது."

"இப்ப உனக்கு என்ன வேணும்? என் வீட்டுப் போன் நம்பர் எப்படி..."

"பொறு மது...! ஒவ்வொரு கேள்வியாக் கேளு...! காதலியர் கடைக்கண் பார்வை காட்டிவிட்டால், காதலனுக்கு மலையும் வெறும்..."

"ஏய்... அறுக்காதே!"

"என்னம்மா நீ...? உன் கேள்விக்குத்தானே பதில் சொல்லிக் கொண்டிருக்கிறேன். அப்படிப்பட்ட காதலன் எனக்கு உன் வீட்டுப் போன் நம்பர் கண்டுபிடிப்பது ஒரு கஷ்டமா, என்ன?" என்றவன்,



"இதை மட்டும் கேட்டுவிட்டுப் போனை வைப்பதும், வைக்காததும் உன்னிஷ்டம் மது... நீதான் நம் விஷயத்தைப் பற்றி வாயே திறக்கமாட்டேன்கிறாய்! அதனால்..."

"அதனால்..."

"நானே என் வருங்கால மாமனாரிடம் எல்லாவற்றையும் சொல்லிவிட்டேன். அவருக்கு எவ்வளவு சந்தோஷம் தெரியுமா? உடனேயே, 'மாப்பிள்ளை' என்றே கூப்பிட ஆரம்பித்து விட்டார், தெரியுமா?"

தனக்குள் அந்த இக்கட்டான சூழ்நிலையிலும் நகைத்துக் கொண்டாள் மது.

அப்பாவாவது... சந்தோஷப்படுவதாவது...! அப்படியே தலையில் இடி இறங்கினாற்போல, ஒரு ரியாக்ஷன் கொடுத்திருப்பார்.

இவன் விளையாடுகிறானா? சீரியஸான வம்பை இழுத்துவிடப் போகிறானா, தெரியவில்லையே!

நானும் ஏன் இவன் இப்படிப் பினாத்துவதை எல்லாம் காது கொடுத்துக் கேட்டுக்கொண்டு நிற்கிறேன்.

'இவன் பெயரும் தெரியாது... ஊரும் தெரியாது. இதில் பெரிய... நம் விஷயமாம்...!'

"என்னவோ செய்துகொள்! நான் போனை வைத்து விடுகிறேன்."

"இதை மட்டும் கேட்டுவிட்டு வை. நீ கூப்பிடுவாய் என்று பார்த்தேன். நீதான் கல்லுளிமங்கி ஆயிற்றே! உன் அப்பா என்னை வீட்டிற்குக் கூப்பிட்டிருக்கிறார். இன்று வருகிறேன் – உன்னைப் பார்க்க...!"

இவள் வைக்கிறாளோ, இல்லையோ... அவன் போனை வைத்து விட்டான்.

அப்படியே ஸ்தம்பித்துப் போயிருப்பாள்; தரை காலின் கீழே நழுவுவதைப் போலிருக்கும்; திகைத்துப் போயிருப்பாள் - என்று அவளைப் பற்றி அறிந்த எவரேனும் நினைத் திருந்தால்... அதுதான் இல்லை!

தானும் தன்னைப் பற்றி ஏதும் கூற மாட்டேன் என்கிறான்...

அவனுக்கு எப்படியோ... ஆனால் தனக்கு இந்தக் கண்ணாமூச்சி விளையாட்டுப் போரடித்துவிட்டது.

எப்படியும் அவன் அப்பாவிடம் ஏதும் கூறியிருக்கப் போவதில்லை. அப்படியே கூறியிருந்தாலும், அவன் யாரென்று பார்த்த மாதிரியும் ஆயிற்று. அவனை வைத்துக் கொண்டே, இதில் தன் தவறேதும் இல்லை என்று அப்பாவிடம் கூறிச் சமாளித்துக் கொள்ளலாம்.

நானும் அவனைப் பற்றி அறிந்து கொள்ள ஆர்வம் காட்டுகிறேனோ...!

## 22

அன்று அப்பா சீக்கிரமே வீடு திரும்பி விட்டார்.

"இந்தா மது...! அப்பாவிற்கு இந்த டிபனைக் கொண்டு கொடு."

"அப்பா, இந்தாங்க!" - வைத்துவிட்டு அவசரமாக நகர முயன்றவளை மறித்தார் அப்பா.

"அம்மா... மது!"



"என்னப்பா...."

"நீயே சொல்... நான் ஒவ்வொரு அப்பா மாதிரி உருட்டி, மிரட்டி... என்னோடு பேசவே பயப்படும்படியாகவா வளர்த்திருக்கேன்...!"

"இல்லையேப்பா...!"

"அப்புறம் ஏம்மா, எங்கிட்டேயிருந்து இதை மறைச்சே?"

பயத்தில் நா உலர்ந்தது மதுராவிற்கு. அந்த டெலிபோன் லூசு ஏதாவது உளறிவிட்டதா? அப்படி யிருந்தால், இவ்வளவு சாந்தமாகவா உட்கார வைத்து அப்பா பேசிக் கொண்டிருப்பார்?

எவ்வளவு நல்ல தகப்பன் என்றாலும், மகளின் காதல் சம்பந்தப்பட்ட விஷயம் என்றால், பொறுமையாகக் கூப்பிட்டு விசாரிக்கும் பக்குவம் எத்தனை அப்பாக்களுக்கு இருக் கிறது?

ஒரு வேளை இது அது இல்லையோ! அப்படி யென்றால் வேறு எதைப்பற்றி இப்படிப் பூடகமாக விசாரிக்கிறார் அப்பா!

அதற்குள் நல்லவேளையாக அம்மாவுக்கு மூக்கில் வியர்த்து விட்டது.

"என்னங்க! அப்படி நீங்க புலம்புற அளவுக்கு இவள் என்ன செய்தா? ஏன் மது, என்ன விஷயம்?"

"வழியில் நம்ம மாப்பிள்ளையோட தம்பி தருணைப் பார்த்தேன். என்ன செய்யறது...? நம்ம வீட்டு விஷய மெல்லாம் அவர் சொல்லித்தான் கேள்விப்பட வேண்டி யிருக்கிறது...!"

"என்னங்க... புதுக் குண்டைத் தூக்கிப் போடறீங்க?"

"எல்லாம் அவளையே கேளு! இதோ நிக்கறா பாரு... ச்சே! என் இரண்டு பெண்களுக்கும், ஆம்பிளைப் பசங்களுக்குக் கூடத் தராத சுதந்திரத்தைக் கொடுத் திருக்கேன். எதுவானாலும் என்கிட்டே வெளிப்படையாப் பேசற துணிச்சல் உள்ளவங்க இரண்டு பேரும் என்று நினைச்சிட்டிருந்தேன்..."

"கொஞ்சம் இருங்க... இவ எதுவுமே பேசாம நிக்கறா... நீங்க பேசறதும் புரியல. யாராவது ஒருத்தர் புரியற மாதிரி சொல்லுங்க!"

"ஏம்மா மது...! யாரையாவது காதலிக்கிறாயா?"

அதிர்ந்தாள் மது! வேறு ஒரு விஷயத்திற்குப் பயந்து கொண்டிருந்தாள்... இப்போது...

அந்தத் தருணைத் தேடிக் கண்டுபிடித்துத் தலையில் நங்கென்று நாலு குட்டு வைக்க வேண்டும் போல் ஆத்திரம் வந்தது. ஏதாவது பெற்றவருக்குப் பதில் சொல்லியாகணுமே!

"இல்லைப்பா... வந்து... அப்படி ஏதும் இருந்தா...?"

"கரெக்ட்... ம்மா...! அப்படி ஏதும் இருந்தா தானே என்னிடம் சொல்லியிருப்பா... இப்போதுதான் வேலையில் சேர்ந்திருக்கிறாள்... கொஞ்சம் பொறுங்க தம்பி! உங்க மனசுல, அம்மா மனசுல இருக்கிற ஈடுபாடு எனக்குத் தெரியும். நானே கொஞ்ச நாள் கழித்து, மதுவிடம் பேசுகிறேன். எதையுமே வலுக்கட்டாயமாக நான் என் பெண்களிடம் இதுவரை திணித்ததில்லை... என்று நான் தருண் தம்பியிடம் சொன்னேனா... அந்தத் தம்பி..."



"அந்தத் தம்பி அதுக்கு என்னதான் சொன்னது?"

"இதோ நிக்கறாளே இவள்... தருணிடம், 'நான் ஏற்கெனவே ஒருவரைக் காதலிக்கிறேன். அதனால் உங்களைக் கல்யாணம் செய்துக்க முடியாது. இது விஷயமா, நீங்க ஏதும் கூற வேண்டாம். நானே சமயம் பார்த்து வீட்டில் சொல்லிக்கறேன்'னு சொல்லியிருக்கறா...!"

மனதிற்குள் குமைந்தாள். 'எட்டப்பா! இப்படியா அப்பாவிடம் போட்டுக் கொடுப்பாய்? ஏதோ அப்படிச் சொன்னால், அடுத்தவன் காதலித்தவளை வேண்டாம் என்று, என் பாதையிலிருந்து விலகிவிடுவாய் என்று கூறினால், என் அப்பாவிடமே போட்டா கொடுக்கிறாய்?'

"ஏன் மது...! நீயா இப்படி? இந்தப் பூனையும் பால் குடிக்குமா என்பது போல, என்னைச் சமையலறையிலேயே சுற்றிச் சுற்றி வருவாய்! இவ்வளவு பெரிய திருட்டுத்தனமா செய்திருக்கிறாய்? பதில் சொல்லு மது...!"

உலுக்கினாள் அம்மா!

என்ன சொல்லச் சொல்கிறாள் அம்மா! கண்களை மூடித் திறந்தாள்.

ஒரு கணம் அந்தத் தருணுக்கு எதிராகக் கோபமெல்லாம் ஒன்று திரண்டது. என்னையா மாட்டிவிடப் பார்க்கிறான்? ஏதோ ஒன்று செய்தாக வேண்டும் என்ற வெறி... கொஞ்சம்கூட யோசிக்காமல் வார்த்தைகளை உதிர்க்க வைத்தது.

"ஆமாம்மா... நான் ஒருத்தரை லவ் பண்றேன். அதனால் என்னைக் கல்யாணம் பண்ணிக்கணும்னு

ஆசையை வைச்சுக்காதீங்கன்னு நான்தான் தருண்கிட்டே சொன்னேன்!"

"அடிச்சேன்னா பாரு..." அம்மா எகிற...

"ஆமாம்... இப்ப அடி... எல்லாம் செய்து தொலைச்சதுக்கப்புறம்...! நீ நாளையே சந்தனாவை வரச் சொல்லு. யாரு மது? அவன் பேரென்ன?"

மௌனமாக நின்றாள் மது. (யாருக்குத் தெரியும்?)

"பேரை விடு... என்ன பண்றான்? அப்பா, அம்மா யாரு? எத்தனை நாளாப் பழக்கம்?"

அவள் பதில் சொல்லத் திணறிக் கொண்டிருக்கும்போது... அப்பா, அந்தப் பேச்சை முடித்துக் கொள்ள விழைவது போல...

"நீ நாளை அந்தப் பையனை நம் வீட்டிற்கு வரச் சொல் மது... நான் பேசணும்..."

உள்ளறைக்குச் சென்று விட்டார் அப்பா.

ஆசைப்பட்ட மாதிரி அழகாக வேலையில் சேர இருக்கும்போது, இப்படி என்ன புதுக் குழப்பம். என்ன செய்வது...? யாரை யோசனை கேட்பது?

## 23

சந்தனா...! வேண்டாம். கொழுந்தன் மேல் திடீரென்று பாசம் பொத்துக்கொண்டு, அப்படியே ஒப்பித்துவிடப் போகிறாள். அந்தத் தருணின் வீர, தீரப் பிரதாபங்களை அடுக்கிவிட்டு, அவனையே திருமணம்



செய்து கொண்டால், இவள் எதிர்காலம் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று லெக்ச்சர் அடித்தவளல்லவா சந்தனா.

ராகினியிடம் கேட்கலாம். முடிவு செய்த பின்தான், கொஞ்சம் அவளால் மூச்சுவிட முடிந்தது. இப்போது கைபேசியில் பேசினால், ஒட்டுக் கேட்டு விடுவாள். நாளை அம்மா கிச்சனில் இருக்கும்போது, மாடிக்குப் போய் ராகினியிடம் முதல் வேலையாகத் தொடர்பு கொண்டு பேச வேண்டும்.

ராகினிக்கும் இவளைப் போலவே வளாகத் தேர்வில் வேறு கம்பெனியில் பணி நியமனம் கிடைத்து விட்டது. இவளுக்கோ உள்ளூரிலேயே வேலை கிடைத்தது போல், ராகினிக்கு இன்னமும் இடம் எதுவென்று தெரியவில்லை.

அம்மா, விஷயம் தெரிந்து கொள்ள... என்ன என்னவோ புலம்பிப் பார்த்தாள்.

"என்னடி இது அநியாயம்? அப்பா அவ்வளவு கேட்டும், பேரென்ன... ஆளென்னன்னு ஒன்னும் சொல்ல மாட்டேங்கறே? ஆனாலும் உனக்கு நெஞ்சழுத்தம் கொஞ்ச நஞ்சமில்லை...!"

அம்மா தொந்தரவு தாங்காமல் எட்டிப் பார்த்த அப்பா, "இப்ப ஏன் கஜா... அவளைக் கேள்வி கேட்டிட்டிருக்கே? அதுதான்... நீ பேரு, ஆளு, ஊரெல்லாம் பார்த்து, கல்யாணம் பண்ணிக் கொடுக்க வேண்டாம்னு... அவளே மாப்பிள்ளை... இல்லையில்லே... அவள் கணவனைப் பார்த்திட்டிருக்கா! நாளை உன் முன்னாடி கொண்டு வந்து நிறுத்துவா பாரு! அப்ப அவனை உன் கேள்வியையெல்லாம் கேளு... அதுவரைக்கும் இது விஷயமா எந்தப் பேச்சும் இருக்கக் கூடாது...!"

அந்த இக்கட்டான நிலையிலும், மதுவிற்கு அப்பாவிடம் நன்றிகூறத் தோன்றியது. நல்ல வேளையாக, அம்மா வாய்க்கு ஒரு பெரிய திண்டுக்கல் பூட்டாகப் போட்டு விட்டார்.

இல்லாவிட்டால், என்னைக் கேள்வி கேட்டே சாகடித்திருப்பாள் அம்மா. அம்மா கேட்டதற்கெல்லாம் பதில் சொல்ல ஆசைதான். ஆனால்... பதில் யாருக்குத் தெரியும்? ஏதோ உணர்ச்சி வேகத்தில் கூறிவிட்டாள்.

நாளை என்ன செய்வது?

எல்லாம் எனக்கு நன்றாக வேண்டும். அந்தத் தருணை என் பாதையிலிருந்து விலக்குவதற்காகத் திட்டம் போட்டு, நானே மாட்டிக் கொண்டேனே!

மௌனமாகக் கவனத்தைத் தொலைக்காட்சியை நோக்கித் திருப்பினாள். ஏனோ, செல்போனில் உருகிய ஆளைப் பற்றி நினைவு வந்தது.

இதோ செய்தி வாசிப்பவன், இவனைப் போல் ஹான்ட்சம்மாக இருப்பானா? ச்சேச்சே... தமிழ் சினிமாவில்தான்... பார்க்காமலே, சொல்லாமலே காதலிப்பவன் எல்லாம் ஹீரோவாக இருந்து தொலைப்பான். நிஜத்தில் அழகாகக் கவரும் வண்ணம் இருக்க வேண்டுமென்பதில்லையே!

ச்சே! என் தலைக்கு மேல் பிரச்சனை இருக்கும் போது... அவனைப் பற்றி இப்போது ஏன் நினைத்துக் கொண்டிருக்கிறேன்?

தன்னைத்தானே கடிந்து கொண்டாள், மது!

மறுநாள்...



"என்ன மது...! இவ்வளவு அதிகாலையில் போன்? என்னவாயிற்று? உடம்பிற்கு ஒன்றுமில்லையே!"

ராகினியின் கிண்டல் பேச்சை ரசிக்கும் மனநிலையில் இல்லாத மது...

"இப்போ மணி என்ன தெரியுமா? எட்டு...!"

"அது சரி... உனக்கு இது அதிகாலை தானே! என்ன விஷயம், மது? ரொம்ப சீரியஸாப் பேசற மாதிரி இருக்கு!"

"உன் மண்டையில் இப்பவாவது ஏறியதே... கொஞ்ச நஞ்சமில்லை... படு சீரியஸான மேட்டர்!"

"சொல்லு... மது!"

சில நிமிஷங்கள் செலவழித்து... நேற்று நடந்தவைகளைச் சொன்னாள்.

"அதுதான் இப்படியெல்லாம் செய்யாதேன்னு அன்றே சொன்னேன்... கேட்டியா?"

"இப்போ என்ன செய்யலாம் ராகினி...?"

"இப்போக் கேளு...! அவ அவ வீட்டிற்குத் தெரியாம, என்ன சாமர்த்தியமா லவ் பண்றா...! உத்தமபுத்திரியான நீ... இல்லாத காதலை... ஒத்துண்டு... அதுவும் எப்படி... இல்லாத காதலனைக் கொண்டு வந்து நிறுத்தறேன்னு...!"

"இப்ப நீ நிறுத்தப் போறாயா, இல்லையா? ஏதோ ஃபிரெண்ட்... யோசனை சொல்வாய் என்று பார்த்தால்... என் அம்மாவை விட மோசமாக இருக்கிறாய்."

"சரி... சரி... இப்படிச் செய்தால் என்ன?"

"எப்படி...?"

# 24

"எங்கேயாவது... நாளை ஊருக்குப் போயிருக்கான், உன் காதலன்... ஊரில் இல்லை என்று கூறிவிடு!"

"ஏன்பா... பின், நாளை மறுநாள் கூட்டிவா என்றால்..."

"ஓ...! அப்படி ஒன்று இருக்கிறதா? பின்... பேசாமல் ஒரு வருஷ காண்ட்ராக்ட்... வெளிநாட்டுப் பயணம் என்று அவிழ்த்து விடேன்! அதற்குள் உண்மையாகவே யாரையாவது பார்த்துக் காதலிக்க ஆரம்பித்துவிடு..."

"அடிச்சேன்னா... யாருப்பா இவ...? என்ன பேரு... என்ன கம்பெனி... யாரென்று கேட்பார்களே... என்ன சொல்ல...?"

"சரி... வேற ஒன்னு சொன்னாக் கோவிச்சுக்க மாட்டாயே...!"

"என்ன...?"

"உனக்கு அந்தத் தருணைக் கல்யாணம் பண்ணிக்க முடியாது. அதுதானே வேண்டும்! பேசாமல் உன்னைக் காதலிக்கிறேன் என்று போனில் உருகி வழிகிறானே... அவனைக் கொண்டு வந்து நிறுத்தி, இவனைத்தான் காதலிக்கிறேன் என்று கூறிவிடு. இவ்வளவு திட்டியும் விடாமல் உன்னைத் துரத்துகிறானே, நிச்சயம் உன்னை அவன் டீப்பா காதலிப்பான் போலிருக்கிறதப்பா!"

"ஏது ராகினி...! அவன் ஏதோ என் பலநாள் காதலன் மாதிரிப் பேசுகிறாய். அவன் யார், என்னவென்றே தெரியாதே!"



"கண்டிப்பாக அவன் உனக்குப் போன் செய்வான் இல்லையா... வேண்டுமென்றே சீண்டுவது போலப் பேசு! அவனை வரவழைத்து அங்கிள், ஆன்ட்டி முன் நிறுத்து... எப்படியும் உனக்கும்கூட அவனைப் பார்க்க வேண்டும் போல்..."

"கொஞ்சம் உன் உளறலை நிறுத்துகிறாயா, ராகினி. உன்னைப் போய் யோசனை கேட்டேன் பார். இந்த யோசனை சரிப்படுமா பார்..." - என்றவாறே, அப்போது சட்டென உதித்த யோசனையைக் கூற, ராகினி வியந்தாள்.

"அப்பப்ப உனக்கும் மூளை வேலை செய்யுது... 'என் தோழிதான் நீ...'ங்கறத நிரூபிக்கிறடி. மது, நீ சொல்றபடி செய். இனிமே இப்படிப் பொய் சொல்லி மாட்டிக்காதே மது! அம்மா நாலாவது முறையா கூப்பிடறாங்க. நான் அப்புறம் பேசறேன்..."

கொஞ்சம் போலத் தெளிந்தாள், மது. இங்கேயும்கூட அம்மா வைத்திருந்த டிபன் ஆறத் துவங்கிவிட்டிருந்தது.

பொதுவாக இவ்வளவு நேரம், அதுவும் காலை வேளையில் செல்லை வைத்துக் கொண்டு பேசிக் கொண்டிருந்தால், அம்மா சும்மாவா இருப்பாள்...!

இன்று கோபமாம்... அதைக் காண்பிக்கும் விதமாக, தட்டில் டிபன் வைத்து மூடிவைத்துவிட்டு... 'சாப்பிட்டால் சாப்பிடு... சாப்பிடாவிட்டால் எப்படியோ போ...' என்கிற தினுசில் போய்விட்டாள்.

அவசரமாக அள்ளிப் போட்டுக் கொண்டாள் மது. அடுத்த வாரம் திங்கள்கிழமை வேலையில் சேரவேண்டும்.

வீட்டிற்குள் இருக்கப் பிடிக்காமல், வெளியே எங்காவது தோழி வீட்டிற்குப் போய் வரலாமா என்று நினைத்தாள்.

அதற்கும் மூடு இல்லை.

பின் கிச்சனில் அம்மாவிற்கு உதவி செய்யச் சென்றால், அம்மா வேறு பேச்சை ஆரம்பிப்பாள். அதற்கு இது மேல்... என்று அப்படியே கணினி முன் அமர்ந்து விட்டாள்.

சிறு குழந்தையைப் போல் கணினியில் விளையாட ஆரம்பித்தவளுக்கு... அம்மா போன் செய்து, சந்தனாவைச் சீக்கிரமாகக் கிளம்பி, இங்கே நேராக வந்துவிடும்படி கூறிக் கொண்டிருந்தது காதில் விழுந்தது.

போனில் புலம்பக் காணோம். ஒரு வேளை நேரில் வந்ததும்... தன்னைப் பற்றி ஆரம்பிக்கலாம் என்று இருக்கிறாள் போலும்.

தனக்குள் சிரித்துக் கொண்டாள்.

இக்கட்டான நிலையிலும் தன்னால் எப்படிச் சிரிக்க முடிகிறது என்று ஆச்சரியமாக இருந்தது.

தன் முதல் கட்டத் திட்டத்தைச் சந்தனா வந்ததும் ஆரம்பிக்க வேண்டியதுதான்!

## 25

சந்தனாவிற்கு அலுவலகத்தில் பெரும் வியப்பு! அம்மாவிற்குப் பொதுவாகத் தன் பெரிய பெண் வேலையில் இருப்பதில் பெருமிதம் அதிகம்.



அதனால், அலுவலகத்தில் இருக்கும் சமயத்தில் சந்தனாவை எதற்கும் தொந்தரவு தர மாட்டாள். போனில் கூடப் பேசமாட்டாள். மகளாகப் போன் செய்தால், 'சரி... அவள் சற்று ஃப்ரியாகத்தான் இருக்கிறாள் போலும்' என்று பேசுவாள்.

அதுவும்... அதிக நேரம் எடுத்துக்கொள்ள மாட்டாள். ஏதடா, இந்தப் பெண்... வேலை செய்யாமல் போனில் எப்போதும் அரட்டை அடித்துக் கொண்டிருக்கிறாள் என்று, பெண்ணை எவரும் தப்பாகப் பேசிவிடப் போகிறார்களே என்ற தயக்கம் கஜாவிற்கு.

அன்று, கரும் பச்சைக் கலரில்... அதற்குக் காண்ட்ராஸ்ட்டாக வெளிர் சாம்பல் கலரில் பார்டர் போட்ட புடவையில் அழகாக இருந்தாள் சந்தனா.

அவள் முகத்திலும் வழக்கத்தை மீறிய ஒரு சந்தோஷம். அந்தச் சந்தோஷத்திற்குக் காரணம் இல்லாம லில்லை. எத்தனை நாட்கள் தவம் இது!

திருமணமான இந்த ஆறு மாதத்தில் கணவன், அத்தை, மாமா ஆகிய அனைவரிடமும் எழுந்த எதிர்பார்ப்பைத் தன் ஒற்றை இனிப்புச் செய்தியால் பூர்த்தி செய்திருக்கிறாள், நேற்று!

தினசரிக் காலண்டரைப் பார்த்தவாறே, யோசனை யுடன் நின்றிருந்தவளைக் கண்டதும், மிதுன் எளிதாக ஊகித்து விட்டான்.

"ஏய்... அதுதானே விஷயம்...! அதைத்தானே பார்த்துக் கொண்டிருக்கிறாய்?" - காதுக்குள் விஷயத்தைக் கூறிக் கண்ணடித்துக் கேட்டவனிடம் மறைக்க முடிய வில்லை, சந்தனாவால்.

நேற்று இரவு... தனிமையில்... மிதுன் மடியில் தலை வைத்தவாறே, முகத்தை நிமிர்த்தி, ஆசையாய்ச் சொல்ல நினைத்திருந்தாள்.

ஆனால், என்ன...? நாட்கள் தள்ளிப் போய், மிதுனின் செல்ல மகன் அல்லது மகளை வயிற்றில் சுமக்கும் இந்தச் சந்தோஷச் செய்தியைக் கேட்டு முதலில் நெஞ்சம் நிறையக்கூடிய ஜீவன் மிதுன்தானே!

இவள் வெட்கச் சிரிப்புடன் புன்னகைத்துத் தலை யாட்ட, சந்தோஷக் கூத்தாடி விட்டான் மிதுன்.

இவள் சொல்லச் சொல்லக் கேட்காமல்...

"அம்மா... அப்பா..." என்று கூப்பிட்டவாறே ஹாலுக்கு விரைந்து, முதல் ஆளாக விஷயத்தைப் போட்டு உடைத்து விட்டான்.

"என்னம்மா மருமகளே...! மிதுன் சொல்றது நிஜமா? கூடிய சீக்கிரம் என்கூட விளையாடப் பேரப்புள்ளையைக் கொடுக்கப் போறியாமே...! ரொம்ப சந்தோஷம்மா..." - மாமா.

"என்ன சந்தனா...! என்கிட்டேகூட நீ சொல்லவே யில்லே, பார்த்தயா...? அதுதான் காலையில் இருந்தே டயர்டா இருந்தியா? மிதுனிடம் தான் முதலில் இதைச் சொல்லணுமா என்ன...!" - கிண்டலாய்ச் சீண்டியவாறே, அத்தை தலையை வருட...

கிண்டலைப் புரிந்து கொள்ளாத சந்தனா, அவசரமாக, "இல்லை அத்தை...! நான் சொல்ல வருவதற்குள்..."



"இரும்மா மருமகளே! இப்போ என்னம்மா? அப்படியே அவள் நினைத்திருந்தாலும் அதில் தப்பேதும் இல்லையே...!" என்றவாறே மனைவியிடம்,

"நீ என்ன மறந்துட்டே... முதன் முதலில் நீ..." என்று ஆரம்பிக்க...

"போதும், நீங்க உளறினது. பசங்க முன்னாடி இப்படியா மானத்தை வாங்கறது...!"

அப்போதுதான் ஆஜரான தருணும் அவர்களது பேச்சில் கலந்து கொண்டான்.

"என்ன, யார் மானத்தை யார் வாங்கறா?"

சந்தனா, கொழுந்தனிடம் விஷயத்தை வெட்கத்துடன் கூற...

"ரொம்ப சந்தோஷம் அண்ணி! அப்பாடா... நிம்மதி! எவ்வளவு சீக்கிரம் முடியுமோ... அவ்வளவு சீக்கிரம் குட்டியைப் பெத்து, அம்மா கையில் கொடுத்து, அதைப் பார்த்துக்கற வேலையையும் கொடுத்திருங்க அண்ணி!"

"அம்மா அப்படி என்கேஜ்டா இருந்தாத்தான், 'நை நை'ன்னு என்னைத் தொந்தரவு பண்ண மாட்டாங்க!"

"என்னடா...! நான் உன்னைத் தொந்தரவு பண்றேனா? 'கல்யாணம் ஒன்று காலா காலத்துல செய்துக்கோ'ன்னா, அது தொந்தரவு பண்றதா?"

"இல்லேம்மா... ஒன்னே ஒன்னுதான் செய்துக்கச் சொல்றயே... அதுதான்..." என்று இழுத்தவன்,

அம்மா அடிக்க வருவதற்குள் மாடியில் இருந்த தன்னறைக்கு ஓடியே விட்டான்.

# 26

**நே**ற்று நடந்ததை எல்லாம் நினைத்துக் கொண்டிருந்தபோதே...

சந்தனாவின் கன்னங்களில் செம்மை படர்ந்தது.

அம்மா, இந்த விஷயத்தைக் கேள்விப்பட்டால் போதும். எவ்வளவு சந்தோஷப்படுவாள்...!

அந்தச் சந்தோஷத்தை நேரில் அல்லவா பார்க்க வேண்டும். அதை விட்டுவிட்டுப் போனில் சொல்வதில் துளியும் விருப்பமில்லை அவளுக்கு.

எனவே, இன்று சீக்கிரம் கிளம்பித் தன் வீட்டிற்குப் போய்... அம்மா, அப்பா, மதுவிடம் பேசிக் கொண்டிருந்துவிட்டு வருவதாகக் காலையில் அத்தையிடம் சொல்லிவிட்டுத்தான் வந்திருந்தாள்.

அதற்குள் அம்மா ஏன் போன் செய்து, 'மாலையில் வா,' என்கிறாள். இந்த விஷயமும் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. அம்மாவின் குரல் கம்மியிருந்ததைப் போலிருந்தது.

மதுவும்கூட, இவளிடம் பேசி வாரம் ஒன்றாகி விட்டது. எதாகிலும்... இவள்தான் மாலை போகப் போகிறாளே...!

கவனத்தை வேலையில் திருப்பினாள் சந்தனா.

அம்மா என்றால், அது அம்மாதான். அந்த உறவிற்கு ஈடு இணையே இல்லையோ!

பார்த்தவுடனேயே கண்டுகொண்டு விட்டாள், அம்மா.



"என்ன சந்தனா...? பூசின மாதிரி இருக்கே... ஏதாவது விசேஷமா? இந்த மாசம்..."

"ஆமாம்மா...! அதுதான் நேர்லே உன்னைப் பார்த்துச் சொல்ல நானே வரலாம்னு இருந்தேன். அதனால்தான்... அவரையும், அத்தையையும் கூட, உனக்குச் சொல்ல வேண்டாம், நானே சொல்லிக் கொள்கிறேன் என்று கூறிவிட்டேன்."

வெட்கத்தை ஓரளவு மறைத்தவாறு... டப்பாவைத் திறந்து ஜாங்கிரியை எடுத்து, அம்மாவிற்குக் கொடுத்து விட்டு... தங்கை மது வாயில் திணித்தாள்.

பதிலுக்கு மது, ஒரு துண்டு இனிப்பு எடுத்து இவள் வாயில் ஊட்ட... அங்கே சந்தோஷச் சூழ்நிலை நிலவியது.

"அப்பா எங்கேம்மா...? அப்பா...! அப்பா...!"

இவள் குரலுக்கு, அப்போதுதான் உள்ளே நுழைந்து கொண்டிருந்த அப்பா, குரல் கொடுத்தார்.

"சந்தனா...!"

அதற்குள் அம்மா, அப்பாவிடம் விஷயத்தைச் சொல்லிவிட, அவர் முகத்திலும் ஆனந்தப் பேரலை.

இருக்காதா பின்னே! தான் தந்தையானதை மனைவி வாயால் சொல்லக் கேட்கும் அந்த நொடியும், தான் தாத்தாவாகப் போவதை மகளோ, மருமகளோ சொல்லக் கேட்கும் அந்த விநாடியும்... எந்த ஒரு ஆண்மகனிற்கும் நெஞ்சம் நிமிர்த்தி, மெய் சிலிர்த்து, உடலெங்கும் ஒரு பெருமித இரத்தம் சட்டெனப் பாய்வது இயற்கைதானே!

சும்மாவா...? தன் வம்சம் தழைத்துச் செழிப்பதைக் காதால் கேட்கும் தருணம், அவருக்குச் சொல்ல முடியாத ஆனந்தம் எழுந்தது.

"சந்து... அம்மா சொல்றது உண்மையாடா? என்ன, நீ! உடனே ஒரு போன் பண்ணிச் சொல்லியிருக்க வேண்டாமா? ஸ்வீட் செய்து எடுத்துக் கொண்டு... நானும் உன் அம்மாவும் உன் வீடு தேடி வருவதுதானே முறை...! என்னடா நீ? அந்நியம் போல... இதென்ன ஸ்வீட் பாக்ஸ், கடையில் வாங்கிக் கொண்டு...!"

சந்தனாவிற்கு அப்பாவின் செல்லக் கோபத்தைக் கண்டு சிரிப்பு வந்தது. பொறுமையாக அவள் சமாதானப் படுத்த, அதற்குள் அம்மா கணவருக்கும், பெண்களுக்கும் காபி கலந்து கொண்டு வர... அந்தச் சூழ்நிலையே சுவாரசியம் ஆனது!

## 27

அதில் சந்தனாவும்... தன்னை அம்மா அவ்வளவு அவசரமாகப் போன் செய்து ஏன் வரும்படி கூறினாள்...? என்ன அப்படித் தலைபோகிற செய்தி...? என்று கேட்க நினைத்துக் கொண்டே வந்தவள், அதை மறந்தே போனாள்.

சின்னப் பெண்ணைப் பற்றிப் புலம்ப... மேற்கொண்டு என்ன செய்ய என்று கேட்க... சந்தனாவை வரச் சொன்ன அம்மாவும், அதை மறந்தாற்போல் ஆரம்பிக்கவில்லை.

மதுவிற்கு அப்பாடாவென்றிருந்தது. தானாக யாராவது ஆரம்பிக்கட்டும். அல்லது சந்தனாவைத்



தனியாகக் கூட்டிக்கொண்டு போய், அவள் நம்புவது போல் சொல்லிவிட வேண்டும்.

அம்மா எதிரில் இவள் சந்தேகப்பட்டு எதையாவது கேட்டால், அம்மா அதையே பிடித்துக் கொண்டு விடுவாள்.

ஆனால், மது அப்படி நிம்மதியாக இருந்துவிட முடியுமா என்ன?

"மது...! என்னடி... உன் செல்போன்தானே அடிக்கிறது."

சந்தனா கூப்பிட்டுச் சொல்ல... வெகுநேரமாக அடிக்கும் செல்போனை... என்ன, யாரென்று பார்க்காமல், அழுத்திக் காதுகளுக்குக் கொடுத்தாள் மது.

"ஹலோ...!"

மறுமுனை உரிமையோடு கோபித்தது.

"என்ன டார்லிங்...! ஏன் போனை அட்டெண்ட் பண்ண இவ்வளவு நேரம்?"

தன்னிச்சையாக, "என் அக்கா சந்தனா வந்திருக்கிறாள். அவளிடம் பேசிக் கொண்டிருந்தேன்..." என்று பதிலுரைத்தவள், பின்தான் அவசரமாக உதடுகளைக் கடித்துக் கொண்டாள்.

தன்னைப் பற்றி ஏதும் சொல்லாமலே எல்லா விஷயங்களையும் கறந்து வைத்திருக்கிறான். போதாதென்று இவள் வேறு சின்ஸியராக விளக்கம் கொடுத்துக் கொண்டிருக்கிறாளே!

ஆம்...! அவன்தான் போனில் வந்திருந்தான். தன்னைக் காதலிக்கச் சொல்லி இவளைப் பாடாய்ப் படுத்துபவன்!

அடி மேல் அடி அம்மியையும் நகர்த்துவதைப் போல்... இப்படி நெருக்கடி கொடுத்தே தன்னைக் காதலிக்க வைத்துவிடலாம் என்று எண்ணுகிறானோ?

ஆனால்... அவனை வெட்டிவிட, தண்டிக்க, தன்னால் முயற்சிக்க முடியவில்லை என்பதே மதுவிற்குப் புதிராக இருந்தது.

தன்னையே சுற்றிச் சுற்றி வரும்... சீண்டும் கதாநாயகனைப் போலீஸிடம் சொல்லி மாட்டி விடுவாள், அல்லது தாதாவான அப்பாவிடம் சொல்லி அடி அடியென்று அடிக்க வைப்பாள் கதாநாயகி. பின் அவமானப்பட்டும் தன்னையே நினைத்துக் கொண்டிருக்கும் அவனையே தேடிப்போய்க் காதலிப்பாள்.

## 28

எத்தனை சினிமா பார்த்திருப்பாள். அதனால்தான் இவனுக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுத்துப் பெரிய ஆளாக்காமல், கண்டுக்காமல் விட்டால், காணாமல் போய் விடுவான் என்று பார்த்தால், பெரிய தலை வலியாய் இருக்கிறானே...!

செல்போனோடு ரூமிற்குள் ஒதுங்கிப் போனாள் மது.

"சொல்லு... உனக்கு என்னதான் வேண்டும்?"

"என் அத்தான் என்று நீ கூப்பிடத்தான் வேண்டும்."

"யூ... யூ... உன்னை..."

"யூ... யூ... என்ன மது...? என்னைப் பேர் சொல்லிக் கூப்பிட, பேர் தெரியவில்லையா? என்ன பெண் நீ! நான்



உன் ஜாதகத்தையே அலசி ஆராய்ந்து விட்டேன். நீ என்னடாவென்றால், என் பேரைக்கூடக் கண்டுபிடிக்க முடியவில்லை..."

"நான் ஒன்னும் உன்னை மாதிரி வேலை வெட்டி இல்லாத பொறுக்கி..."

"மதுக்குட்டி! பார்த்துப் பேசு...! நான் ஒன்னும் கண்டவ பின்னாடி அலைகிற பொறுக்கி இல்லை. மதுங்கற உன் ஒருத்தியைத் தவிர எந்தப் பெண் வாசனையும் எனக்குத் தெரியாது!"

'ஆமா... இவரு பெரிய நாய்ன்னு நினைப்பு... மோப்பம் பிடிக்க வந்துட்டாரு...!'

மனதிற்குள் கிண்டலாக எண்ண, தொடர்ந்து அவனது குரல்,

"என்ன... பெரிய நாய் மாதிரி மோப்பம் பிடித்து அலைகிறான் என்று நினைக்கிறாயா? நீ என்னை என்ன வேணா நினைத்துக் கொள். ஆனா, நீ என்னைக் காதலிக்கிறே...!"

அவளுள் கோபம் எட்டிப் பார்த்தது.

ச்சே! நான் ஏன் இன்னமும் போனை கட் செய்யாமல் பேசிக் கொண்டிருக்கிறேன். தன்னைத்தானே நொந்தவாறு செல்போனை அணைக்கப் போனாள்.

"இரு மது! வைத்து விடாதே! ஆனாலும் உனக்கு இவ்வளவு பிடிவாதம் கூடாது மது...! அதுதான் உன் அப்பா... என் மாமனார்... 'மாப்பிள்ளையைக் கூட்டிக் கொண்டு வா' என்கிறாரே... பேசாமல் என்னை அவர் முன் நிறுத்தி, 'இவரைத்தான் காதலிக்கிறேன்!' என்று கூறிவிடேன்."

கூலாக அவன் சொல்ல, 'ஙே'வென விழித்தாள் மது.

என்ன இவன் சொல்கிறான்! இவனுக்கு எப்படி...? இங்கே வீட்டில் நான் இல்லாதபோது வந்து... ஏதாவது ரிப்பேர் பார்ப்பவன் போல் வந்து, மைக்ரோ ரிசீவர் எதையாவது எங்கேயாவது ஒட்ட வைத்துவிட்டுப் போயிருப்பானோ?

அப்பா, அம்மா, எனக்கு மட்டுமே இந்த விஷயம் இப்போது வரை தெரியும். மற்றொரு நபர் ராகினி, என் உயிர்த் தோழி! இவன் யாரென்றே தெரியாத போது, இவனுக்கு எப்படி விஷயம் போயிருக்கும்?

பயமாய்... கையிலிருந்த போனையே பார்த்தாள். அவன் இணைப்பைத் துண்டித்து வெகுநேரமாகி இருந்தது.

அதற்கு மேல் அவளுக்கு யோசித்து நின்று கொண்டிருக்க அவகாசம் கொடுக்காமல், சந்தனா கூப்பிட்டாள்.

"மது...!"

அவளைத் தனியாக ஓரங்கட்டிச் சமாளித்து விடலாம் என்று பார்த்தால், ஹாலில் நின்று கொண்டே ஏலம் போடுகிறாள், சை!

"என்ன சந்தனா...!"

"என்ன மது...! அம்மா சொன்னது உண்மையா? என்கிட்டே எவ்வளவுக்கெவ்வளவு சண்டை போடுவாயோ அத்தனை பிரியமாகவும் இருப்பியே...! எல்லாம் என்கிட்டே சொல்வே!" - பொத்தென்று சோபாவில் உட்கார்ந்தாள்.



"என் மாமியார் உன்னைப் பற்றி அடிக்கடி, தன் இரண்டாவது மருமகளாக ஆக்கிக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் பேசி வருகிறார். நீ போய்... சரி...! யாரு மது அது...? இன்று கூட்டிக் கொண்டு வருகிறேன் என்றாயாமே! போன் செய்து வரச்சொல்லி இருக்கிறாயா?

"அம்மா! நான் அத்தைக்கும், அவருக்கும் போன் செய்து சொல்லிவிடுகிறேன். எப்போ மது காதலிப்பது தெரிந்து விட்டதோ, இன்றைக்கு வரட்டும்... நமக்குப் பிடித்திருந்தால், எல்லாரும் இருக்கிறோம்... இன்றே பேசிவிடலாம். நான் இன்று இங்கேயே இருந்துவிட்டு, நாளை இங்கே யிருந்து இப்படியே ஆபிஸ் போய்க் கொள் கிறேன்."

"ஆமாம்... உன் தங்கை நமக்கெல்லாம் பிடிக்குமா என்று யோசித்துப் பார்த்துத்தான் காதலிக்க ஆரம்பித் தாளாக்கும்..."

தொடங்கிய அம்மாவை, "அம்மா...!" என்று ஒரு மிரட்டல் தொனியால்தான் சந்தனாவால் அடக்க முடிந்தது.

## 29

மது... இனியும் பொறுக்க முடியாது என்று மெல்ல... "சந்தனா...!"

"என்ன மது! சொல்லு."

"சந்தனா... அவர் வேலை விஷயமாய் ஃபாரின் போயிருக்கிறார். வந்தவுடன் ஒரு நாள் வரச் சொல்கிறேன்!"

"என்ன ஃபாரினா? எந்தக் கன்ட்ரி...."

"யூ.கே...! வர எப்படியும் ஆறு மாசமாகும். அவர் வந்த பின் நானே வீட்டில் விஷயத்தைச் சொல்லலாம் என்றிருந்தேன். அதற்குள்...!"

"சரி... எங்கே வேலை பார்க்கிறார்? ஐ.டி. கம்பெனியா?"

சரியாப் போச்சு! ஆம் என்றால், எந்தக் கம்பெனி, எந்தக் கிளை என்று தோண்ட ஆரம்பித்து விடுவாள்.

அவளுக்கு எல்லா ஐ.டி. கம்பெனிகளிலும் சிநேகிதிகள் வேறு இருக்கிறார்கள். கணிப்பொறித் துறை என்று சொல்லி வம்பில் மாட்டிக் கொள்ளக் கூடாது!

"இல்லை சந்து... அவர் தனியாகப் பிஸினஸ் செய்கிறார். எக்ஸ்போர்ட் பிஸினஸ்!"

"இந்தச் சின்ன வயதிலேயே, பொறுப்பா பிஸினஸா? பரவாயில்லையே! சரி, பேர் என்ன?"

கொஞ்ச விநாடிகள் யோசித்தாள். இல்லாத காதலன்தானே! பெயரா முக்கியம்... ஏதாவது ஒரு பெயர் சூட்டிக்கொள்ள வேண்டியதுதான்!

"உம்... முகிலன்...!"

"முகிலன்...! பெயரே வித்தியாசமாக இருக்கிறதே! சரி... போன் நம்பராவது கொடு. நான் பேசிக் கொள்கிறேன்."

தலையாட்டி வைத்தாள். அப்பாவிற்கும் சப்பென ஆகிவிட்டது. மகள் காதலிக்கிறாள் என்று தெரிந்ததும், முதலில் கோபம் வந்தது. அது தன் தன்மானத்தோடு, மகள் காதலிப்பதை லிங்க் செய்து, தானே குழப்பிக் கொண்டதால் வந்த கோபம் என்று உடனேயே புரிந்தது.



சிறு வயது முதலே இரு பெண்களையும், அவர்களுக்கு எது பொருத்தமாக இருக்கும்... எது சிறந்ததாக இருக்கும்... என்று பார்த்துப் பார்த்து வாங்கிக் கொடுத்து வளர்த்திருக்கிறார்.

'இப்போது மட்டும் என்ன? மதுவிற்குப் பொருத்தமாக, எல்லா வகையிலும் சிறந்தவனாகப் பையன் இருந்து விட்டால் சம்மதம் சொல்ல வேண்டியதுதானே! இதை ஏன் உன் தன்மானப் பிரச்சனையாகப் பார்க்க வேண்டும்?' உள்மனம் இடித்துரைத்து அவரைச் சம்மதிக்க வைத்தி ருந்தது.

ஆனால், அந்தப் பையன் வெளிநாட்டிலிருந்து வர ஆறு மாதங்கள் ஆகுமாமே! என்ன செய்வது? நடக்க வேண்டிய நேரத்தில் எல்லாம் நல்லபடியாகவே நடக்கும்!

கணவர் எடுத்துக் கூறியதும் நியாயமாகவே பட, கெஜாவும் அதன் பின்... ஏதோ தப்பு செய்துவிட்டுப் பிடி பட்டவள் போல் மதுவை நடத்துவதை நிறுத்தி, சகஜமாக எடுத்துக் கொண்டு விட்டாள்.

மதுவிற்குப் பெரிய தொல்லையிலிருந்து விடுபட்டதைப் போல் இருந்தது. என்ன... சந்தனாதான் அவனுடைய போன் நம்பரைத் தா, பேசுகிறேன் என்று அடிக்கடி கேட்டு வருகிறாள். எப்படியோ அதையும் இதையும் சொல்லி, இதுவரை சமாளித்தாகி விட்டது.

இதோ, ஐந்து மாதங்கள் ஓடிவிட்டன. இன்னும் ஒரு இருபது நாள் கழித்து... ஒரு நாள் ஆபிஸிலிருந்து வந்ததும், அடுத்த கட்டத்தைச் செயல்படுத்த வேண்டியதுதான்!

ராகினிதான் பூரித்து விட்டாள். "என்னதான் பொய் சொல்லி, இப்படி மாட்டிக் கொண்டாலும், உனக்கு உடம்பெல்லாம் மூளைடி. சரியாத் திட்டம் போட்டுச் சமாளிச்சிட்டியே! உனக்கு உண்மையாகவே யாரையாவது காதலிக்கத் தகுதி வந்துவிட்டதடி! ஆமா... அந்த செல்போன் லவ்வர் என்ன ஆனான்? தொடருதா...? பேசாம அவனையே... முகிலனா...?"

முடிக்க விட்டாளா மது...!

"உன்னை... உன்னை... என்னைக் காட்டிக் கொடுக்க வெளியிலிருந்து யாரும் வேண்டாம். நீ ஒருத்தியே போதும். ஆமாண்டி... அவன்...!"

## 30

மதுவிற்கு ஆச்சரியத்திலும் ஆச்சரியமான விஷயம் அது! வீட்டில் ஒருவாறு அம்மா, அப்பா, சந்தனாவைச் சமாளித்தபின், இவனை என்னடா செய்யப் போகிறோம் என்று கவலைப்பட்டால்... அதற்குப் பிறகு அவன் தொடர்பு கொள்ளவேயில்லை.

இவள் வேலையில் சேரும் நாள். அன்று இவளுக்கு வாழ்த்துக் கூறி, குறுஞ்செய்தி அனுப்பினான். பின்... சந்தனாவுடன் அவள் வீட்டிற்குப் போயிருந்தபோது... அன்று அவள் பிறந்த நாள் என்பதால், வெகு சிரத்தையாக அலங்கரித்து, அழகிய வேலைப்பாடுகளுடனான, காட்டன் சுடிதாரை அணிந்திருந்தாள்.

அன்று அவனிடமிருந்து குறுஞ்செய்தி! பிறந்த நாள் வாழ்த்துக்களோடு, அவளது உடையும், அலங்காரமும்



அருமை என்று! அதோடு, இன்றே உன்னைப் பெண் கேட்டு வந்து விடவா என்று கேள்வி வேறு!

'வந்தால் நன்றாக உதைபடுவாய்!' என்று பதிலுக்குச் செய்தி அனுப்பினாள், கைபேசியிலேயே!

அதோடு சரி...! அதற்குப் பின் ஒரு நாள்கூடத் தொடர்பு கொள்ளவும் இல்லை... தொந்தரவு செய்யவும் இல்லை!

மதுவிற்கு... தான் ஏதோ தப்பு செய்து விட்டதைப் போன்ற உணர்வு. அவன் பேசும்போதெல்லாம், அவன் சீண்டிச் சீண்டிப் பேச்சுக் கொடுக்க, வரம்பு மீறித் திட்டியிருக்கிறாள். அது அவன் மனதைக் காயப்படுத்தி இருக்குமோ?

காயப்பட்டால், பட்டுவிட்டுப் போகட்டும்! பின், ஊரான் வீட்டுப் பெண்ணை அவள் விருப்பம் இல்லாமல் தொடர்பு கொண்டு இப்படிப் பேசினால்... பின்னே கொஞ்சவா செய்வார்கள்! தனக்குத் தானே சமாதானப் படுத்திக் கொண்டாள்.

சில சமயங்களில்... அலுவல் நேரத்தில் அவனைப் பற்றி யோசித்துக் கொண்டிருக்கையிலே... நாம் வேண்டு மானால், அவன் முன்பு தொடர்பு கொண்ட செல் நம்பருக்குத் தொடர்பு கொண்டு பார்க்கலாமா என்று நினைத்தாள்.

குறைந்த பட்சம்... அவன் தன்னை இன்னார் பேசுகிறேன் என்று சொல்லியவாறே பேச ஆரம்பித்தால், முகிலனின் (?) உண்மையான பெயர் என்னவென்றாவது தெரியுமல்லவா?

வெகு நேர யோசனைக்கப்புறம் தோன்றிய ஐடியாவைச் செயல் படுத்தினாள் மது. அவளுடைய அலுவலகத் தொலைபேசி எண்... அப்பா, அம்மா, சந்தனாவைத் தவிர, வேறு யாருக்கும் தெரியாது.

அதிலிருந்து இந்த எண்ணைத் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.

ஆனால், அவள் மூக்குடைபட்டதுதான் மிச்சம்.

ரிங் போய் அடுத்த பக்கம் போன் எடுக்கக் காத்திருந்தாள். எடுத்த எடுப்பில்,

"ஹாய் மது...! என்ன, என் கூடப் பேசாம உன்னால இருக்க முடியலைதானே! எஸ்... ஐயாம் கரெக்ட் ஆல்வேஸ்... உண்மையை இப்போதாவது ஒப்புக் கொள் டியர்...!"

"நான்... நான்தான்னு எப்படி...?" – வார்த்தை வராமல் திணறினாள் மது.

"அதுதான் சொல்லிவிட்டேனே... நான் உன்னை நேசிக்கத் துவங்கியதுமே, உன்னைப் பற்றிய எல்லாத் தகவல்களையும் திரட்டி விட்டேன். உன் அலுவலகத் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டால் மட்டும் தெரியாமலா போகப் போகிறது? சொல்லு டியர்! நீயாகவே பேசியிருக்கிறாய்... என்னடா...?"

அந்த முன்பின் அனுபவித்திராத ஒரு பாசத் தாக்குதலில் திணறிப் போனாள் மது.

இத்தகைய ஈடுபாட்டை அவனிடம் அவள் எதிர் பார்த்திருக்கவில்லை.



'இது ஏதடா வம்பாய்ப் போய்விட்டது?' என உடனேயே தொலைபேசி இணைப்பைத் துண்டித்தவள்தான்!

வேலியில் போகிற ஓணானை மடியில் விட்டுக் கொண்ட கதையாக ஆகிவிடப் போகிறதே என...

அதற்குப் பின் தொடர்பு கொள்ளவில்லை.

சந்தனாவின் முகம் ஏற்கெனவே திருத்தமாக, லட்சணமாக இருக்கும். அதில் தாய்மை தனி மெருகேற்றி விட, முன்னைவிட அழகான தோற்றம் காட்டினாள்.

மிதுனிற்கும் சரி, தருணுக்கும் சரி... சந்தனாவின் அத்தை, மாமாவிற்கும் சரி...

வீட்டின் அடுத்த தலைமுறையின் முதல் வாரிசு வரப் போவது பெரும் பெருமிதத்தை ஏற்படுத்தியிருந்தது.

வரும் வெள்ளியன்று...

சந்தனாவிற்கு வளைகாப்பு, சீமந்தம் நடத்த நாள் குறித்தாகி விட்டது.

வீட்டில் புதுக் களை புகுந்து விட்டது.

இங்கே கஜாவும்... சந்தனாவிற்கு வளைகாப்பிற்கு எந்த டிசைனில் வளையல் வாங்கலாம் என்ற தீவிர யோசனையில் இறங்கி விட்டாள்.

மது, தனது சேமிப்பிலிருந்து, புது டிசைனில் அழகான வேலைப்பாடுகளுடன் இருந்த புடவையை வாங்கிப் பரிசளித்தாள்.

# 31

"அப்பா! எனக்கொரு யோசனை. சொல்லட்டுமா?"

"சொல்லுடா... சந்தனா...!"

"ஏற்கெனவே மதுவிற்குப் பார்த்த மாப்பிள்ளை இந்தியா வரும் நாள் நெருங்கி விட்டது..."

அம்மா அவசரமாகத் திருத்தினாள்.

"மதுவிற்குப் பார்த்த மாப்பிள்ளையில்லை, அவளே பார்த்துக் கொண்ட மாப்பிள்ளை!"

"சரிம்மா... மது, தானே தேடிக்கொண்ட மாப்பிள்ளை, நாம் இனிமேல் தான் பார்க்கப் போகும் மாப்பிள்ளை, மதுவின் காதலன், இப்படி எப்படி வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளுங்கள். அந்த முகிலன்... எப்படியும் செவ்வாய்க்கிழமை வருவதாக மது சொன்னாள் இல்லையா! அவரை வளைகாப்பிற்குக் கூப்பிட்டால் என்ன? நாம் அனைவரும் பார்த்த மாதிரி இருக்கும்..."

"அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம். ஒரு வேளை பையன் நாம் எதிர்பார்ப்பது போல இல்லையென்றால்... யாருக்கும் தெரியாமல் பார்த்தாலாவது, சனியன் விட்டது என்று கைகழுவி விடலாம். சீமந்தத்தில் எல்லாரும் இருக்கும்போது, அவனை வரவழைத்துப் பிடிக்கவில்லை யென்றாலும், எல்லோருக்கும் நாமே தண்டோரா போட்டுச் சொல்லியது போலாகிவிடும். அந்த யோசனையெல்லாம் சரிப்பட்டு வராது."

"என்ன கஜா! நல்ல விஷயம் பேசிக் கொண்டிருக்கும் போது, சனியன், அது இது என்று சொல்லிக்கொண்டு...



சந்தனா சீமந்தத்திற்குப் பெரிய அளவில் யாரையும் நாம் கூப்பிடப் போவதில்லை!

சந்தனா வீட்டில்... நம் வீட்டில்... சந்தனா ஆபீஸில் வேலை செய்யும் பெண்கள் என்று முப்பது நாற்பது பேர்தான் தேறுவார்கள். இதில் ஏற்கெனவே சந்தனா மாமியார் வீட்டில் விஷயம் தெரியும். தெரியும் என்ன...! அந்த வீட்டுத் தம்பி தருண் சொல்லித்தானே விஷயம் நமக்கே தெரியும்...!"

அப்பா கொஞ்சம் போல் நிறுத்தியவுடன், அங்கே அமைதி நிலவியது.

அந்த அமைதியின் கனம் ஒவ்வொருவரின் மனதையும் அழுத்தியது.

மதுவிற்கு அப்பாவின் வருத்தமான வார்த்தைகள், மனதை ஏதோ செய்வதைப் போலிருந்தது.

ஒரு வேளை தான் காதலித்திருந்தால், அது அப்பா மனதை இவ்வளவு பாதித்திருக்குமா, என்ன?

அதனால் என்ன... அது பொய்தானே! அதுவும் தற்காலிகமானதுதானே!

"சந்தனா சொன்ன மாதிரி, வெள்ளிக்கிழமை அந்தப் பையனை வரச் சொல்லிச் சொல்லு..."

மதுவிடம் நேரிடையாக முகம் கொடுத்துப் பேச மனதின்றி, ஜாடையாகத் தன் மனைவியிடம் கூறினார்.

அடடா...! செவ்வாய் அன்று வெளிநாட்டில் இருந்து வருவதாகக் கூறிவிட்டோமோ...! ச்சே! ஒரு வேளை இன்னும் ஒரு வாரம் கழித்து ஒரு நாளைக் கூறியிருக்கலாமோ!

இப்படி இந்த வெள்ளிக் கிழமை சந்துவிற்கு வளைகாப்பு வரும் என்று ஆறு மாதங்களுக்கு முன் தனக்கு எப்படித் தெரியும்?

இருந்தாலென்ன? இன்னும் ஒரு வாரம் கழித்து அரங்கேற்ற வேண்டிய டிராமாவை நாளையே அரங் கேற்றிவிட வேண்டியதுதான்!

அனைவரும் வேறு வேறு கவலைகளில் இருக்க, மது முகத்தில் ஒரு குரூரப் புன்னகை அரும்பி மறைந்தது.

மறுநாள்...

"ஏன் மது...? இன்றுதானே உன் அத்தான் வருகிறார்? நீ ஏர்போர்ட் போகப் போகிறாயா? வெள்ளிக்கிழமை நம் வீட்டிற்கு வரும்படி போனில் சொல்லிவிட்டாய்தானே! இல்லையென்றால் போன் நம்பரைக் கொடு... நான்..."

"அதெல்லாம் ஒன்றும் வேண்டாம்... எல்லாம் நாங்கள் சொல்லிக்கொள்வோம். ஏதேது... என்னைவிட நீ இவ்வளவு ஆர்வமா இருக்கே, அவரைப் பார்க்க...!"

"என்னடி... பொஸஸிவ்வா? நான் உன் மூத்தவள், ஞாபகம் வெச்சுக்கோ. சரி... மது, இன்று போகப் போகிறாயா ரிஸீவ் பண்ண...! என்ன... என் தங்கை செலக்ஷன் எப்படி இருக்கு என்று பார்க்கத்தான்!"

வேறு சமயமாக இருந்தால், அக்காவிற்குச் சரிக்குச் சமமாக வாயாடுவதென்றால், மதுவிற்கு வெல்லக்கட்டி உண்பது போலத்தான்.

அவளாக நிறுத்தினாலும், இவள் ஓய மாட்டாள். பதிலுக்கு அத்தானை வம்புக்கிழுப்பாள். பேச்சு வளர்ந்து



கொண்டே போக, அம்மா... சந்தனா என்றோ, மது என்றோ குரல் கொடுத்து... அதற்கு முற்றுப்புள்ளி வைத்தால்தான் உண்டு.

ஆனால், இன்று தொணதொணவென்று கேள்வி கேட்கும் சந்தனா மீது கோபம் கோபமாக வந்தது.

சரி, சரி... நாளை வரைதானே... கேட்டுவிட்டுப் போகட்டும்.

"இன்று அவரிடம் பேசுகிறேன்... வெள்ளிக்கிழமை வரச் சொல்கிறேன்...!"

"மது...! நீ மறக்காமல் உன் ஆபீஸில் வெள்ளிக் கிழமை லீவ் சொல்லிவிடு. லட்சணமாப் புடவையைக் கட்டிக் கொண்டு வீட்டிலேயே இருக்கணும் நீ...!"

அரிசிப் பற்களை நறநறவெனக் கடித்தாள் மது!

## 32

மறுநாள்... மதியம் ஒரு மணி வாக்கில், ராகினி போன் செய்திருந்தாள்.

"என்ன மது...! உன் வுட்பி என்ன சொல்கிறார்?"

"டீ... ராகினி... நீ அன்றைக்குச் சொன்னது சரியாப் போச்சு! அந்தத் தருணை இரிடேட் செய்ய, என் வழியில் குறுக்கிடாமல் இருக்கச் செய்ய, இவ்வளவு பெரிய பொய்யைச் சொல்லியிருக்க வேண்டாமோ?"

"ஆமாம்... இப்போ புலம்பு! உன் அக்காவிடம் மட்டுமாவது நீ சொல்லியிருக்கலாம் மது..."

"ஐயோ...! நீ வேறு... என் முதல் எதிரியே இந்த விஷயத்தில் இவதான்! என்னவோ தன் மச்சினன் போல் நல்லவன், வல்லவன் ஊரிலேயே இல்லை என்பது போல், பில்டப் செய்து, அப்பா, அம்மாவை ஏற்றிவிட்டதே அவள் தான்!"

"சரி... இப்போ உன் ஐடியாவை என்னிக்குச் செயல்படுத்தப் போறே?"

"இன்றைக்கே... சாயங்காலம் போகும்போதே, ஒரு சோக சீன் போட்டுட்டுப் போய்... பரிதாபமாக முகத்தை வைத்துக்கொண்டு... அப்புறம் என்ன... கொஞ்ச நாளைக்குக் கல்யாணப் பேச்சையே எடுக்க மாட்டார்கள்.

அதற்குள் காரியர் டெவலப்மெண்ட்டில் கவனம் செலுத்தி, அடுத்த பதவி உயர்விற்கு யோசிக்க வேண்டும். தேவையான செலவு மட்டும் செய்து, மீதமுள்ள பணத்தை அப்படியே சேர்த்து வைத்து, கல்யாணப் பேச்செடுப்பதற்குள் கணிசமான அளவு சந்தனாவிற்காக வாங்கின கடனை அடைக்க முயன்றால்...

அப்பா எவ்வளவு சந்தோஷப் படுவார். அதற்காகத் தானடி இவ்வளவு கஷ்டப்படுகிறேன்..."

"போதும்... ரொம்பத்தான் ஃபீலிங்ஸ்! மது... எம்.டி. வர்றார்... அப்புறம் பேசறேன். கட் பண்ணு."

மது, கைபேசியை அணைத்துப் பையில் வைத்தாள்.

ஆரஞ்சு வண்ண நிறத்தில் கண்களைக் கொள்ளை கொள்ளும் வேலைப்பாடுகளுடன் அணிந்திருந்த சுடிதார், அவளுக்கு மிகவும் பொருத்தமாக அமைந்திருந்தது.



மாலை, தான் கொண்டு போகப் போகும் இடி போன்ற செய்திக்கும், தான் அணிந்திருக்கும் உடைக்கும் பொருத்தமே யில்லாமல் இருக்கப் போகிறது என்பதை நினைக்கும்போதே, சிரிப்பு வந்தது.

மாலை...

"என்னடி சந்தனா... இந்த மதுவை இன்னமும் காணோமே...!" - வளைகாப்புச் சாக்கில், வீக்காக இருக்கும் உடம்பையும் தேற்றிக் கொள்ள இந்த ஒரு வாரம் இங்கே அம்மா வீட்டிலேயே இருந்து கொண்டிருந்த சந்தனா, வயிற்றைத் தூக்கியவாறே அசைந்து அசைந்து நடந்து, அம்மாவின் அருகில் வந்தாள்.

"அந்தப் பையனைப் பார்க்கப் போவதாகத்தான் சொன்னாளேம்மா... பேசிக் கொண்டிருக்கிறாளோ என்னமோ...!"

"உன் அப்பா வர்ற நேரமாயிற்றே. அவர் என்னைச் சத்தம் போடுவாரே. நீயும்தான் வேலைக்குப் போனே! இவளை மாதிரியா காதல், கத்தரிக்காய்னு வம்பை இழுத்துட்டு..."

"இப்போ உனக்கு என்ன...? அவளை இன்னமும் காணோம்னு கவலை... அவ்வளவுதானே! அவளுக்கே போன் செய்தால் போயிற்று..."

கையில் கைபேசியை எடுக்கும்போது, சரியாக மது உள்ளே நுழைந்தாள்.

தலையெல்லாம் கலைந்து, டிரெஸ்ஸெல்லாம் கசங்கி... ஏதோ ரொம்ப அலைச்சலில் வந்திருப்பவள் போல் தோற்றம் காட்டினாள்.

"என்ன மது...? என்னமோ போலிருக்கே... ஃப்ளாஸ்க்கில் காபி வைத்திருக்கிறேன், எடுத்துக்கோ. ஏன் இவ்வளவு லேட்?"

"என்னடி இது...? அழுது வடிந்த கோலத்தில் வந்திருக்கே?" - சந்தனா.

"ஆமாம்மா! உங்களையெல்லாம் நம்பிக்கை மோசம் செய்து அவனைக் காதலித்தேன் இல்லையா? எனக்கு இது மாதிரி அழத்தான் வேண்டும்!"

"ஏன் மது? அழப் போறியா? என்னவாயிற்று...? ஒரு வேளை அந்த முகிலன் உன்னை ஏமாற்றிவிட்டு..."

"என்னை மட்டும் இல்லைம்மா... நம் எல்லாரையும்... அவர் வீட்டில் அனைவரையும் ஏமாற்றிவிட்டுப் போய் விட்டார்..." - மேலே கையைக் காண்பித்து விட்டு, ஒரு பெரிய அழுகைக்குத் தயாரானாள் மது!

"மது...! கொஞ்சம் விளக்கமாகச் சொல்லு... எனக்கு அடி வயிறு கலங்குதே! அவர் வேறு வர்ற நேரமாயிற்றே...!"

மதுவிற்குத் தனியாக இன்னொரு முறை அனைத்தையும் விளக்கும் அவசியம் வைக்காமல்... அப்பா அதற்குள் வந்துவிட்டார்.

அம்மா... அவரிடம் இரண்டே நிமிஷத்தில் தனக்குத் தெரிந்தவற்றைக் கூற...

"என்ன மது? என்னவாயிற்று?"

"ஆக்ஸிடெண்ட்பா...! ஆவலாக அவரைப் பார்த்து, நீங்க சம்மதித்த(?) விஷயத்தைக் கூறி, வெள்ளிக்கிழமை அன்று வரச் சொல்லலாம் என்று போனால், அவர் ஆக்ஸிடெண்ட்டில் என்னை விட்டுட்டுச் செத்துட்டாருப்பா!"



# 33

சந்தனா... "ஏய் மது? என்ன ஃபிளைட் ஆக்ஸிடெண்டா? எந்த ஃபிளைட் ஆக்ஸிடெண்ட்... நான் காலையில் இருந்து டி.வி. பார்த்துக் கொண்டுதானே இருக்கேன். எந்த ஃபிளைட் ஆக்ஸிடெண்ட் பற்றியும் எந்தச் செய்தியும் வரவேயில்லையே! நீ சரியாக விசாரித்தாயா? முகிலன் எந்த ஃபிளைட்டில் வரப்போகிறார் என்று சரியாகச் சொன்னாரா?"

சந்தனா கேள்விகளை அடுக்கவும், மது திணறிப் போனாள். ஸ்கூலில், பரிட்சை ஆரம்பிக்கப் போகும் கடைசி நிமிஷங்களில் அவசரமாகப் புத்தகத்தின் பக்கங்களைப் புரட்டும் மாணவிபோல, சட்டெனத் தன் ஞாபகங்களைக் கிளறிப் பார்த்தாள். எந்த ஃபிளைட், எந்த நேரம் என்று எப்போதாவது சொல்லி விட்டிருக்கிறேனா? இல்லை யல்லவா!

"சந்தனா...! அவர் ஃபிளைட் ஏறவேயில்லையாம். அதற்கு முன்னே காலனுடன் எமலோகத்திற்கான ஃபிளைட் ஏறிவிட்டிருக்கிறார். அமெரிக்காவிலேயே... நேற்று நடந்த ரோட்டு ஆக்ஸிடெண்ட்டில்..."

முடிக்க முடியாமல், கண்களில் கண்ணீர் காட்டினாள் மது!

"அப்புறம்... உனக்கு எப்போ, எப்படி விபரம் தெரிந்தது?"

"அவருடைய வீட்டிற்கு முறைப்படி தகவல் சொல்லி யிருக்கிறார்கள். அவருடைய உறவினர்கள் அனைவரும் அமெரிக்கா சென்றிருக்கிறார்கள்.

"அப்பா, அம்மா, அண்ணன் சென்றிருக்கிறார்கள். என்னடா... இன்று ஃபிளைட்டில் வரவில்லையே என ஏர்போர்ட்டில் விசாரித்தேனா... அந்த ஃபிளைட்டில் அவர் ஏறவேயில்லையென்றதும், அவரது ஃபிரெண்டிற்கு போன் செய்து கேட்டுத் தெரிந்து கொண்டேன்... அப்பா...!"

நா தழுதழுக்கக் கூப்பிட்டவளைக் கேள்வியுடன் நோக்கினார்.

ஒரு சோகத்தையும் மீறிய நிம்மதி அவர் முகத்தில் படர்ந்திருந்ததை மதுவால் காணமுடிந்தது. அதுதானே அவளுக்கு வேண்டும்.

"உங்களை ஏமாற்றி... ஏமாற்றி என்றில்லை, நீங்கள் என் மேல் வைத்திருந்த நம்பிக்கையை ஏமாற்றிக் காதலித்ததற்கு எனக்கு இதுவும் வேண்டும்... இன்னமும் வேண்டுமப்பா... என்னை மன்னிச்சிடுங்க. இனிமே நீங்க சொன்னபடி கேட்கப் போறதா இருக்கேன். ஒரு நாலு வருஷம் என்னை விட்டுடுங்கப்பா... அப்புறம் நீங்க சொன்னபடியே கேட்கறேன்!"

'என்னவோ செய்...!' என்பது போல் சைகை காட்டிவிட்டு, அப்பா தன் அறைக்குச் சென்று விட்டார்.

மது தனக்குள் மகிழ்ந்து போனாள். பரவா யில்லையே... எனக்கும் என்ன அழகாக நடிக்க வருகிறது. ராகினி மட்டும் பக்கத்தில் இருந்திருந்தால் அசந்து போயிருப்பாள்.

சந்தனாதான் யோசித்துக் கொண்டிருக்கிறாள். அவள் யோசித்து அடுத்த கேள்வியைக் கேட்கும் முன், எஸ்கேப் ஆகிவிட வேண்டும்.



காபியை எடுத்துக் கொள்ள, ஃப்ளாஸ்க்கைத் தொடப் போனவளைத் தட்டிவிட்டாள் அம்மா!

"இழவுச் செய்தியோட வந்திருக்கே... முதல்ல போய்க் குளி! இதோட எல்லாம் முடிஞ்சதுன்னு நினைச்சு ஒரேயடியாகத் தலை முழுகிட்டு வா... பின் காபி சாப்பிடு."

குளியலறைக் கதவைத் தாழிட்ட பின், சத்தம் வெளியே கேட்காது என்று உறுதி செய்து கொண்ட பின், மது... சினிமாப் பாடலை உதிர்த்தவாறே, மகிழ்ச்சியோடு, ஷவர் முன்னால் நின்றாள்.

இன்று ஒரு நாள் கொஞ்சம் சோகம் அப்பிய முகத்தோடு வளைய வந்துவிட்டு, நாளை முதல் வளைகாப்பு வைபவத்திற்கு நிறைந்த மனதோடு வேலைகளைக் கவனிக்க வேண்டும்.

அப்பா... காலையில் போனால், மாலையில்தான் வருவதால், அம்மா... சாப்பாடு, அதன் மெனு என்று தன் வரையில் கவனித்துக் கொண்டாள்.

வெளியே போய்த் தேவையான பொருட்களைக் கடையில் வாங்கி வருவது, மாலை, பூ என்று ஆர்டர் கொடுப்பது போன்றவற்றைத் தான் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று மது தீர்மானித்தாள்.

## 34

அம்மாவும் என்ன நினைத்தாளோ என்னமோ, மதுவை அதற்கு மேல் அதிகம் வார்த்தைகளால் சீண்ட வில்லை.

சந்தனாவிற்கு வயிற்றுக் குழந்தை புரண்டு, வளைய வந்ததால், வயிறு

சங்கடப்படுவதை உணர்ந்தாள். இருந்தாலும் அந்த வலி, சுகமான வலியாக இருந்தது.

அவளும், தள்ளாமையின் காரணமாக, மதுவின் போக்கில், அடுத்து வந்த இரண்டு நாட்களும் தலையிட வில்லை.

விடிந்தால் வளைகாப்பு. சந்தனாவின் மாமியார், மாமனார், மிதுன் காலையில் கிளம்பி வருவதாகக் கூறிவிட்டனர்.

சந்தனாவின் அத்தையும், மாமாவும் மட்டுமே அன்றே வந்து விட்டிருந்தனர். மீதமுள்ள உறவினர்களும் உள்ளூர் என்பதால், காலை வருவதாகக் கூறிவிட்டிருந்தனர்.

மது, அம்மாவின் திட்டலையும் மீறி, சொல்லச் சொல்லக் கேட்காமல், சந்தனாவிற்கு இரு கைகளிலும் மருதாணி இட்டு அழகு பார்த்தாள்.

அது போன்ற - அழகுபடுத்திக் கொள்ளும் விஷயங்களில் மதுவிற்கு நிரம்ப ஈடுபாடு இருந்ததால், சந்தனாவின் கரங்கள், அவள் முகத்திற்கு ஈடாகச் சிவந்து பளிச்சென்று இருந்தன.

காலையில்தான் திடுமெனக் கஜாவிற்கு நினைவு வந்தது.

"என்னங்க... சந்தனாவிற்கு மாலை வாங்க வேண்டுமே! எல்லோருக்கும் தலையில் வைத்துக்கொள்ள மட்டும் பூ நேற்றே கொடுத்துவிட்டு, பூமாலை ஃப்ரெஷ்ஷாகக் கட்டி, நாளைக் காலை தருகிறேன் என்றான். இன்னமும் காணோமே!"



வீட்டிலேயே வளைகாப்பு வைபவம் வைத்திருந்ததால், அப்போதுதான் வந்திருந்த உறவினர்களை உபசரித்து, டிபன் சாப்பிட வைத்துக் கொண்டிருந்த கணவனின் காதைக் கடித்தாள் கஜா, பூமாலையை ஞாபகப்படுத்தி!

"என்னம்மா... இப்போ போய் சொல்றே? போன் செய்து பாரேன்!"

"போன் செய்யாம இருப்பேனா? போன் எடுக்கவே யில்லை. என்னங்க செய்ய... சந்தனாவை உட்கார வைக்க, இன்னமும் ஒரு மணி நேரம்தான் இருக்கு...!"

கையைப் பிசையும் மனைவியிடம் கோபம் கொள்ளத் தோணவில்லை.

"சரி, சரி...! மது சும்மாதானே இருக்கா... வண்டியை எடுத்துக் கொண்டு போய்க் கையோடு மாலையை வாங்கி வரச் சொல்லு. மாலைக்குப் பணம் எடுத்துக் கொண்டு போகச் சொல்லு!"

இது சரியான யோசனையாகப் பட, பட்டுச் சேலை சரசரக்க, இளைய மகள் மதுவைத் தேடிப் போனாள் கஜா.

அடுத்த சில நிமிடங்களில், மதுவின் ஸ்கூட்டி அவளைச் சுமந்து கொண்டு விருட்டெனப் பறந்தது.

## 35

**வா**டிக்கையான கடை என்பதால், மதுவிற்குக் கடையைச் சென்றடையப் பத்து நிமிடங்கள்தான் ஆகி யிருக்கும்.

அப்போதுதான் முடிக்கும் தருவாயில், பூமாலை கட்டும் பணி நடந்து கொண்டிருக்க, அதை

வாங்கிக் கொண்டு போகும் எண்ணத்தில், அங்கேயே அமர்ந்து விட்டாள்.

அவள் கல்லூரியில் படிக்கும்போது, சென்ற வருடம் பொங்கலுக்கு முதல் நாள், அனைவரும் சேர்ந்தாற்போல் பாரம்பரிய உடை அணிய வேண்டும் எனத் தீர்மானித்து வாங்கி அணிந்திருந்த, பாவாடை, தாவணியையே இன்று உடுத்தியிருந்தாள், மது.

கஜாவின் யோசனைதான் இது! விசேஷ நாளில்கூட, மகள் ஜீன்ஸ் பாண்ட், டீசர்ட்டில் வளைய வருவது, கிராமத்திலிருந்து வந்திருக்கும் தன் நாத்தனாருக்கு, வெறும் வாய்க்கு அவலாக அமையும் என அவளுக்குத் தெரியும். 'குதிரை கணக்கா, என்ன டிரஸ் இது என்று உன் அம்மா போட விட்டிருக்கிறாள். ஒரு விசேஷம் அன்னிக்குக்கூட, புடவை கட்ட மாட்டாளா உன் பெண்!' என்று சாடுவாள்.

புடவை கட்டினாலோ, பெரிய பெண் போல் தோற்றம் காட்டும் மதுவிற்கு இன்னமும் கல்யாணத்திற்குப் பார்க்கவில்லையா, என்ற கேள்வி எழும்.

அதிசயமாக, மது தாயின் பேச்சிற்கு எந்த மறுப்பும் கூறாமல், சொன்னபடியே பாவாடை, தாவணி உடுத்திக் கொண்டாள்.

தனது நேர்த்தியான அலங்காரத்திற்கும், அந்த சற்றே அழுக்குப் படிந்த நாற்காலியில் அமர்ந்திருப்பதற்கும் பொருத்தமேயில்லாமல் கேவலமாக இருப்பதைப் போல் உணர்ந்தாள்.

வேறு வழியில்லை. முடித்து விட்டுக் கொண்டு வந்து தா என்று கூறிவிட்டுச் சென்றாளானால், பூமாலை வரும்



வரை டென்ஷன் தான். அதற்கு இதையெல்லாம் சகித்துக் கொள்வதே மேல்.

ஆண்பிள்ளை போல் பொறுப்பாகத் தான் இப்படிக் .காரியங்களை எடுத்துச் செய்து, அப்பாவிற்கு உதவியாக இருப்பது, அவளுக்கு உள்ளூரப் பெருமையாக இருந்தது.

ஆண் பிள்ளை இருந்தால்தானா? என் இரு பெண்களையும், பெண்களைப் போல் நான் வளர்க்கவில்லை. ஆணுக்கு நிகரான சுதந்திரமும், தைரியமும் கொடுத்து வளர்த்து இருக்கிறேன். அவர்கள் இருக்கும்போது, எனக்கு ஆண் பிள்ளைகள் இல்லையே என்ற கவலையில்லை... என்று அத்தையிடம் அப்பா சொல்வதுண்டு. அப்படிப்பட்டவர், நான் காதலிக்கிறேன் என்று சொல்லக் கேட்டு, என்ன மனசு பாடுபட்டிருப்பார். சட்டெனத் தோள்களைக் குலுக்கிக் கொண்டாள் மது.

## 36

"இந்தாங்கம்மா...!" பெரிய கவரில் போட்டுத் தன்முன் நீட்டப்பட்ட மாலையை வாங்கிக்கொண்டு கிளம்பினாள்.

அப்போதுதான் யோசனை உதித்தது.

தான் வந்தபோது தான் மாலை கட்டும் வேலை முடியவில்லை என்பதால், இங்கேயே உட்கார்ந்து விட்டாள்.

வீட்டை விட்டுக் கிளம்பி வெகு நேரமாகிவிட்டதால்... அம்மாவைப் பற்றிக் கேட்கவே வேண்டாம். தானும் டென்ஷனாகி, மற்றவர்களையும் டென்ஷன் ஆக்கி விடுவாள்.

சரி... போன் செய்து விஷயத்தைக் கூறிவிட்டுப் போகலாம்.

என்ன... போன் கிடைக்கவே மாட்டேன் என்கிறதே. சரி... யாரோ பேசிக் கொண்டிருக்கிறார்கள் போலிருக்கிறது என்று தீர்மானித்தவள், சந்தனாவின் கைபேசியைத் தொடர்பு கொண்டாள்.

"சந்து...! மாலை ரெடியாகவில்லையாம்...!"

"என்னடி... சரி, சரி... நீ வந்துவிடு மது... நாம் வேறு எங்காவது...!"

"இருடி...! நான் விடுவேனா? ரெடி பண்ணும் வரை இங்கேயே இருந்து வாங்கிக் கொண்டு வரலாம் என்று இருந்து வாங்கிக் கொண்டு விட்டேன். நேராக வந்து விடுகிறேன். அம்மாகிட்டே சொல்லு!"

"சரி, மது...! அப்புறம் உனக்கு வீட்டில் ஒரு நல்ல செய்தி காத்துக் கொண்டிருக்கிறது. என்ன... கெஸ் பண்ணேன்!"

"என்ன! அத்தான் எனக்கு ஏதாவது கிஃப்ட் வாங்கிக் கொண்டு வந்திருக்காரா...? இருக்காதே...! நீ இல்லாமல் அவர் கடைக்காவது... போறதாவது...! அந்தச் சுதந்திர மெல்லாம் பறிபோய் ரொம்ப நாளாகிவிட்டதே! உன் பையன் வயித்திலிருந்தே 'சித்தி' என்று கூப்பிட்டு விட்டானோ?"

"அரட்டை...! அதெல்லாம் இல்லை. நீ மிகவும் சந்தோஷப்படும் விஷயம் நடந்திருக்கிறது!"

"சஸ்பென்ஸ் வைக்காமல் சொல்லு...!"



"அதெப்படி...? உன்னை விரட்ட எனக்கொரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது... விடுவேனா? வேண்டு மானால் ஒரு க்ளூ தருகிறேன், கண்டுபிடி!"

"மாண்டவர் மீண்டு வருவாரோ...! ஆனால் வந்து விட்டாரே..." – சந்தனா கைபேசியை அணைத்து விட்டாள்.

மதுவிற்குத் தமக்கை மேல் கோபம் கோபமாக வந்தது.

## 37

அவளுக்குப் பெரிய விக்கிர மாதித்தன் என்று நினைப்பு! புதிர் போடுகிறாளாம், புதிர். இனி வீடு போய்ச் சேரும்வரை, இதே மனதைக் குடைந்து கொண்டிருக்கும்.

சரி, பார்ப்போம்... என்று நினைத்தவாறே, மாலையை முன்னால் மாட்டிக் கொண்டு வண்டியைக் கிளப்ப எத்தனித்தவள், மீண்டும் தன் போன் இசைத்துக் கூப்பிட, யாரென்று பார்த்தாள்.

வெகு நாளைக்கு அப்புறம் அவள் செல்போன் திரையில் அந்த எண் ஒளிர்ந்து கூப்பிட்டது.

போனை எடுக்காவிட்டால், வீட்டுப் போன் நம்பருக்குப் போன் செய்துவிடப் போகிறானே என்ற பயத்தில், எடுத்துக் காதுகளில் ஒற்றி, "ஹலோ..." என்றாள்.

"ஹாய் டியர்...! எவ்வளவு நேரம்தான் உன் வீட்டில் உனக்காகக் காத்துக் கொண்டிருப்பது? சீக்கிரம் வர மாட்டாயா?"

கொஞ்சியது குரல். கொஞ்சம் நடுங்கித்தான் போனாள், மது.

"நீ... நீ... எப்படி...!" சம்பந்தமில்லாமல் குழறினாள்.

"நான்தான் உன் முகிலன்...!" 'உன்' என்பதைக் கொஞ்சம் அழுத்தியே சொன்னதைப் போலிருந்தது.

"நீ என் வீட்டில்... எதற்காக அங்கு வந்தாய்?" - கொஞ்சம் போல் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு கேட்டாள்.

"வேறு எதற்கு வருவார்கள், ஹனி? உன்னைப் பெண் கேட்கத்தான்! உன் அப்பாவே இன்று என்னை வீட்டிற்கு வரும்படி கூப்பிடச் சொல்லி உன்னிடம் சொன்னார் அல்லவா! நீதான் என்னை..."

"உன்னை..."

"நான் என்ன கதையா கூறிக் கொண்டிருக்கிறேன். நீதான் முகிலனைச் சாகடித்து விட்டாயே! ஒன்று என்னைக் காதலி... இல்லை... முகிலன் யார், எப்படிச் செத்தான் என்றெல்லாம் விலாவாரியாக இருவரும் உன் வீட்டில் கூறலாம்.."

பற்களை நறநறவென்று கடித்தாள், மது. வேறு எதுவும் அப்போதைக்கு அவளால் செய்ய முடியவில்லை.

சந்தனா சொன்ன நல்ல விஷயம் இதுதானா? கடவுளே!

வீட்டில் இந்த இக்கட்டான நிலையை எப்படிச் சமாளிப்பது? ராகினியோ ஊருக்குப் போயிருக்கிறாள்... அவளைத் தொந்தரவு செய்து ஐடியா கேட்பதா?



இவன் என்ன குழப்பம் செய்து வைத்திருக்கிறானோ!

என்ன செய்வது? மணியைப் பார்த்தாள். இன்னும் நாற்பது நிமிஷங்களே நல்ல நேரம் துவங்க இருந்தது. மாலை வேறு இவளிடம் இருக்கிறது.

அதற்காக எல்லாரும் காத்துக் கொண்டிருப்பார்கள்.

எப்படியாகிலும், இவள் இந்தச் சூழ்நிலையைச் சந்தித்துத்தானே ஆக வேண்டும். வண்டியை வீட்டை நோக்கித் திருப்பினாள்.

## 38

**வ**ண்டியை வீட்டினுள் போர்டிகோவில் நிறுத்திவிட்டு, மெல்ல வீட்டினுள் நுழைந் தாள், மது.

எதிர்ப்பட்ட எல்லாரும் அவளைக் கேலிப் புன்னகையோடு எதிர் கொள்வதைப் போலிருந்தது.

"வாம்மா, மருமகளே!" சந்தனாவின் மாமியார் இவள் தலையைத் தடவியவாறே... கையில் இருந்த பூமாலையை வாங்கிக் கொண்டாள்.

அவளை ரொம்ப நேரம் சஸ்பென்ஸில் தவிக்க விடாமல், அப்பா ஆரம்பித்தார்.

"நல்ல பெண்ணம்மா நீ...! மாப்பிள்ளை வந்து சொல்லவும்தான் எங்களுக்கே விஷயம் தெளிவாயிற்று. இன்னமும் சின்னப் பெண்ணாகவே இருக்கிறாயே...! மாப்பிள்ளையிடம் பந்தயத்தில் ஜெயிக்க வேண்டும் என்பதற்காக, இல்லாத காதலன் கதையைக் கூறி, அவனைச் சாகடித்து..."

"மது! உன் கதை வளத்திற்கு, நீ சீரியல் எழுத அழகாகப் போகலாம். எங்களை எவ்வளவு அழகாக ஏமாற்றியிருக்கிறாய்?"

அம்மா சிரித்துப் பேசி வெகு நாட்களுக்கு அப்புறம் அன்றுதான் பார்க்கிறாள் மது.

அவளுக்குத் தான் அழுவதா, சிரிப்பதா என்றே புரியவில்லை.

நல்லவேளை... பந்தயம், அது இதுவென்று வேடிக்கையாகக் கூறித் தன் முட்டாள்தனமான பொய்யைக் காப்பாற்றி விட்டிருக்கிறான்.

"அப்பா... அவளோ, காதலனைக் காண, ஓடோடி வந்திருக்கிறாள். போய்ப் பேசட்டும், விடுங்கப்பா... நீங்க வேற...!"

"மாப்பிள்ளை உனக்காகத்தான் அந்த அறையில் காத்துக் கொண்டிருக்கிறார். போய், இப்படிப் பொய் சொன்னதற்கு சாரி கேளு மது!" - அம்மா விரட்ட, மதுவின் கால்கள் அறையை நோக்கி நகர்ந்தன.

யாரோ... அவன் யாரோ... என்ன பெயரோ... என்ன சொல்லப் போகிறானோ...!

பயம், கலக்கம் எல்லாவற்றையும் மீறி, முதன் முதலில் தான் முகிலன் என்று பெயர் வைத்த அவனைக் காணப் போகும் ஆர்வமும், அவலமும் அவள் மனதில் அரும்பியது.

கதவைத் திறந்தவள் அதிர்ந்தாள்!



## 39

அங்கே இருந்தது...

கண்களைக் கசக்கி விட்டுக் கொண்டு பார்த்தாள்... அங்கே இருந்தது... இவனா... இல்லையில்லை, இவரா...!

"நீ எப்படிப் பார்த்தாலும், நானேதான் மது! வா... அருகில் வா...!"

"நீ... நீங்க... முகிலன்..."

"ஓ...! நீ சூட்டிய பெயரைச் சொல்கிறாயா? ஆனாலும், உனக்கு நல்ல கலைஞானம். எவ்வளவு அழகான பெயரை எனக்கு... இல்லையில்லை, உன் காதலனுக்குச் சூட்டியிருக்கிறாய்...?

"ஏன் ஹனி... போனில்தான் திட்டுவாயா... ஸாரி... பேசுவாயா...? நேரில் என்ன வெட்கமா?"

முகிலனின் குரலில் பேசினான், தருண்.

ஆம்... அவளுக்கு முன்னே கால் மேல் கால் போட்டவாறு அமர்ந்திருந்தது, தருணேதான்!

வெட்கம் பற்றித் தருண் பேசியவுடன்...

"எனக்கு என்ன வெட்கம்?"

"அப்படியென்றால் பக்கத்தில் வா, மது!"

தனக்கு எந்தத் தயக்கமோ, வெட்கமோ இல்லை என்பதைச் செயலில் காட்டவாவது, அவன் அருகில் போய் அமர வேண்டிய கட்டாயத்தை உணர்ந்தாள், மது.

அது போதாதா, தருணிற்கு. சட்டென மதுவின் கைகளை எட்டிப் பிடித்து விட்டான்.

"ஐ லவ் யூ மது... உனக்கும், என்னைப் பிடிக்கும் என்பதைவிட, பிடிக்காது என்று உறுதியாக உன்னாலேயே கூறமுடியாது... மது... முதல் கோணல் முற்றிலும் கோணல் என்பது போல், நம் முதல் சந்திப்பே உனக்கு இரிடேட் செய்வது போல் அமைந்து விட்டது. முதன் முறையாக... உன் அக்காவின் மைத்துனனாக, உன் முறைப் பையனாக நான் அறிமுகம் ஆகியிருந்தால்... என்னை மணக்க உடனேயே சம்மதித்து இருப்பாய் அல்லவா?"

"ஆசைதான்...!"

"ஆம் மது... எனக்கு உன் மேல் கொள்ளை ஆசைதான். என்னையுமறியாமல், என்னுள் புகுந்து விட்டாய். நீயும், நானும் ரெஸ்ட்டாரன்ட்டில் அருகருகே அமர்ந்து உண்டதும்... அந்த சர்வர், உன்னை என் மனைவியென்று நினைத்ததை, ஒரு வகையில் நான் என்னையுமறியாமல் ரசித்தேன் மது... அதுதான் உன்னை இரிடேட் செய்து விட்டதென்றால், சாரி..."

"அதெல்லாம் ஒன்றும் இல்லை..."

"மழுப்பாதே, மது! உன் எரிச்சலுக்குக் காரணம் தெரிந்ததும், உன்னை என்பால் திருப்பத்தான் எவ்வளவு பாடுபட வேண்டியதாயிற்று!"

மது, அவனுக்குப் பதிலேதும் சொல்லாமல்... அங்கும் இங்கும் எதையோ தேடும் பாவனை செய்தாள்.

"என்ன தேடுகிறாய்?"



"இல்லை... முன் எப்போதாவது என் வீட்டிற்கு வந்திருக்கும்போது, ஏதாவது மைக்ரோ போன் வைத்து விட்டுப் போய்விட்டீர்களா என்று பார்க்கிறேன்.

பின் எப்படி... நான் எவ்வளவு மூளையைக் கசக்கி, ஏதாவது ஐடியா கண்டுபிடித்தாலும்..."

"நான் அதைத் தெரிந்து கொண்டு விடுகிறேன் என்று யோசித்தாயா? உன் சிறிய மூளையை இதற்கு மேலும் கசக்காதே! அதுதான் உன் நடவடிக்கைகளை உடனுக்குடன் தெரியப்படுத்த, என் அண்ணியும், உன் தோழி ராகினியும் இருக்கிறார்களே...!"

'ஙே' என்று விழித்தாள், மது.

40

இந்தச் சின்ன விஷயத்தைக்கூட எப்படிக் கண்டு பிடிக்க முடியாமல் போனாள்.

இது தெரியாமல், ராகினியிடம் அல்லவா எல்லாவற்றையும் ஒப்புவித்து இருக்கிறாள்!

"ஏதேது... ராகினியை உன் முன்னால் கொண்டு வந்து நிறுத்தினால், பஸ்பமாகி விடுவாள் போலிருக்கிறதே! அவர்கள் மேல் கோபப்படாதே. மது... நீ என்னை வெறுப்பதில் ஏதாவது நியாயம் இருந்தால், அவர்கள் உன்புறம்தான் நின்றிருப்பார்கள், உன் அக்கா ஆயிற்றே!

"ஆனால், காரணமேயில்லாமல் நீயாக எதையோ கற்பனை செய்து கொண்டு, உறவு முறையாக வேறு இருப்பதால்... உன்னை மணம் செய்து கொள்ள

வற்புறுத்துவேனோ என்று நினைத்துக் கொண்டு... இதெல்லாம் அவர்கள் இருவரிடமும் சொல்லி, என்னை உனக்குப் புரிய வைக்க உதவுமாறு நான்தான் கேட்டுக் கொண்டேன்.

"இதைவிடப் பெரிய காமெடி... என்னை... சாரி, சாரி... உன் காதலனை நீயே உருவாக்கி விட்டு, பின் என்ன அழகாகச் சாகடித்து, உன் மூளையை உண்மையாகவே நிரம்பப் பயன்படுத்தியிருக்கிறாய் போலிருக்கிறது!"

"அதுதான் என் போன் நம்பர் முதற்கொண்டு எல்லாம் உடனுக்குடன் தெரிந்ததோ?"

சட்டென சீரியஸானான், தருண்.

"உனக்கு இக்கட்டான சூழ்நிலை வந்ததும், காதலனாக நடிக்கச் சொல்லி என்னிடம் வருவாய் என மூவரும் எதிர்பார்த்தோம்...!"

அதுதான் ராகினி, அன்று அந்த யோசனையைத் தனக்குச் சொல்லி ஆழம் பார்த்தாளோ!

"நீ வேறு பாதையில் போக ஆரம்பித்ததால், இனியும் பொறுக்க முடியாது என உன் வீட்டிற்கே வந்து..."

தருண் முடிக்கவில்லை... அதற்குள்,

"மது! சந்தனாவிற்கு நலங்கு வைக்க ஆரம்பிச்சாச்சு... வா..." என்று அம்மா இங்கிதமாகத் தன்னைக் கூப்பிட, மது... "இதோ, அம்மா...!" என்று நழுவ எத்தனித்தாள்.

சடாரெனப் பாய்ந்து அவள் மெல்லிய கரங்களைப் பற்றினான், தருண்.



"வீட்டில் அனைவரின் மனதிலும் மகிழ்ச்சி பொங்க... இன்று ஒரு இனிமையான தருணம் இது! உன் அப்பாவே, உன் அம்மாவே, என்னைத் தங்கள் மாப்பிள்ளையாக, உன் காதலனாக ஏற்றுக்கொண்டு விட்டார்கள். இனியும் உன் அப்பாவின் இளைய மாப்பிள்ளை என்னைக் காதலிப்பதில் தடையேதுமில்லையே!"

அவள் முகம் பார்த்து வினவினான் , தருண்.

கூம்பிய தாமரையென முகம் சிவந்து தலை குனிந்தது. அவளின் சம்மதத்தை அந்த மௌனம் சொல்லாமல் சொல்லியது.

உடனேயே அந்த அழகிய முகத்தைக் கவலை வந்து சூழ்ந்தது. தாவணியைத் திருகியவாறே...

"அப்பா... பந்தயம் என்று ஏதோ..." இழுத்தாள்.

"அதுவா...! நீதான் மூளை கெட்டதனமாய், ஆக்ஸிடெண்ட், அது இது என்று ஏதோ உளறிவிட்டாய் அல்லவா! அதுகுறித்து அவர்கள் அனைவரும் உன்னை மேன்மேலும் கேள்வி கேட்டுச் சங்கடப்படுத்தாத வண்ணம்... காப்பாற்றும் பொறுப்பு, காதலன் எனக்கு உண்டே...! அதனால்தான் நீ என்னைப் பந்தயத்தில் ஜெயிக்க, அப்படி ஒரு பொய் சொன்னாய் என்று சொல்லி, நீ வருவதற்குள் சமாதானப்படுத்தி வைத்திருந்தேன்."

தருணின் அருகாமை அவளுள் இப்படி ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் என்று அவள் நினைத்துக்கூடப் பார்க்கவில்லை. அவனை வெறுத்ததற்கான காரணம், இப்போது பைசா பெறாததாய்த் தோன்றியது. இதுதான் காதல் உணர்வின் மாயாஜாலமோ?

சாத்திய கதவைத் தள்ளியவாறே மது வெளிப்பட... பின்னால் தருண் தலை தெரிய... அங்கே சந்தனா கன்னங்களில் சந்தனம் வழிய, மிக மெல்லிய குரலில்... தன்னைச் சூழ்ந்திருந்த பெண்களிடம் ஏதோ கூற, அவர்கள் மதுவைப் பார்த்துவிட்டுச் சிரிக்க... அங்கே வெடித்த சிரிப்பொலி, மதுவின் காதுகளில் பாய்ந்தது.

எதற்குச் சிரிக்கிறார்கள் என்று தெரியாவிட்டாலும், எல்லோரையும் சிரித்த முகத்தோடு பார்த்துச் சந்தோஷித்த மது, தன்னையும் அதில் இணைத்துக் கொண்டாள்.

அவள் முகம் அவளை யறியாமல் தருணைப் பார்க்க... அவன் இமைக்காமல் இவளைப் பார்த்துக் கொண் டிருந்தான்.



# மாசிலா உண்மைக் காதலே!

1

எமிலி பத்தாவது முறையாகக் கண்ணாடியைப் பார்த்துப் புடவையைச் சரி செய்து கொண்டாள். சுவர்க் கடிகாரத்தை மீண்டும் ஒரு முறை பார்த்தாள். சிறு குயில்கள் தத்தித் தத்தி மணி ஆறே கால் என்றன.

என்னாச்சு இவருக்கு! ஐந்தரை மணிக்கே வருகிறேன். ரெடியாக இரு... என்று சொன்ன ஜேம்ஸ் இன்னமும் காணோமே!

அங்கே சர்ச்சில் ரிசப்ஷன் ஆரம்பித்திருக்கும். இவர் எப்போது வந்து... எப்போது புறப்பட்டு... சர்ச்சுக்குப் போய்...

முன்போல், அதாவது கல்யாணமான புதிதில் இருந்தது போல் இப்போதெல்லாம் இருப்பதில்லை, ஜேம்ஸ்... சொன்னால், சொன்ன நேரம் வருவதில்லை.

இன்று சாந்தோம் சர்ச்சில், வின்ஸ்டன், சிசில்யாவின் மகள் ரிசப்ஷன். ரெடியாகிக் கணவனின் வருகைக்காகக் காத்துக் கொண்டிருப்பது எமிலிக்குக் கொடுமையாகப் பட்டது.

ஒரு முடிவுக்கு வந்தவளாய்த் தொலைபேசியை நோக்கிப் போனாள். கைபேசியின் ரிங் போய் எடுக்கப் பட்டதும், கணவனின் குரல் ஆவலாய்க் கேட்டது.

"எமிலி... சொல்லுடா!"

"என்ன சொல்றது... இப்ப எங்கே வந்திட்டிருக்கீங்க?"

"எங்கே..." - பாதியிலேயே வார்த்தைகளை விழுங் கினான். அவசரமாக மூளை யோசித்தது. என்ன சொல் கிறாள்? எங்கேயாவது கூட்டிப் போவதாகச் சொல்லி யிருந்தோமா?

சட்டென மூளைக்குள் பல்பொன்று எரிந்தது. அடடா... இன்றல்லவா ரிசப்ஷன்!

ரெடியாகிக் காத்துக் கொண்டிருப்பாளே... கோபப் படுவாளே... சமாளிக்க வேண்டியதுதான்!

"எமிலி! கிளம்பிட்டேன்ம்மா... டிராபிக்... நெரிசல்... வந்துடுவேன். கோபப்படாதே..."

ஆனால், இப்போதல்லவா நினைவுக்கே வருகிறது. இனிமேல்தான் கிளம்ப வேண்டும்...



அதை அப்படியே நம்புமளவு எமிலி முட்டாளா, என்ன?

"ஏன் பொய் சொல்றீங்க? இன்னும் கிளம்பவே இல்லைதானே! ரோட்டில வந்துட்டிருந்தா, வண்டிகள் சத்தமில்ல கேட்கும். ஆனால், ஏதோ பிரிண்டர் சத்தம்தான் பக்கத்துல கேட்குது.

போகலாம்னு சொன்னதையே மறந்ததுமில்லாம, பொய் வேற சொல்றீங்க, பாருங்க... அதுதான் எனக்குப் பிடிக்க மாட்டேங்குது."

பக்கத்தில் ஏதோ பிரிண்ட் போட்டுக் கொண்டிருந்த சக ஊழியர் சாம்பசிவத்தை அவசரமாய்ச் சபித்தான், ஜேம்ஸ் வசந்தன்.

இனிமேல் இவளைச் சமாதானப்படுத்துவது என்பது மலையைப் புரட்டுவது போன்ற மலைப்பாகத் தெரிந்தாலும் வேறு வழியில்லை. இல்லையெனில் வீட்டுக்குப் போவ தற்குள் அழுது, அமர்க்களம் பண்ணி, ருத்ராவாய் மாறியிருப்பாள்.

"இல்லைடா... ஆபீஸ்லதான் இருக்கேன். ஆனா, கிளம்பிப் பத்து நிமிஷம் ஆச்சு. இதோ வந்திடுவேன். நீ என்ன பண்ணு... நான் வர்றப்போ, சூடா ஒரு கப் காபி போட்டு வை. சாப்பிட்டதும் நேரா சர்ச்தான்..."

"காபிதானே! வந்து பூட்டின கதவுகிட்ட கேட்டுக்குங்க. நீங்க வரவும் வேணாம், ஒண்ணும் வேணாம். நான் ஆட்டோ பிடிச்சுப் போய்க்கிறேன். இதே சென்னை... எனக்குப் பழக்கமாகி யிருந்தா நான் உங்களை எதிர் பார்க்கக்கூட மாட்டேன்.

"என்ன செய்ய...? எனக்கு எங்கேயும் தனியா போய்ப் பழக்கமில்லை. அதனாலென்ன... ஆட்டோவில ஏறி சர்ச்சுக்குப் போன்னு சொன்னா... வாசல்ல இறக்கி விடப் போறான். ராத்திரிக்கு மட்டும் வெளியே சாப்பிட்டுக்குங்க."

அவள் அடுக்கிக் கொண்டே போக, ஜேம்ஸுக்கு இரத்தக் கொதிப்பு தாறுமாறாய் எகிறியது.

எமிலி சொன்னால், செய்யக் கூடியவள். பின், மனசு கேட்காமல்... அவளைத் தேடிக் கொண்டு பின்னாடியே சர்ச்சுக்கு ஓட வேண்டும்.

ரிசப்ஷனுக்குப் போகவில்லையென்றால், வின்ஸ்டன் தவறாக எண்ணுவார்.

"எமிலி! இருடா... போனை வைக்காதே. நான் எப்படியும் அரை மணி நேரத்தில் வீட்டுக்கு வந்திடுவேன். ஏழு மணிக்குக் கிளம்பினாக்கூட பைக்ல சீக்கிரமாப் போயிடலாம். நீ தனியா போக வேண்டாம். வெய்ட் பண்ணு..." - சொன்னவாறே, கைபேசியை அணைத்தான்.

இயந்திரத்தனமாய் வண்டியில் சென்று கொண்டி ருந்தாலும், ஜேம்ஸின் மனசு முழுக்க எமிலியே வியாபித்திருந்தாள்.

இவள் எப்போது மாறுவாள்? ஜேம்ஸ் வங்கியில் பணிபுரிபவன். வங்கியின் எல்லாச் சேவைகளும் எல்லா இடங்களிலிருந்தும் பெற முடியும் என்ற நிலை வந்தபின், ஜேம்ஸின் வேலைப்பளு அதிகமானதென்னவோ உண்மை.

வங்கிக்குள் நுழைந்தால், தலை நிமிர்த்த முடியாத அளவிற்கு வேலைப் பளு. ஆனால், எமிலியோ அதை யெல்லாம் புரிந்து கொள்ளவே முயற்சிப்பதில்லை.



அவளைப் பொறுத்தவரை, 'இத்தனை மணிக்கு வருகிறேன்...' என்றால், அவ்வாறே வந்து நிற்க வேண்டும். எல்லா இடங்களுக்கும் ஜேம்ஸே கூட்டிப் போக வேண்டும்.

இல்லை யென்றால், அவன் அவள் மேல் வைத்திருக்கும் அன்பைச் சந்தேகிக்க ஆரம்பித்து விடுவாள்.

"உங்களுக்கு என் மேல் அன்பே இல்லை. என் மேல் அக்கறையே இல்லை!" என்று புலம்பலை ஆரம்பித்து விடுவாள்.

சிற்சில சமயங்களில் அவளை நினைத்தால், பாவமாகக் கூட இருக்கும். நான்தான் அவளிடம் தன்னுடைய வேலையின் இயல்பைப் பற்றிக் கூறிப் புரிய வைக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டான்.

மனிதனின் மூளை எவ்வளவுதான் பவர்ஃபுல்லாக இருந்தாலும், எத்தனை புத்திசாலித்தனம் கொண்டதாக இருந்தாலும், அதனால் ஒரு சமயம் ஒரேயொரு விஷயத்தில் மட்டுமே, அதனுடைய கவனத்தைக் குவிய வைக்க முடிகிறது.

அதேபோல்தான், ஜேம்ஸின் கவனமெல்லாம்... எமிலியைப் பற்றியும், அவளை எப்படிச் சமாதானப்படுத்தப் போகிறோம் என்பதிலேயும் சென்றதால், வண்டியை ஓட்டும்போது, பாதையில் கவனம் சிதறியது.

ஆச்சு...! இதோ இந்தக் குறுகலான வளைவில் திரும்பி ஒரு கிலோ மீட்டர் போனால், வீடு வந்துவிடும்.

மனம் முழுக்க எமிலியே இருந்ததால், பக்கத்தில் இருந்த சந்துக்குள் இருந்து, திடீரென முளைத்து வந்து

கொண்டிருந்த பெண்ணைக் கடைசி நொடிதான் பார்த்தான், ஜேம்ஸ்.

ஆனால் அதற்குள் வண்டி அவன் கட்டுப்பாட்டை இழந்து, அப்பெண்ணின் மேல் மோதி அவளைத் தூக்கி எறிந்தது.

ஒரு வினாடிக்கும் குறைவான நேரத்தில் எல்லாம் நடந்து முடிந்து விட்டது. இவன் பைக் தூக்கியெறிந்த வேகத்தில் அப்பெண் எதன் மீதோ மோதிக் கொண்டு மல்லாந்தாள்.

## 2

ஒரு வினாடியில் ஜேம்ஸின் இரத்தம் உறைந்து போனது. செய்வதறியாது திகைத்தான்.

அது மெயின் ரோட்டிற்குப் போக ஒரு குறுக்கு வழி என்பதாலும், முன்னிரவு நேரமானதாலும் அங்கே ஆள் நடமாட்டமே இல்லை. இவன் வண்டி, அவள் மேல் மோதியதை யாரும் பார்க்க வாய்ப்பே இல்லை.

மோதித் தூக்கியெறியப்பட்ட வேகத்தில், அவள் உயிர் பிழைத்திருக்க வாய்ப்பே இல்லை. என்ன செய்ய...! அவள் எப்படியும் இறந்திருக்க வேண்டும்.

தான் அவள் அருகில் போய்ப் பார்த்துக் கொண டிருக்கையில், ஏதேனும் வாகனம் வந்து, தான் கையும் களவுமாகப் பிடிபட நேர்ந்தால்...?

ஜெயில் கம்பிகள் கண் முன்னே வந்து போயின. மனம் பரபரத்தது.



'பைத்தியமே! அவளோ செத்து விட்டாள். உன்னை யாரும் பார்க்கவும் இல்லை. இடத்தை விட்டு உடனே விரைவாயா! அதை விட்டுவிட்டு யோசித்துக் கொண்டு நிற்கிறாயே!'

சட்டென வினாடிக்கும் குறைவான நேரத்தில் தீர்மானித்து, ஆக்ஸிலரேஷன் கொடுக்க, வண்டி பறந்தது.

எமிலி உலுக்கியதும்தான் இவ்வுலகத்திற்கு மீண்டு வந்தான்.

கதவைக் கூடப் பூட்டிவிட்டு, எமிலி வாசலிலேயே காத்துக் கொண்டிருந்தாள்.

வழியில் ஏதும் நேர்ந்திராவிட்டால், அவள் தனியே போகாமல், இவன் சொன்னதன் பேரில் வீட்டில் காத்துக் கொண்டிருந்ததற்கே, இறைவனுக்கு நன்றிகளை ஜெபித் திருப்பான்.

'ஐயோ! கர்த்தரே... பாவம் செய்து விட்டேனே...!' மனசு இறைஞ்சியது.

ஜேம்ஸ் எப்போதும் போல் இல்லாததை எமிலி கவனித்தாலும், தான் லேட்டாக வந்ததற்குக் கோபம் கொண்டதால்தான் முகம் அப்படி மாறிப் போயிருக்கிறது என்று அர்த்தம் பண்ணிக் கொண்டாள்.

எதுவுமே பேசாமல், ஜேம்ஸ் வண்டியை ஸ்டார்ட் பண்ண, வண்டி ரிசப்ஷனுக்கு விரைந்தது.

எமிலியை ரிசப்ஷனில் விட்டு விட்டுப் போய்ப் பார்த்துவிட்டு வரலாமா? ஒருவேளை அந்தப் பெண் உயிர் பிழைத்திருந்து இவன்தான் தன் மீது மோதியவன் என்று அடையாளம் காட்டிவிட்டால்?

எமிலியையும் நம்ப முடியாது. அவள் திடீரென வீட்டுக்குக் கிளம்பிவிட்டு, அச்சமயம் தான் இல்லை யென்றால், பிலுபிலுவெனப் பிடித்து விடுவாளே!

சட்டென அவன் கோபமனைத்தும் எமிலியின் பேரில் திரும்பியது. அவனும் எத்தனை வருடங்களாக வண்டி ஓட்டிக் கொண்டிருக்கிறான்...

இன்று எல்லாவற்றுக்கும் காரணம்... பாழாய்ப் போன இந்த எமிலியின் கோபமல்லவா!

பொருளாதார ரீதியாகவும், ஜேம்ஸ் அவளைக் கட்டுப்படுத்தியதில்லை. அவள் தானாகவே ஒரு இடத்திற்கு ஆட்டோ பிடித்துச் சென்றால்கூட என்ன ஏதென்று அவன் திட்டப் போவதில்லை.

தானாகப் போயிருக்கலாமில்லையா? அவள் ஏற்படுத்திய பதற்றத்தில் அல்லவா அநியாயமாக ஒரு உயிர் போய் விட்டது.

மறுகணமே, மனம் எச்சரித்தது. 'எப்படியும் நீ மோதிய வேகத்தில், உயிர் பிழைத்திருக்கும் வாய்ப்பில்லை. எத்தனையோ விபத்துகள் இப்படித் தினசரி நடக்கின்றன. அதில் ஒன்று இது... அவ்வளவே!

அந்தப் பெண்ணுக்குக் கர்த்தரை அடையும் வேளை நெருங்கி விட்டது. விதியின் விளையாட்டினை யார்தான் தடுக்க முடியும்?'

மனம் ஒன்றாமலேயே, வரவேற்பு முழுவதும் இருந்தான்.

திரும்ப வீட்டிற்கு வரும் போதும், அவ்வாறே இருக்கவும்... தாளமாட்டாமல் எமிலி கேட்டாள்.



"ஐயாவுக்கு இன்னும் என்ன கோபம்? நான் ஃபோன் பண்ணின நேரம் வீட்டுக்கே வந்திருக்க வேண்டியவர், இன்னும் கிளம்பவே இல்லை என்றால் கோபம் வராதா... என்ன?"

இதற்கு மேலும் சும்மாயிருந்தால், அதற்கு வேறு எமிலி சந்தேகப்பட ஆரம்பித்து விடுவாள் என்று மனம் எச்சரிக்க...

பிரயத்தனப்பட்டு சகஜ நிலையில் தன்னை இருத்திக் கொண்டான்.

"கோபமெல்லாம் இல்லைடா. நீ வேற... நான் தனியாவே போய்க்கிறேன்னு சொன்னியா... ரொம்ப டென்ஷனாயிட்டேன்... அதான்... உன்னை வீட்டு வாசலில் பார்த்ததும்தான் நிம்மதியாயிற்று."

கவனமாகத் தான் வந்த வழியில் செல்லாமல், வேறு சுற்று வழியில் வண்டியைத் திருப்பினான்.

பூட்டைத் திறந்து, எமிலி உள்ளே போக, வண்டியை நிறுத்திவிட்டு உள்ளே போனான்.

வரவேற்பறையில், சென்ற வருடம் எடுத்த ஜேம்ஸ் - எமிலி கல்யாணப் போட்டோ வரவேற்றது.

"எமிலி! இந்த நிமிடம் உன் கணவன் ஒரு விபத்து செய்து விட்டு, போலீஸுக்குப் பயந்திருக்கும் ஒரு கொலை காரன் என்று தெரிந்தால், இதே அளவு நேசிப்பாயா?" - மனம் மருகியது.

# 3

"என்னங்க... எங்கே இருக்கீங்க? வந்து இந்தப் பாலை எடுத்துக்குங்க...." - எமிலியின் குரலைத் தொடர்ந்து சமையலறைக்குச் சென்றான்.

பத்துக்குப் பத்து சின்ன சமையலறைதான் என்றாலும், அதை எமிலி மிக நேர்த்தியாகப் பராமரித்திருந்தாள். ஒரு சுவர் அலமாரி முழுவதும் கர்த்தரின் படங்கள். ஜெபமாலை.

இன்னும் அந்த வீட்டில் குழந்தை இயேசு தவழும் நேரம் இதுவரை வரவில்லை.

சட்டெனப் பொறி தட்டினாற் போல் ஒரு எண்ணம் உதித்தது. அந்த விபத்து பற்றி, எப்படியும் செய்திகளில் காண்பிப்பார்களே... மணியைப் பார்த்தான். பத்து!

ஆனால், எல்லாத் தொலைக்காட்சி சேனல்களும் அவனுக்கு ஏமாற்றத்தையே கொடுத்தன.

எல்லாவற்றிலும் ஈழத் தமிழர் பிரச்சனை பற்றி, குண்டுவெடிப்பு பற்றி, விலைவாசி பற்றி செய்திகள் வந்து கொண்டிருந்தனவேயொழிய, விபத்து பற்றி ஒன்றையும் காணோம்.

ஒருவேளை இன்னும் யாருமே கவனிக்காமல், அவ்விடத்திலேயே அந்தப் பெண் விழுந்து கிடக்கிறாளோ என்னவோ?

ச்சே! அப்படியெல்லாம் இருக்காது. அந்தச் சந்து அதிகம் போக்குவரத்தில்லாத சாலை என்றாலும், இந்த நான்கு மணி நேரத்தில் ஒருத்தர் கூடவா அவ்வழியாகப் போயிருக்க மாட்டார்கள்!



மனமும், மூளையும் மாறி மாறி வாதிட்டு அவனைக் குழப்பியது. தலையைப் பிடித்துக் கொண்டு, அவன் அமரவும், திரைச்சீலையை விலக்கி, காற்று மென்மையாக வருமாறு செய்து விட்டு, அவனருகில் வந்து அமர்ந்தாள், எமிலி.

"ஜேம்ஸ்! என்னப்பா... என் மேல கோபமா? ஏன் ரொம்ப டல்லடிக்கிறீங்க.... தலை வலிக்குதா? எப்பப் பாரு இந்தச் செய்திகள்ல குண்டு வெடிப்பு, விபத்து, கொலை, கொள்ளைன்னு... இதையே காட்டுறாங்க.

"இதைப் போய் ஏன் பார்த்திட்டிருக்கீங்க? ரிமோட்டை இப்படிக் கொடுங்க..." என்றவாறே, ரிமோட்டைக் கையிலிருந்து பிடுங்கி ஆசிர்வாதம் சேனலைப் போட்டாள்.

"தேவனே என்னைப் பாருங்கள்;

என் பாவங்கள் தம்மை வாங்கிக் கொள்ளுங்கள்!

ஆயிரம் நன்மை, தீமைகள்..."

சின்னஞ்சிறு பள்ளிக் குழந்தைகள் அழகாகப் பாடிக் கொண்டிருந்தன.

வேறு சமயமாக இருந்தால், அதை ரசித்திருப்பான். இன்றோ...

'கர்த்தரே! மன்னிக்கும் பாவமாகவா நான் செய்திருக்கிறேன். ஒரு பெண் சாகக் காரணமாயிருந்திருக்கிறேன். அந்தப் பெண் இந்துவோ, முஸ்லீமோ, கிறித்துவப் பெண்ணோ... சின்னப் பெண்... பாவம்! ஒரு நொடியில் உயிரிழக்கக் காரணமாகி விட்டேனே!'

"எமிலி! நான் டி.வி. பார்த்துக் கொண்டிருக்கும் போது இப்படி மாற்றாதேன்னு எத்தனை முறை சொல்லியிருக்கேன். ச்சே! மனுஷன் டி.வி. கூட நிம்மதியா பார்க்க முடியலை..."

சலித்தவாறே தங்கள் படுக்கை அறைக்குச் சென்று படுக்கையில் தொம்மென விழுந்தான்.

'சொல்லியிருக்கிறான்தான்... ஆனால், எப்படி? வேடிக்கையாக, கிண்டலும் கேலியுமாக... இன்றென்ன கொலைக் குற்றம் செய்தது போல் இப்படி எறிந்து விழுகிறான்.'

எமிலிக்கும் கோபம் வந்தது. வீட்டைப் பூட்டி விட்டுப் படுக்கையில் அவனுக்கு முதுகு காட்டிப் படுத்தாள். ஆனால், அவளுடைய புறக்கணிப்பைப் பொருட்படுத்தும் நிலையில்... கணவன் இல்லை என்பது எமிலிக்குப் புரியவில்லை.

ஜேம்ஸ் வசந்தனின் உதாசீனம் இன்னும் கொஞ்சம் கோபப்படுத்தியது.

நான் நினைப்பது சரிதான். ஜேம்ஸுக்கு வேறு பெண்ணின் பக்கம் கவனம் திரும்பியிருக்க வேண்டும். அதுதான் என்னை உதாசீனப்படுத்துகிறான்.

சில பெண்கள் அப்படித்தான். கவலைப்பட்டு சுயபச்சாதாபப் பட்டுக் கொள்ள, ஏதாவது விஷயம் இருந்து கொண்டே இருக்க வேண்டும்.

அப்படி ஏதும் அகப்படவில்லையென்றால், அதுவோ இதுவோ என்று இல்லாத ஒன்றைக் கவலைக்குரிய விஷயமாக மாற்றிக் கவலைப்பட ஆரம்பித்து விடுவார்கள்.



அப்படியே எமிலி, தன் கணவனுக்குத் தன் மேல் ஆசையும், அக்கறையும் குறைந்திருக்குமோ என்று எண்ணிக் கவலைப்படத் தொடங்கினாள்.

## 4

மறு நாளைய 'தினத்தந்தி'. பரபரப்பாகத் தேடிய ஜேம்ஸ் வசந்தனுக்குச் சற்றே போக்குக் காட்டிவிட்டுக் கடைசிப் பக்கத்தில் இருந்தது, விபத்துப் பற்றிய அந்தச் செய்தி.

அப்பெண்ணின் பெயர் காயத்ரி. ஜேம்ஸை சட்டென ஒரு பெண்ணின் பெயரைக் கூறென்றால், சற்றும் யோசிக்காமல் காயத்ரி என்று கூறிவிடுவான்.

அவனுக்கு மிகவும் பிடித்த பெயர். அவனுடைய நெருங்கிய வகுப்புத் தோழியின் பெயரும்கூட.

வயது இருபத்தைந்து. மிகச் சின்ன வயது. பாவம்!

விபத்து நடந்து, சிறிது நேரம் கழித்து அவ்வழியில் போன யாரோ, உயிருக்குப் போராடும் அவளைப் பார்த்து விட்டு, மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியில்... மிகுந்த இரத்த சேதாரமாகி இறந்திருக்கிறாள்.

யாரோ பளாரென்று அவனைக் கன்னங்களில் அடித்தது போலிருந்தது.

'நீ வண்டியை இடித்து விட்டதும், மாட்டிக் கொள்வோமோ என்ற பயத்தினாலும், மனைவியின் மேலுள்ள கவலையினாலும் அப்படியே விட்டுவிட்டு வந்து விட்டாய்...

நீ உடனே அப்பெண்ணை மருத்துவ மனையில் சேர்த்து விட்டிருந்தால்... அவளை மருத்துவ மனையில் சேர்த்து விட்டு, அவள் வீட்டுக்காரர்களுக்குத் தகவலைத் தெரிவித்து விட்டு... அவள் நினைவு திரும்புவதற்குள், தன்னை வெளிப்படுத்திக் கொள்ளாமலேயே எஸ்கேப் ஆகியிருக்கலாமே!'

மனச்சாட்சி வக்கீலாக மாறி, அவனைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தியது.

அவள் பெற்றோருக்கு ஒரே பெண்ணாக இருக்குமோ! அல்லது அவளை நம்பி எத்தனை பேர் இருந்தார்களோ? பொருளாதார ரீதியாக இவள் எந்தளவு குடும்பத்தைத் தாங்கிக் கொண்டிருந்தாளோ...?

குற்ற உணர்வும், குறுகுறுப்பும் மாறி மாறித் தாக்க, மறுநாளே பாடியைக் கொண்டு சென்ற அரசாங்க மருத்துவமனைக்குப் போய், அப்பெண்ணைப் பற்றி விசாரிக்க வேண்டுமென நினைத்துக் கொண்டான்.

அப்படி ஒரு முடிவுக்கு வந்தபின்தான், அவனால் அன்றாட வேலைகளில் கவனத்தைத் திருப்ப முடிந்தது.

அரசு மருத்துவமனையின் சிப்பந்திக்குப் பணம் கண்ணில் காட்டியதும் காயத்ரி வீட்டு அட்ரஸைக் கையில் கொடுத்து விட்டான்.

வங்கிக்கு அரை நாள் லீவு சொல்லி விட்டு, நேராக அப்பெண்ணின் வீட்டுக்குச் சென்றான்.

மெயின் ரோட்டிலிருந்தே வழி நெடுகப் பூக்கள். அவள் இறுதி ஊர்வலம் முடிந்து விட்டிருந்ததைச்



சொல்லியது. தெருவெங்கும் ஈரத்தில் விழுந்து மிதிபட்ட பூக்கள்.

ஒரு மனிதனின் இறுதி ஊர்வலத்தில்கூட எத்தனை பூக்கள் கீழே விழுந்து காலில் மிதிபட்டு உயிர் துறக்கின்றன.

வீட்டு வாசலில் போடப்பட்டிருந்த பந்தலின் கீழ், அங்கொன்றும், இங்கொன்றுமாய் நாற்காலிகள் சிதறிக் கிடந்தன. இறுதி ஊர்வலத்தோடு, கூடப் போனவர்கள் போக... மீதமிருந்தோர் பெண்கள். கொஞ்சம் தயங்கி விட்டு... சாவு வீடல்லவா... சொல்லாமல் நகர்ந்தனர்.

நேற்று எவ்வளவு சந்தோஷமாக, கர்த்தரின் கிருபையோடு இருந்திருக்கும் இவ்வீடு... ஒரே நொடியில் இவ்வீட்டின் சந்தோஷம் தன்னால் காணாமல் போய் விட்டதே!

ஜேம்ஸ் வசந்தன் மட்டும் தனியாளாய்த் தயங்கித் தயங்கி யாரை என்ன கேட்பதென்று தெரியாமல் நின்று கொண்டிருந்தான்.

இப்பெண் திருமணமானவளா... இல்லையா? யாருடன் கூட இருக்கிறாள்... இவர்களெல்லாம் என்ன உறவு? பெயரைத் தவிர எதுவுமே தெரியாமல் விழித்தாலும்... உள்ளே குற்ற உணர்வு முழுமையாக ஆக்கிரமித்தது.

இருந்த கொஞ்ச நஞ்ச சொந்தங்களும் நகர்ந்து கொண்டிருக்க, ஒரு வயதான பாட்டியும் அவளைச் சுற்றி இரண்டு மூன்று பெண்களும் ஒப்பாரி வைத்துக் கொண் டிருந்தனர்.

"கடவுளே! உனக்குக் கருணையே இல்லையா? இந்தக் கண்ணு தெரியாத கிழவி இனிமே இருந்து என்ன சாதிக்கப் போகிறேன்? என்னைக் கூட்டிக்கிட்டு, இந்த வாழ வேண்டிய பொண்ணை விட்டிருக்கக் கூடாதா... கடவுளே!

காயத்ரி அம்மா... குழந்தையைப் போல என்னைப் பார்த்துக்கிட்டியே... இனி நீ இல்லாம நான் எப்படிக் காலம் தள்ளப் போறேனோ?

கடவுளே! உனக்குமா... என்னை மாதிரி கண் இல்லாமப் போச்சு. 'இதோ, கடைக்குப் போயிட்டு வந்துடறேன். கதவைத் தாழ் போட்டுட்டு இரு, பாட்டி!'ன்னு சொல்லிட்டுப் போனாளே... பொட்டலமா கட்டிக் கொண்டு வந்து போட்டுட்டாங்களே...!"

## 5

கண் தெரியாத பாட்டியின் அழுகை நெஞ்சை உலுக்குவதாக இருந்தது. அவள் புலம்புவது தெரிந்தாலும், என்ன புலம்பு கிறாள் என்பது இவனுக்குக் கேட்க வில்லை.

அவள் புலம்பலில் இருந்து... அவளுக்கு இருந்த ஒரே ஆதரவு இப்பெண் காயத்ரிதான் எனப் புரிந்தது. அவள் பெற்றோர் என்ன ஆனார்கள் என்றே தெரியவில்லை.

பாட்டியின் அடுத்த புலம்பலிலேயே அதற்கான விடை இருந்தது.

'சின்ன வயசிலேயே, உனக்கு, உன் அப்பன் ஆத்தாளுக்கு ஒரேயடியா ஷாக் அடிச்சப்பக் கூட... நீ ஷாக் அடிச்சி தூக்கியடிச்சதுல பிழைச்சிட்டே... அப்பன், ஆத்தாளை முழுங்கினாலும் உன் ஆயுசு கெட்டின்னு ஆசை ஆசையா வளர்த்தேனே... இப்படி அல்பாயுசுல விட்டுட்டுப் போயிட்டியே!'



பாட்டிக்குப் பேத்தி போன துக்கம் பாதி... தன் எதிர்காலத்தைப் பற்றிய கவலை மீதி... புலம்பலாய், ஒப்பாரியாய் வெடித்தது.

வெளியிலிருந்து பார்த்தாலே தெரிந்தது, அது மிகச் சிறிய வீடு என்று. இருவருக்குத் தாராளம் என்று சொல்லலாம்.

தயங்கித் தயங்கி அங்கு துக்கம் விசாரிக்க வந்தவர் களைப் போல் உள்ளே நுழைந்தான்.

அந்தக் காலத்து உயரக் கூரை... பெரிய பலகை விட்டம்... எங்கோ உயரத்தில் நானும் இருக்கிறேன் என்று ஒரு மின்விசிறி.

இல்லாமையை வெளிச்சம் போட்டது, வீடு. கழுவி விடப்பட்டிருந்த வீட்டில், கால் வழுக்கி விழப் போன பாட்டியைக் கைத் தாங்கலாய்ப் பிடித்துக் கொண்டாள், பக்கத்து வீட்டுக்காரி. பாட்டி தன் எதிர்காலம் சூன்யமாகிப் போனதில் ஆடி விட்டிருந்தாள்.

எல்லாம் என்னால் அல்லவா... ஒரு நொடி நிதானம் ஒரு குடும்பத்தையே காப்பாற்றி இருக்குமே!

எத்தனையோ விபத்துகள் தினசரி நடக்கின்றன. அவற்றில் விபத்தைச் செய்துவிட்டுப் பிடிபடாமல் ஓடி விடுபவர் எவ்வளவு பேர்! 'ஏதோ அவள் ஆயுள் முடிந்து விட்டது. வேறு என்ன செய்ய?' என்று உச் கொட்டிவிட்டு அடுத்த வேலைக்குப் போக விடாமல் தன்னைத் தடுப்பது எது?

தன்னால் ஏன் அப்படி விதியின் பெயரைச் சொல்லி விலகிப் போக முடியவில்லை? இதே குற்ற உணர்வுடன் இறுதி நாட்கள் வரை இந்த உறுத்தலைச் சுமக்க வேண்டுமோ...

கர்த்தரே! நான் செய்த பாவத்திற்குப் பரிகார மில்லையா?

அச்சூழல் மனதின் இறுதி வரை தாக்க, அங்கு இருக்க முடியாமல் அகன்றான், ஜேம்ஸ்.

திரும்ப அலுவலகம் வந்தாலும், குவிந்து கிடந்த வேலைகளில் கவனம் பதிய மறுத்தது. தேநீர் இடை வேளையில், சக ஊழியர்கள் ஒருவருக்கொருவர் சிரித்துப் பேசிக் கொண்டும், கலாட்டா செய்து கொண்டும் இருந்தனர்.

சட்டென அப்படிக் கவலையில்லாமல் சிரிப்ப வர்களைப் பார்த்துப் பொறாமை வந்தது.

தானும் அதுபோல் நேற்று வரை இருந்த தருணங்கள் மறந்து போயின. உலகிலேயே தான் மட்டுமே மனக்கஷ்டப் படப் பிறந்தவன் என்று தோன்றியது.

எல்லாவற்றையும் எடுத்து வைத்து விட்டு, வீட்டுக்குக் கிளம்பினான்.

எமிலி, சீக்கிரமே வீடு திரும்பிய கணவனைப் பார்த்து, ஆச்சரியப்பட்டாள். கிண்டலாக ஏதோ சொல்ல வந்தவள், அவன் முகம் வாட்டமாய் இருப்பதைக் கண்டதும் வாயை மூடிக் கொண்டாள்.

"எமிலி! தலை வலிக்குது. அதான் சீக்கிரமே வந்துட்டேன். ஒரு டீ நல்ல ஸ்ட்ராங்கா போட்டுக் கொண்டு வாயேன்..." - சொல்லிவிட்டு மாடிக்குப் போனான்.



எமிலி டீயைக் கொடுத்து விட்டு நினைவு படுத்தினாள். "என்னங்க! டாக்டர்கிட்ட இன்னிக்கு அப்பாயிண்ட்மெண்ட் வாங்கியிருக்கிறது நினைவிருக்கா? எட்டு மணிக்குப் போகணும்."

"உம்... உம்... எட்டு மணிக்குத்தானே! ப்ளீஸ் எமி, என்னைக் கொஞ்சம் தூங்க விடு. டியூப் லைட்டை ஆஃப் பண்ணிட்டு, விடிவிளக்கைப் போட்டுட்டுப் போடா."

ஜேம்ஸின் செய்கைகள் வினோதமாகப் பட்டாலும், நேற்று தான் அவனை ரொம்பவே தவிக்க விட்டுவிட்டோம் என்று மனதில் பட, அமைதியாய் வெளியேறினாள், எமிலி!

# 6

மிருதுளா பாண்டியன் புகழ் பெற்ற கைனகாலஜிஸ்ட் என்பதால், கூட்டத்திற்குக் கேட்கவே வேண்டாம்.

புதிதாகக் கல்யாணமானவர்கள் முதல் நிறை மாதமாக வயிற்றைத் தள்ளிக் கொண்டு உட்கார்ந்திருந்த பெண்கள் வரை அத்தனை பேரிடமும் மிருதுளாவின் கைராசி பற்றிய நம்பிக்கை முகத்தில் சுடர் விட்டது.

தங்கள் பெயர் கூப்பிடப்படும் முறைக்காகக் காத்திருந்தனர், ஜேம்ஸும் எமிலியும்.

"என்ன எமிலி! இப்போ எப்படி இருக்க? வாந்தி, மயக்கம் இருக்கா?"

"அதெல்லாம் ஒண்ணுமில்லை டாக்டர். ஐயாம் நார்மல். இவர், 'நீ வேகமா நடக்காதே... வெயிட்

தூக்காதே'ன்னு அட்வைஸ் பண்ணிக்கிட்டு வரப்பதான்... வயித்துல பாப்பா இருக்கிறதே ஞாபகம் வருது. அந்தளவுக்கு ஐயாம் நார்மல்!"

"குட்! வயித்துல உண்டாகியிருந்தாலே, வாந்தியா வரணும்... மயக்கமா வரணும்ங்கிறது இல்லை. அந்தச் சமயத்தில நிறையப் பேருக்கு நிறைய வாசனைகள் பிடிக்காது. மேலும், வயித்துக்குள்ள அசையுற கரு, ஒரு அவஸ்தையான உணர்வை உண்டாக்கிறதால வாந்தி வந்துடுது.

"எதுக்கும் ஒரு ஸ்கேன் பண்ணிடலாமா?" கேட்டுக் கொண்டே, ஸ்கேனின் உறையைக் கழற்ற ஆரம்பித்தாள் மிருதுளா.

'எல்லாமே நார்மலா இருக்கு. அடுத்த மாதம் வந்தால் போதும்...' என்ற நம்பிக்கை வார்த்தைகளோடு இருவரும் வெளியே வந்த போது, எமிலியின் வயிற்றில் கருவிற்கு ஆறு வார காலமாகி இருந்தது.

எமிலியுடன் வெளியே போனது, டாக்டரைப் பார்த்து விட்டு உணவகத்திற்குச் சென்று அவளுடன் உணவருந்தியது என்று... ஜேம்ஸின் மனதில் வேறு சிந்தனைகளுக்கே இடமிருக்கவில்லை.

எமிலியின் வயிற்றில் கை வைத்தபோது, ஏதோ தன் பையனையே கையால் தொடுவதைப் போன்ற ஒரு உணர்வு.

எமிலியிடம் சொன்னால் கோபப்படுவாள். அவளுக்கு முதல் குழந்தை பெண்ணாகத்தான் வேண்டும். அதற்குப் பெயர்கூடத் தேர்வு செய்து விட்டாள்.



ஆனால், ஜேம்ஸிடம் கூட அதைச் சொல்ல மறுத்து விட்டாள். 'முதலில் பெண் குழந்தை கன்ஃபார்ம் ஆகட்டும்; சொல்கிறேன்.'

கல்யாணமான புதிதிலேயே இருவரும் ஆசைப்பட்டு வாங்கி மாட்டிய, இரு குழந்தைகள் ஆணொன்றும் பெண்ணொன்றுமாய் அப்பா, அம்மாவுடன் சிரிக்கும் போஸ்டரைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம் போல் இருந்தது.

ஜேம்ஸின் அம்மா, அப்பா இருவரும் அண்ணனுடன் கிராமத்தில் தங்கி விட்டனர். எமிலியின் பெற்றோரோ சென்னையிலேயே இருந்தாலும், எப்போதாவது வந்து பார்த்து விட்டுப் போவதோடு சரி.

அதிலும் எமிலியோ, உள்ளூரிலேயே பெற்றோரும் சகோதரியும் இருப்பதால், அடிக்கடி அம்மா வீட்டுக்குப் போய் உட்கார்ந்து கொள்ளும் ரகமில்லை.

ஜேம்ஸைப் பிரிந்து அவளால் ஒரு நாள் கூட இருக்க முடியாது. அதை வெளிப்படுத்தவும் தயங்கியதில்லை.

தங்கை பியூலாதான் சீண்டிக் கொண்டே காலை வாருவாள்.

"அம்மா! இந்த அக்காவா... கல்யாணமே வேண்டாம்; உங்க கூடவே இருக்கேன்னு சொல்லிச்சு... கட்டாயப்படுத்திக் கல்யாணத்திற்குச் சம்மதிக்க வெச்சேன்னு சொல்றீங்க? என்னால நம்பவே முடியலையே! இப்ப என்னடான்னா ஃபெவிகால் போட்டு ஒட்டின மாதிரி அவங்க வீட்டோட ஒட்டிக்கிட்டு நம்ம வீட்டுக்கே வரமாட்டேங்கிறா... எந்தக் கடையில மாமா கம் வாங்கினீங்க?"

"கம் எதுக்கு? உங்க அக்கா வாயை ஓட்டவா! உங்க அக்கா வாயைத் திறக்க விடாம பண்ண கம் தேவை யில்லைம்மா... வேற ஒண்ணு!"

ஜேம்ஸ் முடிக்குமுன் எமிலி வந்து அவன் வாயை வெட்கப்பட்டுக் கொண்டே கையால் பொத்த... அவள் கையை வலுக்கட்டாயமாக விலக்கி...

"இப்படிக் கையால் பொத்தினாலே போதும் என்று சொல்ல வந்தேன். உன் அக்கா சொல்ல விட்டால்தானே... பாரம்மா, என் பரிதாப நிலைமையை..." - மச்சினியிடம் குறை கூறும் பாணியில் சொல்லி முடித்தவன் தொடர்ந்தான்.

"எனக்கும் அதில் வருத்தம்தான்! பியூலா... சரி, மாமியார் வீடு உள்ளூராயிற்றே... அடிக்கடி பெண்டாட்டி அங்கே போயிடுவா... நிம்மதியா இருக்கலாம்னு பார்த்துப் பார்த்து, உள்ளூர்ப் பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கிட்டா...

"சரி... சரி.... என் ஆசையெல்லாம் ஒண்ணே ஒண்ணுதான், பியூலா! நீயாவது சகலைக்கு முப்பத்து மூணு சதவீதம் இல்லாட்டியும், அட்லீஸ்ட் கொஞ்சமாவது சுதந்திரம் கொடுக்கணும். அதை நான் பார்த்து ரசிக்கணும்..."

பெரிய தொண்ணூற்றுக் கிழவன் மாதிரி மச்சினியை வம்பிக்கிழுப்பான், ஜேம்ஸ். இப்படிக் கேலியும் கிண்டலுமாகப் போன கிறிஸ்துமஸ்ஸுக்கு எமிலி தன் தாய் வீட்டுக்குச் சென்றது...

அப்புறம் நான்கு மாதங்கள் ஆகிவிட்டன. நடுவில் எமிலி உண்டாகியிருக்கும் சந்தோஷமான விஷயம்



கேள்விப்பட்டு அவள் அம்மாவும், அப்பாவும் வந்து பார்த்து விட்டு ஒருநாள் இருந்துவிட்டுப் போனார்கள்.

எமிலியைப் பற்றி இப்படிக் கிண்டலாக ஜேம்ஸ் பேசினாலும், உள்ளூர இப்படி எமிலி தன்னைப் பிரியக்கூட விரும்பாது இருப்பது குறித்து மகிழ்ந்து கொள்வான்.

இதில் ஒரு சிறு பகுதி உண்மை தானென்றாலும், எமிலியைப் பொறுத்தவரை, தன் தங்கையே என்றாலும், பியூலாவுடன் தன் கணவன் சிரிக்கச் சிரிக்கப் பேசுவது எரிச்சல் கலந்த உறுத்தலை உண்டாக்குவதை உணர்ந் திருக்கிறாள்.

இருவரும் விகல்பமில்லாதுதான் பேசுகிறார்கள். அதிலும் பியூலாவோ, வேடிக்கையான பேச்சிலேயே மற்றவர்களைக் கவிழ்த்து விடுவாள் என்பது தெரிந்தே இருந்தாலும், உள்ளூர ஊறும் எரிச்சலை அவளால் தவிர்க்க முடியவில்லை.

அப்படிப்பட்ட ஒரு பொஸஸிவ் ஜேம்ஸின்பால் தான் கொள்வது, தன் நிம்மதியை எந்தளவு குலைக்கப் போகிறது என்பதை அறியாமல், கணவனின் அருகாமை தந்த நிம்மதியில், உறக்கத்தின் பிடியில் இருந்தாள், எமிலி.

## 7

வங்கியில் மற்ற இரு சக ஊழியர்கள் விடுப்பில் இருந்ததால், ஜேம்ஸ் வசந்தனுக்கு வேலைப் பளு ஆளை முழுங்கியது. நிமிரக்கூட முடியவில்லை. உணவருந்தக்கூட ஓய்விருக்கவில்லை.

ஆனால், அத்தனைக்கும் மத்தியிலும், நினைப்பு அவ்வப்போது எமிலியைப் பற்றியே சிந்தித்து மீண்டது.

ஒழுங்காகச் சாப்பாடு சாப்பிட்டாளோ என்னவோ! மாத்திரை சாப்பிட்டாளோ? இவனுடைய நினைப்பைப் புரிந்து கொண்ட மாதிரி, கைபேசி 'எமிலி அழைக்கிறாள்' என்று இசையுடன் கூப்பிட்டது.

ஆவலோடு காதில் பொருத்தியவன், அதிர்ந்தான்.

நேற்றுகூட டாக்டரிடம் போய் விட்டு வந்த பிறகு நார்மலாக இருந்தவள், வயிறு வலிக்கிறது... இடுப்பெல்லாம் நோகின்றது என்கிறாளே... இயேசுவே!

நல்ல வேளையாக இவனுடைய நிலைமையைப் புரிந்து கொண்ட உயர் அதிகாரி, மாற்று ஏற்பாடு செய்து, இவன் உடனடியாகப் போக அனுமதித்தார்.

வீட்டிற்கு உடனே போய் வலியால் துடித்துக் கொண்டிருந்தவளை, அள்ளி ஆட்டோவில் போட்டுக் கொண்டு மருத்துவமனைக்குக் கொண்டு சென்று சேர்த்தது என்று எல்லாமே அனிச்சையாய்ச் செய்தான்.

எமிலியைப் பரிசோதிக்க டாக்டர் அழைத்துச் சென்றபின் தான், மனதை அரித்துக் கொண்டிருந்த கவலை மறுபடி விஸ்வரூபமெடுத்தது.

"இயேசுவே! பரமபிதாவே! எம் பாவங்களையெல்லாம் சுமப்பவரே! ஒரு பாவமும் செய்யாத எமிலியைக் காத்தருளும்!" - மனம் இறைஞ்சியது. கைகள் நெஞ்சில் சிலுவையிட்டன.

அந்த இக்கட்டான நிலையிலும், மனம் விழித்துக் கொண்டு இடித்துரைத்தது.



'ஜேம்ஸ்! நீ ஒரு பாவமும் செய்யவில்லையா? என்னை மறந்துவிட்டுப் பேசுகிறாயே! வாழ வேண்டிய வயதில் சிறு பெண்ணைத் துடிக்கத் துடிக்கச் சாக விட்டாயே! அது பாவமில்லையா?

எமிலியின் வயிற்றில் வளருவது உன் வாரிசல்லவா? பாவமோ, புண்ணியமோ? தந்தை, தாய் செய்தது மக்கட்கே என்பதை அறிவாயா, நீ? உன் பாவம் உன்னைத் துரத்தாமல் என்ன செய்யும்?'

ஜேம்ஸுக்குத் தலையைப் பிடித்துக் கொண்டு அப்படியே எதிரில் இருந்த சுவரில் அறைந்து கொள்ளலாம் போலிருந்தது. மனச்சாட்சியை அப்படியே கழற்றிச் சிறிது நேரம் ஓரத்தில் கடாச முடிந்தால் எவ்வளவு நன்றாய் இருக்கும்! ஆனால், முடியாதே?

அவனுடைய இந்த நிலைமைக்குச் சீக்கிரமே முற்றுப்புள்ளி விழுந்தது. வேக வேகமாக நடக்கும்போது, மாடிப்படி வளைவுகளில், எமிலி இடித்துக் கொண்டதால், அது வயிற்றை வலித்திருக்கிறது.

மற்றப்படி, உள்ளே வளரும் குழந்தைக்கு எந்தவித ஆபத்தும் இல்லை என்று டாக்டர் கூறியதும்தான், போன உயிர் ஜேம்ஸுக்குத் திரும்ப வந்தது.

ஒரு நிமிடம் என்னவெல்லாம் நினைத்து ஆடிப் போய் விட்டான். எப்போதுமே, ஒரு இன்னல் என்று வரும் போதுதான் மனச்சாட்சி செய்த தவறுகளையெல்லாம் இடித்துரைக்கும்.

அப்போதெல்லாம், இந்தக் கஷ்டம் நீங்கினால் போதும்; இந்த நிலை மாறினால் போதும்; செய்த தவறுக்குப்

பிராயசித்தம் செய்து கொள்ள வேண்டும் என்று அப்போது இடித்துரைக்கும் மனச்சாட்சியை அடக்கி வைக்க நினைப்பதுண்டு, நாம் எல்லோருமே...

அந்த நிலை மாறி, தான் பயப்பட்ட மாதிரி ஏதுமின்றி, சிக்கல் எல்லாம் தீர்ந்து விட்டால், முன்பு பிராயச்சித்தம் செய்ய வேண்டும் என்று நினைத்திருந்ததையோ, அன்றி கடவுளுக்குச் செய்ய வேண்டுமென நேர்ந்திருந்ததையோ சுலபமாக மறந்து போகும், நம் குரங்கு மனது.

ஆனால், அவ்வாறின்றி எமிலிக்கு ஒன்றுமில்லை... லேசான வலிதான். மருந்து சாப்பிட்டால் சரியாகி விடும் என அறிந்து நிம்மதிப் பெருமூச்சு விட்டாலும், ஜேம்ஸ் சற்று முன்னே,

தான் செய்த தவறுக்குப் பரிகாரம் செய்ய வேண்டு மென நினைத்ததைத் தீவிரமாகப் பரிசீலிக்க ஆரம்பித்தான்.

சாலை விபத்தில் காலமான அப்பெண்ணின் பெயர் காயத்ரி என்பதைத் தவிர, வேறொன்றும் தெரியாத பட்சத்தில்... என்ன உதவியென்று அக் குடும்பத்திற்குச் செய்வது?

நாளை அந்தப் பெண்ணின் வீட்டுக்குப் போய்ப் பார்க்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டான்.

பின் எமிலியை வீட்டில் கொண்டு விட்டுவிட்டுத் திரும்ப அலுவலகம் போக வேண்டியிருந்தது.



## 8

இரண்டு நாட்கள் முன்பு தான் சென்றிருந்ததால், ஜேம்ஸுக்கு அந்த வீட்டைக் கண்டுபிடிப்பதில் சிரமமேதும் இருக்கவில்லை.

சோகத்தின் தாக்கம் இன்னமும் வீட்டின் சுவர்களில் எதிரொலித்தது. காலை பத்து மணி என்றாலும், வெயில் தெருவில் கொளுத்திக் கொண்டிருந்தது.

வீடு சாத்தப்பட்டிருக்கவே, என்ன செய்வதென்று தெரியாமல், விழித்தான்.

தட்டலாமா?

அந்தப் பாட்டி கதவைத் திறந்து, 'நீ யார்?' என்றால்... என்ன சொல்வது?

உங்கள் பேத்தியைக் கொன்ற கொலைகாரப் பாவி என்பேனா!

அந்தப் பெண் வேலைக்குப் போய்க் கொண்டிருந் தாளா என்று தெரியவில்லை. அப்படி இருந்தாலாவது, அந்தப் பெண்ணின் அலுவலகத்தில் வேலை செய்பவன் என்று கூறிக் கொள்ளலாம்...'

பலவாறாக யோசித்து விட்டு, ஒன்றும் பலனளிக்காமல் தயங்கியவாறே, கதவை மெல்லத் தட்டினான்.

இரண்டு தட்டல்களுக்குப் பிறகு, கதவு மெல்லத் திறக்கப்பட்டுப் பாட்டியின் முகம் தெரிந்தது.

இரண்டு நாட்கள் முன் பார்த்ததைவிட, முதுமை கூடியிருந்தாள்.

"யாரது?"

பதில் இல்லாமல் போகவே, திரும்பக் குரல் கொடுத்தாள்.

"யாரது?"

இதற்கும் பதிலில்லாது போகவே, திரும்பக் கதவைச் சாத்திக் கொண்டு போக யத்தனித்தவளைப் பார்த்து அதிர்ந்தான்.

கண் முன்னாடி ஒருவன் நின்று கொண்டிருக்கிறேன்! யாருமே இல்லாதத போலக் கதவைச் சாத்திக் கொண்டு போகப் பார்க்கிறாளே...! - குழம்பியவன்,

"பாட்டி!" என்றான்.

"யார்... யார் வந்திருக்கிறது?"

கைகளைக் குரல் வந்த திசையில் காற்றில் துழாவியதும், அதிர்ந்தான்.

பாட்டிக்குக் கண்கள் தெரியாதா.... இயேசுவே!

"பாட்டி! காயத்ரி விஷயம் இன்னிக்குத்தான் கேள்விப்பட்டேன். நான் ஊருக்குப் போயிட்டு இன்னிக் குத்தான் வந்தேன்."

என்ன சொல்வதெனத் தெரியாமல், ஏதேதோ உளறினான்.

கதவை நன்றாகத் திறந்து, இவன் உள்ளே போக வழி விட்டவள், தானும் உள்ளே வந்தாள்.

எதன் மீதும் இடித்துக் கொள்ளாமல், லாவகமாகப் பாட்டி நடந்து சென்ற விதம் அவனை ஆச்சரியப்படுத்தியது.



கண் தெரியாதவர்களுக்கு, கண்கள்தான் தெரியாதே தவிர, மற்றப் புலன்கள் எல்லாம் மிகக் கூர்மையாகத் துல்லியமாக இருக்கும் என்று கேள்விப்பட்டிருக்கிறான். இன்றுதான் பார்க்கிறான்.

"அது ஏன் தம்பி கேட்கிறே? அன்னிக்கு ஆபீஸ் விட்டு வந்ததுமே, பி.பி. மாத்திரை தீர்ந்து போச்சு.... வாங்கி வைக்கக் கூடாதா? இந்தக் கண் தெரியாதவளுக்கு எது... என்னன்னு தெரியுமா?

"வெளியே போய்தான் வாங்கிக்க முடியுமா? என்னம்மா, மறந்துட்டியேன்னு கோபப்பட்டுக் கேட்டேனா... மருந்துக் கடைக்குப் போயிட்டு வந்துட்டு காபி சாப்பிட்டுக்கிறேன்னு வேக வேகமாகச் செருப்பு போட்டுட்டுப் போனாளே! அவளை விட வேகமா... எமன் வந்து கூப்பிட்டுக்கிட்டானே!"

ஓ! இப் பெண் எங்கோ, வேலை பார்த்துக் கொண்டிருந்திருக்கிறாள்.

ஒரே ஆதரவு இப்பாட்டிதான் போலும். குருடாயிருக்கும் இப்பாட்டிக்கும் ஒரே ஆதரவு அப்பெண் காயத்ரியாகத்தான் இருக்க வேண்டும்.

இப்பாட்டியின் எதிர்காலத்தை அல்லவா, வண்டி ஏற்றிக் கொன்று விட்டேன்!

முன்பின் தெரியாத இவனிடம் புலம்புகிறோமே... என்று நினைத்தாளோ என்னவோ... "ஏம்பா... நீ என்ன ஜான்சன் ஃபைனான்ஸில் காயத்ரி பொண்ணுகூட வேலை பார்க்கிறியா?"

கிடைத்த பிடியைச் சட்டெனப் பற்றிக் கொள்ளும் அவசரத்துடன், வேக வேகமாகத் தலையாட்டினான். ஓ! தலையாட்டினால் பாட்டிக்குத் தெரியாதோ!

"ஆமாம், பாட்டிம்மா... இன்னிக்குத்தான் விஷயம் தெரிந்து வரேன்."

"இருப்பா... உனக்குக் குடிக்க ஏதாவது கொண்டு வர்றேன்!" சொல்லிவிட்டு உள்ளே செல்ல, அறையைப் பார்வையால் அளந்தான்.

லேமினேட் செய்யப்பட்ட போட்டோவில் மாலையோடு காயத்ரி சிரித்தாள்.

'பார்த்தாயா... என் குடும்ப நிலைமையை! இப்போ, எதற்காக வந்திருக்கிறாய்? என் பாட்டி, இருந்த ஒரே ஆதரவும் இல்லாமல், பண வசதியும் இல்லாமல், கண்ணும் தெரியாமல் எப்படிக் கஷ்டப்படுகிறாள், என்று பார்க்கவா?'

பார்வையைத் திருப்பினான். மூலையில் சிறிய விளக்கு தயங்கித் தயங்கி எரிந்து கொண்டிருந்தது.

கண் தெரியாத பாட்டி, தனக்காக அடுப்புப் பற்ற வைத்து, ஏதேனும் செய்கிறாளோ? வேண்டாம் என்று உள்ளே போய்ச் சொல்லி விடலாமா?

யோசனையில் இருக்கையிலேயே, பாட்டி குடிக்கத் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தாள். அப்பாடா... என்றிருந்தது, ஜேம்ஸுக்கு.

ஏதாவது பேச நினைத்து, "காயத்ரிக்குப் பின்... எப்படி பாட்டி, நீங்க...? கண் தெரியாம..." எப்படி முடிக்க எனத் தெரியாமல்...



"என்ன தம்பி பண்ணறது? என்னோட கண்ணுக்குக் கண்ணா இருந்த... என் காயத்ரியைத்தான் ஈவு இரக்கமே இல்லாம கடவுள் பறிச்சிக்கிட்டானே!

"பக்கத்து வீட்டுப் பொண்ணுதான் தினம் எனக்குச் சமைச்சுக் கொண்டு வந்து கொடுக்கிறது... இப்படியே எத்தனை நாள்தான் ஓட்டப் போறேனோ?"

கண்கள் கலங்கின, பாட்டிக்கு.

"நீ தம்பி... உன் பேரென்ன?"

காயத்ரியுடன் கூட வேலை செய்கிறேன் என்று கூறியாகி விட்டது. பேர்... ஜேம்ஸ் என்று கூற, ஏதோ வொன்று அவனுள் தடுத்தது.

சட்டென, "வசந்தன்..." என்றான்.

## 9

"வசந்தன்...?" - கேள்விக்குறியாய் நிமிர்ந்தன, உயிரற்ற விழிகள்.

"ஓ! தம்பி நீயா? காயத்ரி உன்னைப் பற்றிச் சொன்னபோது, உன்னை அழைத்து வரச் சொன்னேனே... இன்று நீயே வந்திருக்கியே... உன்னைப் பார்க்க எனக்குக் கொடுத்து வைக்கலையே?

"தம்பி! உன்னையுமில்ல ஏமாத்திப் போய்ச் சேர்ந்துட்டா... நீங்க சேர்ந்து வாழக் கொடுத்து வைக்கலையே தம்பி!"

ஏதோ புரிந்த மாதிரியும் இருந்தது... புரியாத மாதிரியும் இருந்தது.

வசந்த் என்ற பெயரில் பாட்டிக்கும், காயத்ரிக்கும் ஏற்கெனவே அறிமுகமான யாரோதான் வந்திருப்பதாக நினைத்துப் பாட்டி பேசிக் கொண்டிருக்கிறாள் என்பது புரிந்தது.

அந்த வசந்த் யார் என்பதற்கான விடை... டேபிள் மேலேயே இருந்தது. மின்விசிறிக் காற்று, டேபிளின் மேல் இருந்த புத்தகத்தைத் திருப்ப, அதனுள் இருந்த புகைப்படம் எட்டிப் பார்த்தது.

பாட்டிக்குப் பதிலேதும் சொல்லாது, மௌனமாயிருந்த ஜேம்ஸ், மெல்ல அப்புத்தகத்தை எடுத்து, அப்புகைப்படத்தை எடுத்துப் பார்த்தான்.

காயத்ரியுடன் கூடத் தோள் மீது கைபோட்டபடி வசீகரமாய்ச் சிரித்தான், ஒரு இளைஞன்.

புகைப்படத்தின் பின்புறம், 'உன் பிரியமுள்ள வசந்த்' என்று எழுதிப் புரியாத கையெழுத்து கிறுக்கப்பட்டிருந்தது.

ஓ...! காயத்ரி இந்தப் பையன் வசந்த்தைக் காதலித்திருக்கிறாள்.

பாட்டி பேசுவதைப் பார்த்தால், அதற்குப் பாட்டியும் கூடப் பச்சைக் கொடி காட்டி விட்டாள் போலும்!

அந்த வசந்த் என்று தன்னை நினைத்துக் கொண்டு...

அவன் எண்ணச் சிறகுகள் பாதியிலேயே பறப்பதை நிறுத்தி விட்டன.

எப்படியோ... அவன் தன் தவறுக்கு ஏதாவதொரு விதத்தில் பிராயச்சித்தம் பண்ண வந்தவன்...



பாட்டியோ... இவனைக் காயத்ரியின் காதலன் என்று நினைத்துப் பேசிக் கொண்டிருக்கிறாள்...

ஏதும் பேசத் தோன்றாமல், "சரி பாட்டி! நான் அப்புறம் வந்து உங்களைப் பார்க்கிறேன்..." என்று கூறி விட்டு, மௌனமாக வெளியேறினான்.

மறுநாள்! பேங்க் மானேஜர் தன்னை வந்து அழைப்பதாகக் கூறியதும்... மெல்ல அவர் கதவைத் தட்டித் தன் வருகையைத் தெரியப்படுத்தினான், ஜேம்ஸ் வசந்தன்.

மேலாளர் அவனை அமரச் சொல்லி, நேரடியாக விஷயத்திற்கு வந்தார்.

"ஜேம்ஸ்! உங்களால எனக்கு ஒரு காரியம் ஆகணும்."

"என்ன சார்! சொல்லுங்க... செய்யறேன்."

"பெரிசா ஒண்ணுமில்லை. ப்ளைண்ட் பீப்பிள்ஸ் எல்லாம் சேர்ந்து ஒரு அசோஸியேஷனை நம்ம பில்டிங்குக்கு இரண்டு பில்டிங் தள்ளி ஆரம்பிச்சிருக்காங்கல்ல... அதனோட ஆண்டு விழாவுக்கு என்னைச் சிறப்பு விருந்தினராகக் கூப்பிட்டிருக்காங்க...." - சற்று இடைவெளி விட்டுத் தொடர்ந்தார்.

"அதற்கு ஒரு நாலு வார்த்தை பேசணும். எனக்கு உடனே உங்க ஞாபகம்தான் வந்தது. நம்ம வங்கியில எந்தக் கூட்டம்னாலும் உங்க பேச்சுதான் சூடு கிளப்பும். நீங்க என்ன பண்றீங்க... இன்னிக்கு சாயங்காலத்துக்குள்ள ஒரு பக்கத்துக்கு ப்ளைண்ட் பீப்பிள்ஸ் பற்றி... அவங்க படற கஷ்டங்கள்... நம்ம வங்கி அவங்களுக்கு எப்படி உதவ முடியும்னு... பிரிப்பேர் பண்ணித் தாங்க..."

'சரி' என்று ஒப்புக் கொண்டு வெளியே வந்தான்.

இதுவரை யோசித்துப் பார்த்திராத, அதற்கு அவசியமே வந்திராத தலைப்பு!

கண் இழந்தவர்களைப் பற்றி, அவர்கள் தினசரி வாழ்க்கையை நடத்தப் படும் சிரமம் பற்றி யோசிக்கத் துவங்கியதுமே, சம்மன் இல்லாமல் ஆஜரானது, காயத்ரியின் பாட்டியைப் பற்றிய நினைவு.

எத்தனை நாளைக்குத்தான் பக்கத்து வீட்டில் சாப்பாடு கொடுப்பார்கள்? அப்படியிருந்தாலும் சாப்பிட்டதற்கு அவர்களுக்குக் கைம்மாறாக ஏதாவது பண உதவியாவது செய்ய வேண்டியிராதா? அதற்குப் போதுமான பணம் அவளிடத்தில் இருக்குமா? நூறு ரூபாய் எது? ஐந்நூறு ரூபாய் எது என்றே... தடவிப் பார்த்துத் தெரிந்து கொள்ளும் பாட்டிக்குக் காயத்ரியின் சேமிப்பு பற்றி என்ன தெரிந்திருக்க வாய்ப்பிருக்கிறது!

அவளுடைய சேமிப்புகளுக்கோ, அல்லது அவளது அலுவலகம் மூலமாகக் கிடைக்கக் கூடிய பணத்திற்கோ அவள் தன் பாட்டியைத்தான் கார்டியனாகப் போட்டிருப்பாள். என்றாலும், எல்லாம் நல்ல நிலையில் உள்ளவர்களே இதற்கெல்லாம் இறப்புச் சான்றிதழை வைத்துக் கொண்டு நடையாய் நடக்க வேண்டி வரும்போது, பாட்டிக்கு உரியது எப்படிக் கிடைக்கப் போகிறதோ?

மனதைத் திருப்பிக் கடிவாளமிட்டு... மேலாளர் பேசத் தோதாகத் தன் எழுத்துப் புலமையால், எதுகை மோனை சேர்த்து, ஒரு பக்க அளவில் எழுதிக் கொடுத்து விட்டு வந்தான்.



# 10

"வாங்க... பேச்சாளர் கம் எழுத்தாளரே! டீ சாப்பிட்டுட்டுப் போலாம்..." - கிண்டலாகக் கேட்டான், கேசவ்.

கூடவே, வரதராஜன், முரளி சேர்ந்து கொள்ள, அனைவரும் பேசிக் கொண்டே, லிஃப்டில் இறங்கி, எதிர் டீக்கடை நோக்கிப் போனார்கள்.

"என்னடா! உன்னை நீ கண்ணாடியில பார்த்துக் கிறியா... இல்லையா? இப்பல்லாம் என்ன... எப்பவும் பேயறைஞ்ச மாதிரியே இருக்கே!"

ஜேம்ஸைப் பார்த்து, வரதராஜன் கேட்க, எதுவும் பேசாமல் மௌனமாக நடந்தான்.

அவன் மூடை மாற்ற, கேசவ் ஆரம்பித்தான். "ஜேம்ஸ்! இன்னிக்கு ஸ்வப்னா வந்திருந்தா... பார்த்தியா?"

"ஸ்வப்னாவா... யாருடா?"

"டேய்! இந்த நடிப்பையெல்லாம் வீட்டுல சிஸ்டர்கிட்ட வைச்சுக்க! கவர்ச்சி நடிகை, ஸ்டைல் புயல் ஸ்வப்னாவைத் தெரியாதா... உனக்கு?"

"நான் பார்க்கவில்லையே? எதுக்குடா வந்தா?"

"ரொம்ப ஃபீல் பண்ணாதே! அவளுடைய நகை யெல்லாம் அடகு வைக்க வந்திருந்தா. பாவம் என்ன கஷ்டமோ?" - கிண்டலாகக் கூறிவிட்டு, "அப்படியே எல்லாம் அந்த இரண்டெழுத்து அமைச்சர் செய்து போட்ட நகைகளாக இருக்கும். அத்தனையும் அப்படியே மூழ்கிப் போச்சு, தெரியுமா?"

"மூழ்கிப் போச்சா! நகையை வைச்சுக் கடன் வாங்கிட்டு அது கட்டாமப் போனாத்தானடா அதெல்லாம் மூழ்கிப் போகும். நீ என்ன சொல்றே?"

"என்னடா, இவன்... ஒண்ணுமே தெரியாதவ னாட்டம்...? நம்ம அக்கௌண்ட்ஸ் ஆபீஸர் பட்டாபிராமன் விட்ட ஜொள்ளுல நகையெல்லாம் மூழ்கிப் போச்சுன்னு சொல்ல வந்தா..."

எல்லோரும் கொல்லென்று சிரித்தனர்.

ஜேம்ஸின் கவனம் நண்பர்களின் கிண்டலில் திரும்பியதால்... மனம் ஓரளவு சகஜ நிலைக்குத் திரும்பி யிருந்தது.

மறக்காமல் எமிலிக்குப் பூ வாங்கிக் கொண்டான். அவளுக்குப் பிடித்த இனிப்பும் வாங்கிக் கொண்டு, அவளை அசத்தும் எண்ணத்தோடு வீட்டுக்கு வந்தான்.

எமிலிக்கும் சற்றே மனசு சமாதானமடைந்தது. சில நாட்களாகவே, எப்பவும் எதையோ நினைத்து மருகிக் கொண்டிருக்கும் கணவனைக் காண மனசுக்குச் சங்கடமாக இருந்தது.

தன்னிடம் சொல்லக்கூடிய விஷயமாக இருந்தால் சொல்லியிருப்பானே... என்று அவளும் கட்டாயப்படுத்த வில்லை.

சற்று நேரம் எமிலியிடம் பேசிக் கொண்டிருந்து விட்டுப் படுக்கையில் விழ...

எந்தக் கவலையும் இல்லாத எமிலி சட்டெனத் தூங்கிப் போனாள்.



ஆனால், அவ்வேளையிலேதான் ஜேம்ஸின் ஆழ்மனம் விழித்துக் கொண்டது. மற்றப் புலன்களெல்லாம் ஓய்ந்திருக்கும் வேளையிலே தானே, ஆழ்மனசு தன்னுடைய ஆதிக்கத்தை முழுமையாகச் செலுத்த ஆரம்பிக்கும்.

எத்தனையோ பெண்கள் தான் காதலித்தவன் இப்படி அல்பாயுசில் காலமாகி விட்டால்... காதலித்ததற்காகக் காதலனின் குடும்பத்தைத் தன் குடும்பமாக எண்ணி அந்தக் குடும்பத்தைக் கரையேத்தப் பாடுபடுவதுண்டு... சினிமா விலும், எங்கோ ஓரிரண்டு இடத்திலும் அப்படி நடப்பதுண்டு.

அதுபோலவே, அந்த வசந்த், காயத்ரியின் பாட்டி ஓரளவுக்காவது பிறரை எதிர்பார்க்காமல் வாழ்க்கையை நடத்த ஏதாவது உதவி செய்வானா?

வந்து பார்க்கவாவது செய்திருப்பானா?

நாளை முதல் வேலையாக, அந்த வசந்த்தை உரசிப் பார்க்க வேண்டுமென, நினைத்துக் கொண்டே உறங்கிப் போனான்.

கனவில் காயத்ரியின் பாட்டி வந்து, "என்னப்பா! இது உனக்கே நியாயமா?" என்று புலம்பி விட்டுப் போனாள்.

# 11

**ஜா**ன்சன் ஃபைனான்ஸைக் கண்டு பிடிப்பது அப்படி ஒரு சிரமமான காரியமாக இருக்கவில்லை.

வசந்த் முதுகு காட்டியவாறு நின்று யாரிடமோ பேசிக் கொண்டிருந்ததால், ஜேம்ஸ் அவனைக் கவனிக்கவில்லை.

ஒரு ஃபைலை எடுத்துக் கொண்டு போய்க் கொண்டிருந்த அட்டெண்டரிடம், வசந்த் எங்கே என்று விசாரித்தான்.

"அதோ, அங்கே பேசிக்கிட்டிருக்கார் பாருங்க... அவர்தான். உட்காருங்க... வருவாரு..."

இவனிடம் சொல்லிவிட்டு, அட்டெண்டர் மற்றதொரு ஊழியரிடம் சொல்லிக் கொண்டிருந்தது காதில் விழுந்தது.

"கல்யாணம் நிச்சயம் ஆன உடனேயே... வசந்த் சார் முகத்துல என்னவொரு பிரகாசம் வந்துடுத்து பாருங்க, மேடம்?"

திடுக்கிட்டான் ஜேம்ஸ். காயத்ரி இறந்து சில நாட்கள் கூட ஆகவில்லை. வசந்துக்குக் கல்யாணம் நிச்சயமா?

ஒருவேளை நான் பார்க்க வந்த வசந்த் இவன் இல்லையோ?

வசந்த் திரும்பும்போது, பார்த்தான். தான் போட்டோவில் பார்த்த அதே வசந்த்தான்!

எதுவோ, எங்கேயோ இடிக்க, அந்த அட்டெண்டரை ஓரம் கட்டினான், ஜேம்ஸ்.

"அங்கே பேசிக்கிட்டிருக்காரு... வருவாரு.... இங்கே உட்காருங்க."

"அது இருக்கட்டும்ப்பா. வசந்துக்கு ஏதோ நிச்சயம்னு சொல்லிட்டிருந்தியே... அது பற்றிக் கேட்கத்தான்..." - இழுத்தான்.

"நீங்க யார் சார்? வசந்த் சாரை எதுக்குப் பார்க்க வந்தீங்க?"



"நான் வசந்தோட நண்பன் தான்ப்பா... ஆனா பார்த்து ரொம்ப நாளாச்சு. ரொம்ப நாளா தொடர்பு இல்லை. அதான் கேட்கிறேன்."

அட்டெண்டர் வேணுவுக்கும் அப்போது, அதிமுக்கிய வேலை என்று எதுவும் இருக்கவில்லை.

மேலும், அவனையும் மதித்துக் கேட்க, வசமாய் ஒரு ஆள் மாட்டிக் கொண்டதை எண்ணி அகமகிழ்ந்து, அவிழ்த்து விட்டான்.

"வசந்த் சாருக்கு வர்ற ஞாயிற்றுக்கிழமை நிச்சயம்... பொண்ணு இதே ஊர்தான். பெரிய இடம். சாருக்கு ஏற்ற மாதிரி அழகா... அதான் எல்லாருக்கும் ஸ்வீட் கொடுத்து விஷயத்தைச் சொல்லிட்டிருக்கார். நண்பர்ங்கிறீங்க... உங்களுக்கு இந்த விஷயம் தெரியலையே!"

"அப்போ... காயத்ரி பொண்ணுகூட... அது என்ன ஆச்சு? அவ்வளவுதானா!"

ஏற இறங்கப் பார்த்தான் வேணு.

"என்ன சார் நீங்க? ஃபிரெண்ட்ங்கிறீங்க. ஆனா வசந்த் சாருக்கு நிச்சயம் ஆன விஷயம் தெரியாதுங்கிறீங்க. ஆனா, காயத்ரி விஷயத்தைப் புட்டுப்புட்டு வைக்கிறீங்க. உண்மையிலேயே நீங்க யார்தான் சார்?"

"அது வந்து... முன்னாடியே வசந்த் காயத்ரி பற்றிச் சொல்லியிருக்கான். நிச்சயம்ன உடனே, அந்தப் பொண்ணு காயத்ரியைத்தான் நிச்சயம் பண்ணப் போறானோன்னு...!"

"உங்களுக்கு விஷயமே தெரியாதா? அந்தப் பொண்ணு தான்... கொஞ்ச நாளைக்கு முன்னாடி ஆக்சிடெண்ட்ல செத்துப் போயிடுச்சே...!"

வசந்த் இப்போதைக்கு அவன் வீட்டிற்கு வருவதாய்த் தெரியவில்லை.

தாண்டிப் போன, டீக்கடைப் பையனைக் கூப்பிட்டு, தனக்கும் அட்டெண்டருக்குமாய் இரு டீ வாங்கிக் கொண்டான்.

டீயை உறிஞ்சியவாறே, வேணு கொஞ்சம் குரலைத் தாழ்த்திக் கொண்டு, "அப்படியே அந்தப் பொண்ணு உயிரோடு இருந்தாலும், அண்ணன் அவங்களைக் கல்யாணம் பண்ணிக்கிறதா எல்லாம் இல்லையே... அந்தப் பொண்ணுதான் எல்லோர்கிட்டயும் அப்படிச் சொல்லிட்டிருந் திருக்கு!"

தன் உடன் பணிபுரியும் ஊழியர் பற்றி முன்பின் அறியாத ஜேம்ஸிடம் இவ்வளவு உளறியதே அதிகம் என்று நினைத்தாற்போல், "நீங்க இங்கே உட்காருங்க. சார்கிட்ட நீங்க வெயிட் பண்ணறதா சொல்லிட்டுப் போறேன்..." - என்றவாறே, வசந்த் இருக்கும் இடம் நோக்கி நகர்ந்தான் வேணு.

வசந்த் அவ்விடம் வருவதற்குள், அவசரமாய் நழுவினான் ஜேம்ஸ்.

'அடப்பாவி! அப் பெண்ணின் பாட்டி என்னடா வென்றால் உன்னோடு வாழ அப்பெண் கொடுத்து வைக்கவில்லை எனப் புலம்பிக் கொண்டிருக்கிறாள்? நீ என்னவோ... காயத்ரியின் காரியங்கள் கூட முடியுமுன்பே, நிச்சயத்திற்கு அழைத்துக் கொண்டிருக்கிறாய்!'

காயத்ரியோ, அவள் பாட்டியோ, இல்லை... இந்த வசந்த்தோ... யாவருமே ஜேம்ஸுக்குச் சம்பந்த



மில்லாதவர்கள். என்றாலும், அவனால் அதை ஜீரணிக்க முடியவில்லை.

என்ன ஒரு சுயநலம்! பின், அவளைத் தொட்டு விட்டுக் கை கழுவ, காதலிப்பதாகக் கூறியிருப்பானோ?

எது எப்படியோ! ஒரு சின்னத் துக்கத்தின் சாயல்கூட இன்றி, வளைய வருபவன், காயத்ரியிடம் பழகிய காரணத்திற்காக, அவள் பாட்டிக்கு உதவி பண்ணப் போகிறானா என்ன...?

இப்போது அது முக்கியமன்று. காயத்ரியின் பாட்டிக்குக் கண்டிப்பாக யாருடைய உதவியாவது தேவை. பணம், காசு மட்டுமேயல்லாது, அவளுடைய தினசரி வாழ்க்கையே அல்லவா கேள்விக்குறியாக உள்ளது.

இதுவரை பேசாதிருந்த மனச்சாட்சி விழித்துக் கொண்டு இடித்துரைத்தது. காயத்ரி உயிரோடிருந்தால், இந்தச் சூழ்நிலையே உருவாகியிராதே!

அவளுடைய சாவுக்கு நீ காரணமாகிவிட்டு, வேறு யார்... இந்தச் சூழ்நிலையைச் சரி செய்ய வேண்டுமென எதிர்பார்க்கிறாய்?

காயத்ரியின் பாட்டிக்கு ஒரு பாதை காட்டிட வேண்டிய கட்டாயம்... சுமையாய், அவன் தோள்களின் மேல் ஏறிக் கொண்டது.

## 12

ஆபீஸ் முடிந்து பூ வாங்கிக் கொண்டு, வீடு வந்தவன், எமிலி ஸ்டூல் மேல் ஏறித் தோய்த்து வைத்திருந்த

வசந்த் இப்போதைக்கு அவன் ஸீட்டிற்கு வருவதாய்த் தெரியவில்லை.

தாண்டிப் போன, டீக்கடைப் பையனைக் கூப்பிட்டு, தனக்கும் அட்டெண்டருக்குமாய் இரு டீ வாங்கிக் கொண்டான்.

டீயை உறிஞ்சியவாறே, வேணு கொஞ்சம் குரலைத் தாழ்த்திக் கொண்டு, "அப்படியே அந்தப் பொண்ணு உயிரோடு இருந்தாலும், அண்ணன் அவங்களைக் கல்யாணம் பண்ணிக்கிறதா எல்லாம் இல்லையே... அந்தப் பொண்ணுதான் எல்லோர்கிட்டயும் அப்படிச் சொல்லிட்டிருந் திருக்கு!"

தன் உடன் பணிபுரியும் ஊழியர் பற்றி முன்பின் அறியாத ஜேம்ஸிடம் இவ்வளவு உளறியதே அதிகம் என்று நினைத்தாற்போல், "நீங்க இங்கே உட்காருங்க. சார்கிட்ட நீங்க வெயிட் பண்ணறதா சொல்லிட்டுப் போறேன்..." - என்றவாறே, வசந்த் இருக்கும் இடம் நோக்கி நகர்ந்தான் வேணு.

வசந்த் அவ்விடம் வருவதற்குள், அவசரமாய் நழுவினான் ஜேம்ஸ்.

'அடப்பாவி! அப் பெண்ணின் பாட்டி என்னடா வென்றால் உன்னோடு வாழ அப்பெண் கொடுத்து வைக்கவில்லை எனப் புலம்பிக் கொண்டிருக்கிறாள்? நீ என்னவோ... காயத்ரியின் காரியங்கள் கூட முடியுமுன்பே, நிச்சயத்திற்கு அழைத்துக் கொண்டிருக்கிறாய்!'

காயத்ரியோ, அவள் பாட்டியோ, இல்லை... இந்த வசந்தோ... யாவருமே ஜேம்ஸுக்குச் சம்பந்த



மில்லாதவர்கள். என்றாலும், அவனால் அதை ஜீரணிக்க முடியவில்லை.

என்ன ஒரு சுயநலம்! பின், அவளைத் தொட்டு விட்டுக் கை கழுவ, காதலிப்பதாகக் கூறியிருப்பானோ?

எது எப்படியோ! ஒரு சின்னத் துக்கத்தின் சாயல்கூட இன்றி, வளைய வருபவன், காயத்ரியிடம் பழகிய காரணத்திற்காக, அவள் பாட்டிக்கு உதவி பண்ணப் போகிறானா என்ன...?

இப்போது அது முக்கியமன்று. காயத்ரியின் பாட்டிக்குக் கண்டிப்பாக யாருடைய உதவியாவது தேவை. பணம், காசு மட்டுமேயல்லாது, அவளுடைய தினசரி வாழ்க்கையே அல்லவா கேள்விக்குறியாக உள்ளது.

இதுவரை பேசாதிருந்த மனச்சாட்சி விழித்துக் கொண்டு இடித்துரைத்தது. காயத்ரி உயிரோடிருந்தால், இந்தச் சூழ்நிலையே உருவாகியிராதே!

அவளுடைய சாவுக்கு நீ காரணமாகிவிட்டு, வேறு யார்... இந்தச் சூழ்நிலையைச் சரி செய்ய வேண்டுமென எதிர்பார்க்கிறாய்?

காயத்ரியின் பாட்டிக்கு ஒரு பாதை காட்டிட வேண்டிய கட்டாயம்... சுமையாய், அவன் தோள்களின் மேல் ஏறிக் கொண்டது.

## 12

ஆபீஸ் முடிந்து பூ வாங்கிக் கொண்டு, வீடு வந்தவன், எமிலி ஸ்டூல் மேல் ஏறித் தோய்த்து வைத்திருந்த

திரைச்சீலையை ஜன்னலில் மாட்டிக் கொண்டிருப்பதைப் பார்த்தான்.

'என்ன இது! வயிற்றில் குழந்தையோடு இவள் ஏன் இந்த வேலைகளைச் செய்கிறாள்? கீழே விழுந்து கிழுந்து வைத்தாளானால், என்ன செய்வது!'

பதறியவாறே, "என்ன எமிலி! நீ ஏன் ஸ்டூல்ல ஏறி இதெல்லாம் செய்யறே?" என்று கேட்டுக் கொண்டே, அவளை இறங்கச் சொல்வதற்காக அருகில் தொடப் போனான்.

"என்னங்க... எப்ப வந்தீங்க? இப்பத்தான் வர்றீங்களா?"

எமிலியின் குரல் பின்னாலிருந்து கேட்கவும் விதிர் விதிர்த்து, நைட்டியின் மீதிருந்து கைகளை எடுத்துக் கொண்டான்.

அரவம் கேட்டுச் சட்டெனத் திரும்பினாள், ப்யூலா, எமிலியின் சகோதரி!

எமிலியின் பேச்சு பாதியிலேயே நின்றது. சட்டென ஏதோ பார்க்கக் கூடாததைப் பார்க்க நேர்ந்தவள் போல், காபி டம்ளரை டீப்பாய் மீது வைத்துவிட்டுச் சடாரென அறைக்குள் நுழைந்து கதவைச் சாத்திக் கொண்டாள்.

ஜேம்ஸுக்கு என்ன செய்வதெனப் புரியவில்லை. ப்யூலாவும், எமிலியும் கிட்டத்தட்ட ஒரே உயரம். ஓரிரு வருடங்களே இருவருக்கும் வித்தியாசம் என்பதால், பார்க்க ஒரே அளவாக இருப்பார்கள்.

ப்யூலா வருவதாகத் தகவல் ஏதும் ஜேம்ஸுக்குத் தெரியாததால், ப்யூலா வந்திருக்கிறாள் என்றோ, அவளே



எமிலியின் நைட்டியோடு ஸ்டூலில் ஏறி நின்று கொண்டிருக்கிறாள் என்றோ, பின்னாடி இருந்து பார்த்த ஜேம்ஸால் யூகிக்கக்கூட முடியவில்லை.

"ஸாரி... ப்யூலா! நீ எப்ப வந்தே... நான் எமிலிதான்னு... அவ ஸ்டூல் மேல ஏறி நிக்கிறாளேன்னு பயந்து... ஸாரி!"

வாய்க்கு வந்ததையெல்லாம் உளறிவிட்டு, சற்றும் தாமதிக்காமல், எமிலியைச் சமாதானப்படுத்தத் தன் அறைக்கு விரைந்தான்.

இவன் வாயைத் திறக்கும் முன் விழத் தொடங்கியது, அர்ச்சனை!

"ச்சே! என்ன நீங்க? ப்யூலாவைப் போய்... அதெப்படி... நான்னு..."

"ஸாரி... எமி! ப்யூலா வரப் போறாங்கிறது எனக்கு எப்படித் தெரியும்? அதுவுமில்லாம, இந்த வீட்டுல நீ, நான் மட்டும்தான்... உன் நைட்டியை வேற உன் தங்கைக்குப் போட்டுக்க குடுத்திருக்க...

"உன்னைத் தவிர வேற யாராவது இருக்கும்னு நான் நினைச்சுக்கூடப் பார்க்கலை. ஸ்டூல்ல நீதான் ஏறி இருக்கியோன்னு ஒரு நிமிஷம் பதைபதைச்சுப் போயிட்டேனே தவிர, வேற எதைப் பத்தியும் நினைக்கத் தோணலை..."

"நீங்க என்னைச் சமாதானப்படுத்த என்ன வேணா சொல்லுங்க. நான் நம்ப மாட்டேன். என் நைட்டி போட்டிருந்தா என்ன? ஒரு வருஷமா கூட குடித்தனம் பண்றீங்க. எனக்கும் இன்னொருத்திக்கும் வித்தியாசம் தெரியாது...?"

"எமிலி! இன்னொருத்தி... இன்னொருத்தின்னு கத்தாதே... ப்யூலா காதுல விழுந்துடப் போகுது."

"அதுக்கு நீங்க ஏன் பதறுறீங்க! என் தங்கையே ஆனாலும், என் புருஷனோட விரல்நுனி... ஏன், சுவாசமே கூட இன்னொரு பெண் மேல் பட்டாலே அவ இன்னொருத்திதான்! அப்படியே எரிச்சிடுவேன்..."

ஆயிரம் எமிலி கண்ணு, தங்கம், செல்லம்... என்றெல்லாம் கொஞ்சித் தன் மேல் தப்பில்லை எனக் கற்பூரம் அணைக்காத குறையாகச் சத்தியம் செய்தான்.

கொஞ்சம் மனமிரங்கி, இனிமேல் அப்படி ஏதும் நடக்காதென, எழுதிக் கொடுக்காத குறையாக உறுதிமொழி வாங்கிய பிறகே சமாதானமானாள், எமிலி.

ஒன்றுமே இல்லாததற்கு இத்தனை ஆர்ப்பாட்டம் பண்ணியிருக்கத் தேவையில்லை என்று எமிலிக்கும் தெரிந்தே இருந்தது. ஆனால், எப்போதும் ஜேம்ஸைத் தன் கைப்பிடிக்குள்ளேயே வைத்திருக்க அவளுக்கு இது தவிர வேறு வழி தெரியவில்லை.

அந்த அளவு ஜேம்ஸ் மீது உயிரையே... அல்ல அல்ல... அவள் சுவாசமே அவன்தான் என்னுமளவுக்கு நேசமே வைத்திருந்தாள், எமிலி.

ப்யூலாவுக்குத் தன்னைச் சுற்றி நடப்பது எல்லாம் கனவு போலவே, ஒன்றுமே புரியவில்லை.

அக்காவின் நைட்டியைத் தான் போட்டுக் கொண் டிருக்கக் கூடாது. வீட்டிலிருந்து வரும்போது, தனக்கு மாற்றுடைகள் கொண்டு வரச் சோம்பல் பட்டு, எமிலியின்



நைட்டியைப் போட்டிருந்ததால், அதுவும் ஸ்டூல் மேல வேற ஏறியிருந்ததால், எமிலிதான் வயிற்றில் பிள்ளையோடு மேலே ஏறிக் கொண்டிருக்கிறாளோ என்று... அத்தான் தன் நைட்டி மேல்... எமிலி என நினைத்துக் கை வைத்தது வாஸ்தவம்தான்.

அதற்குள் எமிலியின் குரல் பின்னாலிருந்து கேட்கவும், எவ்வளவு பதறிப் போனார்? இப்போ என்ன நடந்ததென்று எமிலி இவ்வளவு கோபப்பட்டு, முகத்தை வெடுக்கென்று திருப்பிக் கொண்டு அறைக்குள் நுழைந்து கதவைச் சாத்திக் கொண்டாள்.

ஜேம்ஸ் அவள் பின்னே சமாதானப்படுத்தப் போக, ப்யூலா அந்தச் சூழ்நிலையில் சற்றே அவமானகரமாக உணர்ந்தாள்.

தன் மேல் எந்தத் தப்பும் இல்லையென நினைத்திருந்ததால், அவளுக்கும் எமிலியிடம் போய் எதற்காகவும் மன்னிப்புக் கேட்க வேண்டுமெனத் தோன்றவில்லை.

எவ்வளவு நேரம்தான் அப்படியே அமர்ந்திருந்தாளோ, சுவர்க் கடிகாரம் எட்டுத் தடவை மணி அடிக்கவும்... வயிறும் மணியடித்துத் தன் பசியை ஞாபகப்படுத்தியது.

சட்டென எழுந்து வந்த எமிலி, ப்யூலாவின் கைகளைப் பிடித்துக் கொண்டு, "ஸாரிடி... ப்யூலா! எனக்கு உன் மேல எந்தக் கோபமும் இல்லை. இந்த மனுஷன் மேலதான்... கண்ணு மண்ணு தெரியாம... உன்னைப் போய் நான்னு நினைச்சு..." - எமிலியின் குரல் உடைந்து தழுதழுத்தது.

"உன்னை நினைச்சா எனக்குப் பாவமா இருக்குக்கா... இந்த அளவுக்குப் பொஸஸிவ்வா இருக்கிறதுக்குப் பின்னாடி ஒரு நாள் வருத்தப்படப் போற பாரு... இப்ப என்ன நடந்ததுன்னு இப்படி அத்தானை வறுத்தெடுக்கிறே?

"என்னை இங்கே அத்தான் சத்தியமா எதிர்பார்த்திருக்க மாட்டார். ஸ்டூல் மேல நீ நிக்கிறன்னு நினைச்சு எவ்வளவு பதறிப் போயிட்டார்... அதுக்குள்ளதான் நீ வந்துட்டியே... சரி, இப்ப ஒண்ணும் இல்லை. வாக்கா... நீ தோசை சுடு. நான் சட்னி அரைக்கிறேன்..."

பியூலா அந்தச் சூழ்நிலையின் இறுக்கத்தைப் போக்க நினைத்து... ஏதேதோ பேசிக் கொண்டே சாப்பிட்டாலும், ஜேம்ஸோ எமிலியோ அவ்வளவாக வாயே திறக்கவில்லை.

ஒரு வாரம் எமிலியுடன் இருந்து விட்டு வருகிறேன் என்று... ஆசையாக வந்தவள்... மறுநாளே வீட்டுக்குக் கிளம்புகிறேன் என்று ஆரம்பித்து விட்டாள்.

"ஒரு வாரம் இருக்கப் போறேன்னு சொன்னே... இப்ப என்ன? என் மேலே கோபம்தானே?"

"அதெல்லாம் ஒண்ணுமில்லைக்கா... என்னவோ அம்மா ஞாபகமா இருக்கு. அம்மாவைப் பார்க்கணும் போல இருக்கு...!" - எங்கோ பார்வையைப் பதித்தவாறு கூறினாள்.

எமிலி அதற்கு மேல் வற்புறுத்தவில்லை. இதைப் பார்த்துக் கொண்டிருந்த ஜேம்ஸுக்குத்தான் என்னவோ போலாகி விட்டது.

என்ன பெண் இவள்! ஊர் உலகத்தில் தங்கை மீது அக்காக்கள் எவ்வளவு பாசம் வைக்கிறார்கள்!



அக்கா, தங்கை இருவரும் ஒருவனையே கல்யாணம் பண்ணிக் கொள்வதுகூட, ஏன் அந்தக் காலத்திலேயே வழக்கத்தில் இருந்திருக்கிறதே...

குழந்தையைத் தவிக்க விட்டுவிட்டு, அக்கா இறந்து விட்டாலோ, குழந்தைக்காகவாவது அவள் தங்கையையே, தன் அத்தானுக்குப் பெற்றோரே மனமுவந்து திருமணம் செய்து கொடுப்பது வாடிக்கைதானே!

ஒன்றுமில்லாததை இவ்வளவு ஆர்ப்பாட்டம் பண்ணி... பியூலா தன் பெற்றோரிடம் என்னவென்று போய்ச் சொல்கிறாளோ... அவர்கள் தன்னைத் தப்பாக நினைத்தால்...

மனம் குமைந்தது ஜேம்ஸுக்கு. நல்லவேளையாக, பியூலா போய்ச் சேர்ந்த பின், எமிலியின் அப்பா போன் செய்து சகஜமாகப் பேசியதிலிருந்து, பியூலா எதுவும் சொல்லி அவர்களைக் குழப்பவில்லை என அறிந்து நிம்மதியானான்.

இப்படிப்பட்ட சுபாவத்துடன் எமிலி இருக்க...

எப்படி காயத்ரியின் பாட்டிக்கு நினைத்தபடி உதவிட முடியப் போகிறதோ?

## 13

ஒரு காரியத்தைச் செய்ய வேண்டுமென மனது முடிவு செய்து விட்டு, யோசிக்கும்போது...

அந்தக் காரியத்தை முடிப்பதற்குரிய சாத்தியக் கூறுகள், வழிகள் தானாகவே புலப்படுகின்றன.

அதே ஒரு செயலைச் செய்ய விருப்பமில்லாத மனது, அதற்குரிய சாக்குப்போக்குகளைத் தேடிக் கண்டுபிடிக்கிறது. மனதின் அந்தச் சுபாவத்திற்கு ஜேம்ஸ் வசந்தன் மட்டும் விதிவிலக்கா என்ன?

காயத்ரியின் பாட்டிக்கு எந்த வகையிலாவது உதவி செய்து, தன் மனதை நெருடும் குற்ற உணர்வுக்குப் பிராயச்சித்தம் தேட வேண்டுமென யோசித்துக் கொண்டே இருக்கையில்... வழி புலப்பட்டது.

வசந்தன் காயத்ரியைக் காதலிக்கவில்லை என்றாலும், காயத்ரி வசந்த் தன்னைக் காதலிப்பதாக நினைத்துக் கொண்டிருந்ததும், அவர்கள் காதல்... கல்யாணத்தில் முடியப் போகிறது என்று அவள் பாட்டி நம்பிக் கொண் டிருந்ததும் உண்மை.

அதை வைத்தே, தான் அக்குடும்பத்தில் நுழைந்தால் என்ன? தன்னுடைய நிச்சயத்திற்கு அனைவரையும் அழைத்துக் கொண்டிருக்கும் வசந்த், காயத்ரியின் பாட்டியைப் போய்ப் பார்த்து உதவப் போகிறானா, என்ன?

உண்மையும் தெரியாமல், அப் பாட்டியின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக வேண்டும். பாட்டி நினைத்துக் கொண்டிருக்கும் வசந்த்தாகத்.... தானே ஆனால் என்ன?

அதுதான் சரி... அப்போதுதான் நான் செய்யும் எந்தவித உதவியையும் தயக்கமின்றி அவர் ஏற்றுக் கொள்வார். அதே சமயம், எந்த விதத்தில் நான் உதவ முடியும்? சடாரென அள்ளி வீசும் அளவுக்கு ஜேம்ஸ் வசந்தனும் பணவசதி படைத்தவனல்ல. வெளியில் வட்டிக்குக் கடன் வாங்கவில்லையே தவிர, வட்டியில்லாக்



கடன்கள் என்னவெல்லாம் வங்கியில் தருவார்களோ, அத்தனையும் வாங்கி யிருந்தான்.

காயத்ரியும் வேலை பார்க்கும் பெண். கண்டிப்பாக ஏதாவது சேமித்து வைத்திருப்பாள். அல்லது, தனக்குப் பின் பாட்டிக்குக் கிடைக்குமாறு, ஏதாவது பொருளாதார ரீதியாக வழிவகை செய்திருப்பாள்.

பாட்டிக்குக் கண் தெரியாததால், அப்படி ஏதேனும் இருந்தால்கூட, அது அவர்களுக்குத் தெரியாதே! அது அவர்களுக்கு இப்போது உரிய நேரத்தில் கிடைக்க வழி வகை செய்தால்கூடப் போதுமே!

ஓரளவுக்குப் பணம் கையிருப்பு இருந்தததென்றால், பாட்டிக்குச் சமைக்க, கூடமாட ஒத்தாசை செய்ய ஒரு ஆயாவை நியமித்து விட்டால் போதும்.

யோசிக்க யோசிக்க ஒவ்வொன்றாய் வழி புலப்படத் தோன்றியது.

அதற்குள், அலுவலகத்தில் வேலைப்பளு அதிகரித்து விடவே, இது விஷயமாய் அடுத்த வாரம் காயத்ரி வீட்டுக்குப் போய்ப் பார்க்க வேண்டுமெனத் தீர்மானித்துக் கொண்டான்.

நெஞ்சில் சிலுவையிட்டுக் கொள்ளவும், பாரம் நீங்கியது போலானது.

# 14

அடுத்த வாரம், காயத்ரியின் வீடு வரை சென்று கதவைத் தட்டியபின்... மனசு மறுபரிசீலனையில் இறங் கியது.

இது வேண்டாத வேலையோ? தேவையில்லாமல் இழுத்து விட்டுக் கொள்கிறேனோ?

ஆனால், கதவைத் திறந்த பாட்டி, வெட்ட வெளியைப் பார்த்து, "யாரது?" என்று குரல் கொடுக்கும் போது, அந்தப் பரிதாபத்தைப் பார்த்து, வந்த எண்ணம் நொடியில் காணாமல் போனது. குற்ற உணர்வு மேலெழுந்தது.

அதிலிருந்து விடுபடவாவது, ஏதாவது செய்ய வேண்டுமெனத் தோன்றியது.

"பாட்டி!"

பாட்டிக்கு அசாத்தியக் கூர்மை இருக்க வேண்டும். குரலைக் கொண்டு நொடியில் அடையாளம் கண்டு கொண்டாள். "வாங்க... வா... தம்பி!"

மௌனமாக உள்ளே நுழைந்தான். தடுமாற்றமின்றி சேரை குரல் வந்த திசையில் எடுத்துப் போட்டாள்.

ஜேம்ஸ்தான் தடுமாறிப் போனான். மெள்ள, "பாட்டி! காயத்ரி உங்களைப் பற்றி நிறைய சொல்லியிருக்கிறாள். எனக்குமே காயத்ரி இழப்பை ஜீரணிக்க முடியவில்லையென்றாலும், உங்களுக்கு அது ஈடு செய்ய முடியாதது. உங்களுக்கு எந்த வகையிலாவது உதவணும்னு நினைக்கிறேன்... பாட்டி!"

ஒருவாறாகப் பாட்டிக்கு நம்பிக்கை வரும்படி சொல்லிவிட்டான்.

"எந்த வகையில, நீ எனக்கு உதவ முடியும்னு நினைக்கிறே... தம்பி! நாம குடுத்து வைச்சது அவ்வளவு தான்னு மனசைத் தேத்திக்கிட்டு... எனக்குச் சொல்லவே கஷ்டமாயிருக்கு. ஆனா வேற வழியில்லை... நீ காலா



காலத்துல கல்யாணம் பண்ணிக்கிட்டு நல்லா வாழணும்பா...!"

"இல்லை... பாட்டி! இப்படியே விட்டுட்டுப் போனா காயத்ரி ஆத்மா என்னை மன்னிக்காது. சரி, பாட்டி... உடைச்சே கேட்கிறேன். இந்த மாதத்திலேயிருந்து சாப்பாட்டுச் செலவுக்கு, சாப்பாட்டுக்கு என்ன செய்யப் போறீங்க? பக்கத்து வீட்டுல எத்தனை நாளைக்குச் சார்ந்திருக்க முடியும், பாட்டி?"

"என்னைப் பத்தி நீ கவலைப்படறதே, சந்தோஷமா இருக்குப்பா. எங்க ஊர்ல, தெரிஞ்ச... கொஞ்சம் தூரத்துச் சொந்தம்.... ஒரு பொண்ணு... காயத்ரி மாதிரின்னு வைச்சுக்கோயேன். அந்தப் பொண்ணை இங்கே கூட்டி வந்து கூடமாட வைச்சுக்கலாம்னு இருக்கேன்.

"காலம் கெட்டுக் கிடக்கே... நல்லா இருக்கிறவங்க வீட்டிலேயே வீடு புகுந்து கொள்ளையடிக்கிறாங்க. தனியா எத்தனை நாள் காலம் தள்ள முடியும்? ஆனா, அந்தப் பெண்ணே ஏழை ஜீவனம்... அவளுக்கும் சேர்த்துச் சாப்பாடு போட்டு, துணிமணி வாங்கிக் கொடுத்துத்தான் நான் வீட்டோட வைச்சுக்கணும்."

"பணம் செலவுக்கு இருக்கா... பாட்டி?"

தயங்கித் தயங்கிக் கேட்டான் ஜேம்ஸ்.

"எனக்கு ஐந்நூறு எதுன்னு கண்டுபிடிக்க முடியுமா? நூறு எதுன்னு கண்டுபிடிக்க முடியுமா? காயத்ரி வீட்டுச் செலவுக்கு வைச்சிருந்த பணத்தை அப்படியே தூக்கிப் பக்கத்து வீட்டு அன்னபூரணியம்மா கிட்ட கொடுத்தேன். அதுலதான் அவங்க காரியத்துக்கு வேண்டியதெல்லாம்

செய்தாங்க... எல்லாம் போக மீதி இரண்டாயிரம் ரூபாய் இருக்கிறதாச் சொன்னாங்க..."

மடை திறந்த வெள்ளம் போல் பாட்டி எல்லா வற்றையும் கொட்டினார்.

அவசரமாய், நெஞ்சில் சிலுவையிட்டுக் கொண்டான் ஜேம்ஸ்.

'ச்சே! எப்பேர்ப்பட்ட பாவம் செய்து விட்டேன். இந்த வீட்டுக்குத் தூண் போல் இருந்தவளை, ஒரு நிமிடக் கவனக்குறைவால், ஒரேயடியாகச் சாய்த்து விட்டேனே...!'

உதவி செய்வதெனத் தீர்மானித்துக் கொண்டபின், மளமளவெனக் காரியங்கள் நடந்தேறின.

இருநூறு ரூபாய் (லஞ்சம்) கொடுத்து இறப்புச் சான்றிதழ் வாங்கி வந்தான்.

அவளுடைய அலுவலகத்தில் இறப்புச் சான்றிதழ் இணைத்து, அவள் பாட்டியிடம் கைநாட்டு வாங்கிய பேப்பரில் விண்ணப்பம் எழுதிக் கொடுத்துவிட்டு வந்தான்.

பி.எஃப். தொகை, விபத்துக் காப்பீட்டுப் பாலிஸியின் கீழ் விபத்தில் இறந்ததனால் கிடைக்கக்கூடிய நஷ்டஈடு, கடைசி மாதச் சம்பளம் எனக் கிட்டத்தட்ட இருபதாயிரம் ரூபாய் பெற்று வந்தான்.

காயத்ரியின் பாட்டிக்கோ குரல் தழுதழுத்தது. இனிமேல் எப்படிக் காலம் தள்ளப் போகிறோம், என்று இரவும் பகலும் கண்ணீர் வடித்துத் தொழுத கடவுள் கண் திறந்து விட்டதாகவே எண்ணினாள்.



காயத்ரியின் அலுவலகக் கணக்கையும் முடித்து, அதிலிருந்த சொச்சப் பணம், பாட்டியின் பேரில் கொடுக்கப்பட்ட ரூபாய் எல்லாவற்றையும் பாட்டியின் பெயரில் தங்கள் அலுவலகத்தில் ஒரு கணக்கு ஆரம்பித்து, அதில் போட்டு வைத்தான்.

மாதா மாதம் வட்டிப் பணம் தானே கொண்டு வந்து தருவதாகக் கூறியதும், பாட்டியின் கைகள் அவன் இருந்த திக்கை நோக்கித் தாமாகக் குவிந்தன.

"நீ இவ்வளவு நல்லா... பார்த்துப் பார்த்துச் செய்ய, எனக்குத் துக்கம் தொண்டையை அடைக்குதுப்பா... உங்க அப்பா, அம்மா ரொம்ப புண்ணியம் செய்திருக்கணும். அவங்க திண்டுக்கல்லிலிருந்து வரும் போது, அவசியம் வீட்டுக்குக் கூட்டிட்டு வாப்பா. இப்பேர்ப்பட்ட உன்கூட வாழக் குடுப்பினை இல்லையே என் காயத்ரிக்கு..."

பாட்டி பழையபடி புலம்பலை ஆரம்பித்தாள். பாவம், அவள் புலம்பலைக் கேட்கக் கூட, அந்த வீட்டில் ஆள் இல்லையே...! தன்னிடமாவது புலம்பி விட்டுப் போகட்டும்.

வசந்தின் பெற்றோர் திண்டுக்கல்லில் இருக்கிறார்கள், போலும்.

பாட்டி தன்னை வசந்தாக நினைத்துத்தான் தன்னை வீட்டுக்குள்ளேயே விட்டிருக்கிறாள். தன்னுடைய உதவி களையும் ஏற்றுக் கொண்டிருக்கிறாள்.

இன்னும் கொஞ்ச நாளைக்காவது அதைச் சந்தேகம் வராதவாறு கொண்டு போக வேண்டும்.

அப்படியே காயத்ரி இறந்து ஒரு மாதமே ஓடி விட்டிருந்தது.

"நாளை நான் இங்கே காலையிலேயே வந்து விடுகிறேன், பாட்டி! உங்களுக்கும் ஓட்டலில் வாங்கி வந்து விடுகிறேன்.... மதியம் போனால் போதும்."

முன்கூட்டியே சொல்லி வைத்து விட்டு அதன்படியே ஞாயிற்றுக்கிழமை காலையில் போனான்.

ஆனால், எமிலிக்கு அதற்குக் காரணம் கூறிச் சமாதானப்படுத்துவதற்குள்தான் போதும் போதும் என்றாகி விட்டது.

சர்ச்சுக்குப் போய் விட்டு, அவளைக் கொண்டு போய், வீட்டில் விட்டு விட்டு வருவதற்குள் எத்தனை கேள்விகள்!

சந்தேகம் வராதவாறு நழுவி விட்டாலும், மனதின் ஒரு மூலையில் எமிலியை ஏமாற்றுகிறோமோ என்று சஞ்சலம் வராமல் இல்லை.

ஆனால், ஆதரவற்ற பாட்டியின் நிலை ஒரு நிமிடம் கண் முன்னே தோன்றி, அந்த மனச்சஞ்சலத்தை நொடியில் போக்கிவிட்டது.

எல்லாம் நடந்து முடிந்தபின்... ஒரு நாள் எமிலியிடம் உண்மையைக் கூறி...

நினைக்க நினைக்கவே எண்ணம் தடைப்பட்டது. என்னவென்று கூறுவது... உடனே அந்தப் பாட்டியைப் பார்க்க வேண்டும் என்பாளே!

தன்னால் நேர்ந்த விபத்துப் பற்றிக் கூற வேண்டி யிருக்கும். பாட்டியோ காயத்ரியை நேசித்த வசந்த் என்று தன்னை நினைத்துக் கொண்டிருக்கிறாள்.



இவர்கள் இருவரும் எந்தக் காலத்திலேயுமே சந்திக்காமல் இருக்க வேண்டும்... இயேசுவே!

## 15

பாட்டி சாப்பிட்டதும், சற்று இளைப் பாறிக் கொண்டிருந்தபோது, அந்தச் சந்தர்ப் பத்தைப் பயன்படுத்தி, அந்த வீட்டை அலச ஆரம்பித்தான், ஜேம்ஸ் வசந்தன்.

சொல்லிக் கொள்ளும் அளவுக்குப் பெரிய வீடில்லை. அதிலும் காயத்ரி உபயோகப்படுத்தி வந்தது, அந்த ஸ்டீல் மேஜையின் மூன்று டிராயர்கள் மட்டுமே என்பது பார்த்த மாத்திரத்திலேயே தெரிந்தது.

ஐந்தாறு வாழ்த்து மடல்கள், தீபாவளிக்கென... பொங்கலுக்கென... காதலர் தினத்திற்கென... வசந்திமிருந்து!

அடப்பாவி! இப்படியெல்லாம் காதலைக் கொட்டுவது போல் நடித்து ஒரு பெண்ணின் மனதைக் கெடுத் திருக்கிறானே! என்னதான் நேசிப்பது போல் நடித்திருந் தாலும், காதல் கடிதம் எழுதவாவது காதலிப்பதைப் போல் கற்பனை செய்து பார்த்திருப்பானே!

அந்த ஈரம் கூடவா நெஞ்சை விட்டு இத்தனை சீக்கிரம் போயிருக்கும்?

அவனைப் பற்றிய நினைவுகளை ஒதுக்கிவிட்டு, இன்னும் கொஞ்சம் ஆராய்ந்தான்.

பாட்டியின் எதிர்காலத்திற்கு என... தனக்குப் பின் பாட்டிக்குச் சேருமாறு, காயத்ரி ஏதேனும் வழி வகைகள் செய்திருப்பாளோ... என்ற நப்பாசை, ஜேம்ஸுக்கு.

அந்த நப்பாசை வீண் போகவில்லை. அஞ்சலகத்தில் சேமிப்புக் கணக்கில், மாதா மாதம் ஆயிரம் ரூபாய் வீதம் செலுத்தி வந்திருக்கிறாள். அந்தப் பணம் இதுவரை பத்தாயிரம் சேர்ந்திருந்தது.

மேலும், ஜேம்ஸுக்கு அதிகம் சிரமம் இல்லாமல் அங்கிருந்த டைரியைப் புரட்டியதுமே... அவள் தன் சேமிப்புகள் பற்றி எழுதி வைத்திருந்த விபரங்கள் கண்ணில் பட்டன.

மியூச்சுவல் ஃபண்டில் பணம் போட்டு வைத்திருக்கிறாள். எல்.ஐ.சி. பாலிஸி இரண்டு எடுத்துப் பணம் கட்டி வந்துள்ளாள்.

விபத்தினால் உயிர் இழந்த காரணத்தினால், எல்லாமாகச் சேர்ந்து, ஒரு ஐம்பதாயிரம் தேறும் போல் தோன்றியது.

சட்டென காயத்ரியைப் பற்றி நினைக்கும்போது, பிரமிப்பாக இருந்தது. இவ்வளவு சின்னப் பெண். தன் வருமானத்தில் வீட்டுச் செலவு போக, மீதப்படுத்தித் தனக்காகவும், பாட்டிக்காகவும் எதிர்காலத்திற்கெனச் சேமித்து வைத்திருக்கிறாளே!

மேலும் கொஞ்சம் குடையவே, காயத்ரி விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு பெற்ற சான்றிதழ்கள் வெளிப்பட்டன.

பாட்டியிடம் விசாரித்தபோதுதான் தெரிந்தது, காயத்ரி காரம் விளையாட்டில் சாம்பியன் என்று. இப்பெண் இந்தளவு திறமைசாலியாய் இருந்திருப்பாள் என்று ஜேம்ஸ் சிறிதுகூட எதிர்பார்க்கவில்லை.



பாட்டியிடம் கூறிவிட்டு, அவள் பாட்டியை நாமினியாகப் போட்டுச் சேமித்து வைத்திருந்த பத்திரங்களை எடுத்துக் கொண்டு விடைபெற்றான்.

கரெக்டாக... அப்போது பக்கத்து வீட்டு அன்னபூரணி அம்மாள் தயங்கித் தயங்கி வந்து கொண்டிருந்தாள்.

"என்ன விசாலம் பாட்டி! காலையில ஹோட்டல் சாப்பாடு சாப்பிட்டாப்பல இருக்கு. யார் இந்தத் தம்பி? இரண்டு மூன்று தடவையா வந்திட்டுப் போயிட்டு இருக்கு...!"

"அதுவா... அன்னபூரணி? நம்ம காயத்ரி பொண்ணு ஒரு பையனைக் காதலிக்குது... அதுக்கே கட்டி வைச்சுடப் போறேன்னு சொல்லிட்டிருந்தேன்ல...

"அந்தத் தம்பிதான் இவர்! காயத்ரியே என்னை அனாதையாக்கி விட்டுப் போனாலும், இவர் பாவம் என்னை வந்து பார்த்துத் தன்னால் முடிஞ்சதைச் செய்யறேன்னு அலையாய் அலையறாரு... பாவம்! அந்தப் பகவான் இந்தத் தம்பியை நல்லா வைக்கணும்."

## 16

அன்று காலையிலிருந்தே, ஜேம்ஸுக்குக் கண்களில் எரிச்சல். முன்னிரவு வெகு நேரம் கண் விழித்துத் தொலைக்காட்சி பார்த்ததும்... அதுவும் கண்களுக்குக் கண்ணாடி அணியாமல் வேறு தொலைக்காட்சி பார்த்தது... என்று கண்கள் சிவந்து, எரிந்தன. சட்டெனத் தன்னுடைய பால்ய நண்பன், தற்போது கண் டாக்டராக இருக்கும் நகுலைத் தேடிப் போய்க் கண்களைக் காண்பிப்பதென முடிவு செய்தான்.

நகுல், ஓரளவு எல்லா வசதிகளுடனும், பிரமாண்டமாய், அதுவும் நகரின் மையப் பகுதியிலேயே மருத்துவமனை கட்டியிருந்தான்.

எல்லாம் மாமனார் சீராக அள்ளித் தந்த பணம். திறப்பு விழாவுக்குப் போயிருந்தான், ஜேம்ஸ். பின், இப்போதுதான்...

ஞாயிற்றுக்கிழமை என்பதாலோ என்னவோ... சற்றே அதிகப்படியான கூட்டம். நகுல் ஏதோ கண் ஆபரேஷனில் இருப்பதாகக் கூறினார்கள்.

கம்பௌண்டருக்கு அடையாளம் தெரியும் என்பதால், கூட்டத்தையும் மீறி முதல் ஆளாக அனுமதிக்கப்பட்டான்.

"வாடா, ஜேம்ஸ்... இப்பத்தான் டிஸ்பன்ஸரி பக்கம் வர கண் தெரிஞ்சுதா?"

"டேய், நகுல்! நீ விளையாட்டா சொன்னாலும், கண் நல்லா தெரிஞ்சா... உன்னைத் தேடி ஏன் வரப் போறேன்?"

"ஏன் என்னாச்சு! என்னடா... கண்ணெல்லாம் சிவந்திருக்கு?"

"அதையேன் கேட்கிறே! திடீர்னு கண்ணெல்லாம் ஒரே எரிச்சல். நமநமன்னு அப்படியே பிடுங்கிப் போட்டுடலாம் போல் ஒரே நமைச்சல். எப்படி சிவந்திருக்கு பாரேன்...!"

"என்ன பண்ணினே?"

"டேய்! என்ன டாக்டர்டா நீ? என்ன... ஏதுன்னு அதை நீதான் சொல்லணும்..."

ஜேம்ஸை மேலோட்டமாகப் பரிசோதித்து விட்டு, அண்ணாந்து பார்க்கச் சொல்லிக் கண் மருந்தை விட்டு,



அப்படியே கண்களை மூடியே வைத்திருக்கச் சொல்லிவிட்டு, அடுத்த பேஷண்ட்டைக் கவனிக்கலானான், நகுல்.

கண்களை மூடி, அப்படியே சில விநாடிகள் அமர்ந் திருப்பதே பெரும் பிரயத்தனமாக இருந்தது, ஜேம்ஸுக்கு.

கண் தெரியாதவர்கள் எப்படித்தான் வாழ்நாள் முழுதும் இப்படி இருண்ட வாழ்க்கை வாழ்கிறார்களோ!

இப்படி நினைத்ததும், சட்டென அவனுக்குக் காயத்ரியின் பாட்டி நினைவு வந்தது.

கண்களைத் திறக்கலாமா என்று நகுலைக் கேட்க நினைத்த விநாடி, கதவு திறக்கப்படும் ஓசை கேட்டது.

"டாக்டர்... டாக்டர்! என் மகள் கண் திறந்து பார்த்துட்டா! நன்றி சொல்லிட்டுப் போக வந்தோம். எங்க கண்ணையே திருப்பிக் கொடுத்திருக்கீங்க. என்ன ஃபீஸ் வேண்டுமானாலும் கேளுங்க, டாக்டர்! தர்றோம்..."

குரலுக்குரியவர் நடுத்தர வயதுடையவர் என்பதை எளிதாக அனுமானிக்க முடிந்தது.

நகுலைக் கூப்பிட நினைத்ததுகூட மறந்து போனது.

"இதுல நான் என்ன பெரிசா பண்ணினேன். நீங்க ரிசப்ஷன்ல கேட்டு, நியாயமான ஃபீஸ் நீங்க கட்ட வேண்டியது எவ்வளவுன்னு சொல்லுவாங்க. அதைக் கேட்டு கட்டிடுங்க."

"இருந்தாலும், டாக்டர்! எங்க பொண்ணு வாழ்க்கை அவ்வளவுதான்! இனி அவ வாழ்க்கையே இருட்டுல தான்னு... ஒரு முடிவுக்கே வந்துட்டோம். கடவுள் மாதிரி

நீங்க மட்டும் இல்லைன்னா...!" - இது ஒரு பெண்ணின் குரல்.

"திரும்பவும் சொல்றேம்மா... நீங்க எங்க மருத்துவ மனையில பதிவு பண்ணி வைச்சிருந்தீங்க. விபத்தில இறந்த அந்த மனிதர் ஏற்கெனவே கண் தானத்துக்கு ஒப்புதல் கொடுத்து எழுதிக் கொடுத்திருந்ததால, எல்லாம் ஒண்ணா சேர்ந்ததால... உங்க பொண்ணுக்கு அவர் கண்களைப் பொருத்திப் பார்வை தர முடிஞ்சது."

சற்றே நிறுத்திய நகுல், "நீங்க இவ்வளவு தூரம் கேட்கிறதால, ஒரு யோசனை சொல்றேன். உங்க மகளுக்குப் பார்வை தந்த அந்த இளைஞன் மணிகண்டன், பாவம்... ஏழைக் குடும்பத்தின் விதவைத் தாய்க்கு ஒரே மகன். இவனுடைய அக்காவும் திருமணமாகிப் போய் விட்டாள்.

"பாவம் அந்தம்மா... அவர்களுக்கு ஏதாவது பொருள் உதவி செய்யுங்கள். அந்த அம்மா மனசார வாழ்த்தினால், உங்கள் மகள் மிக நன்றாக இருப்பாள்!"

"அப்படியே செய்துடறோம்... டாக்டர்!"

அவர்கள் விடைபெற்றுப் போனதும், ஜேம்ஸின் கண்களைத் திறக்கச் சொல்லிப் பரிசோதித்து விட்டு, கண்களுக்கு விட்டுக் கொள்ளச் சொட்டு மருந்தையும், மாத்திரைகளையும் சீட்டில் எழுதிக் கொடுத்தான், நகுல்.

"நான் இப்போது கண்களில் மருந்து விட்டுக் கொண்டு, கண்களை மூடி இருந்தேனே... அப்போது யார் வந்திருந்தார்கள்? அவர்கள் மகளுக்கு நீ ஏதோ..."



"ஓ! தேவநாயகம் சாரைச் சொல்கிறாயா? பாவம் அவர்! பெரிய பிசினஸ்மேன். கோடிக்கணக்கான சொத்து... அதற்கு ஒரே வாரிசு அவர் பெண் ஷைலஜா... விதி! பாவம்... தீபாவளி சமயத்தில் புஸ்வாணம் வெடிக்க வில்லையே என்று பக்கத்தில் போய்ப் பார்த்திருக்கிறாள்...

அப்போது, அது வெடித்துக் கண்களில் பட்டு, அது புரையோடிப் பார்வையைப் பறித்து விட்டது. "

"இங்கே ஏதோ பதிவு பண்ணியிருந்தார்கள் என்று சொல்லிக் கொண்டிருந்தாயே...!"

"அதுக்கும் வரேன். இந்த மருத்துவமனை கட்டிய புதிதில்... இது கொஞ்சம் பிரபலமாக வேண்டும் என்று டிரஸ்ட் மூலமாக ஒரு திட்டம் கொண்டு வந்தேன். 'கண்ணொளித் திட்டம்' என்று...

கண் தானம் செய்ய விரும்புறவங்க... அவங்க பெயரை இங்கே பதிவு செய்துடணும். உடனே எங்க மருத்துவமனை பெயரைப் பொறித்த, கோல்டன் கார்ட் வழங்கிடுவோம். இதை எப்பவும் அவங்க தங்களுடனேயே வைச்சிருக்கணும்.

அதே போல், மாற்றுக்கண் பொருத்தப்பட வேண்டிய தேவை இருக்கிறவங்களும் பதிவு பண்ணி வைக்கணும். பதிவு பண்ணி வைச்சா... சீனியாரிட்டி அடிப்படையில், அதுக்கான வாய்ப்பு வரும்போது, கண்களைப் பொருத்திப் பார்வை தருகிறோம்.

இதுக்கு மக்கள் மத்தியில நல்ல ரீச் இருக்கு. ஒரு இரண்டு வாரங்களுக்கு முன்னர்கூட, பேப்பரில் விளம்பரம் கொடுத்திருந்தோமே...!"

சட்டென அந்தக் கேள்வி மனதைத் தொக்கி நின்றது. விசாலம் பாட்டிக்கு அப்படி ஒரு நல்வாய்ப்பாகக் கண் பார்வை கிடைக்குமாறு செய்து விட்டால்...?

இதைத் தவிர, வேறு என்ன பிராயச்சித்தம் வேண்டும்!

"ஏன் நகுல்! இந்தக் கண் ஆபரேஷனுக்கு எவ்வளவு செலவாகும்?"

"அது... ஆபரேஷன் பண்ண வெளியிலிருந்து டாக்டர்ஸ் வருவாங்க. அவங்க ஃபீஸ் அப்படி இப்படின்னு ஒரு எழுபதாயிரம் செலவாகும். ஏன் கேட்கிற?"

"ஒண்ணுமில்லை... எங்க வங்கியில, கூட வேலை செய்யற என்னுடைய நெருங்கிய நண்பர் ஒருத்தரோட அம்மாவுக்கு மாற்றுக் கண் ஆபரேஷன் செய்து இது மாதிரி பொருத்தணும்."

"அப்ப என்ன? நம்ம மருத்துவமனையில் பதிவு செய்துட்டாப் போச்சு. ஆமா... அவங்களுக்குப் பிறவி யிலேயே பார்வை கிடையாதா? இல்லை... நடுவில ஏதாவது...!"

"தெரியலையே நகுல்! அது தெரிஞ்சாதான் ப்ரொசீட் பண்ண முடியுமா?"

"பின்னே! பிறவியிலேயான்னு பார்க்கணும். மாற்றுக்கண் பொருத்தினா பார்வை கிடைக்குமா... அல்லது வேற ஏதாவது சரி செய்ய முடியாத குறைபாடான்னு பார்த்துட்டுத்தான் இங்கே பதிவு செய்துப்போம். நீ அவங்களை ஒரு நாள் இங்கே கூட்டிட்டு வா... பரிசோதித்துப் பார்த்து விடலாம்."



விடை பெற்றுக் கொண்டான், ஜேம்ஸ். மனதிற்குள் ஏதோ ஒரு இனம் புரியாத திருப்தி.

நம் எண்ணங்களின் அலைவரிசையும், காற்றின் அலைவரிசையும் ஒன்றுக்கொன்று தொடர்புடையது. வழி புலப்படாவிட்டாலும் ஒரு காரியத்தைச் செய்து முடிக்க வேண்டும் என்ற எண்ணம் உள்ளே உதயமாகும்போது, அந்த அதிர்வலைகள், காற்றின் அதிர்வலைகளோடு ஒருசேரப் பயணித்து, மார்க்கத்தை நோக்கி, நம் சிந்தனையைச் செலுத்தி விடும்... என்பது ஜேம்ஸ் விஷயத்தில் உண்மை யாயிற்று.

# 17

மெல்லப் பேச்சை ஆரம்பித்தான், ஜேம்ஸ். அப்படியே உருகிப் போய் விட்டாள் விசாலம் பாட்டி.

"தம்பி! கடவுளாப் பார்த்துத்தான் உன்னை இங்கே காயத்ரிக்குப் பதிலா அனுப்பிச்சிருக்கார். இனிமே எனக்கு யார் இருக்கா? இப்படி சோதிக்கிறியேன்னு... காயத்ரி செத்துப் போன அன்னிக்கு கடவுள்கிட்ட கையில தூக்க மாத்திரையை வைச்சுக்கிட்டு மன்றாடினேன், பாருங்க...

உண்மையிலேயே அவனுக்குக் காதுல விழுந்து உங்களை அனுப்பியிருக்கணும் தம்பி!"

"என்ன பாட்டி! தற்கொலை பண்ணிக்க முயற்சி பண்ணினீங்களா?"

"ஆமாம்ப்பா... காயத்ரிக்காகத்தான் உயிரைக் கையில் பிடிச்சிட்டிருந்தேன். அவளே போயிட்டா... இருண்ட வாழ்க்கையோட இனி என்ன செய்யப் போறேன்னு...

"கையில் தூக்க மாத்திரை வைச்சிக்கிட்டு, தண்ணி சொம்பை எடுக்கிறதுக்குள்ள... கையில் இருந்த மாத்திரையைப் பல்லி ஒண்ணு மளார்ன்னு தள்ளி விட்டுடுச்சு... நீ சாகறதுக்கான நேரம் இப்ப வரலைன்னு பகவானே சொன்ன மாதிரி இருந்தது."

கண் மாற்று அறுவைச் சிகிச்சை மூலம் மாற்றுக் கண் பொருத்தும் யோசனையை எடுத்துக் கூறினான்.

"ஆமாம் தம்பி! காயத்ரி கூட இது விஷயமா ஒரு டாக்டர் கிட்ட கூட்டிட்டுப் போய்க் காண்பிச்சா அந்தப் பாழாப் போன விபத்தாலதான கண் பார்வை பறி போச்சுங்கிறதால, கண் தானம் பண்றவங்க மூலமா மாற்றுக் கண் பொருத்த முடிஞ்சா... எனக்குக் கண் பார்வை திரும்பக் கிடைச்சிடும்னு சொன்னாங்க...

"ஆனா அதுக்கு எண்பதாயிரம் ரூபாய் செலவாகுமாமே! லோன் போடறேன்னு காயத்ரி சொன்னா... இந்த வயசான கட்டைக்கு எதுக்கு இவ்வளவு பணம் செலவு பண்ணறே? உன் கல்யாணத்துக்குச் சேர்த்து வைன்னு நான்தான் ஒத்துக்க மாட்டேன்னுட்டேன்.

"காயத்ரியை உங்க கையில பிடிச்சுக் குடுத்துட்டாப் போதும். வேறென்ன இந்தக் கிழவிக்கு வேண்டும்னு நினைச்சேன். அந்தக் கடவுள் வேற மாதிரியா நினைச் சுட்டான்... தம்பி!"

வசந்தன் என்று நினைத்துப் பாட்டி மனக் குமுறலைக் கொட்ட... நெஞ்சில் அவனை அறியாமல் சிலுவை இட்டுக் கொண்டான், ஜேம்ஸ்.

இருந்து சாதிக்க முடியாததை, இறந்து சாதிக்கப் போகிறாயா... பெண்ணே! பாட்டிக்கு உதவுபவர்கள் இருந்து



முயற்சித்திருந்தால்... காயத்ரியின் கண்களையே கூடப் பாட்டிக்குப் பொருத்த முடிந்திருக்குமா என்று பார்த்தி ருக்கலாம்.

காயத்ரியின் மரணம் மூலம் பாட்டிக்குக் கிடைக்கக் கூடிய பணத்தில் ஒரு பகுதியைக் கொண்டே, பாட்டிக்குக் கண் பார்வை கிடைத்துவிடச் செய்யலாம். மீதிப் பணத்தைத் தன் வங்கியிலேயே போட்டு வைத்துப் பாட்டியின் வாழ்க்கைக்கு, அதை நடத்துவதற்குப் பயன்படுத்திக் கொள்ளுமாறு வழி செய்யலாம் என்று நினைத்தான்.

'அடேய்... ஜேம்ஸ்! பாட்டிக்குப் பார்வை கிடைக்க வழி வகை செய்ய வேண்டுமென்கிறாயே! பாட்டிக்குப் பார்வை கிடைத்து, உன்னைக் காண முடிந்தால், உன்னைப் பற்றிக் குடைய மாட்டாளா?

நீ காயத்ரியின் கூட வேலை செய்யவில்லை... வங்கியில் பணிபுரிகிறாய்... கிருத்துவன் என்றோ, திருமண மானவன் என்றோ... தெரிந்து கொள்ள எவ்வளவு நேர மாகும்?

அப்போது என்ன... நான்தான் பாட்டி உன் பேத்தி சாகக் காரணம்... அதற்குப் பரிகாரமாகத்தான் இதைச் செய்தேன் என்றால்... மன்னித்து விடுவாளா! ஏன்... நீ அப்படி ஒரு சூழ்நிலையில் இருந்தால், மன்னிப்பாயா?'

மனச்சாட்சி கேள்வி கேட்டது. பிறகுதான் அப்படி ஒரு சாத்தியக்கூறு பற்றி யோசித்தான்.

இருந்தாலும், தன்னுடைய சுயநலத்திற்காக, விசாலம் பாட்டிக்குப் பார்வை கிடைக்கும் வாய்ப்பு இருந்தால், அதைத் தடுக்கக் கூடாது.

இப்போது என்ன... பாட்டிக்குப் பார்வை கிடைத்து அவர் கண் விழிக்கும் முன்பாக, ஏதாவது ஒரு ஊருக்கு மாற்றல் கிடைத்து விட்டதாகக் கூறி, அவரைப் பார்ப்பதைத் தவிர்த்துவிட வேண்டியதுதான்.

ஒரு முடிவுக்கு வந்துவிட்ட ஜேம்ஸ் வசந்தன்... அடுத்து வந்த ஒரு நாளில், பாட்டியை அழைத்துக் கொண்டு நகுலின் மருத்துவமனைக்குச் சென்றான்.

பரிசோதித்துப் பார்த்து விட்டு, மீண்டும் மாற்றுக் கண் பொருத்தப்பட்டால், கண் பார்வை கிடைக்க வாய்ப்புள்ளது என உறுதி செய்து கொண்டு, பாட்டியின் பெயரைப் பதிவு செய்து கொண்டு திரும்பினர்.

அடுத்து வந்த நாட்களில், எமிலிக்கு உடம்பு முடியாமல் போனதால், ஜேம்ஸால் காயத்ரி வீட்டுப் பக்கம் போகக்கூட முடியவில்லை.

எனவே, ஒரு ஆயா ஏற்பாடு செய்து கொடுத்தான். சம்பூர்ணம் ஆயா, காலை வந்து விட்டு, பாட்டிக்குச் சாப்பாடு எல்லாம் செய்து கொடுத்து விட்டு, மாலை, இரவுக்கும் செய்து கொடுத்து விட்டுக் கிளம்பி விடுவாள்.

"என்னப்பா... இதுக்கெல்லாம் நிறையச் செல வாகுமே? நீயும், எங்களைப் போல், நடுத்தரக் குடும்பம் என்று காயத்ரி சொல்லியிருக்கிறாள். மாசம் பொறந்தா நீ உன் அம்மா, அப்பாவுக்குப் பணம் அனுப்ப வேண்டாமா?

"ஆயா வேற சேர்த்து விட்டிருக்கே... இந்த மாசத்துக்கு மளிகைச் சாமான் வேற வாங்கிப் போட்டிருக்க...!"

"ஏன்... உங்க பேரனா இருந்து இதெல்லாம் செய்யக் கூடாதா, பாட்டி? "



"இருந்தாலும்..."

"சரி, பாட்டி! இதையெல்லாம் கடனாகவே நினைச்சுக்கோங்க. காயத்ரி எல்லாச் சேமிப்பிலேயும் உங்களை நாமினியாப் போட்டிருக்கா.... அதுல எல்லாம் நிறையப் பணம் வர வேண்டியிருக்கு.... அதெல்லாம் வந்ததும்... நானே உங்ககிட்ட கேட்டு வாங்கிக்கறேன்."

இவ்வாறு சொன்னதும்தான் பாட்டி சமாதானமானாள்.

தன் சக்திக்குட்பட்டுக் கொடுப்பது, ஜேம்ஸின் குற்ற உணர்வைக் குறைக்கலாம். மன நிறைவைத் தரலாம்.

ஆனால், கைநீட்டி வாங்கும்போது பாட்டி கூனிக் குறுகிப் போவது இயல்புதானே! திரும்பப் பெற்றுக் கொள்கிறேன் என்றதும்தான் பாட்டி உதவியைப் பெற்றுக் கொள்ளச் சம்மதித்தாள்.

## 18

"நீ சரியா பதினோரு மணிக்கு வா... இப்போ சீக்கிரமாப் போயிடு." - சன்னமான குரலில் சொன்னாள், சம்பூர்ணம்.

சம்பூர்ணம் பேசிக் கொண்டிருந்த அந்த ஆள்... நடுத்தர வயதுடையவன். அழுக்குக் கைலி, பழுப்பேறிய சட்டையில் இருந்தான். கண்களில் திருட்டுத்தனம் நிரம்பியிருந்தது. சம்பூர்ணம் பேசிக் கொண்டிருக்கும் போதே... விசாலம் உள்ளேயிருந்து வெளிப்பட்டாள்.

"சம்பூர்ணம்! யார்கிட்ட பேசிட்டிருக்கே? யாராவது வந்திருக்கிறார்களா... என்ன?"

"இல்லைம்மா... இந்தப் பிச்சைக்காரனைத்தான் துரத்திக்கிட்டிருக்கேன். ஏய்... போ... அப்புறம் வா!"

அந்த அழுக்கு ஆள் அப்போதே போய் விட்டிருக்க... இல்லாத ஆளை விரட்டும் பாவனை செய்தாள்.

"சரி... சரி... உள்ளே வா. எனக்குத் தோசை ஊத்திக் கொடு. நீயும் சாப்பிடு."

"சரிம்மா..." – உள்ளே போய்விட்டாலும் ஏனோ பெரும் படபடப்பில் இருந்தாள்.

'எல்லாம் நல்லபடியாக நடக்க வேண்டும்... நடக்குமா! பாட்டிக்குக் கண் தெரியாவிட்டாலும், நல்ல கவனிப்பு சக்தி... சற்று ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.'

"சம்பூர்ணம்! எங்கே இருக்கே? சமையலறையில் இல்லையா? தீயிற வாசனை வருதே?" – என்றதும்தான் தன் நினைவிற்கு வந்தாள்.

சற்றே விசாலம் பாட்டி கண்ணயரும் நேரம். காலை பதினொரு மணி.

மெல்ல ஓசைப்படாமல் எழுந்த சம்பூர்ணம்... பூனை நடையில், பின் பக்கக் கதவைத் திறந்து கொண்டு வெளியேறிச் சமிக்ஞை காட்டினாள்.

பதில் சிக்னல் வந்ததும், தன் வீட்டை நோக்கி விரைவாக நடை போட்டாள்.

ஏதோ ஓசையில் வந்த விசாலம், "சம்பூர்ணம்! கொஞ்சம் ஓசைப்படுத்தாம மெதுவா வேலை செய்யேன். கொஞ்ச நேரம் படுக்க முடியலை..." – என்று கூறிவிட்டுப் பதிலுக்குக் காத்திராமல், தூக்கத்தைத் தொடர்ந்தாள்.



பீரோ ஓசை லேசாகக் கேட்டது போலிருந்தது. இருக்காது... பீரோவை என்னைத் தவிர யார் திறக்கப் போகிறார்கள்?

'உச்!' கொட்டிவிட்டுத் தூக்கத்தைத் தொடர்ந்தார், விசாலம்.

அவர் குளிக்கப் போகும்போது, சாவியை இடுப் பிலிருந்து கழற்றி வைத்துவிட்டுக் குளிக்கப் போனதும், சாவி எடுக்கப்பட்டு பீரோ திறக்கப்பட்டு விட்டு, திரும்பவும் பழைய இடத்திலேயே வைக்கப்பட்டு விட்டது, பாவம் அவருக்குத் தெரியாது.

திடீரெனத் தன் கணவரின் நினைவு வந்துவிடவே, தூக்கத்திலிருந்து திடுக்கிட்டு எழுந்த விசாலம் பாட்டி, "சம்பூர்ணம்! கொஞ்சம் தண்ணீ கொண்டு வாயேன்!" என்று குரல் கொடுத்துவிட்டு, பதில் இல்லாது போகவே... மெல்ல எழுந்து சமையலறைப் பக்கம் நடந்தாள்.

யாரோ தன்னைக் கடந்து போனது போன்ற ஒரு உணர்வு!

சம்பூர்ணம் நடைச் சத்தம் இப்படி இருக்காதே...! சம்பூர்ணம் எங்கே போனாள்? அப்படிச் சொல்லாமல் வீட்டுக்குப் போக மாட்டாளே!

ஏதோ உள்ளுணர்வு உந்த, வாசல் கதவைத் தட்டுத் தடுமாறிப் போய்ப் பார்க்க... அது உட்புறம் தாழிடப் பட்டிருந்தது.

பூட்டிய வீட்டுக்குள், நாம் கதவைத் திறக்காமல் யார் வரப் போகிறார்கள்?

சம்பூர்ணம் எங்காவது அக்கம் பக்கம் போயிருப்பாளாயிருக்கும்! அவள் வந்தால்... 'தன்னை எழுப்பச் சொல்லிவிட்டு, எங்கே போவதானாலும் போ...' என்று கூற வேண்டும்.

"என்னம்மா... என்ன தேடறீங்க?" சம்பூர்ணம் குரல் கேட்டதும், சமாதானமானார், விசாலம் பாட்டி.

"என்ன நீ? எங்கே போயிட்டே... இப்படியா சொல்லாம... கொள்ளாம போறது?"

"இல்லைம்மா.. என் தங்கச்சி இப்ப முழுகாம இருக்கிறதை அன்னிக்குக்கூட உங்ககிட்ட சொன்னேனே...! அவளுக்குப் பிடிக்குமேன்னு நம்ம மூணாவது வீட்டுல மாமரம் இருக்குல்ல... அங்கே கேட்டு ஒண்ணு இரண்டு மாங்காய் வாங்கிட்டு வரலாம்னு போனேனா... நீங்க நல்லா அசந்து தூங்கிக்கிட்டிருந்தீங்களா... அதான் இப்ப வந்துடப் போறோமேன்னு அப்படியே போயிட்டேன். மன்னிச்சிடுங்கம்மா!"

சம்பூர்ணத்தின் போலிப் பணிவில் என்ன சொல்வதென்று வார்த்தை வராது தடுமாறிய விசாலம்...

சட்டென பர்ஸைத் திறந்து ஐம்பது ரூபாய் நோட்டொன்றை எடுத்து நீட்டினாள்.

வசந்தனின் ஏற்பாடு இது!

நிறைய மடிப்புகள் உள்ள பர்ஸில், ஒவ்வொன்றிலும், ஒன்றில் ஐம்பது ரூபாய்... இன்னொன்றில் நூறு ரூபாய் எனப் பிரித்துப் போட்டு, அடையாளம் சொல்லி... கைச் செலவுக்குப் பயன்படுத்தச் சொல்லியிருந்தான்.



எப்பிறவியில் செய்த புண்ணியமோ, அந்தப் பையன் இப்படி ஒத்தாசையாக இருக்கிறது. கண்கள் பனித்தவாறே கூறினார். "இந்தா... ஐம்பது ரூபாய்! போகும்போது, உன் தங்கச்சிக்கு ஏதாவது பலகாரம் வாங்கிட்டுப் போ!"

"சரிங்கம்மா..." என்றவாறே வாங்கிய சம்பூர்ணத்தின் இதழோரம் கேலிப் புன்னகை அரும்பியது.

## 19

அஞ்சல் துறையில் காயத்ரி போட்டு வைத்திருந்த சேமிப்புகளை எடுக்க, அவள் பாட்டியிடம் நாமினி பாரத்தில் கையெழுத்து வாங்க வேண்டியிருந்தது.

அதை எடுத்துக் கொண்டு, வந்த ஜேம்ஸ் வசந்தன் பாட்டியிடம் பேசிக் கொண்டிருந்து விட்டு, கையெழுத்து வாங்கிக் கொண்டு, சுவாதீனமாகப் பீரோவைத் திறந்து, அஞ்சல் பத்திரங்களை எடுத்துக் கொண்டான்.

அப்போதே, சாவியைப் போடுமுன்பே... பீரோ திறந்திருந்தது குறித்துத் துணுக்குற்றது, மனது.

'என்ன இந்தப் பாட்டி... இப்படி திறந்த வாக்கிலேயே வெறுமனே சாத்தியிருக்கிறாள். சற்றுக் கவனமாக இருக்கச் சொல்லிச் சொல்ல வேண்டும்...' - நினைத்துக் கொண்டான்.

வேலைக்கார ஆயா முன்னாடி சொல்ல வேண்டாமே... என்று நினைத்து, பின் ஒருநாள் தனியாக இருக்கும் போது, பாட்டியை உஷார்ப் படுத்த வேண்டும் என்று நினைத்துக் கொண்டான்.

அதுவே தான் செய்யும் மிகப் பெரிய தவறு என்று அப்போது அவனுக்குத் தெரிந்திருக்கவில்லை.

எப்படியும் அஞ்சல் நிலையத்தில் வேலையை முடித்துப் பணம் கொடுக்க, ஒரு வாரம் ஆகிவிடும் என்று சொல்லிவிட்டு விடை பெற்றான்.

சந்தோஷமாக வரவேற்ற எமிலியைப் பார்த்ததும், ஜேம்ஸுக்கும் சந்தோஷம் ஒட்டிக் கொண்டது.

"என்னடா? ரொம்ப நாளைக்கப்புறம் ரொம்ப சந்தோஷமா இருக்கே... என் பையன் என்ன சொல்றான்?"

"பையன் இல்ல... பொண்ணு!"

"சரி... ஒரு பையன்... ஒரு பொண்ணு... விஷயத்தைச் சொல்லு. என்ன, இன்னிக்கு என் எமிலி ரொம்பச் சந்தோஷமா இருக்கு!"

"அப்பா போன் பண்ணாருங்க.. பியூலாவுக்குத் திடீரென்று கல்யாணம் ஃபிக்ஸ் ஆகியிருக்காம். பையன் பிஸினஸ் தான்... ஆனா பெரிய இடமாம்.. நம்ம ஃபாதர் தேவசகாயத்தோட நண்பரோட பையன்தான்..."

"கேட்கவே சந்தோஷமா இருக்கு... எமிலி! எப்ப முடிவு பண்ணப் போறாங்க... கேட்டியா?"

"நீங்க வந்தவுடனே போன் பண்ணச் சொன்னாரு அப்பா... உங்ககிட்டயும் ஒரு வார்த்தை கேட்டுட்டு... எல்லாரும்... அதாவது நீங்க... அப்பா... நான் போய் ஒரு நாள் ஃபிரண்ட்லியா பையனைப் பார்த்துட்டு வரலாம். எல்லாருக்கும் பிடிச்சிருந்தா, ஒரு சண்டே நம்ம சர்ச்சுலேயே, நிச்சயம் மாதிரி வைச்சுக்கலாம்னு அப்பா சொன்னார்."

உடனே கைபேசியை எடுத்து... ஜேம்ஸ், தன் மாமனாரைத் தொடர்பு கொள்ள, அந்த வாரத்தில் ஒரு நாள் எல்லாரும் போய்ப் பையனைப் பார்த்து விட்டு வருவது என்று முடிவானது.



தேவா வில்லியம்ஸ் இரும்புத் துண்டுகளை வாங்கி, அதைக் கம்பிகளாக்கி விற்கும் தொழிற்சாலை வைத்திருந்தான்.

அம்பத்தூரில் மிகப் பெரிய பரப்பளவில் இருந்த தொழிற்சாலைக்கு எமிலி, ஜேம்ஸ், எமிலியின் பெற்றோர் போய்ப் பார்த்து விட்டு வந்தனர்.

பையன் நல்ல அழகாக, பார்க்க... பாந்தமாக இருந்தான். அனைவருக்கும் ரொம்பத் திருப்தி.

நிச்சயதார்த்தம்...

அடுத்த ஞாயிறன்று சர்ச்சில் நடத்துவதென்று முடிவு செய்யப்பட்டது.

இதில் பிஸியான ஜேம்ஸ்... அஞ்சலகத்துக்குப் போய், காயத்ரியின் பாட்டிக்குப் பணம் வருவது விஷயமாக விசாரிக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டானே தவிர, அதற்கான கால அவகாசம் கிடைக்கவில்லை.

அதேபோல், சம்பூர்ணம் ஆயா இருப்பதால், அவர் பார்த்துக் கொள்வார்...

இந்த நிச்சயமெல்லாம் முடிந்து, ஒரு எட்டு போய்ப் பார்த்து விட்டு வரவேண்டும் என்று நினைத்துக் கொண்டான்.

அது எவ்வளவு தவறாகப் போகப் போகிறதென்று அப்போது அவனுக்குத் தெரியவில்லை.

# 20

அன்று என்னவோ, விசாலம் பாட்டிக்குத் தன் கணவரின் நினைவாகவே இருந்தது.

அவர் போய், இருபது வருடங்களாகி விட்டன. அப்பா... நாட்கள் எவ்வளவு வேகமாக ஓடுகின்றன... நினைத்துக் கொண்டாள்.

அதுவும் அவர் தலைவலி என்று ஒரு நாள்கூடப் படுத்ததில்லை. அன்று, ஒரு சாவுக்குப் போய் விட்டு வந்து நல்ல மழையில், கிணற்றில் தண்ணீர் இறைத்துத் தலையில் விட்டுக் கொண்டு வந்தவர்தான்...

அடுத்த இரண்டு நாட்களுக்கு எழுந்திருக்கவே இல்லை. கடுமையான ஜூரம். தூக்கித் தூக்கிப் போட்டது. பையனுக்குப் போன் செய்து விட்டு, அவனும் உடனே வந்துவிட... ஆஸ்பத்திரிக்குப் போன் செய்தும் பிரயோஜனம் இல்லாமல் போய்விட்டது.

பழசெல்லாம் நினைக்க... கண்களில் நீர் கோத்துக் கொண்டது.

கடைசியாக, அவர் சாவதற்குச் சில தினங்களுக்கு முன், ஆசையாய் வாங்கிக் கொண்டு வந்த, அந்தக் கல் வைத்த வளையல்கள் ஞாபகம் வந்தது.

அமெரிக்க டயமண்டுடன், சிவப்புக் கலர் கல் வைத்து... ஒரு ஜோடி வளையல்கள்.

உடனேயே போட்டுக் கொள்ளச் சொல்லி, அவர் கேட்டும்கூட, 'செவ்வாய்க்கிழமை இன்று. போயும் போயும்



செவ்வாயன்றா புதுசு போடுவார்கள்... நாளை போடுகிறேன்!' என்று சாமியிடம் வைத்தவள்தான்.

கடைசிவரை போட முடியாமலேயே போய் விட்டது. எப்பவும் அவர் ஞாபகம் வரும் போதெல்லாம் அந்த வளையல்களைக் கையில் எடுத்து நெஞ்சோடு வைத்து ஸ்பரிசிப்பாள்.

மெல்ல எழுந்து... பீரோவைத் திறந்து, லாக்கரில் கை விட்டுப் பார்த்ததும் துணுக்குற்றாள், பாட்டி!

இங்கேதானே வைப்போம்... காணாமல்... எப்படி?

உடனே மனசு பரபரக்க... மற்ற நகைகள் இருக்கிறதா... என்று அவசர அவசரமாகக் கைகள் துழாவின.

இரத்தக் கொதிப்பு அவசரமாய் ஏறியது. ஒன்றுமே இல்லாமல், லாக்கர் துடைத்து வைத்தாற்போல்...

கடவுளே! வேறு எங்காவது ஞாபக மறதியாய் வைத்தோமா...!

இல்லையே... சின்ன ஸ்பூனிலிருந்து நகைகள் வரையுமே... வைத்த இடத்தை விட்டு ஒரு இன்ச்சும் மாறியிருக்காதே!

கடவுளே... நாராயணா! அத்தனையும் சேர்த்துக் குறைந்தது முப்பது சவரன் தேறுமே! யோசித்துப் பார்த்தார்.

பீரோ கூடப் பூட்டித்தானே இருந்தது... நாம்தானே சாவி போட்டுத் திறந்தோம்.

அப்படியே சுவருக்குச் சாய்ந்து உட்கார்ந்தார். கண்கள் தாமாகக் கண்ணீர் உகுத்தன. துடைக்கக்கூடத் தோன்றாது உட்கார்ந்திருந்தார்.

காயத்ரியின் அம்மா இருந்த வரை அவள்... அவள் போனபின் காயத்ரி.... எனக் கண்ணுக்குச் சமமாகப் பார்த்துக் கொண்டதில், தன் பார்வைக் குறைபாட்டை, ஒரு பொருட்டாகவே எடுத்துக் கொண்டதில்லை, அவள்!

அந்த வீட்டின் உள் வரை, சிரமமின்றிப் புழங்க முடிந்ததில், வாழ்க்கை எளிதாகவே மாறியிருந்தது, பாட்டிக்கு.

காயத்ரிக்குப் பிறகுகூடத் தான் சிரமப்படுவதை விரும்பாத கடவுளே... தனக்கு உதவ, வசந்த்தை அனுப்பி யிருக்கிறான் என்றல்லவா... கடவுளுக்கு நன்றி கூறிக் கொண்டிருந்தார்.

இப்போது... யாரோ பீரோவைத் திறந்து நகைகளை யெல்லாம் எடுத்துச் சென்றதுகூட அறியாதவளாய் இருந்திருக்கிறாள். தன்னிரக்கம் ஆட்கொண்டது.

இன்னும் என்னவெல்லாம் காணோமோ! என் கணவர் ஆசையாய்ச் செய்து போட்ட நகைகள்... என் கண்மணி காயத்ரி கல்யாணத்திற்கென்று ஆசையாய்ப் பொத்தி வைத்த நகைகளையே காணோம்.

இனி மற்றவை, புடவைகளோ... சாமான்களோ... போனால் என்ன... வந்தால் என்ன...! எழுந்திருக்கக்கூடத் திராணியின்றி அமர்ந்திருந்தாள்.

இந்த வீட்டில் என்னைத் தவிர, வரப் போக இருப்பது இரண்டே பேர்!

என் கண்மணியைக் காதலித்த கருணைக்காக, அவள் ஆத்மாவிற்காக... என்னை வந்து பார்த்து, உதவி... என் பேரன் போல் வளைய வரும் வசந்த் தம்பி.



இன்னொன்று... ஆயா சம்பூர்ணம்... என்ன ஒரு பணிவு வார்த்தைகளிலேயே...! பாந்தமாகவும் வேலை செய்கிறாள்.

எங்க அம்மா மாதிரி நீங்க...ன்னு ரெண்டு மூணு தரம் சொல்லியிருக்கிறாளே... அவளைச் சந்தேகப்படுவதா?

எவ்வளவு நேரம்தான் உட்கார்ந்திருந்தாளோ, சம்பூர்ணம் வந்து கதவைத் தட்டியதும்தான், உணர்வுக்கு வந்தாள்.

"என்னம்மா... ஒரு மாதிரி இருக்கீங்க? தலை வலிக்குதா? மாத்திரையும் சூடா காபியும் கொண்டு வரவா?"

பதிலேதும் சொல்லாமல்... செல்லும் விசாலத்தைத் தொட்டு உலுக்கினாள்.

"என்னம்மா... உடம்பு சரியில்லையா... என்னாச்சு?"

துக்கம் தொண்டையை அடைக்க ஒருவாறாகச் சொல்லி முடித்தாள், விசாலம் பாட்டி.

"அத்தனையும் சேர்த்து முப்பது சவரன்டி! கண்ணு ரெண்டும் நல்லா தெரியறவங்களே... தொலைக்கிற இந்தக் காலத்தில... கண் தெரியாட்டியும் கூட எவ்வளவு பத்திரமா பார்த்துப் பார்த்து வைச்சிருந்தேன்."

"சாப்பாட்டுக்குக் கஷ்டப்பட்டாலும் கூட, அதை விற்க மனசு வரலையே... நாளைக்கு எனக்கு ஒண்ணு ஆச்சுன்னா என் கருமாதிச் செலவுக்கு ஆகும்னு... அனாதைப் பிணமா... நாதியத்துப் போயிடக் கூடாதேன்னு சேர்த்து வைச்சிருந்தேனே...!"

சம்பூர்ணத்திற்கு என்ன சொல்வதென்று தெரிய வில்லை.

"என்னம்மா... நீங்க! காலையிலேயிருந்து, சாயங் காலம் வரை நான் இங்கதானே இருக்கேன். மீதி நேரத்துல தனியா இருக்கிறப்பதான் யாரோ, எப்படியோ எடுத்திருக் கணும். கொஞ்சம் கவனமா இருக்கக் கூடாதாம்மா!

"சரிம்மா... மனசைத் தேத்திக்குங்க... கண் தெரியாத உங்களை ஏமாத்தி... நகைகளை எடுத்தவன் கை, கால் விளங்காமப் போயிடுவான்... பாருங்க! அது அவனுக்கு ஒட்டவே ஒட்டாது..." - இன்ஸ்டண்ட்டாகச் சாபமிட்டவள், "நான் காலையிலிருந்து, சாயங்காலம் வரை இங்கேதான் இருக்கேன். என்னை மீறி யாரும் வரப் போக முடியாது. அப்புறம் வேறு யார் இங்கே வரப் போறாங்க?"

ஒரு சின்னப் பொறி கிடைத்த தினுசில் அவள் முகம் பிரகாசமானது.

"அம்மா! இவ்வளவு நடந்தப்புறம் இப்பதான் ஒண்ணு ஞாபகம் வருது. ஆனா அதைச் சொல்லி என்ன... நீங்க நம்புவீங்களோ, மாட்டீங்களோ...?"

"முதல்ல நீ விஷயத்தைச் சொல்லு... நகை காணாம போனதைப் பத்தியா... சொல்ல வந்தே?"

"அம்மா... நீங்க தப்பா எடுத்துக்கக் கூடாது. வசந்த் தம்பி... இங்கே வந்து இரண்டு நாள் இருக்கும்... இல்லையா! அன்னிக்குக் கடைசியா... வந்து ஏதோ பாரம் கையெழுத்து வாங்கிக்கிட்டுப் போச்சு இல்லையா... அன்னிக்குக் கூடவே.. ஒரு துணிப் பையை மறைச்ச மாதிரி



எடுத்துக்கிட்டுப் போச்சு. எனக்கு அப்ப வித்தியாசமா பட்டாலும், அதைப் பெரிசா எடுத்துக்கத் தோணலை!

"இப்ப... அதையும் இதையும் ஒண்ணா யோசிச்சுப் பார்த்தா..." இழுத்தாள்... "அப்புறம் டெய்லி வந்திட்டிருந்த அந்தத் தம்பி வேற இரண்டு நாளாய்க் காணோம்!"

சொல்லவும் யோசிக்கத் தொடங்கினாள், விசாலம். அவள் முகம் கறுத்து மாறுவதைப் பார்த்த சம்பூர்ணத்தின் மனசு திருப்தியானது.

## 21

இன்று மாலை சீக்கிரம் கிளம்பி, விசாலம் பாட்டியைப் பார்த்துவிட்டு வர வேண்டும் என்று நினைத்தவாறே அலுவலில் அமர்ந்தான், ஜேம்ஸ்.

ஒருவாறு வேலைகளை முடித்து விட்டு, இனிக் கிளம்பலாம் என்று நினைத்தபோது, கைபேசி லைனில் வந்தாள், எமிலி.

"என்னங்க... அப்பா, கல்யாண விஷயமாய் பேச, உங்களை இன்னிக்கு வரச் சொன்னார்... என்னையும் கூட கூப்பிட்டிருந்தார். ஆனா, நேத்திக்கு ரொம்ப அலைச்சல் இல்லையா! அதனால வயிறெல்லாம்... பிசையுற மாதிரி கொஞ்சம் அவஸ்தையாயிருக்கு...."

"என்ன எமிலி! என்ன பண்றது உனக்கு? நான் இப்பவே வர்றேன். டாக்டர்கிட்ட போயிட்டு வந்துடலாமா?"

"அதெல்லாம் வேண்டாம். நீங்க போனதும்... கொஞ்சம் மயக்கமாயிருந்தது. எழக்கூட முடியலை. இப்ப

பரவாயில்லை. கொஞ்சம் ரெஸ்ட் எடுத்ததுமே... பரவாயில்லை போல இருக்கு. நீங்க மட்டுமாவது போய் அப்பாவைப் பார்த்து என்ன... ஏதுன்னு கேட்டுட்டு வர்றீங்களா?"

சரியென்று ஒப்புக்கொண்டு... கைபேசியை அணைத்தான். இன்றும் காயத்ரி வீட்டுக்குப் போக முடியாது.

முதலில் காயத்ரியின் சாவுக்குத் தான் காரணமாகி விட்டோமோ என்ற குற்ற உணர்வால் உந்தப்பட்டு... உதவப் போய்... தன்னாலேயே அந்தப் பாட்டிக்கு ஏதாவது ஒரு விதத்தில் உதவ வேண்டும் என்ற எண்ணம் வலுப்பட்டு விட்டது.

பக்கத்து வீட்டுக்குப் போன் செய்து கூப்பிடச் சொல்லிப் பேசலாமா என்ற எண்ணத்தை... தோன்றிய உடனேயே கைவிட்டான்.

பாட்டிக்குக் கண் பார்வை கிடைக்க ஏதேனும் வழிவகை செய்து விட்டுப் பின் ஒதுங்கிக் கொள்ள வேண்டும் என்று நினைத்திருக்கும் வேளையிலே, போன் செய்யப் போய்... அவர்கள் யாரென்று கேட்டால், ஏதாவது சொல்லி அறிமுகப்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஏன் வீணான குழப்பத்திற்கு விதை போட வேண்டும்?

சில சமயம் உள்ளுணர்வில் தோன்றும் சில விஷயங்களைக் கேள்வி கேட்காமல், செயல்படுத்தினாலே நன்றாய் இருக்கும்.

அதைச் செய்யலாமா... வேண்டாமா... ஏன் செய்ய வேண்டும் என்று குழம்பி...



கேள்வி கேட்டுச் சிரமப்பட்டுத் தப்பான முடிவு எடுத்துவிடுவோம்.

அவ்வாறே முடிவெடுத்த ஜேம்ஸ்... பியூலாவின் கல்யாண ஏற்பாடுகளில் பிஸியானான்.

எமிலி குடும்பத்தினருக்குப் பையனைப் பிடித்துவிட...

அவர்கள் குடும்பத்தினர், அடுத்த ஞாயிறு எமிலி வீட்டுக்கு வர, ஃபாதரும் வந்து சேர்ந்தார்.

ஃபாதர் முன்னிலையில்... நன்கு அலங்கரிக்கப்பட்டு கூட்டிக் கொண்டு வரப்பட்ட பியூலாவுக்கும் தேவ வில்லியம்ஸுக்கும் திருமணம் உறுதி செய்யப்பட்டது.

மோதிரம் அப்போதே மாற்றிக் கொள்ளப்பட... "தேவன் இணைத்து வைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கக்கடவது!" என்று ஃபாதர் ஜெபிக்க... நிச்சயம் முடிந்தது.

மீதி ஏற்பாடுகளை ஃபாதர் பார்த்துக் கொள்வதாகக் கூற... எல்லாருக்கும் சந்தோஷம்.

எல்லாம் நல்லபடியாக முடிந்து வீடு திரும்பினர், ஜேம்ஸும் எமிலியும்.

நடுநடுவே, காயத்ரியின் பாட்டியைப் பற்றின நினைவுகள் வந்தாலும்... அதையும் மீறி அழுத்திய வேலைப் பளுவினால், தள்ளிப் போட்டுக் கொண்டே வந்த ஜேம்ஸ்...

மறுதினம் அலுவலகம் முடிந்து, எப்படியும் அங்கு போய்விட்டு வருவது என்று தீர்மானித்துக் கொண்டுதான் அன்றிரவு உறங்கச் சென்றான்.

# 22

கதவைத் திறந்ததும், "வாங்க தம்பி!" என்று வாயார வரவேற்பாளே, பாட்டி...

இன்னிக்கு என்னவாயிற்று... குழம்பினான், ஜேம்ஸ்.

"எங்கே வந்தீங்க?"

"பாட்டி... நீங்க? ஓ...! நான் ரொம்ப நாளா இந்தப் பக்கமே காணலைன்னு கோபமா... உங்களுக்கு?"

"என்ன... இன்னமும் மிச்சம் மீதி எதாவது இருந்தா எடுத்துட்டுப் போகலாம்ன்னு பார்க்க வந்தீங்களா?"

"நீங்க என்ன சொல்றீங்க, பாட்டி! ஒண்ணும் புரியலையே?"

"புரியாத மாதிரி பாவனை பண்ற உங்களுக்கு எப்படிப் புரியும்! சிறுகச் சிறுகச் சேர்த்த நகைகள்... எல்லாம் காயத்ரி கல்யாணத்திற்காக ஆசையா சேர்த்து வைச்சது... அவளே போயிட்டா...

"சரி, நாளைக்கு எனக்கு ஏதாவது ஒண்ணு ஆனா, கருமாதி பண்ணக்கூட காசில்லாம கிழவி போயிட்டான்னு யாரும் பேசக்கூடாதுன்னுதான் பக்கத்து வீட்டம்மாகிட்ட கூட சொல்லி வைச்சிருந்தேனே... என்னை அந்த நகைகளை வித்தாவது நல்லபடியா கரை சேர்த்துடுங்கன்னு...

"ஏன் தம்பி! உங்களுக்கு அந்த நகைகள்தான் குறின்னா... நேரடியா சொல்லியிருந்தா... நானே அதையெல்லாம் தூக்கிக்கூட கொடுத்துருப்பேனே...! ஏன் காயத்ரி கல்யாணத்திற்குப் போட்ட மாதிரியாவது நினைச் சிட்டிருந்திருப்பேனே...!



"இப்படி காயத்ரி ஆத்மா சாந்தி அடையவாவது எனக்கு உதவறதா சொல்லி... இப்படி மோசம் பண்ணிட்டீங்களே... தம்பி! இப்ப மட்டும் என் காயத்ரி ஆத்மா உங்களை மன்னிக்குமா? இப்ப எதுக்குப் பார்க்க வந்தீங்க? இன்னும் இங்கேயிருந்து என்ன எடுத்துட்டுப் போக வந்தீங்க?"

"இந்தத் தம்பிகிட்ட என்னம்மா பேச்சு! ஒழுங்கா நகைக்களைக் குடுத்துடச் சொல்லுங்க... போலீஸுக்குப் போன் பண்ணலாம்மா..."

புதிதாக ஒரு குரல் வர நிமிர்ந்தான், ஜேம்ஸ். வேலைக்காரி சம்பூர்ணம்.

நகைகள் திருட்டுப் போயிருப்பது மட்டும் பாட்டியின் பேச்சிலிருந்து புரிந்தது... பதறினான்.

"என்ன பாட்டி சொல்றீங்க? நகைகள் திருட்டுப் போயிருச்சா? எப்போ... எப்படி? நான் வேற வேலையா... பிஸியாயிட்டதால, இங்கே பத்து நாளா வர முடியலை. நீங்க ஏதேதோ சொல்றீங்களே?"

"ரொம்ப நடிக்காதீங்க தம்பி! நீங்க எதுக்காக இந்த வீட்டுக்குள்ள உதவி பண்ற மாதிரி வந்தீங்கன்னு இப்ப புரிஞ்சு போச்சு... உங்க சாயம் வெளுத்துப் போச்சு!

"ஏதோ இத்தனை நாள் என் பேத்தி பேரைச் சொல்லிக்கிட்டு இங்கே வரப் போக இருந்தீங்க! அவளைக் கொஞ்ச நாள் காதலிச்சுக் கல்யாணம் பண்ணிக்கிறதாகவும்

இருந்திருக்கீங்க. அதுக்காக, நான் போலீஸுக்குப் போகலை. இனிமே இங்கே வராதீங்க...

"வேற யார் வீட்டுலயாவது இது மாதிரி போய், ஒட்டிண்டு சமயம் கிடைக்கும் போது, எல்லாத்தையும் சுருட்டிக்க முடியுமான்னு பாருங்க... எனக்கு என்ன சொல்றதுன்னே புரியலை... எல்லாம் யோசித்துப் பார்த்தால்... நீங்கதான் என் காயத்ரியைக் காதலிச்ச வசந்த் தம்பியான்னே சந்தேகமா இருக்கு!"

படபடவென்று பேசிவிட்டு, உள்ளே போக முயன்ற பாட்டி தடுமாற, சம்பூர்ணம் தாங்கிப் பிடித்து உள்ளே அழைத்துச் செல்ல, கதவு படாரெனச் சாத்தப்பட்டது.

அதுவும், அந்தக் கடைசி வரிகளில் ரொம்பவே நொந்து போனான், ஜேம்ஸ்.

"என் காயத்ரியைக் காதலிச்ச வசந்த் தம்பி நீங்க தானான்னு சந்தேகமா இருக்கு!"

எந்த வார்த்தைகள் பாட்டியின் வாயிலிருந்து வரக்கூடாதென்று நினைத்தானோ... அவை கொடிய ரூபமேந்தி வந்து விட்டன.

நகைகள் எவ்வாறு திருட்டுப் போயின... என்ன வாயின... என்று விசாரிக்கக்கூட விடாமல், அவசரமான குற்றச்சாட்டு!

தான் வராத இந்த நாட்களில், என்றோ ஒரு நாள் நகைகள் திருட்டுப் போயிருக்க வேண்டும்!

நன்றாகக் கண் தெரிந்த, புத்தியுள்ளவர்களே ஏமாறும் இக்காலத்தில், கண் தெரியாத பாட்டியை ஏமாற்றி நகைகள்



திருடிக் கொண்டு போவது அவ்வளவு கடினமான காரியமா, என்ன?

நகைகள் திருடு போனதும், அதன் தொடர்ச்சியாகத் தானும் இங்கு வராமலே போனதும்... என்னை நகைகள் திருடவே, நோட்டமிட்டு... அவர்களுக்கு உதவி பண்ண வந்தவனாகப் பாட்டி நினைத்துக் கொண்டுள்ளாள்.

இத்தனை நடந்த பிறகுதானே, பாட்டியிடம் நகைகள் இருந்திருப்பதே எனக்குத் தெரியும்... நினைத்துக் கொண்டான்.

பாட்டி மீது எழுந்த கோபத்தையும் மீறி, அந்த நகைகளை எவ்வாறாவது மீட்டுத் தர வேண்டும் என்ற ஆதங்கம் உண்டானது.

ஆனாலும் கோபமும் சலிப்பும் தொடர்ந்தது. அந்த நகைகளைக் கொள்ளையடிக்க வந்தவன் என்றால், இவ்வளவு நாட்கள் காத்துக் கொண்டிருக்க வேண்டுமா என்ன...!

முதல் தடவை பாட்டி, தண்ணீர் கொண்டு வருகிறேன் என்று உள்ளே போனபோதே, மயக்க மருந்தால் மயக்கி, பீரோவையே காலி செய்திருக்க முடியுமே?

நகைகளைக் கொள்ளையடிக்க இத்தனை நாட்கள் உதவி செய்வது போல நடித்தேனாம்!

சே...! உதவி செய்பவர்களுக்கும், திருடர்களுக்கும் வித்தியாசம் தெரியாமல் என்ன...

வயது... நாலையும் ஆராய்ந்து பார்க்கும் பக்குவத்தைக் கொடுத்திருக்க வேண்டாமா?

யாரோ, எப்படியோ போகிறார்கள் என்று போயிருக்க வேண்டும்! நடுவில் காயத்ரி செத்ததற்கு நானே காரணம் என்று என்னை நான் குழப்பிக் கொண்டு... உதவுகிறேன் என்று போய்... வேண்டாததை இழுத்து விட்டுக் கொண்டு... தன்னைத் தானே நொந்து கொண்டான்.

இதெல்லாம் தேவைதான் எனக்கு! கையில் வைத்திருந்த அஞ்சலகத்திலிருந்து பெற்று வந்திருந்த காசோலையைக் கிழித்துப் போடப் போனவன், பாதியிலேயே கைவிட்டான்.

இது காயத்ரியின் பாட்டியைப் போய்ச் சேர வேண்டியது. இரண்டு நாட்கள் பொறுத்து... தபாலில் அனுப்பி விட்டு... ஒதுங்கி விட வேண்டியதுதான்!

இனிமே மனச்சாட்சி, அது இதுன்னு போட்டுக் குழப்பிக் கொள்ளாமல், மற்றவர்களைப் போல் இருக்க வேண்டும் என்று வருத்தத்துடன் முடிவு செய்து கொண்டான்.

## 23

**கோ**பமும், வருத்தமும் மனிதனைச் சிந்திக்க விடாமல் செய்வதில் பெரும் பங்கு வகிக்கின்றன.

காரணம், கோபத்தில் மற்றவர்களுடைய நியாயத்தை நினைத்துப் பார்க்கும் பொறுமை கூட இருப்பதில்லை.

நான் நல்லவனாக இருக்க நினைத்ததற்கு, இதெல்லாம் வேண்டும்தான்... என்று வருத்தத்துடன் ஒரு



முடிவுக்கு வந்த ஜேம்ஸ்... கஷ்டப்பட்டு, அந்த நினைவுகளை உதறி, இயல்பு வாழ்க்கையில் இருத்திக் கொண்டான்.

வழக்கம் போல், பைபிளைப் படிக்கும் போது, 'தாம் செய்வது இன்னதென்று அறியாமல், இவர்கள் செய்யும் பிழைகளைப் பொறுத்தருளும், ஆண்டவரே!' என்று ஜீசஸ் உடைய பக்குவ மொழிகள் உள்ளத்தில் தைத்தன.

மறக்க நினைத்த எண்ணங்கள் தலை தூக்கின.

ஒருவேளை காயத்ரியின் பாட்டி...

தன்னையறியாமல், அவனைக் குற்றவாளியாக நினைக்கத் தூண்டப் பட்டிருக்கலாமோ!

கண் தெரியாதவள். பாவம்... தன்னைப் பற்றி யாரேனும் தவறாகச் சொல்லியிருந்தால்...?

உடனே சட்டென வேலைக்கார ஆயா... சம்பூர்ணம் நினைவு வந்து போனது.

தன்னைப் பற்றி அவன் விளக்கக்கூட அவகாசம் தராமல், பாட்டியை அவசரமாய் அவள் உள்ளே கூட்டிக் கொண்டு போனது போல் தோன்றியது.

என்னதான் கண் தெரியாவிட்டாலும், பாட்டிக்கு மற்றப் புலன்களில் கூர்மை அதிகம்.

தன்னையே எவ்வளவு கேள்விகள் கேட்டு, பின்தானே உள்ளே அனுமதித்தாள்!

அப்படி யாரையும் அஜாக்கிரதையாக உள்ளே விடுபவள் அல்ல...

பின், தன்னைத் தவிர அந்த வீட்டில் உள்ளே போய் வருவது சம்பூர்ணம் மட்டுமே!

சட்டென, ஒரு எண்ணம் மேலெழுந்தது. ஒருவேளை பாட்டியை ஏமாற்றி, அவள் அசந்திருக்கும் சமயம்... அந்த ஆயா சம்பூர்ணமே நகைகளை எடுத்திருந்தால்...

பாட்டிக்கு என்ன தெரியப் போகிறது? அதுவும் தானும் அந்தப் பக்கமே சில நாட்களாகப் போகாதிருந்து விட்டதால், தன் மேல் சந்தேகத்தைத் திருப்பியிருக்க வேண்டும்...

உடனேயே, அதை நிரூபித்து... தான் எந்தத் தவறும் செய்யவில்லை என்பதோடு, பாட்டியின் நகைகள் திரும்ப அவருக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் வலுப்பட்டது.

எவ்வளவு கோபம் வந்தபோதும், பாட்டிக்கு உதவ வேண்டும் என்ற ஈர்ப்பு உள்ளூர இருந்தது.

இது மாதிரி ஏமாற்றி, சம்பூர்ணம் அந்த வீட்டின் மிச்ச விலையுயர்ந்த பொருட்களையும் எடுத்துச் செல்லுமுன் கையும் களவுமாகப் பிடிக்க வேண்டும்...

எப்படி இதைச் செய்வது? தனக்குத் தெரிந்த போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் ஒருத்தர் இருந்தாலும், அவருடைய எல்லையில் இந்த ஏரியா வராதே!

பின், ஒருவாறு யோசித்து, ஒரு முடிவுக்கு வந்தான்.

மறுநாள் காயத்ரி வீட்டுப் பக்கம் போய், அந்த ஏரியா கூர்க்கா பற்றி விசாரித்த போது, அவனை இரவு பத்து மணிவாக்கில்... அந்த ஏரியா டீக்கடை பக்கம் பார்க்கலாம் என்ற தகவல் கிடைத்தது.



நிறையக் கேள்விகள் கேட்ட எமிலியை ஒரு வழியாகச் சமாதானப்படுத்தி, இரவு பத்து மணிக்கு, டீக்கடையில் கூர்க்காவைப் பிடித்தான்.

அவனைத் தனியாகத் தள்ளிக் கொண்டு போய், காதோடு ஏதோ சொல்ல, சந்தோஷமாகத் தலையாட்டினான், அவன். கூடவே, ஜேம்ஸ் கொடுத்த நூறு ரூபாய் அவனை இன்னும் கொஞ்சம் இளிக்க வைத்தது.

ஏற்கெனவே இரண்டு மூன்று வீடுகளில் மாதா மாதம் பணம் கேட்க கூர்க்கா போனபோது, 'எவ்வளவு திருட்டு நடக்கிறது... நீ என்னதான் செய்யறே? என்னவோ மாதா மாதம் உனக்குத் தண்டம் அழ வேண்டியிருக்கு...' என்று சொல்லி, வேண்டா வெறுப்பாக அந்தப் பத்து ரூபாயைக் கொடுத்தபோது, அவனுக்குக் கடுப்பாக வந்தது.

இதோ... தன்னுடைய திறமையை நிரூபிக்கத் தானாகவே ஒரு சந்தர்ப்பம் தேடி வந்ததில் ரொம்பவே மகிழ்ந்து போனான். சந்தோஷமாய்த் தலையாட்டினான்.

## 24

"இதோ, வர்றான் பாரு... ஜேம்ஸ்! அவனைக் கேளு..." - கேசவ் கூற, வரதராஜன் ஒரு துண்டுச் சீட்டைக் கொண்டு வந்தான்.

"என்ன கேசவ்? என் தலையை உருட்டற?"

"இல்லைடா... ராயப்பேட்டையில ஒரு அட்ரஸ் கேட்டான், வரதராஜன். அந்த ஏரியா உனக்குத் தண்ணி

பட்ட பாடாச்சே... அதான் உன்னைக் கேளுன்னு சொல்லிட்டிருந்தேன்...." - நமுட்டுச் சிரிப்புடன் கேசவ் சொல்ல... தீயை மிதித்த தினுசில் திகைத்து நிமிர்ந்தான், ஜேம்ஸ்.

ஏனெனில் ராயப்பேட்டையில் அல்லவா காயத்ரி வீடு இருக்கிறது. இவனே, அங்கு நம்மைப் பார்த்திருக்கணும்... அல்லது பார்த்த யாராவது போட்டுக் குடுத்திருக்கணும்!

"உனக்கு அட்ரஸ்தானே வேணும். வழி சொல்றேன்... அதை விட்டுட்டு... என்னை வம்புல இழுக்காதப்பா!"

"இல்லை... உன்னை அங்கே நிறையத் தடவை..." - இழுத்தவனை, அப்படியே அமுக்கிவிட்டு... வரதராஜனுக்கு அவன் கேட்ட அட்ரஸுக்கு வழி சொல்லி அனுப்பினான்.

"என்ன பிரதர்! நீ வேற அது இதுன்னு குடும்பத்துல குழப்பத்தை உண்டு பண்ணிடுவ போலிருக்கே... அங்கே என் ஃபிரண்டோட தங்கை இருக்காளா...

"உனக்குத்தான் எமிலியைப் பத்தி தெரியுமே... பயங்கர பொஸஸிவ் டைப். அவளுக்கு என் ஃபிரண்டைக் கண்டாலே ஆகாது. அதான்... நான் மட்டும் தனியா போய்ப் பார்த்துட்டு வந்தேன். அதை நீ பார்த்திருக்கே... நீயா எதையாவது பரப்பாதே!"

"அவ்வளவுதானா...! நான்கூட ஏதோ தனியா ஏதாவது ரூட் போடறியோன்னு... அப்படி எதுவும் இல்லையா?"

"இல்லை...." - அழுத்தம் திருத்தமாய்க் கூறி, அவன் வாயை அடைத்தான் ஜேம்ஸ்.



தனக்குள் சிரித்துக் கொண்டான், ஜேம்ஸ். இந்தக் கேசவ் பத்தி நினைக்கும் போதே... திரும்பவும் சிரிப்பிற்குள் விழுந்தான், ஜேம்ஸ்.

அனுசூயா மேடம் இவனுடன் பணிபுரியும் ஒரு சக ஊழியர். அவர்களுக்கு நாற்பது வயதே இருக்கும். அவர்கள் விஷயத்தில் கேசவ்...

அவர்கள் தங்கை ரமணிக்கோ, சற்றே ஆணினுடையதைப் போன்று கரகரப்பு கலந்த குரல்.

அவர்கள் வாரத்திற்கொரு முறையாவது தனது சகோதரி அனுவிற்குத் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்வதுண்டு!

அப்போது, தொலைபேசி கேசவ்வின் மேஜை மேல் வைக்கப்பட்டிருந்தது.

கிட்டத்தட்ட டெலிபோன் ஆபரேட்டர் மாதிரி, வரும் அழைப்புகளை அட்டெண்ட் செய்வது அவன் வேலை.

அனுவுக்கு வரும் அழைப்புகளை, 'நீங்கள் யார்? என்ன?' என்று அவன் விசாரித்து வைக்க...

'நான் ரமணி! அனுவின் சொந்தம்...' என்று ஆண் குரலில், அவள் தங்கை சொல்ல... கேசவ் எதையோ புரிந்து கொண்டு, அலுவலகம் முழுவதும்... ரமணி என்றொரு இல்லாத ஆண் நண்பரை... அனுவுக்கு உருவாக்கி... உலவ விட்டு விட்டான்.

தங்கையுடன் போன் பேசிவிட்டு வரும்போது, இரண்டொரு பேர் தன்னைப் பார்த்து ஒரு மாதிரி நமுட்டுச் சிரிப்பு

சிரிப்பது... ஏன் என்று அனுவுக்கு வெகு நாட்கள் வரை புரியாமல் இருந்தது.

அப்புறம் இது கேசவ்வின் வேலை எனப் புரிந்ததும், ஒரு நாள் அவள் தங்கையையே வரச் சொல்லிக் கேசவ்விடம் அறிமுகப்படுத்தினாள்.

அன்று, அவன் முகம் போன போக்கைப் பார்க்க வேண்டுமே!

## 25

மறுநாள், மதியம் பன்னிரண்டு மணி வாக்கில், ஜேம்ஸுக்குப் போன் வந்தது. பேசியவன், கூர்க்கா.

"ஸாப்! நீங்க உடனே வாங்க... ஸாப்! நீங்க சொன்ன மாதிரியே அந்த மேம் ஸாப் வீட்டையே பார்த்திட்டிருந்தேனா... நீங்க சொன்ன மாதிரியேதான் ஆச்சு! நீங்க உடனே வாங்க."

"குட்... நீ என்ன பண்றே? திருடி... திருடி...ன்னு நல்லா கத்திக் குரல் கொடுத்து... கும்பல் சேரு... அந்த லேடி தப்பிச்சுப் போயிடாம கும்பல் சேர்த்து மடக்கு... நான் இப்ப வந்திடறேன்."

சந்தோஷமாய் மனதுக்குள் உணர்ந்து, பைக்கை உதைத்தான். என்னவெல்லாம் பேசி விட்டாள், ஒரு நொடியில் அந்தப் பாட்டி.

இப்போது, அதற்கெல்லாம் தான் காரணமல்ல என்பதும், யார் காரணம் என்பதும் தெரிய வரும்போது, அவள் முகம் எப்படி மாறிப் போகும்?



'பாவம், அவள் என்ன செய்வாள்? கூடமாட ஒத்தாசையாக, எல்லா வேலைகளையும் செய்து கொடுத்துக் கொண்டு கூடவே இருந்ததால், அவளை அறியாமல் ஒரு நம்பிக்கை வந்திருக்கும்.

கூடவே, அந்த வேலைக்காரப் பெண்மணி, என்னவெல்லாம் தன்னைப் பற்றிக் கூறி அவள் மனதை மாற்றினாளோ?'

கணிசமான கும்பல் கூடியிருந்தது.

"கண் தெரியாத பாட்டியைப் போய் ஏமாற்றியிருக்காளே... எப்படித்தான் மனசு வந்ததோ?"

"இவள் ரொம்ப பாசமா இருக்கிறதைப் பார்க்கிறப்பவே நினைச்சேன். எல்லாம் நடிப்பாத்தான் இருக்கும்னு... இப்ப சரியாப் போச்சே!"

"தள்ளுங்க பாட்டி! போலீஸுக்கு இப்பவே போன் பண்றேன்... இவளை முட்டிக்கு முட்டி தட்டினாத்தான் வாயைத் திறப்பா?"

திக் பிரமை பிடித்தது போல் அமர்ந்திருந்தாள், பாட்டி! அன்று நகை காணாமல் போனது முதல் பேரிடி! இன்று வெள்ளிக் குத்துவிளக்கை, சாமியறையில் காயத்ரி ஆசை ஆசையாய் வாங்கி வைத்து, தினசரி விளக்கேற்றிக் கும்பிடும் விளக்கைச் சம்பூர்ணம் திருட்டுத்தனமாகப் பின் வாசல் வழியாக எடுத்துக் கொண்டு போகும்போது, வசமாகக் கூர்க்காவிடம் மாட்டிக் கொண்டிருக்கிறாள்.

முதன் முறையாகத் தன்னிரக்கம் வந்தது.

'ச்சே! என்னைச் சுற்றி இத்தனை நடந்தும், நடந்ததை அறியாது, தடுக்கவும் முடியாது... கையாலாகாமல் இருந்திருக்கிறேனே! இனியும் என்ன...?' பக்கத்து வீட்டு அன்னபூரணியை விட்டு போலீஸுக்குப் போன் பண்ணச் சொன்னாள்.

இப்போதுதான் பாட்டிக்குப் புரிந்தது. அன்று நகையை எடுத்ததும் இந்தச் சம்பூர்ணமாகத்தான் இருக்க வேண்டும்! வாயைத் திறக்கிறாளா, பார்...! அன்று தன்னை யோசிக்கக் கூட விடாமல், தான் சிந்திக்கக் கூடத் திராணியற்று இருந்தபோது... வசந்த் தம்பியைப் பற்றி அவள் கூறவும், தானும் அல்லவா... அவ்வாறே நினைத்து விட்டோம்.

என் காயத்ரி கல்யாணம் செய்து கொள்ளத் தேர்ந்தெடுத்த வசந்த்... எப்படிக் கெட்டவனாக இருக்க முடியும்! இது தோன்றவில்லையே, எனக்கு?

ஒரு நொடியில் அவசரப்பட்டு... அந்தத் தம்பி மீது பழி போட்டு... ஏதேதோ பேசிவிட்டேனே!

கண் நன்றாகத் தெரிந்தாலாவது... இந்தச் சென்னையில் எந்த மூலையில் அந்தத் தம்பி இருந்தாலும், தேடிச் சென்று சமாதானப்படுத்துவேன்!

இந்தக் குருட்டுக் கண்ணுடன் நான் என்ன செய்வேன்?

உள்மனம் இறைஞ்சியது, பாட்டிக்கு.

திரும்பத் திரும்ப அன்றைக்குத்தான் முதன் முதலாக வெள்ளிக் குத்துவிளக்கைத் திருட ஆசைப்பட்டு மாட்டிக் கொண்டதாகவும்... இதுவரை எந்த ஒரு பொருளையும்



எடுத்ததில்லை என்றுமே கூறிக் கொண்டிருந்தாள், சம்பூர்ணம்.

கூட்டத்தை விலக்கிக் கொண்டு, போலீஸ் ஜீப் வர, அதைத் தொடர்ந்து பைக் சத்தம்.

சடாரென நிமிர்ந்தாள் பாட்டி. இது... இது... வசந்த் தம்பி வருமே... அந்த பைக் சத்தம் மாதிரியல்லவா இருக்கிறது.

"பாட்டி! உங்க வீட்டுக்கு அடிக்கடி வருமே... அந்தத் தம்பி வந்திருக்கு..." – இரண்டு வீடுகள் தள்ளிக் குடியிருக்கும் சாந்தனா கூறினாள்.

"பாட்டி! உங்க வீட்டில்தான் இவ கைவரிசையைக் காட்டியிருக்காளா...! அதுவரைக்கும் நீங்க என்ன பண்ணிட் டிருந்தீங்க...?"

"ஸார்! நான் சொல்றேன்... பாட்டிக்குக் கண் தெரியாது. இவ இவங்க வீட்டில்தான் வேலை செய்திட்டிருக்கா... வெள்ளி விளக்கோட... இவ பின் பக்க வழியா... இந்தப் பக்கமும், அந்தப் பக்கமும் பார்த்துக்கிட்டு நழுவறச்சே... கூர்க்கா கையும் களவுமாப் பிடிச்சிட்டார்!" – என்றாள் சாந்தனா.

"ஓ... ஸாரி பாட்டி! நீங்க அப்ப இன்னமும் ஜாக்கிரதையா இருந்திருக்க வேண்டாமா? முன்னபின்ன பழக்கமில்லாதவங்களை ஏன் வேலைக்குச் சேர்த்திட் டிருக்கீங்க?" என்றவர், அவள் பக்கம் திரும்பி...

லத்தியால், குனிந்திருந்த அவள் முகத்தை நிமிர்த் தினார்.

"என்ன பேச மாட்டீங்களோ? உன் பேர் என்ன?"

"சம்பூர்ணம்!"

"எத்தனை நாளா இது நடக்குது?"

"இல்லை ஸார்! இன்னிக்குத்தான் முதல் தடவை... ஏதோ புத்தி கெட்டுப் போய்... அந்தாளு, அதான் என் புருஷன் பேச்சைக் கேட்டு... இப்படிப் பண்ணிட்டேன்."

"யோவ்... கான்ஸ்டபிள்! இவளை வண்டியில ஏத்து... இப்படி மரியாதையா கேட்டுக்கிட்டு இருந்தா... இவ வழிக்கு வரமாட்டா. போலீஸ் மரியாதையை ஸ்டேஷனுக்குக் கூட்டிட்டுப் போய்க் காட்டுவோம்."

இதற்கு மேல் பாட்டியிடம் என்ன விசாரிப்பது! கண் தெரியாதவள் வேறு... என்ன இருக்கிறது... என்ன திருட்டுப் போயிருக்கிறது என்றுகூடத் தெளிவாகச் சொல்ல முடியாதவள். எப்படி எஃப்.ஐ.ஆர். போடுவது என்று யோசித்த வாறே, முகவாயைத் தேய்த்துக் கொண்டிருந்த போது...

தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு கை குலுக்கிக் கொண்டே, வெளிப்பட்டான், ஜேம்ஸ் வசந்தன்.

"நீங்க?"

"நான் வசந்த். பாட்டியின்..." - கொஞ்சம் தனியாகக் கூட்டிக் கொண்டு போய்... "பாட்டியின் பேத்தி... காயத்ரி கூட வேலை பார்க்கிறேன்."

"பேத்தியா... அவங்க எங்கே?" என்றவரிடம், ஐந்து நிமிடம் செலவழித்து, அதுவரை நடந்தது அனைத்தும் கூறினான். பாட்டி தன் மேல் சந்தேகப்பட்டதை மட்டும் கூறவில்லை.



"சரி... பாட்டிகிட்டே என்னென்ன காணாமல் போயிருக்கும்னு... கேட்டு எழுதி, நீங்க ஒரு கம்ப்ளெயிண்ட் தாங்க. எல்லாத்தையும் அவளைக் கக்க வைக்கிறேன், பாருங்க... நீங்க எழுதி எடுத்துட்டு ஸ்டேஷனுக்கு வாங்க..." என்றபடி, அவர் ஜீப்பில் தொற்றிக் கொள்ள, மற்றவர்கள் அவர்களுக்குள் பேசிக் கொண்டு கலைந்து போயினர்.

பாட்டி தட்டுத் தடுமாறி அவன் கைகளைப் பற்றிக் கொண்டாள்.

"தம்பி! உங்களை என்ன சொல்றதுன்னே தெரியலை. தெய்வமே அனுப்பி வைச்ச மாதிரி வந்தீங்க... உங்களைப் போய்... நான் புத்தி கெட்டுப் போய் என்ன என்னமோ சொல்லிட்டேன்.

"கண் பார்வையோடு சேர்ந்து, நல்ல மனுஷங்க யார், நச்சுப் பாம்புங்க யாருன்னு கூட அறிய முடியாம போயிடுச்சே!" என்றவளைச் சமாதானப்படுத்தினான்.

"உங்க பேர்ல தப்பில்லை... காரணமில்லாம நீங்க என் பேர்ல கோபப்பட்டப்ப... எனக்கு ரொம்ப வருத்தமாப் போச்சு!

திருட்டுக்குக் காரணமாயிருக்கிறவங்க, எப்படியும் அதோட நிறுத்த மாட்டாங்க. தொடர்ந்து தன் கைவரி சையைக் காட்டுவாங்கன்னு... யூகிச்சு கூர்க்காகிட்ட சொல்லி மடக்கினேன்."

"அட! அது உன் வேலைதானா தம்பி! நான்கூட ஏதோ கூர்க்காதான் அதிசயமா தன் வேலையை ஒழுங்கா செஞ் சிருக்கானோன்னு நினைச்சேன்!"

பாட்டி ஒருமையில் தன்னைப் பேசியது திரும்பவும் வாஞ்சையுடன் தன்னுடன் பேச ஆரம்பித்தது, வசந்துக்கு சந்தோஷமாக இருந்தது.

காயத்ரி பேரில் ஆரம்பித்து... இப்போது தன்னை அறியாமலேயே, ஏதோ முன்பிறவித் தொடர்பு போலப் பாட்டிக்கு உதவவே, கர்த்தர் தன்னைப் பணித்திருப்பது போல் உணர்ந்தான்.

கைகள் நெஞ்சில் சிலுவை இட்டுக் கொண்டன.

## 26

**பா**ட்டியிடம் கேட்டு அவர் சொல்லச் சொல்ல, பீரோவில் பார்த்துக் காணாமல் போனவற்றை எழுதிக் கொண்டான்.

அதற்குள், அலுவலகத்திலிருந்து வேறு அழைப்பு. அவசர அவசரமாய் போலீஸ் ஸ்டேஷன் சென்று கம்ப்ளெயிண்ட் எழுதிக் கொடுத்து விட்டு, அலுவலகம் போனபோது... அப்பாடா... என்றிருந்தது.

நல்லவேளையாகப் பாட்டிக்கு உதவ, அநாதை மற்றும் அபலைப் பெண்களைப் பாதுகாத்துப் பராமரிக்கும் மகளிர் நலச் சங்கத்தில் சொல்லி, அவர்கள் மூலமாக, வீட்டு வேலை செய்ய ஆள் அனுப்புவதாக இன்ஸ்பெக்டர் கூறியது, கொஞ்சம் தெம்பளித்தது.

இந்த மட்டும் இந்தப் பிரச்சனை சுலபமாக முடிந்ததே!

அன்று இரவு ஏழு மணி இருக்கும். அன்று ஏனோ எமிலி ஒருவித அசௌகர்யமாக இருந்தது போல் உணர்ந்தான், ஜேம்ஸ்.



உடம்பு ஏதும் சரியில்லையோ என்று பலவாறு விசாரித்துப் பார்த்தும், எதுவும் இல்லையென மறுத்து விட்டாள், எமிலி.

அவள் இன்னொரு உயிரைத் தாங்கியிருப்பதாலேயே கொஞ்சம் முகம் வாடிப் போனாலும், என்னவோ ஏதோ என்று பயந்து விடுவான்.

அறை முழுக்க விதவிதமான குழந்தைகள் வால் பேப்பர் ஒட்டி வைத்திருந்தாள், எமிலி.

குழந்தை ஒன்று மேரியுடன், நிறையக் குழந்தைகள் விளையாடிக் கொண்டு இப்படி... அறை முழுக்கக் குழந்தைகள்.

ஜேம்ஸ் டி.வி. பார்த்துக் கொண்டிருந்தபோது, ஃபாதர் நுழைந்தார்.

வரவேற்று அவரை உபசரித்தபின்... அவர் ஏதோ வேலையாய், அல்லது ஏதோ சொல்ல வந்திருக்கிறார் என்று புரிந்து... அவரே ஆரம்பிக்கட்டும் என்று மௌனம் காத்தான்.

ஃபாதர் தேவசகாயம் எமிலி தந்த டீயைப் பருகியவாறே, அவளைப் பார்ப்பதும், கைவிரல்களைப் பார்ப்பதுமாக இருந்தார்.

பின் ஒரு முடிவுக்கு வந்தவர் போல்...

"ஜேம்ஸ்! கொஞ்சம் எழுந்து வா. அப்படிக் காலார நடந்துட்டு வரலாம்...!"

மறுபேச்சின்றிச் சட்டையை மாட்டிக் கொண்டு அவரைப் பின்தொடர்ந்தான்.

"ஜேம்ஸ்! எமிலி உன்னைப் பற்றிக் கூறியபோது, நான் கூட நம்பவில்லை. நாம் கர்த்தரால் ஆசிர் வதிக்கப்பட்டவர்கள். அவரது ஆசிர்வாதம் நம்கூடவே வருகிறது என நம்புகிறவர்கள்... ஒரு பொய் மனிதனின் மனத்தை எத்தனை தூரம் வருத்தும் என்று உணர்ந்தவர்கள்..."

"நீங்கள் சொல்வதெல்லாம் நானும் அறிவேன், ஃபாதர்! ஆனால் என்னிடம் ஏன் இதையெல்லாம்... எமிலிக்கு ஏதாவது...!" குரல் தழுதழுக்க... இழுத்தான், ஜேம்ஸ்.

இருவரும் அந்தத் தெருக் கோடி வரை வந்து விட்டிருந்தனர். ஓரிருவர் மட்டுமே அலுவலகம் முடிந்து சென்று கொண்டிருக்க...

தெரு நாய்கள் ஓடுவதும், ஒன்றையொன்று துரத்துவதுமாக இருந்தன.

"நீங்கள் எதுவானாலும் என்னிடம் மறைக்காமல் சொல்லலாம்... ஃபாதர்!"

"நீ எமிலி மீது எவ்வளவு அன்பு வைத்திருந்தாய்... கர்த்தரின் கிருபையாலே இருவரும் எத்தனை அன்னியோன்யமான தம்பதிகளாய் இருந்தீர்கள் என்பதை நான் அறிவேன்."

"இப்போது மட்டுமென்ன ஃபாதர்! அந்த அன்பு... எமிலி என் குழந்தையை வயிற்றில் வாங்கிய நாளில் இருந்து... இன்னும் அதிகப்பட்டிருக்கிறதே தவிர, இம்மி யளவும் குறையவில்லை."



"நீ சொல்கிறாய், சரியப்பா! ஆனால், அதை எமிலி உணர்ந்திருக்க வேண்டுமே... அதை நீ அவளுக்கு உணர்த்தியிருக்க வேண்டுமே...!"

"அவள் என்னை நன்கு அறிவாள்... நான் அவள் மீது வைத்திருக்கும் பரிசுத்தமான அன்பை!"

இடைமறித்தார், ஃபாதர். "அவள் உண்மையென்று நம்பவில்லை."

"நீங்கள்..."

சற்று நேரம்... சில வினாடிகள் அமைதி காத்துவிட்டுத் தலையாட்டினார்.

"ஆமா... ஜேம்ஸ்! எமிலிக்கு உன்னுடைய முழு அன்பும் தனக்குக் கிடைக்கவில்லையோ... என்று சந்தேகம். சந்தேகம் என்ன... அவள் நம்பவே செய்கிறாள்.

"இன்னும் சொல்லப் போனால், உனக்கு ஏதேனும் ஒரு பெண்ணிடம் சகவாசம் உள்ளது என்றும் திடமாக நம்புகிறாள். சமீப காலமாக, உன் நடவடிக்கைகளும் அவற்றை உறுதிப்படுத்துவதாகவே எண்ணுகிறாள்.

"வீட்டுக்கு லேட்டாக வருவதும், ஞாயிறுகூட வெளியே போய் விட்டு இரவு வருவதும், எந்த ஒரு மனைவிக்கும் சந்தேகத்தைக் கிளப்பாதா, ஜேம்ஸ்?"

"ஃபாதர்! எமிலி உளறுவது போலெல்லாம் அப்படி ஒன்றும் இல்லை. ஆபீஸில் வருடக் கடைசி என்பதால் நிறைய வேலை... முடித்து விட்டுக் கிளம்ப லேட்டாகி விடுகிறது. நீங்கள் கூடவா என்னை...?"

"ஜேம்ஸ்! எமிலி உன்னைப் பற்றிக் கூறியபோது, நான் கூட நம்பவில்லை. நாம் கர்த்தரால் ஆசிர் வதிக்கப்பட்டவர்கள். அவரது ஆசிர்வாதம் நம்கூடவே வருகிறது என நம்புகிறவர்கள்... ஒரு பொய் மனிதனின் மனத்தை எத்தனை தூரம் வருத்தும் என்று உணர்ந்தவர்கள்..."

"நீங்கள் சொல்வதெல்லாம் நானும் அறிவேன், ஃபாதர்! ஆனால் என்னிடம் ஏன் இதையெல்லாம்... எமிலிக்கு ஏதாவது...!" குரல் தழுதழுக்க... இழுத்தான், ஜேம்ஸ்.

இருவரும் அந்தத் தெருக் கோடி வரை வந்து விட்டிருந்தனர். ஓரிருவர் மட்டுமே அலுவலகம் முடிந்து சென்று கொண்டிருக்க...

தெரு நாய்கள் ஓடுவதும், ஒன்றையொன்று துரத்துவதுமாக இருந்தன.

"நீங்கள் எதுவானாலும் என்னிடம் மறைக்காமல் சொல்லலாம்... ஃபாதர்!"

"நீ எமிலி மீது எவ்வளவு அன்பு வைத்திருந்தாய்... கர்த்தரின் கிருபையாலே இருவரும் எத்தனை அன்னியோன்யமான தம்பதிகளாய் இருந்தீர்கள் என்பதை நான் அறிவேன்."

"இப்போது மட்டுமென்ன ஃபாதர்! அந்த அன்பு... எமிலி என் குழந்தையை வயிற்றில் வாங்கிய நாளில் இருந்து... இன்னும் அதிகப்பட்டிருக்கிறதே தவிர, இம்மி யளவும் குறையவில்லை."



"நீ சொல்கிறாய், சரியப்பா! ஆனால், அதை எமிலி உணர்ந்திருக்க வேண்டுமே... அதை நீ அவளுக்கு உணர்த்தியிருக்க வேண்டுமே...!"

"அவள் என்னை நன்கு அறிவாள்... நான் அவள் மீது வைத்திருக்கும் பரிசுத்தமான அன்பை!"

இடைமறித்தார், ஃபாதர். "அவள் உண்மையென்று நம்பவில்லை."

"நீங்கள்..."

சற்று நேரம்... சில வினாடிகள் அமைதி காத்துவிட்டுத் தலையாட்டினார்.

"ஆமா... ஜேம்ஸ்! எமிலிக்கு உன்னுடைய முழு அன்பும் தனக்குக் கிடைக்கவில்லையோ... என்று சந்தேகம். சந்தேகம் என்ன... அவள் நம்பவே செய்கிறாள்.

"இன்னும் சொல்லப் போனால், உனக்கு ஏதேனும் ஒரு பெண்ணிடம் சகவாசம் உள்ளது என்றும் திடமாக நம்புகிறாள். சமீப காலமாக, உன் நடவடிக்கைகளும் அவற்றை உறுதிப்படுத்துவதாகவே எண்ணுகிறாள்.

"வீட்டுக்கு லேட்டாக வருவதும், ஞாயிறுகூட வெளியே போய் விட்டு இரவு வருவதும், எந்த ஒரு மனைவிக்கும் சந்தேகத்தைக் கிளப்பாதா, ஜேம்ஸ்?"

"ஃபாதர்! எமிலி உளறுவது போலெல்லாம் அப்படி ஒன்றும் இல்லை. ஆபீஸில் வருடக் கடைசி என்பதால் நிறைய வேலை... முடித்து விட்டுக் கிளம்ப லேட்டாகி விடுகிறது. நீங்கள் கூடவா என்னை...?"

தோளில் ஆதரவாகக் கை போட்டார், ஃபாதர்.

"உன் மீது முழு நம்பிக்கை இருப்பதால்தான், உன்னை இங்கு கூட்டி வந்து பேசிக் கொண்டிருக்கிறேன்..." என்றவர், "எமிலி... உன்மீது இவ்வளவு சந்தேகப்படுவதற்கு இன்னொரு காரணமும் இருக்கிறது."

சஸ்பென்ஸாக நிறுத்தியவர், "ஆமாம், உனக்கு ராயப்பேட்டையிலே என்ன வேலை? உனக்குத் தெரிந்தவர்கள் அங்கே யாரும் இருப்பது போல் எனக்கு நினைவில்லையே!"

ஃபாதர் இப்படிக் கூட்டி வந்து விசாரிக்கும் போதே, ஜேம்ஸுக்கு அந்தச் சந்தேகம் இருந்தது. இதற்கு முன்... இரண்டொரு தடவை காயத்ரி வீட்டுக்குப் போய், அவள் பாட்டியைப் பார்த்து விட்டு வர லேட்டாகி விட... கேள்விகளால் துளைத்தெடுத்தாள், எமிலி.

ஏதேதோ... ஒவ்வொரு முறை, ஒவ்வொரு காரணம் கூறி மழுப்பினாலும், அவள் அதை முழுவதுமாக நம்பின மாதிரித் தெரியவில்லை.

அன்றைய தினத்தில், அதுபற்றி மேலும் ஜேம்ஸ் சிந்திக்கவில்லை.

அதுதான் ஃபாதரிடம் சொல்லிப் புலம்பியிருப்பாள் போலிருக்கிறது...

சமாளித்து விடலாம் என்று பேச்சு ஆரம்பிக்கும் போது நினைத்திருந்தவன், அவரது கடைசிக் கேள்வியில் நிலை குலைந்து போனான்.



# 27

ஒருவேளை தான் காயத்ரி வீட்டுக்குப் போயிருந்த போதோ, அங்கிருந்து வரும் போதோ, யாராவது பார்த்துப் போட்டுக் கொடுத்திருப்பார்களோ?

பாட்டிக்கு உதவ வேண்டுமே என்ற ஆதங்கத்தில் சொல்லியிருக்கிறானேயன்றி, மனதறிந்து சுயநலத்திற்காக, இதுவரை பொய் சொன்னதில்லை.

இப்போது உண்மையைச் சொன்னாலும் ஃபாதர் நம்புவாரா தெரியவில்லை. கண் சிமிட்டும் நட்சத்திரங்களை அண்ணாந்து பார்த்தபடி பேச வார்த்தைகளற்று மௌனமாயிருந்தான்.

ஃபாதர் தன் சந்தேகத்தை மறுபடி கேள்வியாக்கினார்.

"உனக்குத் தெரிந்தவர்கள் யார் ராயப்பேட்டையில் இருக்கிறார்கள் என்று கேட்டேன், ஜேம்ஸ்! அங்கு நீ அடிக்கடி போய் வருவதை, இரண்டொரு பேர் எமிலியிடம் கூறியிருந்தாலும் கூட அவள் நம்பவில்லை. உன் மாமனாரே உன்னை அங்கு இரவு வேளையில் பார்த்துவிட்டு வந்து கூறும்போது, எமிலி பாவம் நம்பாமல் என்ன செய்வாள்?

"அவள் கோணத்திலிருந்தும், நீ இதைப் பார்க்க வேண்டும், ஜேம்ஸ்! அப்படி ஏதேனும் இருந்தால் என்னிடம் நீ தாராளமாகச் சொல்லலாம். நான் பக்குவமாக எமிலியிடம் பேசி..."

அதற்கு மேலும் ஜேம்ஸால் மௌனம் காக்க முடியவில்லை. ஃபாதர் தானாகவே ஏதாவது கற்பனை செய்து கொள்ளுமுன், உண்மையைக் கூறிவிடுவதே சரி!

"ஃபாதர்! ராயப்பேட்டையில் காயத்ரி வீட்டுக்கு நான் அவ்வப்போது சென்று வருவது உண்டு. அதைக் கேள்விப் பட்டுத்தான் எமிலி சந்தேகப்படுகிறாள்.

"உங்களுக்குக் காயத்ரி யாரென்று சொல்ல வேண்டுமென்றால், ஒரு மாதத்திற்கு முன் நடந்து முடிந்த சம்பவத்தில் ஆரம்பித்து அனைத்தையும் சொல்ல வேண்டும்.

"சொல்லப் போனால், எமிலியின் பொஸஸிவ் குணமும், அவள் என் மேல் வைத்துள்ள அன்பு... அதன் காரணமாகச் சந்தேகப்படும் குணம்... இவைதான் எல்லாவற்றிற்கும் காரணம்."

எமிலி போனில் பேசியதைக் கேட்டு, அவளுக்கு ஏதேனும் ஆகிவிடுமோ... அவள் கோபத்தில் என்ன செய்யப் போகிறாளோ என்று பதைத்து... வேகமாக வண்டியில் வந்தபோது, ஒரு பெண் மீது மோதிவிட்ட கதையை முழு மூச்சில் சொல்லி முடித்தான்.

"கர்த்தரே! அந்தப் பெண்ணுக்கு ஒன்றும் ஆகி விடவில்லையே?"

"ஒன்றும் ஆகவில்லை என்றால்தான் ஒன்றுமே இல்லையே... நான் என் வழியில் சென்றிருப்பேனே...! அந்தப் பெண் கீழே விழுந்ததில், உயிர் இருக்கா... போயிற்றா... என்றுகூடப் பார்க்கவில்லை, நான்..."

"உயிர் போயிருந்தால்.. கர்த்தரே! அப்படி ஒரு தருணத்தை நான் நேர்கொள்ளத் தயாராக இல்லை என்பதே ஒரு விதத்தில் உண்மை!"



"திரும்பிக்கூடப் பார்க்காமல்... என் மனச்சாட்சியைத் தள்ளி வைத்து விட்டு... விரைந்து விட்டேன், அவ்விடத்தை விட்டு...

"வீட்டுக்குச் சென்ற பின்புதான்... எமிலி பத்திரமாக இருப்பதும்... வழக்கம் போல் என்னை உடனே வரவழைக்க அவள் அவ்வார்த்தைகளை அஸ்திரமாகக் கையாண் டிருப்பதும் உணர்ந்தேன். அந்த நொடியிலிருந்தே... என் வண்டியால் தூக்கி எறியப்பட்ட அப்பெண்ணைப் பற்றிய நினைவு என்னை, என் மனதை... கரையானைப் போல் அரிக்கத் துவங்கி விட்டது!"

உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியாமல், மனதின் கொந்தளிப்பை உள்வாங்கிக் கொள்ளச் சில நிமிடங்கள் எடுத்துக் கொண்டான்.

"அப்பெண்... அவள்தான் காயத்ரி. அவள் ஸ்தலத்திலேயே இறந்து விட்டாள்."

"கர்த்தரே!"

"ஆமாம் ஃபாதர்! அதைவிடக் கொடுமை தாய், தகப்பன் இருவரும் இல்லாத அப்பெண்ணுக்குத் துணை... அவள் பாட்டி! அவளும் பாவம்... விபத்தில் கண் பார்வை யிழந்தவள்.

"இதை அறிந்ததும் என் மனம் குற்ற உணர்வில் தகிக்கத் தொடங்கியது. நான் தெரிந்தோ, தெரியாமலோ... அந்தக் குடும்பத்தின் நிலை தலைகீழாக மாறக் காரணமாகி விட்டேன். அதற்குப் பரிகாரமாக, அக்குடும்பத்திற்கு உதவ நினைத்தேன். அது தவறா, ஃபாதர்?"

"தவறில்லை ஜேம்ஸ்! விதிப்படி அவ்வாறு நடந்த தென்று உன் வழியே போயிருக்கலாம். ஆனால், கர்த்தரின் மேல் பரிசுத்தமான அன்புடன் அவர் நடத்துகிற வழி செல்ல நினைக்கும் உண்மையான கிறிஸ்துவனான உன்னால் அவ்வாறு போக முடியவில்லை.

"ஆனால், உன் மீது அன்பை மிகுதியாக வைத்து, நீ அவளை விட்டுச் சிறிதும் பிரியக்கூடாதென்று நினைக்கும்... எமிலிக்காவது இதை நீ கூறியிருக்கலாமே...?"

"எப்படி ஃபாதர்? அவள் ஏற்கெனவே என் குழந்தையை வயிற்றில் சுமந்து கொண்டிருக்கிறாள்! தன் புருஷன் ஒரு உயிர் போகக் காரணமான கொலைகாரன் என்று அறிந்தால், அவளால் எப்படி நிம்மதியாக இருக்க முடியும்!

"மேலும் இப்போதைக்கு அந்தப் பாட்டியைப் பார்த்துக் கொள்ள ஆள் ஏற்பாடு செய்து விட்டேன். அதேபோல், அந்தப் பெண் காயத்ரி அவள் பாட்டியை நாமினியாகப் போட்டு நிறையச் சேமிப்புகள் செய்திருக்கிறாள். அதெல்லாம் ஒழுங்குபடுத்திப் பணம் பாட்டிக்குக் கிடைக்க ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறேன்.

"பின்... என் நண்பனுடைய கண் மருத்துவமனையில் மாற்றுக் கண் சிகிச்சைக்குப் பெயர் பதிவு செய்துவிட்டு வந்திருக்கிறேன். கர்த்தர் அருளால் எல்லாம் நல்லபடியாக நடந்து விட்டால், பின் நான் என் வழியே போய் விடுவேன்...

"இப்போதெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாகக் குற்ற உணர்வு போய்... அவள் ஆயுள் அவ்வளவுதான்! ஆனால், கண் தெரியாத பாட்டியின் எதிர்கால வாழ்க்கைக்கு உதவ...



கர்த்தர் என்னைப் பணித்திருக்கிறார் என்று நினைக்க ஆரம்பித்து விட்டேன், ஃபாதர்!"

"எல்லாம் சரி... ஜேம்ஸ்! ஆனால், அந்தப் பாட்டிக்கு நீ இப்போது சொன்னது எல்லாம் தெரியுமா?"

"தெரிந்தால்... அவள் பேத்தியைக் கொன்ற என்னை வீட்டிற்குள்ளாவது சேர்ப்பாளா?"

"பின்..."

"அந்தப் பெண் காயத்ரி, வசந்த் என்ற ஒரு பையனைக் காதலித்திருக்கிறாள். அதற்கு அந்தப் பாட்டியும் பச்சைக் கொடி காட்டி விட்டாள் போலிருக்கிறது. நான் ஆறுதலாக உதவப் போன நேரத்தில்... என்னை அந்தப் பையன் வசந்த் என்று நினைத்துத்தான்... பாட்டி என் உதவியை ஏற்றுக் கொள்ள முன்வந்தாள்."

## 28

ஜேம்ஸ் வசந்தன் கதை போலச் சொல்லிக் கொண்டு வந்தவன்... சற்று இடைவெளி விட்டுத் தொடர்ந்தான்.

"நான் எல்லாரிடமும் மறைத்து விட்டேனே தவிர, இவற்றை என் மனதிற்குள்ளாகவே வைத்து மருகிக் கொண்டிருந்தேன், ஃபாதர்!

"இப்போது, நான் உங்களிடம் மனம் திறந்து, எல்லாவற்றையும் கூறியது கூடப் பாவ மன்னிப்பு மாதிரி என்று வைத்துக் கொள்ளுங்களேன்... இப்போது நான் சொன்னது எல்லாம் ஃபாதர்... எமிலிக்கு..."

"தெரிய வேண்டாம் என்றுதானே சொல்ல வருகிறாய். நான் சொல்ல மாட்டேன். நான்கூட ஏதோ தகாத வழியில் போகிறாயோ... என்று அச்சப்பட்டேன். யாரோ எப்படியோ போகிறார்கள் என்று தன் வழியில் போகும் இச்சுயநல உலகத்தில் நீ இவ்வளவு நல்ல மனதுடன் இருப்பது... எனக்கு மகிழ்ச்சியாகவும் பெருமையாகவும் உள்ளது.

"ஆனால், ஜேம்ஸ்! எமிலியே உன்னைப் பற்றி என்னிடம் கூறினாள் என்று நினைக்காதே... நான் நேற்று உன்னைப் பார்க்க உன் வீட்டுக்கு வந்த நேரம் உன் வாழ்வில் ஒரு பொன்னான நேரமாக இருந்திருக்க வேண்டும்..

"நேற்று நான் மட்டும் சரியான சமயத்தில் உன் வீட்டுக் கதவைத் தட்டியிராவிட்டால், நாம் இப்போது இங்கிருக்க மாட்டோம்... எமிலியின் இறுதிச் சடங்கில் மௌனமாகப் பிரார்த்தனை செய்து கொண்டிருந்திருப்போம்."

அந்த வார்த்தைகளின் நெருப்பு சட்டெனப் பற்றிக் கொள்ள, வார்த்தைகளின் பொருள் சடாரென மூளையை, மனதை ஒருசேரத் தாக்க, திடுக்கிட்டு நிமிர்ந்தான், ஜேம்ஸ்.

எமிலி தன்னிடம் பல தடவை, 'என்னவோ போலிருக்கிறீர்களே.. ஏன்?' என்று கேட்டுப் பார்த்து விட்டாள். தன்னிடம் சரியான பதில் இல்லாததால், ஃபாதர் சொன்னால் தான் கேட்பேன் என்று தெரிந்து ஃபாதர் மூலமாகச் சொல்லியிருக்கிறாள் என்றல்லவா நினைத்தோம்...

தனக்கு ஏதேனும் ஒரு பெண்ணிடம் சகவாசம் ஏற்பட்டுள்ளதோ என்ற பயத்தில் ஃபாதர் மூலமாகப் புத்தி சொல்லக் கிளம்பியிருக்கிறாள் என்றல்லவா நினைத்தோம்...



இதென்ன புதிதாகக் குண்டைத் தூக்கிப் போடுகிறார், ஃபாதர்!

தவிப்பாய் ஏறிட்டான். "ஃபாதர்! என்ன சொல்றீங்க?"

"ஆமாம், ஜேம்ஸ்! அவள் எண்ணங்களின் வீரியம் உனக்குத் தெரிய வேண்டுமென்பதற்காக நான் இதைக் கட்டாயம் சொல்லித்தான் ஆக வேண்டும்.

"நேற்று உன்னைப் பார்க்க வந்திருந்தபோது, கதவைத் திறக்க லேட்டானபோதே எனக்குச் சந்தேகமாக இருந்தது. பின், வந்து கதவைத் திறந்த எமிலி எதையோ அவசரமாக மறைத்தது போல் தெரிய, அவளைத் தூண்டித் துருவி விசாரித்ததில் ஒப்புக் கொண்டாள்.

"கை நிறையத் தூக்க மாத்திரைகளோடு, அவள் தற்கொலைக்கு முயன்ற விநாடியில் நான் சென்றதால், அவள் காப்பாற்றப்பட்டு விட்டாள்.

"அவருக்கு என் மீதே அன்பில்லை... பின் எங்கள் பிள்ளை மீது நாளை அன்பாக இருப்பார் என்பது என்ன நிச்சயம்! அன்பில்லாத ஒரு கணவரோடு வாழ்வதைவிட ஒரேயடியாகக் கர்த்தரிடம் போய்ச் சேர்ந்து விடலாம் என்று நினைத்திருந்தேன்...!' என்பவளுக்கு எப்படி ஆறுதல் சொல்ல முடியும்!

"எனவே உன்னைச் சந்தித்துப் பேச முடிவு செய்தேன். ஏனென்றால், நீ தப்பான வழியில் செல்ல மாட்டாய் என்று உன்னைப் பற்றி நன்கறிந்த எனக்கு நம்பிக்கை!" என்றார் ஃபாதர்.

"நீங்கள் என் மேல் வைத்துள்ள நம்பிக்கைக்கு நன்றி, ஃபாதர்! அது என்றுமே பொய்க்காது. நான் எமிலியைச் சமாதானப்படுத்துகிறேன்...! அவளுக்கு இது... அதாவது காயத்ரி விஷயம்...!"

"தெரியாது... ஜேம்ஸ்! என்னால் அது தெரியாது. வா... போகலாம். எமிலி தனியாகக் காத்துக் கொண்டிருப்பாள்."

மௌனமாக இருவரும் திரும்பினர். உரையாடலுக் கான மனநிலை இருவரிடமும் இல்லை.

ஜேம்ஸுக்கோ, இதுவரை தன்னை அழுத்திக் கொண்டிருந்த உணர்ச்சிகளைப் பகிர்ந்து கொண்ட ஒரு நிறைவு!

ஃபாதருக்கோ.... எதிர்பாராதது... மனதில் சுமையாக ஏறிக் கொண்ட... அழுத்தம்!

எமிலி... சட்டென உள்ளே போனாள். தங்கள் குடும்ப விஷயங்களைத் தன் பிறந்த வீட்டில் எமிலி சொல்வதே பிடிக்காதென்பவன்...

ஃபாதரிடம் தான் அவனைப் பற்றிச் சொல்லி மனம் வருத்தப்பட்டதைத் தவறாக எண்ணியிருப்பானோ...!

வந்த வேலை முடிந்த தினுசில் ஃபாதர் விடை பெற்றுச் சென்றார்.

எமிலியை நெருங்கி வந்த ஜேம்ஸ்... மெல்ல அவள் கைகளை எடுத்துத் தன் நெஞ்சில் வைத்தான்.

பின், மெதுவாக அவள் தலைமுடிகளைக் காதோரம் கோதி விட்டு, அவளைத் தன் தோளோடு சாய்த்துக் கொண்டு... காதோரம், "ஐ லவ் யூ!" என்று சொன்னான்.



அவள் கிறங்கிப் போயிருக்கும் சமயத்தில், "உன்னை விட்டா எனக்கு யாருடா இருக்கா! நான் உன்னை விட்டு யார்கிட்டேயாவது போவேனா... சொல்லு!" என்று சொல்ல, எமிலியின் கண்கள் பனித்தன.

"நிஜமா.... நீங்க வேற யார்கூடவாவது பழகி... அப்படி ஏதும்... என்னால் தாங்க முடியாதுங்க!"

"அடி அசடே! என் நண்பன் ஒருத்தன்... ஒரு இரண்டு மாதத்துக்கு முன், ஆக்ஸிடென்ட்ல இறந்துட்டான். அவனோட பாட்டி பாவம்... உதவவோ... ஆறுதல் சொல்லவோ கூட யாரும் இல்லை.

நான் அவங்களைப் பார்க்கப் போயிருந்த போது உன் அப்பா பார்த்திருக்கலாம். எது எப்படின்னாலும்... ஸாரிடா கண்ணு!"

"ஏங்க... அப்படியே நீங்க போயிருந்தாலும், என்கிட்ட சொல்லிட்டுப் போயிருக்கலாமில்ல... ஏன்... நானும் கூட வந்து அந்தப் பாட்டிம்மாவுக்கு ஆறுதலா பேசி யிருப்பேன்ல..."

"உன்கிட்டேயா! ஒரு கொசுவை அடிச்சாலே, அதன் இரத்தம் கையில் பட்டா அருவருப்படைவே... நாலு தடவை கை கழுவுவே... உன்கிட்டே போய்... அதுவும் இது மாதிரி இருக்கிறச்சே, ஆக்ஸிடெண்ட் அது இதுன்னு ஏன் சொல்லிக் கலவரப்படுத்தணும்னு சொல்லலை... நான்தான் ஸாரி சொல்லிட்டேன்ல..."

"கண்டிப்பா... என்னைத் தவிர யாரும்...?" – சொல்லி முடிக்க விடாமல் வாயைப் பொத்தினான்.

"யாரும் என் மனசில இல்லை... சரியா! இனிமே எதையாவது நினைச்சுண்டு பைத்தியக்காரத்தனமான முடிவெல்லாம் எடுக்கக் கூடாது... சரியா!"

நெகிழ்ச்சியுடன் "சரி!" என்று தலையசைத்தாள், எமிலி!

'புரை தீர்ந்த நன்மை பயக்கும் எனில் பொய் சொல்லலாம்' என்று தீர்மானித்தாகி விட்டது.

பின் என்ன... கோவையாகத் தனக்கும் இயல்பாகப் பொய் சொல்ல வருகிறதே என்று நினைத்துக் கொண்டான்.

பொய் என்று சொல்வதற்கில்லை... ஏனெனில், எமிலியைத் தவிர, வேறு யாரையும் நினைத்தானில்லை, அவன்!

அப்படியிருக்க... அவளுக்குச் சத்தியம் பண்ணாத குறையாகச் சொல்லிய வார்த்தைகள்... அக்மார்க் நூறு சதவீதம் உண்மைதானே!

மனம் இளகியிருக்க... ஜேம்ஸின் பக்கவாட்டில் கவலை நீங்கித் தூங்க ஆரம்பித்தாள், எமிலி!

தூங்கும் அவளையே வைத்த விழி வாங்காமல் பார்த்தவாறே அமர்ந்திருந்தான், ஜேம்ஸ்.

உள்ளுக்குள் அன்று நடந்ததெல்லாம் பாரமாய் அழுத்த...

தூக்கம் தொலைந்து போயிற்று.

அவன் செய்ய நினைப்பதெல்லாம் நன்றாய்க் கைகூடுமா?



## 29

எமிலிக்குச் சந்தேகம் தட்டியிருப்பதால்... அலுவலகம் முடிந்தவுடன் அன்று காயத்ரி வீட்டுக்குப் போவதைத் தவிர்த்திருந்தான், ஜேம்ஸ்.

பொழுதோடு வீட்டுக்கு வந்தபோது, எமிலியின் முகம் மகிழ்ச்சியில் விரிவதைப் பார்த்து ஆச்சரியமாயிருந்தது.

பாவம், இவள்! என் மனதின் கவலைகளினால், இவளைச் சரிவரக் கவனியாமல் இருந்து விட்டேன்.

ஒருவிதத்தில் கணவன் மனைவி மீதும், மனைவி கணவன் மீதும் செலுத்தும் அன்பு கூடச் சுயநலமே!

கணவன் தன் மீது அன்பாக இருக்க வேண்டும், என்று நினைக்கும் மனைவியே... அவன் மீது கண் மூடித்தனமான அன்பைப் பொழிகிறாள்.

இவளுடைய அன்புக்குக் கைம்மாறு என்ன செய்யப் போகிறோம் என்று... பரிதவிக்கும் கணவனிடம் தக்க சமயத்தில், அதைவிட அதிகமான அன்பைக் கைம்மாறாகக் கேட்கிறாள், மனைவி! இதில் கொடுக்கக் கொடுக்க அதிகமாவது, இந்த உலகத்திலே அன்பு ஒன்றுதானே!

இருவருமாகச் சேர்ந்து வீட்டைச் சுத்தம் செய்தனர். ஒன்றாக அமர்ந்து உண்டு... சற்று நேரம் உலாவி விட்டு... அன்றைய தினம் நீண்டிருப்பதாகத் தோன்றியது.

குழந்தையைப் போன்று கை, கால்களைக் குறுக்கிக் கொண்டு தூங்கும் மனைவியை ரசித்துக் கொண்டிருக்கையிலேயே, அந்தப் போன் வந்தது.

போன் செய்திருந்ததோ... அவன் நண்பன் நகுல்!

எமிலிக்குக் கேட்காத வகையில், கையில் செல்போனுடன் வராண்டாவிற்கு வந்தான்.

"சொல்லு, நகுலா."

"ஜேம்ஸ்! ஒரு முக்கியமான விஷயமா... உன்னை உடனே பார்க்கணுமே... நாளைக்கு நீ ஃப்ரீயா?"

"என்ன விஷயம், சொல்லு..."

"உன்னோட ஃப்ரண்டோட மதர்னு... அன்னிக்கு ஒரு அம்மாவைக் கூட்டிட்டு வந்திருந்தியே...?"

"ஆமாம்... அவங்களுக்குக் கண் பார்வை திரும்பவும் கிடைக்க..."

"அதுக்குத்தான் நேரம் வந்தாச்சு. நேற்றுப் போரூர்ல ஆக்சிடெண்ட்ல மாட்டி... வண்டியில போன இரண்டு பேர் ஸ்பாட்ல இறந்து போனது... பேப்பர்ல பார்த்தியா?

"அவங்க இரண்டு பேர்ல ஒருத்தர்... நம்ம கண் மருத்துவ மனையில் கண் தானத்துக்கு எழுதிக் கொடுத்திருக்கிற சுரேஷ்!"

"அது வந்து... என்ன சொல்ல வர்றே... நகுல்!"

நகுல் சொல்ல வருவது கிட்டத்தட்ட தெரிந்தது போலிருந்தாலும்... கேட்டு வைத்தான்.

"அது நியாயப்படி பார்த்தா... கண் பார்வையில்லாம, மாற்றுக் கண் பொருத்தப்பட அப்ளை பண்ணியிருக் கிறவங்கள்ல முதல்ல இருக்கிற... உன்கூட வந்த அம்மாவுக்குத்தான் பொருத்தப்படணும்."



"அவங்களும் அதுக்கு வரணும், இல்லையா?"

"ஆமா... நாளைக்கு நீ அவங்களைக் கூட்டிட்டு ஹாஸ்பிடலுக்கு வா. அவங்களுக்கு அந்தக் கண்கள் பொருத்த முடியுமா... பொருந்துதான்னு டெஸ்ட் பண்ணிப் பார்க்கணும்."

"சரி! கூட்டிட்டு வர்றேன். நீ இருப்பேயில்லையா!"

"நான் ஹாஸ்பிடல்லதான் இருப்பேன். ரிசப்ஷன்ல சொல்லிட்டுப் போறேன். வொய்ஃப் எப்படி இருக்காங்க?"

"எமிலிதானே! ஃபைன். ஒரு நாள் கூட்டிட்டு வர்றேன்."

"குட் நைட்!" கூறியவாறு, செல்லை அணைத்தான் ஜேம்ஸ்.

மனதிற்குள் வெகு நாளைக்கப்புறம் மகிழ்ச்சி குடி புகுந்தது.

எமிலி.... கருவுற்ற செய்தி அறிந்து... உலகத்தையே தூக்கித் தன்னிடம் கொடுத்தது போல் ஒரு மகிழ்ச்சி வந்ததே... அதுபோல்!

'நான் அப்பாவாகப் போறேன்... என் குழந்தை இந்த உலகத்துல பிறக்கப் போகுது'ன்னு எமிலியைத் தூக்கித் தட்டாமாலை சுற்றியவாறு கத்த வேண்டும் போல ஒரு பரபரப்பு!

கர்த்தருக்கு நன்றி கூறிச்... சிலுவையிட்டுக் கொண்ட நெகிழ்ச்சி!

இப்போதும்... நன்றி கூறி... நெஞ்சில் சிலுவையிட்டுக் கொண்டான்.

ஜன்னல் கதவுகளைக் காற்றுக்காகத் திறந்து வைத்தான். மனதிற்குள் காற்று வந்து... புழுக்கத்தைத் தணித்தது போன்ற உணர்வு!

அப்பாடா...! இனி... என்னைக் குற்ற உணர்வு வருத்தாது.

எல்லாம் நல்லபடி நடந்து, பாட்டிக்குக் கண் பார்வை கிடைத்து விட்டால்...!

அவள் தன் வாழ்க்கையைத் தானாகவே நடத்திக் கொண்டு போக முடியும்.

காயத்ரி... தன்னுடைய சொற்ப சம்பளத்திலும் அவள் எதிர்காலத்தையும், பாட்டியையும் மனதில் வைத்துக் கொண்டு, சேமித்த சேமிப்புப் பணம் இப்போது பெரு மளவில் உதவியுள்ளது.

நகுலிடம் கேட்டு... ஏதாவது டிரஸ்ட் மூலமாகக் குறைந்த செலவில் இந்த ஆபரேஷன் பண்ண முடியுமா என்று கேட்க வேண்டும்...

அப்படி நடந்தால், மீதமுள்ள கணிசமான தொகையைப் பாட்டி பேருக்கு டெபாஸிட் செய்து விட்டு... அவள் கண்களைத் திறந்து பார்க்குமுன் கண் காணாமல் நகர்ந்து விட வேண்டும்.

அதற்கு முன்... அந்த வேலையை விட்டுவிடப் போகிறேன். வடக்கே... வேலை கிடைத்து விட்டது. அங்கேயே போய் விடப் போகிறேன் என்று கொஞ்சம் பில்டப் ஏற்றிவிட வேண்டும்!



அடுக்கடுக்காய்... அடுத்து நடக்க வேண்டியவைகளை மனது ஒத்திகையிட... மணி பதினொன்றானதை உணர்ந்து உறங்கச் சென்றான்.

மறுநாள்... காயத்ரியின் பாட்டியை அழைத்துக் கொண்டு போய்... டெஸ்ட் செய்து... என்று மனதிற்குள் யோசனையை அடுக்கியவாறே... விழித்தவனிடம் ஒரு குண்டைத் தூக்கிப் போட்டாள், எமிலி!

அடடா... எப்படி மறந்தேன் இதை? எமிலி பயப் படுவது போல், மாறி விட்டேனோ!

## 30

"என்னங்க... இன்னிக்கு டாக்டர்கிட்ட போக வேண்டிய நாள்... நினைவிருக் கில்லே...?" – எமிலி.

"என்னடா? இன்னிக்கு... ஓ... பத்தாம் தேதி யில்லையா?"

"வர வர உங்களுக்கு எதுதான் நினைவிருக்கு?"

பேச்சைச் சண்டையாய் வளர்த்த விரும்பாத ஜேம்ஸ்... "மறப்பேனா! சாயங்காலம் சீக்கிரம் வந்துடறேன்... போயிட்டு வரலாம். ரெடியாய் இரு!" என்றான்.

"என்னங்க... நான் போன முறையே சொன்னேனே.... நாம் நேரில போய்த்தான் டோக்கன் வாங்கி டாக்டரைப் பார்க்க வேண்டியிருக்கு. அதனால், நைட் ரொம்ப லேட்டாயிடுது! என்னாலேயும்... வயத்தைத் தூக்கிட்டு ரொம்ப நேரம் அங்கே உட்கார்ந்திருக்க முடியலை..."

"சொல்லுடா..." - உண்மையிலேயே சென்ற முறை இது விஷயமாய் அவள் ஏதோ சொன்னாள்.... என்பது நிழலாடியதே தவிர, என்ன சொன்னாள் என்று நினைவுக்கு வரவில்லை.

"அதனால... காலையிலேயே போய்க் காண்பிச்சுட்டு வந்துடலாம். எனக்கும் ஸ்கேன் பார்த்து டாக்டர் என்ன சொல்லப் போறாங்களோங்கிற டென்ஷன் காலையோடயே முடிஞ்சிடும்."

"சரி... ரெடியாகு! காலையிலேயே போய்விட்டு வந்துடலாம்."

இயல்பாய் முகத்தை வைத்துக் கொண்டு சொல்லி விட்டானே தவிர... தன்னுடைய அன்றைய வேலை பற்றிய பிளானிங் எல்லாமே பாழானது புரிந்தது.

எமிலியுடன் மருத்துவ மனைக்குப் போய் வர, எப்படியும் அரை நாள் சரியாகிவிடும்.

நல்லவேளை... காயத்ரி பாட்டியிடம் கண் மாற்றுச் சிகிச்சை பற்றி நகுல் கூறியவற்றை இன்னும் கூறவில்லை.

நகுலிடம் மட்டும் ஒரு போன் செய்து, சாயங்காலம் வருவதாகக் கூறிவிட வேண்டும்.

சாயங்காலம் சீக்கிரம் கிளம்பிப் போய் அவளை நகுலின் மருத்துவமனையில் காண்பித்து விட்டு, பின்...

நினைப்பே மலைப்பாய் இருந்தது. ஆனால்... இது ஒரு நிரந்தரத் தீர்வை நோக்கிய நகர்தல் எனப் புரிந்தது போய்... ஆயாசம் போய்ப் பெருமூச்சு எழுந்தது, அவனுள்.



எப்போதும் போல், எமிலியின் பயம் தேவையற்றது எனவும், குழந்தை வயிற்றில் நல்ல ஆரோக்கியமாக இருப்பதாகவும் டாக்டர் கூறியதைத் தொடர்ந்து... பரிசோதனைக்கான பணத்தைச் செலுத்திவிட்டு இருவரும் வந்தனர்.

முந்தைய தினம் ஃபாதர் சொன்ன வார்த்தைகளின் அழுத்தத்தை உணர்ந்திருந்த ஜேம்ஸ்... பழையபடி, எமிலியிடம் சீண்டிக் கொண்டும்... அவ்வப்போது விசாரித்துக் கொண்டும்... தன் பழைய சுபாவத்தை நிலைநிறுத்த முயன்றான்.

அதில் ஓரளவு ஆசுவாசமான எமிலி... தான்தான் ஜேம்ஸை சரியானபடி புரிந்து கொள்ளவில்லையோ... என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டு... தான் முட்டாள்தனமாக எடுக்கவிருந்த முடிவுக்கு நிறையவே வருத்தப்பட்டாள்.

நல்லவேளையாக, அம்முயற்சி நடக்காமல்... தான் இன்று ஒரு பெரிய பாவம் செய்யாமல் தப்பித்ததற்காக அவசரமாக நன்றியுடன் ஜெபித்துக் கொண்டாள்.

காயத்ரியின் பாட்டியைப் பரிசோதித்துப் பார்த்த நகுல், கிடைத்திருக்கும் மாற்றுக் கண்களை அறுவைச் சிகிச்சை மூலம், அவளுக்குப் பொருத்தினால், அவளுக்கு நிச்சயம் கண்பார்வை கிடைக்கும் என்று கூறிவிட்டான்.

தனக்காக இத்தனை தூரம் சிரமப்படும் இவனைப் போய்த் தான் தப்பாக நினைத்தோமே... என்று ஆதங்கப் பட்டாள், பாட்டி.

அந்த வெள்ளிக்கிழமை... கண் அறுவைச் சிகிச்சை செய்ய... அப்பாயிண்ட்மெண்ட் கொடுக்கப்பட்டது.

நடுவில் காயத்ரி பாட்டியைக் கொண்டு போய், அவர்கள் வீட்டு வாசலில் ஆட்டோவில் விட்டு விட்டு வந்தான்.

அன்றைய தினம் முழுவதும் மருத்துவமனையிலேயே இருக்க வேண்டி வரும்.

எமிலிக்கு விஷயம் தெரியாமல், அவளை எப்படிச் சமாளிப்பது என்பதே பெரும் சவாலாகப் பட்டது.

ஆனாலும், இது ஏற்க வேண்டிய சிலுவை.

ஒரு விதத்தில் பார்த்தால், காயத்ரி தன் வருமானத்தில் பாட்டியை ஒரு குறையும் இல்லாமல் வைத்திருக்க முடிந்திருக்கும்.

ஆனால், இப்படிப் பாட்டிக்குத் திரும்பப் பார்வை கிடைக்க வழி ஏற்பட்டிருக்குமா... தெரியவில்லை.

தன்னால், ஒரு பார்வையற்ற ஜீவன், இந்தப் பரிசுத்த, பரிபூரண உலகத்தைக் காணும் வாய்ப்பைப் பெறப் போவதைப் பெருமிதமாய் உணர்ந்தான்.

எல்லாம் கர்த்தர் கிருபையாலே நல்லபடி நடக்குமா?

## 31

அன்று வியாழன்... எமிலியுடன் வாக்கிங் போய் விட்டு, காய்கறிகளும் வாங்கிக் கொண்டு இருவரும் திரும்பினர்.

வழியில் நாராயணன்.

இவன் அலுவலகத்தில் முன்பு வேலை பார்த்துக் கொண்டிருந்தவன்.



இப்போது, வேறு கணினித் துறையில் இதைவிட அதிகச் சம்பளத்தில் வேலை கிடைத்துப் போய் விட்டான்.

அவனைப் பற்றி எமிலியிடமும் எல்லாம் சொல்லி இருந்ததால், அவளும் பரஸ்பரம் வணக்கம் தெரிவித்தாள்.

"என்னடா... சிஸ்டர் விசேஷமா! எப்போ... அப்பாவாகப் போறே?"

"இப்போதான் ஆறு மாசமாகுது..." - சற்று வெட்கம் கலந்த தொனியில் பதிலளித்தாள், எமிலி.

அவனும் திருமணமாகி, இதே ஊரிலேயே இருப்பவன். ஆசைக்கே இரண்டாய், மணிமணியாய் இரண்டு பெண் குழந்தைகள்.

இருவரும் சற்று நேரம், ரோட்டிலேயே நின்று தங்கள் அலுவலகம் பற்றிப் பேசிக் கொண்டிருக்க, எமிலி நின்ற கால்கள் கடுக்க... தவிக்கலானாள்.

அவள் முகம் மாறுவதைக் கண்ட ஜேம்ஸ் விடை பெற்றுக் கிளம்ப முயலும்போதுதான்... நினைவுக்கு வந்த நாராயணன்,

"ஜேம்ஸ்! நானே உன் வீட்டுப் பக்கம் வரும்போது வரணும்னு இருந்தேன். இந்தாப்பா... இந்த சாயில்டு நோட்டை நம்ம பாங்க்ல மாத்திக் கொடு..." என்றவாறு, எண்ணெய் படிந்து, இலேசாக இங்க் கறை பட்ட ஐந்நூறு ரூபாய் நோட்டை எடுத்து நீட்டினான்.

அதை வாங்கிக் கொண்ட ஜேம்ஸ்... அதை மாற்றி, தான் வைத்துக் கொள்வதாகக் கூறித் தன்னிடமிருந்த ஐந்நூறு ரூபாய் நோட்டைக் கொடுத்தான்.

அவன் வங்கியில் பணிபுரிவதால், இது போன்ற உதவிகள் செய்வது வாடிக்கை.

அதுபோன்ற செல்லாத நோட்டுக்களை அவனுக்கு அவன் வங்கியில் மாற்றிப் புதிதாகப் பெற்றுக் கொள்வது எளிது.

முதுகில் தட்டி விட்டு... "சரி, பார்ப்போம். குழந்தை பிறந்ததும் சொல்லுடா!" என்றவாறு விடை பெற்றான், நாராயணன்.

அதைத் தன் சட்டைப் பையில் வைத்தவாறு, எமிலியுடன் பேசியவாறே நடக்க ஆரம்பித்தவன்... அந்த ரூபாய் நோட்டை அத்துடன் மறந்தும் போய் விட்டான்.

மாலை! அலுவலகம் முடிந்து, காயத்ரியின் வீடு நோக்கி வண்டியைத் திருப்பினான்.

நாளை கண் மருத்துவமனைக்குச் செல்வது பற்றிக் கூறிவிட்டு வரலாம்...

கூட, இப்போது வீட்டைப் பார்த்துக் கொள்ள இருக்கும் அம்மா செல்லத்தை... நாளை முழுதினம் பாட்டியுடன் மருத்துவமனையில் கூட இருக்கும்படி கூற வேண்டும்!

நினைத்தவாறே வந்தவன்... வாசலில் தொங்கிய பூட்டைக் கண்டதும் துணுக்குற்றான்.

பாட்டி... அதுவும் கண் தெரியாமல் வீட்டை விட்டு நகர்ந்து இதுவரை பார்த்ததில்லை.

தனியே எங்கும் போயிருக்க வாய்ப்பில்லை என்று மனதைத் திடப்படுத்திக் கொண்டாலும், எங்கே போனாள் என்ற கேள்வியே... மூளையை அரித்தது.



கிளம்பலாமா... அல்லது சற்று நேரம் நின்று பார்க்கலாமா என்று யோசித்து, கிளம்ப யத்தனிக்கையிலே... தூரத்தில் தெரு முனையில்... அவர்களும், செல்லம்மாவும் நடந்து வந்து கொண்டிருப்பது தெரிந்தது.

எப்போதும் வீட்டுக்குள்... அவள் மட்டுமே புழங்குவதால், அடி கணக்கில் சாதாரணமானவள் போல் நடமாடுவாள். அங்கங்கே கதவை, சுவரைப் பிடித்துக் கொள்வாள்.

வீட்டை விட்டுப் படியிறங்கினால், பயன்படுத்தும் பித்தளைப் பூண் போட்ட தடியை வைத்துக் கொண்டு செல்லம்மாள் பிடித்துக் கொள்ளப் பாட்டி வந்து கொண டிருந்தாள்.

செல்லம்மாள் இன்ஸ்பெக்டர் சொல்லி, கருணை இல்லத்திலிருந்து வந்தவள். பாட்டியைப் பார்த்துக் கொண்டு முழுநேரமும் இங்கு இருப்பவள்.

"எனக்குப் பார்க்க பார்வை வந்துடுச்சின்னா உன்னை அனுப்பிடுவேன்னு நினைக்காதே. அப்பவும் நீ என்கூடவே எனக்குத் துணையா... இங்கேயே இருக்கணும்..." என்று அன்று பாட்டி அவளிடம் சொல்லிக் கொண்டிருந்ததைக் கேட்டு, மெல்லப் புன்முறுவல் கொண்டான் ஜேம்ஸ்.

பணம், காசு குறைவானவர்களுக்கு நிறைவான மனதை வைக்கிறான் ஆண்டவன்.

செல்லம்மாள் வரும்போதே சொல்லியிருப்பாள் போலும்!

"என்ன தம்பி! இங்கே நிற்கிறீங்க?"

"நீங்க வீட்டைப் பூட்டிட்டு வெளியே போயிட்டா... இங்கே நிற்காம... எங்கே நிற்கிறது பாட்டி?"

"அட... நான் ஒண்ணு... செல்லம், இந்தா!" - பாட்டி நீட்டிய சாவியை வாங்கிக் கொண்டு போய்க் கதவை அவள் திறக்க... மூவரும் நுழைந்தனர்.

மறுநாள்... மாற்றுக் கண் அறுவைச் சிகிச்சைக்கென, அட்மிட் ஆக வேண்டும் என்று கூறியதும்... உயிரற்ற அவள் கண்கள் பனித்தன.

கண்களோரம் நீர் எட்டிப் பார்த்தது போலிருந்தது.

சட்டென எழுந்தாள். அவள் அமர்ந்திருந்த இடத்தில் இருந்து இரண்டடி முன்னால் போய், பத்தடி இடதுபுறம் போனால், சாமி படங்கள் வைத்திருந்த அலமாரி.

தானே... எழுந்து அங்கே போனவள்... இரு கைகளையும் கூப்பிக் கொண்டு... முகத்தில் வைத்துக் கொண்டு குலுங்கலானாள்.

செல்லம்மாள் தான் அவளை மெல்ல ஆசுவாசப் படுத்தி அழைத்து வந்து உட்கார வைத்தாள்.

"நாளைக்கே நான் கண் திறந்து உங்களையெல்லாம் பார்க்க முடியுமா, தம்பி! அய்யோ... எனக்குக் கண் பார்வை வந்து, காயத்ரியைக் கண் கொண்டு பார்க்கக் கொடுத்து வைக்கவில்லையே!

ஆனா... தம்பி! முதன் முதல்ல... நான் கண்களைத் திறந்ததும் பார்க்கணும்னு ஆசைப்படறது கடவுளைத்தான்...! அதாவது, உங்க உருவத்துல வந்த கடவுளைத்தான்!



ஆமா தம்பி... நீங்கதான் என் முன்னாடி முதல்ல நிக்கணும். அப்புறம்தான் கண்களையே திறப்பேன்."

"எல்லாம் நல்லபடியா நடக்கும். நீங்க வணங்குற அந்தச் சாமி உங்களைக் கைவிடாது. உங்களைக் கர்த்..." - முடிக்க முடியாமல் விழிக்க... பார்வை சுவர்ப் பக்கம் எதேச்சையாய்ப் போனது.

"உங்களைக் கற்பகாம்பிகை சாமி கண்டிப்பாய்க் கைவிடாது... ஆமா, இரண்டு பேரும் நான் வரும்போது எங்கே போயிருந்தீர்கள்... பாட்டி! நாளையோ, நாளை மறுநாளோ பார்வை கிடைத்துவிடப் போகிறது. அதற்குள் அவசரமாக... அப்படியென்ன?"

"உன் கிண்டல் புரியுது தம்பி... ஆனால் இது அவசரமாகச் செய்ய வேண்டிய வேலைதான்..."

## 32

பாட்டி தானே தொடர்ந்தாள். "இரண்டு தெருக்கள் தள்ளியிருக்கும் பிள்ளையார் கோவிலுக்குத்தான் போயிருந்தோம்.

"எப்போதாவது காயத்ரி என்னை அங்கே அழைத்துப் போவாள். அது மட்டுமல்லாது... உச்சி முதல் பாதம் வரை பிள்ளையார் அலங்காரத்தையும்... அங்குள்ள முருகன் வள்ளி தெய்வானையையும் அவள் வர்ணித்துக் கொண்டே போக... இந்தப் பிள்ளையாரைப் பார்க்கவாவது... சாவதற்குள் எனக்குக் கண் பார்வை வராதா... என்று நான் ஏங்கியதுண்டு.

"என் வேண்டுதல் பலிக்கப் போகிறது. அந்த இறைவனுக்கு நன்றி சொல்லிவிட்டு வரப் போனேன்."

பாட்டியைப் பார்த்து விட்டுத் தன்னை மிகவும் சிறுமைப்படுத்தப்பட்டவனாய் உணர்ந்தான், ஜேம்ஸ்.

அன்றே ஒருநாள், ஜேம்ஸிடம்... 'வசந்த் தம்பி! நான் சொல்ற பிள்ளையார் கோயிலுக்குக் கூட்டிட்டுப் போப்பா. செல்லத்தைத் துணைக்கு வைத்துக் கொள்வேன்... நீ துணைக்கு வா, போதும்...' என்று கூறியிருந்தாள். 'நாம் போய் எப்படிப் பிள்ளையார் கோவிலுக்கு...' என்று காதில் வாங்கியும், வாங்காதவனாய் இருந்து விட்டான்.

நாம் கோவிலுக்கோ, சர்ச்சுக்கோ போனால்கூட, கண்ணில் படும் அனைத்து விஷயங்களிலும் கவனம் போகும். காதில் விழும் அனைத்து ஒலிகளிலும் கவனம் சிதறும்.

ஆனால், உள்ளத்தில் மட்டுமே, கடவுளைக் கண்டு வழிபட முடிந்த பாட்டியின் பக்தியோ... இவை அனைத்தையும் விட உயர்வானது... என்று நினைத்தான்.

மறுநாள் வருவதாக வாக்களித்து விட்டு... வீடு திரும்பியவனுக்கு மனதிலோ சொல்லவொணா நிம்மதி!

அலுவலகத்தில் ஆடிட்.... என்று எமிலியிடம் கூறி விட்டு... காயத்ரி வீட்டுக்கு வந்து, பாட்டியையும் செல்லத்தையும் ஆட்டோவில் வரச் சொல்லிவிட்டு, நகுலின் மருத்துவமனைக்கு வந்தாயிற்று.

நகுல் வந்து, முதற்கட்டப் பரிசோதனைகளைச் செய்து விட்டு ஆபரேஷன் தியேட்டருக்கப் பாட்டி கொண்டு போகப் பட்டாள்.



ஆபரேஷன் முடிந்து வெளியில் வர, எப்படியும் ஒரு மணி நேரத்திற்கு மேலாகும் என்பதால், செல்லம்மாளிடம் விஷயத்தைச் சொல்லி, அங்கேயே இருக்கச் சொல்லி விட்டு... அலுவலகத்தில் தலை காட்டிவிட்டுப் போகலாம் என்று வந்தான்.

அலுவலகத்தில் லீவு சொல்லிவிட்டு வந்திருக்கலாம். ஆனால், இன்றைக்கென்று எமிலி... அவனுடைய அலுவலகத்திற்குப் போன் செய்து... கேட்கப் போக... 'ஜேம்ஸ்... லீவாச்சே!' என்றால், இவன் பாடு திண்டாட்டம் தான்.

எமிலி எப்போதும் அப்படித்தான். திடீரென்று அவனைத் தொடர்பு கொண்டு ஏதாவது பேச வேண்டும் என்று அவளுக்குத் தோன்றும்.

கைபேசியில் அவன் தொடர்பு கொள்ளும் நிலையில் இல்லையென்றாலோ... எடுத்துப் பேசக் கால தாமதமானாலோ, கட் பண்ணிவிட்டு... அலுவலகத்திற்குப் போன் செய்து... களேபரப்படுத்தி விடுவாள்.

அவளுக்கு அதைப் பற்றியெல்லாம் கவலையில்லை. அவள் ஜேம்ஸுடன் பேச வேண்டும் என்று நினைத்தால், அது எப்படியாகிலும் பேசியாக வேண்டும்.

கைபேசி கத்திக் கொண்டிருக்கும். அவன் எடுத்து ஆன் செய்து அட்டெண்ட் செய்வதற்குள், கட்டாகி விட... அலுவலகத் தொலைபேசியிலிருந்து அழைப்பு வரும். அங்கே அவன் ஓட வேண்டும்.

ஒரு முறை அப்படித்தான்... உதவி மேலாளர்... அவர் மேஜையின் மேல்தான் அலுவலகத் தொலைபேசி இருக்கும்.

'ஜேம்ஸ்...' என்று ஒரு குரல் கொடுத்துவிட்டு, அவன் தலை தென்படாமல் போகவே, 'அவர் ஸீட்டில் இல்லையே...!' என்று தொலைபேசியை வைத்துவிட... அப்போது கைபேசியெல்லாம் அவ்வளவு பிரபலமாகாத காலம்... ஜேம்ஸிடம் கைபேசி இல்லாத காலம் அது!

அவ்வளவுதான்... எமிலி பிலுபிலுவெனப் பிடித்துக் கொண்டாள். ஆபீஸில் இல்லாமல் அலுவலக நேரத்தில் எங்கே போனீர்கள்?

உதவி மேலாளராவது... இவனைச் சரியாகப் பார்க்காமல்... இல்லையென்று கூறிவிட்டாலும்... அப்புறம் இவனைப் பார்க்கும்போது... 'உன் மனைவி போன் செய்திருந்தாள்...' என்று கூறியாவது இருக்கலாம். எல்லாம் அவன் விதி!

ஆனால்... அவளுடைய கோபத்தில்... அவள் உள் மனதில் அவன்பால் அவள் கொண்ட அன்பு மின்னல் கீற்றென ஒளிர்வது ஜேம்ஸுக்குத் தெரியுமாதலால்... அவன் கோபப்படாமல், தலையைக் கோதி, அவளை மடியில் படுக்க வைத்துக் கொஞ்சியே பேச்சை மாற்றி விடுவான்.

அலுவலகத்தில்... யார் என்னவென்று சொல்லாமல், உறவினர் கண் அறுவைச் சிகிச்சைக்கென அட்மிட் செய்யப்பட்டிருப்பதையும் கூறி... அவர்களைப் பார்த்துக் கொள்ளத் தன்னை விட்டால் ஆள் இல்லையென்றும் கூறி, அனுமதி பெற்றிருந்தான்.

சிறிது நேரம் தலை காட்டிவிட்டுத் திரும்பவும் மருத்துவமனைக்கு வந்தபோது, ஏறக்குறைய ஆபரேஷன் முடியும் தறுவாயில் இருந்தது.



அடுத்த பத்தாவது நிமிடம்... கதவு திறக்கப்பட, நகுலும் இன்னொரு டாக்டரும் வெளியே வந்தனர்.

நகுல்... வெற்றிகரமாக, எல்லாம் முடிந்ததற்கு அடையாளமாக... கட்டை விரலை உயர்த்திக் காட்டிக் கொண்டே வர...

அப்போதுதான் ஜேம்ஸ் மனதிற்குள் அமைதியானான்.

தனக்குச் சிறிதும் ரத்த பந்தமில்லாத பாட்டிக்கு நல்லது நடக்க வேண்டுமே என்ற ஆதங்கத்தில், எல்லாம் முன் வந்து எடுத்துச் செய்திருந்தாலும்... ஒருவேளை ஏதேனும் கோளாறாகி,

உன்னை நான் இதையெல்லாம் கேட்டேனா...? நீயாக வந்து உதவி செய்கிறேன் என்று, காசையும் கரைத்து... அதற்குக் காலம் முழுவதும் அப்படியே இருந்திருப்பேனே... என்று பாட்டி விரல் நீட்டி வையும்படி ஆகிவிடக் கூடாது என்று பயம் இருந்தது.

செல்லம்மாள் பக்கத்தில் இருப்பதை உணர்ந்து, திரும்பி, நெஞ்சில் சிலுவையிட்டுக் கொண்டான்.

நகுல் ரூமுக்குச் செல்ல... அவனைத் தொடர்ந்து, ஜேம்ஸும் செல்லம்மாளும் தொடர்ந்தனர்.

"எல்லாம் நல்லபடியா முடிஞ்சது. எதிர்பார்த்ததற்கும் மேலாக... மாற்றிய கண்களும், பாட்டியின் கண் திசுக் களுடன் நன்றாக ஒத்துப் போய்விட்டன... இவளுக்குக் கண் பார்வை நூறு சதவீதம் வந்த மாதிரிதான்..."

"எப்போது கண் கட்டுக்களை அவிழ்க்கலாம்?"

"ஆபரேஷன் வெற்றிகரமாக முடிந்தாலும், அவசரப் பட்டுக் கண் கட்டுக்களை அவிழ்த்தால், இன்ஃபெக்ஷன் வர வாய்ப்புள்ளது. இரண்டு நாட்கள் போகட்டுமே..."

"நாளை மாலை கண் கட்டுக்களை அவிழ்த்து விடலாம். இவர்தானே, அந்தப் பாட்டியைப் பார்த்துக் கொள்கிறவர். இவருக்கு கட்டுக்களை அவிழ்த்தபின்.. என்ன என்ன சொட்டு மருந்து எப்போது விட வேண்டும், என்று சொல்லித் தந்து விடுகிறேன்... வாங்கம்மா!"

செல்லம்மாள் தயங்கியவாறே, நகுலின் பின்னே செல்ல, ஜேம்ஸ் தனித்து விடப்பட்டான்.

இவ்வளவு நேரம் இருந்த மனநிலை இப்போது மாறியது.

நாளை பாட்டிக்குப் பார்வை கிடைத்துவிடும். அவள் இவ்வுலகை... செல்லம்மாவை... என்னைப் பார்க்கத் துவங்கி விடுவாள்.

இது நாள்வரை, காயத்ரியைக் காதலித்துக் கல்யாணம் செய்து கொள்வதாயிருந்த வசந்த்... தான்தான் என்று நினைத்துக் கொண்டிருக்கிறாள்.

நாளை மாலை, அந்நினைப்பு ஒரே நொடியில் சரிந்து விடும். ஆனால், அவள் வசந்த்தைப் பார்த்திருக்கவில்லை என்பதால், நாளை உடனே உண்மை தெரியப் போவதில்லை.

வசந்த் என்றே தன்னை நினைக்கத் துவங்குவாள். ஆனால், எவ்வளவு நாட்கள் உண்மையை ஒளித்து வைக்க முடியும்?



காயத்ரிதான் அழகாக, அந்த வசந்த்துடைய போட்டோவை, டைரியில் வைத்திருக்கிறாளே...!

இது நாள் வரை அந்தப் போட்டோவைப் பாட்டி எடுத்துப் பார்த்தாலும் கூட, அதில் இருப்பது தான் இல்லை என்று தெரிந்திருக்கப் போவதில்லை.

உயிரற்ற விழிகளால், தடவிப் பார்த்துத் தான்தான் அது என்று நினைத்துக் கொண்டிருக்கப் போகிறாள்!

செல்லம்மாளும், மேலுக்குப் பாட்டிக்கு எல்லா உதவிகளும் செய்வாளே தவிர, அவள் வீட்டில், எல்லா வற்றையும் தொட்டுப் புழங்கும் அதீத உரிமை எடுத்துக் கொள்வதில்லை.

பாட்டியும், ஏற்கெனவே முன்பிருந்த வேலைக்காரி விஷயத்தில், நல்ல படிப்பினை இருந்ததால், செல்லம்மாளிடம் அளவோடே வைத்துக் கொண்டிருந்தாள்.

அதனால்தான் இதுவரை உண்மை தெரியாமல் வண்டி ஓடுகிறது.

வசந்த் படம் காயத்ரியின் டைரியிலேயே இருந்தும் கூட, அந்த வேடத்தில் அவனால் இருக்க முடிந்திருக்கிறது.

நாளை உண்மை தெரிய வரும்போது, பாட்டி எப்படி மாறுவாள்? கண்டிப்பாக இவனால், இவன் முயற்சியால் தான் கண் பார்வை கிடைத்திருக்கிறது என்ற சின்ன உதவிக்காக... இவனால் காயத்ரி செத்த, பெரிய தப்பை மன்னிக்க மாட்டாள்.

இவன் மேல் தப்பில்லையென்று வாதாடினாலும், ஒன்று அவளை இடித்த உடனே, உயிர் இருக்கிறதா என்று பார்த்து மருத்துவமனைக்காவது எடுத்துச் சென்றிருக்கலாம்.

ஏன்... போலீஸில் நடந்தவற்றைக் கூறிச் சட்டப்படி தன் மீது தப்பில்லை என நிரூபித்திருக்கலாமே...!

கோழையைப் போல, அவன் யாரும் பார்க்கவில்லை என்றதும்... இடித்துவிட்டு, இடத்தை விட்டு உடனே விரைந்ததை எப்படி நியாயப்படுத்துவான்?

அப்போதைய அவன் மனநிலையின் நியாயம் மற்றவர்கள் புரிந்து கொள்ள எளிதானதல்லவே!

இப்பவும்கூட, முயற்சிதான் இவனுடையதே தவிர, பணம் முழுவதும் பாட்டியின் காசல்லவா!

அவள் பேத்தி, பாட்டியின் எதிர்காலத்திற்கெனச் சேர்த்து வைத்திருந்ததல்லவா.... எதிர்காலத்திற்குக் கண் களின் ஒளியாக மாறியிருக்கிறது.

எப்படித்தான் யோசித்தாலும், உண்மையைத் தெரிய வைத்து, எதிர்கொள்ளும் தைரியம் இல்லை என்பது புரிந்தது.

நகுல் கூறியபடி, அவளிடம் இப்போது எதுவும் அதிர்ச்சி தரக்கூடிய வகையில் பேசக்கூடாது.

நாளை அவள் கண் விழித்துப் பார்ப்பதற்குள், இடத்தைக் காலி செய்து விட வேண்டும், அதுவும் பொருத்தமான காரணத்துடன்.

நான் காயத்ரி அலுவலகத்தில்தான் பணி புரிவதாகப் பாட்டி நம்பிக் கொண்டிருக்கிறாள். சொல்லாமல், கொள்ளாமல் வருவதை நிறுத்திக் கொண்டால், பாட்டி சந்தேகப்பட்டு, அவள் அலுவலகத்தைத் தொடர்பு கொண்டு ஏகக் குழப்பமாகி விடும்.



அது மட்டுமல்ல... இன்று மட்டுமல்ல... என்றுமே உண்மை வெளியே வராமலே போகட்டும் என்பதே அவன் விருப்பமாக இருந்தது.

வெகு நேரம் யோசித்து, ஒரு முடிவுக்கு வந்து விட்டான்.

ஆம்! அதுதான் இதற்குச் சரியான தீர்வு.

## 33

பதவி உயர்வு கிடைத்து, வடக்கே மாற்றலாகிவிட்டது என்றும், உடனேயே அங்கு வேலையில் சேர வேண்டும் என்றும் கூறிவிட வேண்டியதுதான்.

கவனமாக, வடக்கே டெல்லி என்பதோடு நிறுத்திக் கொள்ள வேண்டும். மேற்கொண்டு எதுவும் கேட்காதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

பதவி உயர்வு என்று கூறும்போது... எனக்காக, அதை மறுத்துவிட்டு இங்கேயே இரு என்று கூறுகிறவள் இல்லை, பாட்டி. இதை அவளுடன் பழகிய இந்த நாட்களில் அறிந்திருந்தான்.

ஆனால் என்ன... என்றாவது பாட்டி காயத்ரியின் டைரியைப் புரட்டித் தன்னை வஸந்த் என்று நினைத்துக் கொள்வதோடு நிறுத்திக் கொள்ளாமல், அதைச் செல்லம்மாவிடம் காட்டினால், தான் காலி.

அவள் கண்டுபிடித்து விடுவாள். ஆனால், அப்படி ஏதும் நடக்க வேண்டும் என்றிருந்தால், நடந்துவிட்டுப் போகட்டும்.

இன்று போகட்டும்... நாளைக் காலை வரும்போது, பக்குவமாகச் சொல்லிவிட வேண்டும்.

நடுவில் அலுவலகம் போய்விட்டுப் பின் கிளம்ப வேண்டும். நல்லவேளையாக மருத்தவமனையை ஒட்டியே கேன்டீன் இருந்ததால், செல்லம்மாள் இருவருக்குமாகச் சாப்பாடு வாங்கிக் கொண்டாள்.

முன்பு ஒருமுறை நகை காணாமல் போனபோது, சடாரென்று ஜேம்ஸ் மீது கோபப்பட்டுச் சந்தேகப்பட்ட பாட்டியே, உண்மை தெரிந்த பிறகு, அவன் மீது மிகுந்த நம்பிக்கையை வைக்கத் தொடங்கியிருந்தாள்.

ஆஸ்பத்திரிக்குக் கட்டும் முன்பணமோ, பின் கட்ட வேண்டிய முழுத் தொகையோ... எல்லாம் ஜேம்ஸ் கட்டுப்பாட்டிலேயே இருந்தது.

செல்லம்மாவை முழுதாக நம்பமுடியாவிட்டாலும், அவள்தான் பாட்டிக்குத் தேவையான அனைத்தையும் வாங்கிக் கொடுத்துப் பக்கத்தில் இருந்து பார்த்துக் கொள்வதால், அவ்வப்போது செலவிற்குப் பாட்டியின் பணத்திலிருந்து கொடுத்து வந்தான்.

அதுபோலவே கிளம்புமுன்... செல்லம்மாவிடம் ஐந்து நூறு ரூபாய் நோட்டுக்களையும், ஐந்நூறு ரூபாய் நோட்டு ஒன்றையும் கொடுத்துவிட்டுக் கிளம்பலானான்.

அங்கு நோயாளியைத் தவிர, ஒருவர் மட்டும் தங்க அனுமதிக்கப்படுவார்.

இந்தக் கட்டுப்பாட்டைத் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டு, பாட்டியிடம் சொல்லிக்கொண்டு வெளியே வந்தான்.



எமிலி... அவன் போனதுமே, ஆசையாய்க் கைகளைப் பிடித்துக் கொண்டாள்.

நொடியில் அனைத்தும் மறந்து போக, எமிலியே உலகமானான்.

வழக்கமாகப் பையனா, பெண்ணா என்று எமிலியைச் சீண்டும் விளையாட்டை ஆரம்பித்தான்.

"வயித்துல என்ன சொல்றான், என் பையன்...?"

"'மொதல்ல பையன்னு சொல்லாம, என் பொண்ணுன்னு அப்பாவைச் சொல்லச் சொல்லு...' அப்படிங்கிறா என் பெண்...!"

"இல்லையே... இப்படி வயிறு ரொம்பப் பெரிசா இருந்தாப் பையன்தான்!"

"ஆமா... இவரு இதுக்கு முன்னாடி நூறு பேரைப் பார்த்திருக்காரு... சொல்ல வந்துட்டாரு!"

"அது மட்டுமில்ல எமிலி! நீ இப்பல்லாம் நல்லா, அழகா ஆயிட்டே வரே பாரு... அதை வைச்சுப் பார்த்தாக்கூட, நீ எனக்குப் பையன்தான் பெத்துத் தரப் போறே..!"

சட்டென, மேற்கொண்டு வாதிடுவதை விட்டுவிட்டு, அவன் தோளில் சாய்ந்தபடியே அமைதியானாள்.

அந்த ஒன்றுதான், எமிலியை அசைக்கும் ஆயுதம்.

அழகு பற்றி... அதுவும் ஜேம்ஸ் புகழ்ந்து கூறி விட்டானானால் போதும்...!

மறு பேச்சு வராது! புதுப் பெண்ணாய்த் தலை கவிழும். நாணம் வந்து முகத்தை மெருகேற்றும்!

வேண்டுமென்றே அவளைச் சீண்டுவது ஜேம்ஸிற்குப் பொழுதுபோக்கு.

"நெஜமாவாங்க...!"

"எது நெஜமா? நமக்குப் பையன் பொறக்கப் போறதா?"

"அது இல்லைங்க... இன்னொன்று சொன்னீங் களே...!"

"எது? வயிறு பெருசா இருக்குங்கறதா? அது உண்மைதான் எமிலி. ஏன், நீ உன்னைக் கண்ணாடியில் பார்த்துக் கொள்வதேயில்லையா?"

"இப்படிப் பேசிக்கொண்டே புரியாதது மாதிரிப் பண்ணீங்கன்னா, அப்படியே கோபம் வந்து, கடிச்சுக் குதறிடுவேன்!"

"அட... பார்த்தாயா! இப்பத்தான் உன்னை அழகா யிட்டே வரேன்னு சொல்லி வாய் மூடலே... அதுக்குள்ளே கரடியா கடிச்சுக் குதறப் போறேங்கறே...?" என்றவன் தொடர்ந்து,

"ஒத்துக்கறேன், ஒத்துக்கறேன்... தெரியாமல் பொய் சொல்லிட்டேன்! ஒத்துக்கறேன்... அதுக்குன்னு இப்படிப் பயமுறுத்தாதேம்மா...!"

"என்னது, பொய்யா? நான் அழகா இருக்கேன்னு பொய்யா சொல்றீங்க...! உங்களை..."



பொய்யாகக் கரடி மாதிரி முகத்தை வைத்துக் கொண்டு, அவனை அடிக்க வர, அவன் ஓட, இவள் துரத்த...

"எமிலி! நான் சரண்டர்... இப்படி ஓடினா, என் பொண்ணு என்னைத்தான் திட்டுவா! இப்படி உட்காரு..."

வாய் தவறி அவனே பெண் என்று சொல்லிவிட, ஒருகணம் மெய்மறந்த எமிலி... அடுத்த நொடி, கைதட்டிச் சிரித்தாள்.

"அப்படி வாங்க வழிக்கு! உங்க பெண் சொன்னாளா... என்கிட்டேகூட சொன்னா... வெளியே வந்ததும் நானும், நீயுமா அப்பாவை ஒரு வழி பண்ணிடலாம்னா!"

"போச்சுடா... ஒன்னுக்கு ரெண்டா தாய்க்குலங்களை எப்படித்தான் சமாளிக்கப் போறனோ... கர்த்தரே!" பொய்யாகத் தலையில் கைகளை வைத்துக் கொண்டான்.

நாளைய பூகம்பம் பற்றி அறியாத அவர்கள் வாழ்வு, அன்று சந்தோஷப் பூக்களால் நிறைந்தது.

## 34

எமிலி மறுநாளும் சந்தோஷமாய் உணர்ந்தாள்.

"ஏசுவே... உன்னை நான் துதிப்பேன்,
துதிப்பேன்,
எந்த வேளையிலும் துதிப்பேன்..." - பாடலை முணுமுணுத்தபடி, காரியங்களில் ஈடுபட்டிருந்தாள்.

ஜேம்ஸ், காலையில் மருத்துவ மனைக்குப் போய் விட்டு, அலுவலகம் செல்ல வேண்டுமென்பதால், சீக்கிரமே எழுந்து ரெடியாக ஆயத்தமானான்.

குளிக்கக் கிளம்பியவன், குளியலறைக்கு அப்போது தான் சென்றிருப்பான்...

செல்பேசி சிணுங்கியது.

பொதுவாக... செல்பேசி அவனுடையது ஒலித்தால், அவள் அதை அட்டெண்ட் செய்ய மாட்டாள். அவனே வந்து பார்த்துக் கொள்ளட்டும் என்று வாளாயிருந்து விடுவாள்.

“சரி... எடுத்துப் பேச வேண்டாம்! எனக்கு ஆபீஸில் இருந்துகூடச் செய்திருப்பார்கள்... அது சரி... ஆனால், நான் வந்ததும், செல் ஒலித்தது என்றாவது கூறியிருக் கலாம்... இல்லையா?” என்று ஒரு முறை ஜேம்ஸ்கூட கோபித்துக் கொண்டது நினைவிலாடியது.

ஆனால், அடுத்தடுத்து விடாமல் செல் கதறிக் கொண்டே இருக்க...

ஆர்வமிகுதியால் அதை எடுத்து, அழைப்பது யார் என்று பார்த்தாள்.

‘விசாலம்... காலிங்...!’ – தூக்கிவாரிப் போட்டது.

விசாலம் என்று யாரும் அவன் அலுவலகத்தில் பணிபுரியவில்லை என்பதை அவள் அறிவாள்.

இந்துப் பெயராக உள்ளதே... ‘விசாலம்’ என்ற பெயரில், யாரைப் பற்றியும், அவன் ஏதும் சொன்ன தில்லையே...!



குளியலறையில் தண்ணீர் சத்தம் நின்றதும், குழப்பத்தை முகத்தில் தேக்கியவாறே சமையலறையில் நுழைந்து கொண்டாள்.

ஜேம்ஸ் குளித்துவிட்டு வந்த பிறகும்கூட, விடாமல் அழைத்துக் கொண்டிருந்தது செல்பேசி.

உள்ளே இருந்தாலும், அவனுடைய நடவடிக்கைகளை உள்ளிருந்தவாறே கவனிக்காமல் இருக்க முடியவில்லை எமிலியால்!

அவசரமாகச் செல்லை எடுத்து, யாரென்று பார்த்த ஜேம்ஸால், முகத்தில் கண நேரம் தோன்றி மறைந்த திருட்டுத்தனத்தை மறைக்க முடியவில்லை.

அதை ஆன் செய்தவாறே, சர்வீஸ் வராண்டாவோரம் ஒதுங்கினான்.

சாதாரண அழைப்பாய் இருந்தால், ஏன் இந்தத் திருட்டுத்தனம்?

ஜேம்ஸ் மீது வைத்துள்ள அதீத அன்பு காரணமாக, அவன் அவளை விட்டு வேறு யாரிடமும் அன்பு செலுத்தி விடக் கூடாது என்று ஒரு சந்தேகக் கண் கொண்டே இருப்பவள்...!

இன்று, திரும்பவும் அந்தக் குணம் தலைதூக்கத் தொடங்கியது, எமிலியிடம்!

ஏதோ இரகசியம் ஜேம்ஸை ஆள்வது போலவும், அதைத் தெரிந்து கொண்டே ஆக வேண்டும் என்ற தீர்மானத்தில் துப்பறியவும் தயாரானாள், எமிலி.

அவனை நேருக்கு நேர் பிடித்துக் கேட்டாலும், ஏதாவது சொல்லி மழுப்பி விடுவான் ஜேம்ஸ்!

சற்று நகர்ந்து, ஜன்னலோரம் காதைக் கொடுத்தாள்.

"வீட்டிற்குப் போன் பண்ணாதேன்னு சொல்லியிருக்கேன்ல... செல்லம்மா..."

முன் விசாலம்... இப்போது செல்லம்மா... ஒரு வேளை, செல்லமாக, செல்லம்மாவோ!

"சரி, சரி... நான் நேர்ல வரேன். நீ நகுல் டாக்டரைப் போய்ப் பார்! அவர்கிட்டே சொல்லி, மருந்துக் கடையில சொல்லச் சொல்லி வாங்கிக்கோ! பத்திரமாப் பார்த்துக்கோ...!"

"சரி... நான் வரேன். அது சும்மா, பயமுறுத்தியிருப்பாங்க. நான் இன்னும் அரை மணி நேரத்துல வரேன்!"

செல்லை அணைத்தவன், தலையில் நோகாமல் அடித்துக் கொண்டான்.

சே...! எவ்வளவு பெரிய மடத்தனம்! நாராயணன் கொடுத்த ஐந்நூறு ரூபாய் நோட்டைச் செல்லம்மாவிடம் மருந்து வாங்க, கொள்ளச் செலவிற்கு வைத்துக் கொள் என்று அறியாமல் கொடுத்தது மடத்தனம்!

பாவம், அவள்! ஒரு அவசர மருந்திற்காக, அதை மருந்துக் கடையில் கொடுத்து மருந்து வாங்கப் போக, அது செல்லாத நோட்டு... மேலும் கள்ள நோட்டாகக்கூட இருக்கலாம் என்று போலீஸில் புகார் கொடுக்கப் போவதாகக் கூறி, உட்கார வைத்திருக்கிறார்கள்!



நல்ல வேளையாக, செல்பேசி அழைத்ததும் நான் வந்து எடுத்து என்ன, ஏதென்று பார்த்து விட்டதால், எமிலி கவனிக்கவில்லை.

இல்லையெனில், விசாலம் யார்... என்னவென்று, மேலும் மேலும் பொய் சொல்ல வேண்டி வந்திருக்கும் என்று தனக்குத் தானே சமாதானப்படுத்திக் கொண்டான்.

நகுலின் மருத்துவமனையின் உள்ளேயே இயங்கி வரும் மருந்துக் கடை என்பதால், அவன் எடுத்துச் சொன்னால் மருந்து தந்து விடுவார்கள்.

தான் போய்ப் பணம் தந்து கொள்ளலாம்...! ஆனால், அரை மணி நேரத்தில் வருவதாகக் கூறிவிட்டானே தவிர, எமிலியிடம் என்ன காரணம் சொல்லிச் சீக்கிரம் கிளம்புவது?

அவனை ஆச்சரியப்படுத்தும் விதமாக, எமிலியே எடுத்துக் கொடுத்தாள்.

"என்னங்க... ஏதோ செல் அடித்துக் கொண்டே இருந்ததே! ஆபீஸிலிருந்து போனா?"

"ஆ... ஆமாம், எமிலி!"

"நேத்து வேறே, ஆடிட் நடக்குது... சீக்கிரம் போகணும்னு போயிட்டீங்க... இன்னிக்கும் சீக்கிரம் வரச் சொல்லியா போன்...?"

அட, பழம் நழுவிப் பாலில் விழுந்து விட்டதே!

"ஆ... ஆமாம்...! சீக்கிரம் போகணும்தான்... ஆனா, நீயோ வயித்துப் பிள்ளையோட இருக்கே! நான் சீக்கிரம் போகணும்னு உன்னைச் சீக்கிரம் சமையல் செய்யச் சொல்லிப் படுத்த முடியுமா?"

"அதெல்லாம் சமையல் எப்பவோ ஆயிடுச்சு! தோசை, கிச்சடி ரெடி பண்ணிட்டேன். நீங்க சீக்கிரமே கிளம்பலாம்!"

"எமிலின்னா... எமிலிதான்! எதையும் நான் சொல்றதுக்குள்ளே செஞ்சு முடிச்சுடறே...!"

கன்னத்தைப் பிடித்துக் கொஞ்சினான், ஜேம்ஸ்.

அவசரமாகச் சாப்பிட்டான்.

அவள் உள்ளுக்குள் சொல்லிக்கொண்டாள்... 'என் அவசரம் உங்களுக்கெங்கே புரியப் போகிறது?'

'இவ்வளவு அவசரமாக, அரக்கப் பரக்கச் சாப்பிட்டுவிட்டு, யாரைத் தேடிப் போகிறீர்கள்? யாரந்த விசாலம் என்று அறிந்து கொள்ளாமல் என் தலையே வெடித்துவிடும்...!'

'இன்று உங்களைக் கையும் களவுமாகப் பிடித்து... 'அன்று சத்தியம் பண்ணிக் கூறிய வார்த்தைகள் எங்கே?' என்று நிற்க வைத்துக் கேட்க வேண்டும்...!'

வண்டியை உதைத்துக் கொண்டு ஜேம்ஸ் கிளம்பும் வரை சாதாரணமாயிருந்தவள், உடனே மின்னல் வேகத்தில் மாறினாள்.

சினிமாக்களில் காட்டுவதைப் போல, அடுத்த சீனில், வாயிற்படியில் இருந்தாள்.

இவளுக்காகவே காத்திருப்பது போல... வேகத்தை அவளருகில் வந்து குறைத்தது...

கடந்து சென்ற ஒரு ஆட்டோ!



ஜேம்ஸின் வாகனத்தைக் காட்டி, அதைப் பின் தொடர்ந்து போகச் சொல்லிவிட்டுச் சாய்ந்து உட்கார்ந்தாள், எமிலி!

காலை நேரப் பரபரப்பில் இருந்தது சாலை!

ஆயாசம் காரணமாக இடுப்பு வலித்தது. இடுப்பு, முதுகு, கால்கள், கைகள் என்று எல்லாமே பார்ட் பார்ட்டாக வலிப்பது போல் தோன்றியது.

மனதில் அயர்ச்சி பரவியது.

இத்தனைக்கும் நடுவிலும் மனதின் ஒரு பகுதி, ஜேம்ஸை நியாயப்படுத்தியது.

அன்று தான் தற்கொலை செய்து கொள்ள இருந்த போது, அந்த விஷயம் ஃபாதர் மூலமாகக் கேள்விப்பட்டு, எத்தனை துடித்துப் போனான். அந்தத் துடிப்பு நிஜம்!

அலுவலகத்தில் வேறு யாராவது விசாலம் என்ற பெயரில் புதிதாகச் சேர்ந்திருக்கலாம்.

அல்லது தனக்குத் தெரியப்படுத்த வேண்டிய அவசியமில்லை என்று விட்டிருக்கலாம்!

ஆக்ஸிடெண்ட், அடிபடுதல் போன்ற வார்த்தைகளெல்லாமே தனக்கு அலர்ஜி என்பதால், அப்படி ஏதாவது இருந்து தன்னிடம் கூறித் தன்னையும் கலவரப்படுத்த வேண்டாம் என்று விட்டிருக்கலாம்!

கர்த்தரிடத்து... ஆழ்ந்த நம்பிக்கையும் பற்றும் உடையவன்; தவறாகப் போகச் சாத்தியமில்லை... என்று ஒருபுறம் எண்ணங்கள் தோன்றினாலும், காலை முதல்

நடந்த நிகழ்ச்சிகள் அவள் கண் முன்னே விரிந்து, நிஜத்தைப் பேசின!

சடன் பிரேக்கால்... எண்ணங்கள் கலைந்து, சற்றே ஆடிவிட்டு அமர்ந்தாள்.

எமிலி சொன்னதைச் சிரமேற்கொண்டு, ஜேம்ஸின் வண்டியைக் கண் பார்வையிலிருந்து விட்டுவிடக் கூடாது என்பதிலேயே தீவிரமாயிருந்த டிரைவர், வேகத்தைக் கூட்டினான்.

"இவ்வளவு வேகமாப் போக வேண்டாம்... கொஞ்சம் மெதுவாவே போங்க!"

"இல்லைமா... மவுண்ட் ரோடு சிக்னல்ல வண்டி போயிடுச்சுன்னா... அப்புறம் ஃபாலோ பண்றது கஷ்டம். அந்த வண்டியை ஓவர் டேக் பண்ணி முன்னாடி கொண்டு நிறுத்தப் போறான் பாருங்க, ரஜினி."

"உன் பேரு ரஜினியா?"

"அட... எம் பேரு இல்லைமா... என் வண்டி... ரஜினி! என்ன சொல்றோமோ கச்சிதமாச் செஞ்சிடும்."

"ஓவர்டேக்கெல்லாம் பண்ண வேண்டாம். வண்டி எங்கே போகுதுன்னு சும்மா பார்த்துண்டாப் போதுமப்பா!"

குழம்பிப் போனான் டிரைவர்.

இந்த ஆளோட வண்டி எந்த ஃபிளாட்டிலிருந்து வந்ததோ, அந்தப் ஃபிளாட்டிலிருந்துதான் இந்தப் பொண்ணும் வந்து வண்டி பிடிச்சுச்சு...



இரண்டு பேரும் புருஷன், பெண்டாட்டியா? இல்லை... இதே ஃபிளாட்டுல வேற வேற வீடான்னு தெரியல...

இவன் எங்க போறான்னு பார்க்கவா... மாசமா இருக்கிற இந்தப் பொண்ணு இந்தச் சுத்து சுத்துது!

சரி... சரி... ஏதோ படிச்ச பொண்ணாட்டம் இருக்கு...

# 35

என்ன புருஷன் பெண்டாட்டி விவகாரமோ? என்ன இழவோ? நம்ம வேலையை நாம பார்ப்போம்!

காலையிலிருந்து சவாரியே மாட்டல. இந்த ஆளைக் கோட்டை விட்டுட்டு... இந்த அம்மாகிட்ட தலையைச் சொறிஞ்சுண்டு நிக்கணும்.

அதுக்கு... அவன் எங்கே போறான்னு பார்த்து... கொண்டு விட்டுட்டா... கேட்கற பணத்தைக் கொடுத்திடும் போலருக்கு.

வாங்கிட்டு நாஷ்டா பண்ணப் போயிட்டே இருக்கலாம்.

மனதில் எண்ணியவாறே ஆக்ஸிலேட்டரை மிதித்தான் டிரைவர்!

ரொம்பச் சிறியதும் இல்லாமல், பெரியதும் இல்லாமல் நடுத்தர வீட்டின் முன்னே நின்றது, ஜேம்ஸின் வண்டி!

அதோடு... பக்கத்து வீட்டின் கதவைத் தட்டி, ஏதோ சொல்லிவிட்டோ அல்லது கேட்டுவிட்டோ... திரும்ப வண்டியைக் கிளப்பினான்.

பின் தொடர்தல் தொடர்ந்தது. அந்தப் பிரமாண்டமான கண் மருத்துவமனையின் உள்ளே போய், பார்க்கிங் ஏரியாவில் வண்டியை நிறுத்தினான் ஜேம்ஸ்.

இங்கே இவனுக்கு என்ன வேலை? இதற்கு முன் போனது யார் வீடு? அது ஏன் பூட்டி இருந்தது?

இத்தனை குழப்பக் கேள்விகள் மூளையில் எழுந்தாலும்... இத்தனைக்கும் விடை காணத்தானே வந்திருக்கிறேன்... என்று சொல்லிக் கொண்டாள்.

"அம்மா...! வெயிட்டிங்காம்மா...?" - இழுத்தான் ஆட்டோ டிரைவர்.

இல்லையென்று மறுத்து, அவனுக்குரிய பணத்தைக் கொடுத்து அவனை அனுப்பி வைத்தாள்.

கொஞ்சம் பதுங்கியவாறே,. ஜேம்ஸ் அந்த அறைக்குள் நுழைவதைப் பார்த்தாள்.

பின்தொடர்ந்து செல்ல... அந்த வாயிற்புறமிருந்த ஜன்னல், அவள் ஒட்டுக் கேட்கவும், உள்ளே நடப்பதைக் கண்காணிக்கவும் வாகாய் அமைந்திருந்தது.

"செல்லம்மா...! மருந்துக் கடையில் மருந்து கொடுத்தாங்களா, இல்லையா? வாங்கிப் பாட்டிக்குக் கொடுத்தீங்களா? டாக்டர் வந்து பார்த்தாரா?"

"முதல்ல நீங்க கொடுத்த ஐந்நூறு ரூபாய் நோட்டு செல்லாது... கடனா மருந்து தர முடியாதுன்னு தர மாட்டேன்னு சொல்லிட்டாங்க...!"



"அப்புறம்... உங்க ஃபிரண்ட் ஒரு டாக்டர் வந்தாரே... அவரைப் போய்ப் பார்த்துச் சொன்னேங்கய்யா... அவர் வந்து சொல்லி, அப்புறம் கொடுத்தாங்க...!"

"சரி... சரி... நீ பார்த்துக்கோ... நான் போய் டாக்டரைப் பார்த்துவிட்டு வரேன்!"

நகுலிடம் கேட்டு, இன்றைக்கு டிஸ்சார்ஜ் செய்து விடலாமென்றால், பாட்டியிடம் பக்குவமாக மாறுதல் ஆன விஷயத்தைக் கூறித் தான் இனிமேல் வரமுடியாதெனக் கூறிவிட வேண்டும்...

நினைத்தவாறே வெளியில் வந்தவன், எதிர்பாராத அவன் வருகையால், அங்குமிங்கும் மறைந்து கொள்ள இடம் தேடும் மருண்ட பார்வையுடன் இருந்த எமிலியைப் பார்த்து விட்டான்.

"எமிலி... நீ இங்க எங்க...?"

"என்னைக் கேட்கறது இருக்கட்டும்... இதுதான் உங்க ஆபீஸ் ஆடிட்டிற்குச் சீக்கிரம் கிளம்பின ரகசியமா?

"யார் இவங்க? இந்தம்மா யாரு? இந்தப் பாட்டி யாரு? இவங்களுக்கு நீங்க ஏன் உதவி பண்ணிட்டு இருக்கீங்க?"

"எல்லாம் நான் பொறுமையாச் சொல்றேன். நீ நினைக்கிற மாதிரி தப்பா எல்லாம் எதுவும் இல்லை. நீ வீட்டிற்கு வா... எல்லாம் விவரமாச் சொல்றேன்...!"

"நான் நம்ப மாட்டேன். என்னை ஏமாத்தறீங்க! எதுவானாலும் இப்பவே சொல்லுங்க!"

"எமிலி... சொன்னாக் கேளு! வீட்டிற்கு வா... பேசிக்கலாம்!"

"நான் வர மாட்டேன்... எனக்கு எதுவானாலும் இப்பவே, இங்கேயே தெரியணும்..."

"எமிலி...! நீ இப்போ இருக்கற நிலைமையில... இப்படி எமோஷனலாகக்கூடாது... சொன்னாக் கேளு!"

அவனுக்கு, இவள் போடும் சத்தத்தில் பாட்டி கண் விழித்துவிடக் கூடாதே என்று பயம்!

எல்லாம் கூடி வருகிற நேரத்தில்... என்ன இது புதுக் குழப்பம்?

ஒரு வேளை... நான் போனில் காலையில் பேசும்போது கேட்டிருப்பாளோ!

என்னவானாலும் சரி... பாட்டிக்கு விஷயம் தெரியக் கூடாது.

எமிலியை இங்கிருந்து அப்புறப்படுத்தி விட்டால் போதும்.

அவளிடம் வீட்டில் வைத்துப் பக்குவமாகச் சொன்னால்... அவன் நிலைமையை, அவன் இப்படி முடிவெடுக்க வேண்டி வந்ததன் அவசியத்தைக் கூறினால், அவள் புரிந்து கொள்ளக் கூடும்.

அப்படியே மீறிப் போனால்...

ஃபாதரிடம் சொல்லி, அவர் மூலமாக எமிலியைச் சமாதானப்படுத்தலாம்.



## 36

எண்ணங்கள் மனதில் மோத மோத, எமிலியைக் கட்டுப்படுத்தினான்.

"என்னங்க... நான் கேட்கக் கேட்கப் பதிலே சொல்லாம இருக்கீங்க? இவங்கல்லாம் யாரு? உங்களுக்கும் இவங்களுக்கும் என்ன சம்பந்தம்?"

என்னதான் ஜேம்ஸ், மெதுவாகப் பேசச் சொல்லி, எமிலியைக் கெஞ்சாத குறையாகக் கேட்டுக் கொண்டாலும், அவள் போட்ட சத்தத்தில் உறக்கத்திலிருந்த பாட்டி விழித்துக் கொண்டாள்.

ஆயினும்... பாட்டி, உண்மை அறியும் வேளை வந்ததோ என்னமோ... அவள் புலன்கள் கூர்மையாயின.

கண்கள்தாம் திறக்க முடியாதவாறு, பாண்டேஜ் போட்டிருந்தாலும், காதுகள் கூர்மையாய் விழித்துக் கொண்டன.

ஜேம்ஸின் குரல் நடுநடுவே கேட்டதும் குழப்பமானாள்.

வசந்த் தம்பி யாருடன் பேசிக் கொண்டிருக்கிறது? கூடவே பெண் குரல் வேறு கேட்கிறதே!

இந்தப் பாட்டிக்கும் உனக்கும் என்ன சம்பந்தம் என்று கேட்கும்போது, இந்தத் தம்பி ஏன் பேசாமல் இருக்கிறது?

காயத்ரி... என் அருமைக் காதலி காயத்ரி... நான் கல்யாணம் பண்ணிக் கொள்ள இருந்த காயத்ரியின் பாட்டி என்று ஏன் கூறவில்லை!

இதையெல்லாம் கூறாமல், வீட்டிற்கு வா, பேசிக் கொள்ளலாம் என்று சமாதானப்படுத்திக் கொண்டல்லவா இருக்கிறான், வசந்த்.

'எமிலி' என்ற பெயர் அடிபட்டது வேறு பாட்டியை மேலும் குழப்பியது.

'எமிலி'... கிறிஸ்தவப் பெயராக அல்லவா உள்ளது. இந்தப் பெண்ணிற்கும் வசந்திற்கும் என்ன சம்பந்தம் இருக்க முடியும்?

எல்லாக் கேள்விகளும் பாட்டியை ஒரு சேரக் குடைந்தன.

செல்லம்மாவை மெல்லக் கூப்பிட்டு, என்ன நடக்கிறதென்று கேட்கலாம் என்று நினைத்தவள், அதை உடனே கைவிட்டாள்.

நான் தூங்கிவிட்டேன் என்று வசந்த் தம்பி உட்பட அனைவரும் நினைத்துக் கொண்டிருக்கின்றனர். அவ்வாறே இருக்கட்டும்.

என்னைச் சுற்றி எனக்கே புரியாத, என்னால் தெரிந்து கொள்ள முடியாத ஒன்று நடந்து கொண்டிருக்கிறது.

ஏதோ... என்னவென்று தெரியாத ஒரு தப்பு நடந்திருக் கிறது! அது என்னவென்று தெரிய வேண்டுமானால்... இப்போது செல்லம்மாவைக் கூப்பிட்டு அவர்கள் அனை வரின் கவனத்தைத் திருப்பக்கூடாது.

மௌனமாய்... காதுகளைத் தீட்டிக் கொண்டாள் பாட்டி.



இப்படி ஒரு மோசமான சூழ்நிலையை ஜேம்ஸ் எதிர்பார்த்திருக்கவில்லை. மிஞ்சி மிஞ்சிப் போனால், என்றாவது எமிலிக்கு உண்மை தெரிய நேரிடலாம்...!

அன்று அப்படியே எமிலி சமாதானப்படாவிட்டாலும், உண்மையைப் போட்டு உடைத்துவிடலாம்!

தன்னைக் கொலைகாரன் போல் எமிலி பார்க்கக் கூடும். வெறுக்கத் துவங்கக்கூடும்.

ஆனால் தன்னுடைய அன்பினாலும், நேசத்தாலும் அவளை மாற்றிவிடலாம் என்றுதான் நினைத்திருந்தான்.

இப்படி மருத்துவமனைக்கு வந்து... அதுவும் பாட்டியிடம் பதவி உயர்வு, மாற்றல் என்றெல்லாம் கூறி, விடைபெற்றுக் கொண்டு விடலாம் என்று நினைத்துக் கொண்டிருக்கும் தறுவாயில் எமிலி வந்து...

நல்லவேளை... பாட்டி உறக்கத்தில் இருப்பதால், எமிலியை யார், என்னவென்று கேட்கவில்லை.

செல்லம்மாவும், பாட்டிக்கு டிபன் வாங்கி வரப் போயிருக்கிறாள்.

ஒருமுறை, உறங்கும் பாட்டியைப் பார்த்துவிட்டு, மெதுவான குரலில் எமிலியைப் பார்த்துக் கூறினான்.

"சரி எமிலி...! நீ விடமாட்டேன் என்கிறாய்... உண்மையைச் சொல்லித் தொலைக்கிறேன்..."

எமிலியுடன், பாட்டியும் அவன் பேச்சில் கவன மானாள்.

"நீ நினைப்பது போல், பாட்டிக்கும், எனக்கும் எந்தவிதமான உறவும் இல்லை. சென்ற ஆறு மாதம் முன் வரை அவர்கள் யாரோ... நான் யாரோ...? ஆனால், அதன்பின் அவர்களுக்கு ஊழியம் பண்ணக் கர்த்தரால் நிர்பந்திக்கப்பட்டவன் நான்!"

"என்ன உளறுகிறீர்கள்?"

"எல்லாம் உனக்குப் புரியும்படி சொன்னால்தான் தெரியும். இந்தப் பாட்டிக்குக் கண் தெரியாது. இவளுக்குச் சொந்த பந்தம் எல்லாமே இவள் பேத்தி காயத்ரிதான்."

"அதேபோல், அந்தக் காயத்ரிக்கும்... எல்லாமே இவள்தான். அப்படியிருக்கையில் இவளின் ஒரே செல்லப் பேத்தியின் சாவிற்கு நான் காரணமாகி விட்டேன்."

"நீங்களா? ஒருவேளை நீங்கள் அவளைக் காதலித்து ஏமாற்றி... அப்படி ஏதாவது..." - நடுங்கும் குரலில் கேட்டாள், எமிலி!

'ஆமாம்...' என்று மட்டும் சொல்லிவிட்டால், அந்த ஒரு நொடிதான் அவள் வாழ்நாளிலேயே மிக மோசமான விநாடியாக இருக்க முடியும்!

"நீ நினைப்பது போலெல்லாம் இல்லை. அந்த நிமிடம் வரை, அப்பெண் சாகும் வரை, அவள் யாரென்றோ, அவள் பெயரோகூட எனக்குத் தெரியாது..." - நிறுத்த

அப்பாடா... வேறு ஏதோதான் நடந்திருக்கிறது... ஜேம்ஸ் காதலித்து, கைவிட்டு... அப்படி எல்லாம் ஏதும் நடந்திருக்கவில்லை... அதைத் தவிர, வேறு ஏதாகிலும், ஜீரணித்து விடுவாள் அவள்.



எமிலி இவ்வாறு நினைத்திருக்க...

வசந்த் தம்பி, காயத்ரியை உயிருக்குயிராய்க் காதலித்தவனாயிற்றே...! அவளை முன்பின் தெரியா தென்கிறான்... கூடப் பேசிக் கொண்டிருப்பவள், மனைவி போல் தோன்றுகிறாள்!

ஒரு வேளை மனைவிக்காக அப்படிக் கூறிக்கொண்டிருப்பான். என்னதான் இருந்தாலும், 'காயத்ரியைக் காதலித்தேன். கல்யாணம் செய்து கொள்ள இருந்தேன்...' என்றெல்லாம் மனைவியிடம் சொல்ல முடியுமா என்ன?

அவன் மணமானவன் என்ற செய்தியே, பாட்டிக்கு இடிபோல் இறங்கியது.

அவனுடைய அடுத்த வார்த்தைகள்... உயிரை வேரோடு அறுத்துப் போயின...! அவை...

## 37

"அன்றொரு நாள்... நாம், வின்ஸ்டன், சிசில்யா அவர்கள் வீட்டுத் திருமண வரவேற்பிற்குப் போனோம் இல்லையா?

"அன்று நீ கோபமாகப் பேசிவிட்டுத் தொலைபேசியை வைத்துவிட... நீ என்ன செய்யப் போகிறாயோ... உனக்கு என்ன ஆகப் போகிறதோ என்ற தவிப்பில்... வேகமாக நான் வண்டியில் வந்தேன்...!

"அப்போது அந்தப் பெண்... ஒரு சந்துக்குள்ளிருந்து வர, நான் மோதிய வேகத்தில் எகிறித் துடித்துப் போய் விழுந்தாள்..."

"அப்போதாவது... அவள் உயிர் இருக்கிறதா என்று நான் பார்த்திருக்கலாம்.

"என் மனமெல்லாம் நீயே இருந்ததால், என்னால் வேறு எதைப் பற்றியும் சிந்திக்க முடியவில்லை.

"அவளைப் பற்றிக் கவலைப்படாமல் உன்னைப் பார்க்க விரைந்தேன். நீ சும்மா... என்னை வரவழைக்க, எப்போதும் போல் விளையாடியிருக்கிறாய்... என்று தெரிந்ததும், என்னால் என் வண்டியில் அடித்துத் தூக்கி யெறியப்பட்ட அந்தப் பெண் என்னவானாள் என்று பார்க்க ஓடினேன்...!

"ஆனால், அந்தப் பெண், அடிபட்ட சில நிமிடங்களில் துடித்துவிட்டு, மருத்துவமனைக்குக்கூடக் கொண்டு போக யாருமில்லாததால், பரிதாபமாகச் செத்துவிட்டாள்.

"அவளைக் கொலை செய்து விட்டதைப் போன்ற ஒரு குற்ற உணர்வு என்னை ஆக்கிரமித்துக் குடையத் தொடங்கியது.

"பின் அவள் வீடு வரை சென்று விசாரித்தபோதுதான், அவளே இந்தக் கண் தெரியாத பாட்டிக்கு ஒரே ஆதரவு என்றும், அப்படிப்பட்டவளைத்தான் விபத்துக்குள்ளாக்கி யிருக்கிறேன் என்றும் புரிந்தது.

"இதன் நடுவில்... காயத்ரி, வஸந்த் என்ற ஒரு பையனைக் காதலித்திருக்கிறாள். ஆனால், அவனோ இவளைச் சும்மா பொழுதுபோக்கிற்காக மட்டுமே காதலிப்பது போல் நடித்திருக்கிறான்...



"நான் இந்தப் பாட்டிக்கு உதவ முன்வந்தபோது, இவளாகவே என்னை வஸந்த் என்று எண்ணி என் உதவிகளை மறுக்காமல் ஏற்றுக் கொண்டாள்...

"இவளுக்கு எப்படியாவது உதவ வேண்டும் என்று நினைத்த நானும் அதை மறுக்கவில்லை...

"எத்தனை நாட்கள் இப்படி வஸந்த் என்ற பெயரில் உதவ முடியும் என்று புரியாத நான்... இதற்கு நிரந்தரத் தீர்வு காண, என் நண்பன் நகுல்... இந்த மருத்துவமனை சீப் டாக்டர்... அவனை அணுகி மாற்றுக் கண்... அறுவைச் சிகிச்சை மூலம் பொருத்தி...

"இது என்னால் முடிந்தது... ஆனால், சுயநலமாக யோசித்தால், கண் நன்றாகத் தெரிந்து விட்டால், நான் வஸந்த் இல்லை என்றோ... ஜேம்ஸ் வசந்தன் என்றோ தெரிய வெகு நேரமாகாது...

"அதிலும்... நான் காயத்ரி சாவிற்குக் காரணம் என்று தெரிந்தால், அவள் கண நேரத்தில் எல்லாவற்றையும் மறந்து, என்னைக் குப்பையாகப் பார்க்க ஆரம்பித்து விடுவாள்...

"ஆனால், அவளுக்கு இனிமேல் வாழ்க்கையை நடத்த யாருடைய உதவியும் தேவைப்படாது. அந்தப் பெண் காயத்ரி... இவர்களை நாமினியாகப் போட்டுச் சேர்த்து வைத்திருந்தவற்றைப் பெற்று இவள் பெயரில் டெபாஸிட் போட்டு விட்டேன்...

"எனக்கு மாறுதலாகி விட்டது... இனி இந்த ஊரை விட்டே போகப் போகிறேன் என்று பாட்டியிடம் சொல்லிவிட்டு,

ஒரேயடியாக இந்தத் தற்காலிகப் பந்தத்திலிருந்து வெளிவந்து விடலாம் என்று நினைக்கும்போது... நீ வந்து சந்தேகப் பட்டு..." – முடித்தான் ஜேம்ஸ்.

எமிலிக்கு ஏதோ திரைப்படக் கதையைக் கேட்டது போலிருந்தது.

தனக்குத் தெரியாமல் இத்தனை நடந்திருக்கிறதா?

'நீ வரவில்லையானால் போ... நானே போய்க் கொள்கிறேன். நான் எப்படியோ போகிறேன்...' என்றெல்லாம் இவனை விளையாட்டாய்ச் சீண்டுவது வழக்கம்!

அது இவ்வளவு பெரிய வினையாகி விட்டதா?

இப்போது ஜேம்ஸைப் பார்க்கப் பாவமாக இருந்தது.

"சாரிங்க... இவ்வளவு நடந்திருக்கா என்ன? நான் இது எதுவும் தெரியாமல் உங்களைச் சந்தேகப் பட்டுட்டேன்...!"

"நீங்க முன்னாடியே இதை என்கிட்டே சொல்லி யிருக்கலாம்... நான் ஏத்துக்க மாட்டேன்னு மறைக்கப் போய்... சரி, சரி... இப்பவாவது உண்மை தெரிந்ததே... இனி நிம்மதியாக மூச்சு விடுவேன்..." என்றவள்,

"சரிங்க... நான் வீட்டுக்குப் போறேன். நீங்க இங்கே இருந்துட்டு, அப்புறமா வாங்க. அப்புறம், நான் ஒரே ஒரு தடவை பாட்டியைப் பார்த்துட்டுப் போறேனே... அவங்கதான் தூங்கிட்டுல்ல இருக்காங்க...!"

'சரி'யென்று தலையசைத்தான்.



மெல்ல அறைக்குள் சென்று, பாட்டியின் அருகில் நின்றாள்.

சில நிமிடங்கள்தாம்...

பின், அவளுக்கு இடைஞ்சல் ஏற்படாதவாறு, கதவை நோக்கி நடந்தாள்.

காலடி ஓசைகள் கதவை நெருங்கும் நேரம்...

"அம்மா எமிலி...! கொஞ்சம் இங்கே வாம்மா!"

விதிர்விதிர்த்துத் திரும்பினர் இருவரும்!

பாட்டியா கூப்பிட்டாள்? ஆம் என்பது போல் அவள் கைகள் உயர்ந்தன.

"எமிலி... இங்கே வாம்மா...!"

"ஜேம்ஸ் தம்பி...! உன் மனைவியை இங்கே அழைத்து வாப்பா...!"

செய்வதறியாது சிலையாய் நின்றனர், இருவரும்.

அவர்களில் முதலில் சுதாரித்துக் கொண்டது எமிலிதான்.

பாட்டி, தாங்கள் பேசிய பேச்சுக் குரலில் விழித்திருக்க வேண்டும்!

பேர் சொல்லி அழைப்பதிலிருந்தே, அவள் எல்லா வற்றையுமே கேட்டிருப்பாள் என்பது புரிகிறது.

ஆனது ஆகட்டும் என்று எண்ணியவாறே, மெல்ல அடியெடுத்துப் பாட்டியின் அருகில் சென்றாள் எமிலி!

இவள் கரங்களைத் தேடிக் காற்றில் அலைபாய்ந்து கொண்டிருந்த அவள் கரங்களைப் பற்றினாள்.

தன் கைகளுக்குள் வைத்துக் கொண்டாள்.

ஆனால், கரங்களை விடுவித்துக் கொண்ட பாட்டியம்மாள், மெல்லத் துழாவி...

அவள் வயிற்றின் மேல் கைகளை வைத்தாள்.

"என் காயத்ரி சாகலை... இதோ... இவள் உன் வயிற்றில் ஜனித்திருக்கிறாள். என் பேத்தி சாகலை... உன் மகளாகப் பிறக்கப் போகிறாள்...!"

கண்கள் பனிக்க, தழுதழுத்த குரலில் கூறிய பாட்டியை, ஜேம்ஸ் அருகில் வந்து தொட்டான்.

"பாட்டி... நான் அவசரத்தில் வரும்போது, தெரியாமல்... சத்தியமாக நான் இதை எதிர்பார்க்கவில்லை பாட்டி..." எப்படி முடிப்பதென்று தெரியாமல் திணறிய ஜேம்ஸைக் கையமர்த்தினாள் பாட்டி.

"நீ என்ன... கையில் கத்தியை எடுத்துக் கொண்டு போய்... அவளை வெட்டிக் கொலை பண்ணினாயா, என்ன...?

"அவள் விதி அன்று முடிந்து விட்டது. நீ என்ன செய்வாய்? அன்று விபத்துக்குள்ளாகி, அல்பாயுசில் போக வேண்டுமென்பது அவள் விதி...!"

"நீ இல்லையென்றால், இன்னொரு வண்டியில் விபத்துக்குள்ளாகி இறந்திருப்பாள்...!"



"அன்று உடனே வந்து... நான்தான் விபத்து நடக்கக் காரணம் என்று நீ கூறியிருந்தால் கூட, உணர்ச்சி வசப்பட்டு நான் உன்னை ஏசியிருப்பேன், திட்டியிருப்பேன், மண் வாரித் தூற்றியிருப்பேன்...!

"நீயோ... உன்னை வெளிப்படுத்திக் கொள்ளாமல், இந்தக் கண் தெரியாத கிழவிக்கு, காயத்ரி இடத்தில் இருந்து, அவள் விட்டுப்போன கடமைகளைச் செய்திருக்கிறாயே...!

"அம்மா... எமிலி! இப்படிப்பட்ட உன்னத புருஷனைப் பெற, என்ன தவமம்மா செய்தாய்?"

"பாட்டி... உங்களுக்கு என் மேல் கோபமில்லையா? என்னை மன்னிச்சிடுங்க பாட்டி!"

"நியாயமாப் பார்த்தா, உன் மேல் கோபம் வரணும். ஆனால், நீதான் நீ செய்த தவறுக்கு, அதற்கு மேலேயே பிராயச்சித்தம் தேடிக் கொண்டாயே...!"

கண்கள் பனித்தன, பாட்டிக்கு!

"நீங்க இப்ப இப்படி உணர்ச்சிவசப்படக்கூடாது.. கொஞ்சம் அமைதியாகுங்க...!" – ஜேம்ஸ்.

"இல்லை தம்பி...! நான் பேச வேண்டிய நேரம் இது!"

"ஒரு வேளை காயத்ரி உயிரோடு இருந்தாக்கூட, கடைசி வரை அவள் இருக்கிறாள்... கவனித்துக் கொள்வாள்... என்று; கடைசி வரை, கண் பார்வை இல்லாமலேயே காலத்தை ஓட்டியிருப்பேன்...!"

இவள் கரங்களைத் தேடிக் காற்றில் அலைபாய்ந்து கொண்டிருந்த அவள் கரங்களைப் பற்றினாள்.

தன் கைகளுக்குள் வைத்துக் கொண்டாள்.

ஆனால், கரங்களை விடுவித்துக் கொண்ட பாட்டி யம்மாள், மெல்லத் துழாவி...

அவள் வயிற்றின் மேல் கைகளை வைத்தாள்.

"என் காயத்ரி சாகலை... இதோ... இவள் உன் வயிற்றில் ஜனித்திருக்கிறாள். என் பேத்தி சாகலை... உன் மகளாகப் பிறக்கப் போகிறாள்...!"

கண்கள் பனிக்க, தழுதழுத்த குரலில் கூறிய பாட்டியை, ஜேம்ஸ் அருகில் வந்து தொட்டான்.

"பாட்டி... நான் அவசரத்தில் வரும்போது, தெரியாமல்... சத்தியமாக நான் இதை எதிர்பார்க்கவில்லை பாட்டி..." எப்படி முடிப்பதென்று தெரியாமல் திணறிய ஜேம்ஸைக் கையமர்த்தினாள் பாட்டி.

"நீ என்ன... கையில் கத்தியை எடுத்துக் கொண்டு போய்... அவளை வெட்டிக் கொலை பண்ணினாயா, என்ன...?

"அவள் விதி அன்று முடிந்து விட்டது. நீ என்ன செய்வாய்? அன்று விபத்துக்குள்ளாகி, அல்பாயுசில் போக வேண்டுமென்பது அவள் விதி...!"

"நீ இல்லையென்றால், இன்னொரு வண்டியில் விபத்துக்குள்ளாகி இறந்திருப்பாள்...!"



"அன்று உடனே வந்து... நான்தான் விபத்து நடக்கக் காரணம் என்று நீ கூறியிருந்தால் கூட, உணர்ச்சி வசப்பட்டு நான் உன்னை ஏசியிருப்பேன், திட்டியிருப்பேன், மண் வாரித் தூற்றியிருப்பேன்...!

"நீயோ... உன்னை வெளிப்படுத்திக் கொள்ளாமல், இந்தக் கண் தெரியாத கிழவிக்கு, காயத்ரி இடத்தில் இருந்து, அவள் விட்டுப்போன கடமைகளைச் செய்திருக்கிறாயே...!

"அம்மா... எமிலி! இப்படிப்பட்ட உன்னத புருஷனைப் பெற, என்ன தவமம்மா செய்தாய்?"

"பாட்டி... உங்களுக்கு என் மேல் கோபமில்லையா? என்னை மன்னிச்சிடுங்க பாட்டி!"

"நியாயமாப் பார்த்தா, உன் மேல் கோபம் வரணும். ஆனால், நீதான் நீ செய்த தவறுக்கு, அதற்கு மேலேயே பிராயச்சித்தம் தேடிக் கொண்டாயே...!"

கண்கள் பனித்தன, பாட்டிக்கு!

"நீங்க இப்ப இப்படி உணர்ச்சிவசப்படக்கூடாது.. கொஞ்சம் அமைதியாகுங்க...!" - ஜேம்ஸ்.

"இல்லை தம்பி...! நான் பேச வேண்டிய நேரம் இது!"

"ஒரு வேளை காயத்ரி உயிரோடு இருந்தாக்கூட, கடைசி வரை அவள் இருக்கிறாள்... கவனித்துக் கொள் வாள்... என்று; கடைசி வரை, கண் பார்வை இல்லாமலேயே காலத்தை ஓட்டியிருப்பேன்...!"

"ஆண்டவன் ஒருபுறம் என் பேத்தியை எடுத்துக் கொண்டாலும்... மறுபுறம் இந்த உலகை மீண்டும் காணக் கண் கொடுத்திருக்கிறானே...!"

"என் பேத்தி... உன்னதக் குணமுடைய உனக்கு மகளாகக் கண்டிப்பாக வருவாள்...!"

எமிலியின் முகத்தில் சந்தோஷக் கீற்று!

நிறைவாய்ப் பெருமூச்சு விட்டாள்.

"ஆனால்... இது எல்லாவற்றிற்கும் மேலாக, வேறு ஒரு விஷயத்திற்காக உன் மேல் கோபப்பட்டுத்தான் ஆக வேண்டும் தம்பி...!"

இன்னமும் புதிதாக என்னடா ஆரம்பிக்கிறது?

"புரியவில்லையா? இவ்வளவும் செய்த நீ... நான் கண்களைத் திறந்து பார்ப்பதற்குள் கண்காணாத இடத்திற்கு நழுவிவிடத் திட்டம் போட்டாயே, அதற்குக் கோபப்பட்டுத்தான் ஆக வேண்டும்...!"

"பாட்டி... நான் என்ன சொல்ல வரேன்னா...!"

"எதுவும் சொல்ல வரவேண்டாம். நான் கண்களைத் திறந்தவுடன், உங்கள் இருவரையும் புருஷன், பெண்டாட்டியாய் அருகில் வைத்துக் கண் நிறையப் பார்க்க வேண்டும்...!"

"அதற்கென்ன! எப்போது கண் கட்டுகளை அவிழ்க்கலாம் என்று இப்போதே கேட்டு வருகிறேன்!"



ஜேம்ஸ், நகுலின் அறையை நோக்கிப் போக, எதிரே வந்த செல்லம்மா...

ஜேம்ஸ் கூட எமிலியை ஒரு குழப்பப் பார்வை பார்த்தவாறே, கடந்து போனாள்.

சற்றே விரைந்து நடந்து ஜேம்ஸை எட்டிப் பிடித்த எமிலி...

அவன் உள்ளங்கையை அழுத்தினாள்.

"ஸாரிங்க... இன்று ஒரே நாளில் என்ன என்னவோ நடந்துடுத்து இல்லை...!"

"உன்னால்தான்... நீ என் மேல் சந்தேகப்பட்டு ஆரம்பித்த சண்டை, கடைசியில் நன்மையில் முடிந்து விட்டது."

"அந்தப் பாட்டி ஒன்னு சொன்னாங்க, பார்த்தீங்களா... அவங்க பேத்தி என் வயிற்றில் மகளாகப் பிறப்பாங்கன்னு...!"

"ஏற்கெனவே ஒரு மகன் டியூ இருக்கு... இப்ப அவங்க சொல்றபடி ஒரு மகள் வேறா? இருக்கும் இருக்கும்... உன் வயிற்றைப் பார்த்தால்..."

"அடுத்த சண்டைக்கு ஆரம்பிக்கிறீர்களா? உங்களைத் திருத்தவே முடியாது!"

"அன்னிக்கு ஒரு நாள் அப்படித்தான் எமிலி... வண்டியில் வேகமா வந்திட்டிருந்தேனா... எதிர்க்க ஒரு பெண் அதைவிட வேகமா..."

"கதை விடறது அப்புறம் இருக்கட்டும். எதிர்ல வர்ற பெண் மேல் இப்ப மோதிடாமப் பார்த்துப் போங்க...!"

தன் நெற்றியை அவன் தோள்களில் இடித்தவாறே, சிரித்தவாறு கூறினாள் எமிலி.

"மாசிலா உண்மைக் காதலே..."

மெல்ல அவளுக்கு மட்டும் கேட்குமாறு பாடினான், ஜேம்ஸ்.